

விகடன்
பிரசுரம்

# ஊருக்கு நல்லது சொல்வேன்!

தமிழருவி மணியன்


விகடன்
பிரசுரம்
ஊருக்கு
நல்லது
சொல்வேன்!
தமிழருவி மணியன்

Title : OORUKKU NALLATHU SOLVAEN
© TAMILARUVI MANIAN
ISBN : 81-89780-72-7

விகடன் பிரசுரம்: 91

நூல் தலைப்பு:
ஊருக்கு நல்லது சொல்வேன்!

நூல் ஆசிரியர்:
© தமிழருவி மணியன்

ஓவியங்கள்:
மணியம் செல்வன்

முதற்பதிப்பு : டிசம்பர், 2005
ஆறாம் பதிப்பு : டிசம்பர், 2008

விலை : ரூ. 135

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
வீயெஸ்வி

பொறுப்பாசிரியர்கள்:
பொன்ஸீ, செங்கோட்டை ஸ்ரீராம்

உதவி ஆசிரியர்கள்:
இரா.சரவணன், சா.இலாகுபாரதி, எம்.நாகமணி, கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ், சு.இரமேஷ், மகாதேவன்

தலைமை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

வடிவமைப்பு:
அ.அன்பழகன்,
கா.மங்களேஸ்வரன், கோ.செந்தில்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்,**
757, அண்ணா சாலை, சென்னை-600002.
எடிட்டோரியல் பிரிவு போன் : 091-44-28524074 / 84
விற்பனை பிரிவு போன் : 091-44-42634283 / 84
e-mail : publications@vikatan.com

# இதயங்களை இதமாக நனைத்து...

'மானுட சமுத்திரம் நானென்று கூவு' என்றார் பாரதிதாசன். இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு ஆத்மாவையும் தானாக பாவிக்கிறவனின் குரல் அது. 'நீ என்பது நீயல்ல. குடும்பம், சமூகம், நாடு என்ற எல்லைகளைக் கடந்த இந்த பிரபஞ்சத்துக்கே நீதான் பொறுப்பு' என ஒவ்வொருவரையும் தலைவனாக்குகிற வரிகள் அவை. அதைத்தான் தமிழருவி மணியனின் எழுத்துக்களும் செய்கின்றன.

தனி மனித உறவுகளில் தொடங்கி சமூக பொருளாதார பிரச்னைகள் வரை அற்புதமான மொழிநடையில் அலசும் இந்தக் கட்டுரைகள் சமுதாயத்துக்கு சத்து தரும் வைட்டமின் இலக்கியம். தாய்மை பற்றி எழுதும்போது இவரது பேனாவில் தாய்ப்பால் சுரக்கிறது, புரட்சி பற்றி எழுதும்போது கனல் தெறிக்கிறது. அகிம்சை பற்றி எழுதினால் கருணை நிறைகிறது. இப்படி வரிக்கு வரி அருவியாகுகிற இவரது தமிழ், படிக்கிற அத்தனை இதயங்களையும் இதமாக நனைத்து சிந்தனைகளில் குளிப்பாட்டுகிறது.

நேர்மையான அரசியல்வாதியாக, பேச்சாளராக, எழுத்தாளராக தமிழருவி மணியனை தமிழகம் நன்றாக அறியும். ஆனால், இந்தக் கட்டுரைகள் அவரது இன்னொரு பரிமாணத்தை எடுத்துக்காட்டுகிற வெளிச்ச வித்துக்கள்.

வள்ளலாரையும் பெரியாரையும் கலந்து செய்த தமிழருவி மணியனின் எழுத்துக்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டியவை - பாதுகாக்க வேண்டியவை. விகடனில் தொடராக வெளி வந்தபோது மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற இந்தக் கட்டுரைகள் இப்போது புத்தகமாக உங்கள் கைகளில்! கண்டிப்பாக இந்தப் புத்தகம் உங்கள் ஒவ்வொருவரின் எண்ணங்களை இன்னும் விசாலமாக்கும், உள்ளங்களில் ஒளியேற்றும்.

- பதிப்பாளர்



# நெஞ்சில் பட்டதை நேர்படச் சொல்வேன்..!

இனிய நண்பர்களே... இதயம் நிறைந்த வணக்கம்.

எளிதில் புரிந்துகொள்ள முடியாத மறைபொருளாகவும், புதிராகவும் இருப்பதனால்தான், மனிதர்களுக்கு வாழ்க்கையின்மீது மாறாத மாயக்கவர்ச்சி நீடிக்கிறது. திறந்து கிடக்கும் எதன்மீதும் யாருக்கும் தீவிர வேட்கை விளைவதில்லை. அடுத்து என்ன நடக்கும் என்று ஆரம்பத்திலேயே நாம் அறியமுடிந்தால், முதலிலேயே முடிவு தெரிந்துவிட்ட மர்ம நாவலைப்போல், வாழ்க்கை முற்றிலும் சுவாரசியமற்றுப் போய்விடும்.

மண்ணில் உயிர்த்த மனிதகுலத்திற்குக் காலம் அதன் போக்கில் கற்றுத்தரும் பாடங்கள் கணக்கற்றவை. கடந்து செல்லும் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு பாடம். ஒவ்வொரு பாடத்திலும் வெவ்வேறு ஞானம்.

மரணமிலாப் பெருவாழ்வு, நோயின் நிழல் தீண்டாத தேகநலம், கட்டுப்பாடற்ற சுதந்திரம், துன்பத்தின் துணையில்லாத இன்பம், முரணும் மோதலுமற்ற சமூகச் சூழல் அமைய வேண்டும் என்பதுதான் அனைத்து மனிதர்களின் ஆசை. நினைத்தபடி எல்லாம் நடந்துவிட்டால் அதற்குப் பெயர் வாழ்க்கை இல்லை.

மேடும் பள்ளமும் வேறு வேறில்லை என்ற பார்வையே பரிபூரண ஞானம். மனிதர்கள் அனைவரும் ஞானிகளாகிவிட்டால் தத்துவ விசாரத்தைத் தவிர வேறொன்றும் தழைக்காது. நாம் இகத்தை வெறுத்துப் பரத்தைத் தேடும் ஞானிகளாக வேண்டாம். மண்ணில் நல்ல வண்ணம் வாழும் மனிதர்களாக இருந்தால் அதுவே போதும்.

வாழ்க்கை ஒரு குருக்ஷேத்ரம். இங்கு நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் இடையில் ஓயாத போர் நடந்துகொண்டுதான் இருக்கும். போர் எனில் மோதலும் உண்டு; சாதலும் உண்டு. எக்காளமும் உண்டு; ஒப்பாரியும் உண்டு.

*பொங்கிப் பெருகிப் பாயும் ஆற்றின் மடியில் பரவிக் கிடக்கும் பரல்கள் போல், காலப்பெருவெளியின் நீட்சியில், வாழ்க்கை தன் அடியாழத்தில் பல்லாயிரம் அனுபவங்களைத் தேக்கி வைத்திருக்கிறது. கடந்தகால அனுபவம்தான் மனிதர்களின் நிகழ்கால ஞானாசிரியன்.*

*காலம் நொடி நொடியாய் முன் நகர்ந்து போனாலும், மூதாதையர்கள் மடிதாங்கி வளர்த்த பழைய பாரம்பரியப் பெருமைகள் புதையுண்டு போக எந்த நாகரிக சமுதாயமும் அனுமதிக்காது; அனுமதிக்கக் கூடாது.*

*'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்று அறம் சார்ந்த சமூக வாழ்வின் அடித்தளத்தைப் போட்டுக் கொடுத்தது புறநானூறு. 'அறம் நனி சிறக்க, அல்லது கெடுக' என்று வாழ்வின் விழுமங்களை வகுத்தளித்தது ஐங்குறுநூறு. அறத்துப் பாலை முதலில் வைத்து, அதன் முக்கியத்துவம் உணர்த்தியவர் வள்ளுவர். அறச் சிந்தனைகளைத் தழுவி வாழ்வதுதான் தமிழர் வாழ்வு. அதுதான் உயர்ந்த மனித வாழ்வு. அறத்திற்குப் புறம்பில்லாத வாழ்க்கையில்தான் அவமானத்திற்கு இடமில்லாத சுகம் கிடைக்கும். இதை அழுத்தமாக உணர்த்துவதுதான் இந்த நூலின் அடிப்படை நோக்கம்.*

*'கூடியவரையில் பேசுவதுபோலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி... ஒரு கதை, ஒரு தர்க்கம் அல்லது ஒரு சாஸ்திரம்... எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது' என்றவன் பாரதி. மிகக்குறைந்த தமிழறிவுடையோரும் எளிதில் புரிந்துகொள்கிறாற்போல் எதையும் எழுதுவதுதான் எழுத்துலக தர்மம் என்று எண்ணியவன் அவன். அதை மறவாமல் மனதில் நிறுத்திப் பேனா பிடிப்பவன் நான். அதனால்தான் 'ஊருக்கு நல்லது சொல்வேன்' வாசகர்களின் உள்ளங்களில் எளிதாக ஓர் நாற்காலி போட்டு உட்கார முடிந்தது.*

*நான் படித்த புத்தகங்களும், பாதித்த அனுபவங்களும், சந்தித்த மனிதர்களும் எனக்குள் ஏற்படுத்திய அறிவின் தெளிவில் வந்து விழுந்த வார்த்தைகளின் தொகுப்பு இது. சமூகத் தவறுகளுடன் சமரசம் கொள்ளாமல், பொய்மையும் போலித்தனமும் இல்லாமல், நெஞ்சில் பட்டதை நேர்படச் சொல்லியிருக்கிறேன். 'உள்ளத்தில் நேர்மையும், தைரியமும் இருந்தால் கை தானாகவே நேரான எழுத்து எழுதும். தைரியம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும். சண்டிமாடு போல ஓரிடத்தில் வந்து படுத்துக் கொள்ளும்' என்று சொன்ன மகாகவி பாரதியே எல்லா வகையிலும் என் வாழ்வின் ஆதர்சம்.*

விளக்கில் எண்ணெய் இருக்கிறது. ஒளிதரும் திரியும் எண்ணெயில் நனைந்தபடி மூக்கை நீட்டுகிறது. திரியில் தீபமேற்றும் தீப்பெட்டியும் பக்கத்தில் மௌனமாய்ப் படுத்துக்கிடக்கிறது. தீப்பெட்டி திறந்து, தீக்குச்சி எடுத்து, திரியில் சுடர் பரப்ப ஒரு கரம் முன்வந்தால்தான் விளக்கில் வெளிச்சம் பிறக்கும். எண்ணெயும் திரியும், தீப்பெட்டியும் விளக்குமாய் காத்திருந்தது நான். கரம் நீட்டியது விகடன். ஆசிரியர் குழுவில் உள்ள அனைவருக்கும் நன்றி.

தூரிகையில் ஓவியத் தவம் இயற்றும் மணியம் செல்வன் அவர்களுக்கும் என் நெஞ்சில் ஊறும் நன்றியை வெளிப்படுத்த நான் கற்ற வார்த்தைகளுக்கு வலிமையில்லை.

வாசகர்களுக்கு ஒரு செய்தி - யாரோ சொன்னது...

‘வேலை செய்ய நேரம் ஒதுக்குங்கள்; அது வெற்றிக்கான விலை.

சிந்திக்க நேரம் ஒதுக்குங்கள்; அது ஆக்கபூர்வமான சக்தி.

விளையாட நேரம் ஒதுக்குங்கள்; அது இளமைக்கான ரகசியம்.

படிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது அறிவுக்கான ஊற்று.

நட்பிற்கு நேரம் ஒதுக்குங்கள்; அது மகிழ்ச்சிக்கான பாதை.

நேசிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது உற்சாகமான வாழ்க்கை.

சிரிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது ஆத்மாவின் ராகம்.’

‘துன்பமற்ற பகலும், இன்பமுள்ள இரவுமே உங்கள் உண்மையான விடுதலை’ என்றார் கலீல் ஜிப்ரான். அந்த விடுதலை உங்கள் அனைவருக்கும் சாத்தியமாகட்டும். அமைதியும், மகிழ்ச்சியும் உங்கள் இல்லங்களை அலங்கரிக்கட்டும்.

- தமிழருவி மணியன்

## ஊருக்கு நல்லது சொல்வேன்!


1. துறவு
2. தாய்மை
3. குடும்பம்
4. புலனடக்கம்
5. மதம்
6. மனிதம்
7. நட்பு
8. நன்றி
9. முயற்சி
10. வாழ்க்கை
11. தானம்
12. ஆசை
13. நேர்மை
14. மன்னிப்பு
15. அடிக்கற்கள்
16. ஊக்கம்
17. திறவுகோல்
18. அந்த நாள்
19. காதல்

20. மரியாதை

21. மரணம்

22. அடக்கம்

23. பெண்

24. ஒருமை

25. பேச்சு

26. புத்தகம்

27. முதுமை

28. ஒரு மனம்

29. சும்மா

30. கற்பு

31. சினிமா

32. பத்திரிகை

33. அரசியல்

34. மயக்கம்

35. புகழ்

36. கல்வி

37. புரட்சி

38. காந்தியம்


# 1

# துறவு

'**உ**ன்னதமான இந்திய இளைஞனே! சமுதாய வீதியில் நீ கை வீசி நடக்கும்போது, நீ மட்டும் தனியாக நடப்பதாக ஒருபோதும் சோர்ந்துவிடாதே! உனக்குப் பின்னால், இந்த மண்ணின் ஐயாயிரம் ஆண்டு மரபார்ந்த பெருமைகளும் தொடர்ந்து வருவதை உணர்ந்து நட!' என்றார் விவேகானந்தர்.

எது இந்த மண்ணின் மரபார்ந்த பெருமை?

'துறவும் தொண்டும் மட்டுமே இந்த அன்னை பூமியின் அரிய தேசிய லட்சியங்கள்!' என்கிறார் விவேகானந்தர்.



பெரியார்

துறவு என்பது எல்லாருக்கும் எளிதில் சாத்தியமில்லை. ஓர் உண்மையான துறவிக்கு ஐந்து இலக்கணங்கள் அவசியம் என்று சனாதன தர்மம் சாற்றுகின்றது. கையில் வைத்திருக்கும் திருவோட்டுக்கு மேல் எந்த உடைமையும் துறவிக்கு இருக்கலாகாது. இயற்கையில் அமைந்த மரத்தடி; கற்குகையே இருப்பிடம்; கந்தையே அணியும் ஆடை; ஒற்றை வளையல் போன்று யாருமற்ற தனிமை; பேதமற்று அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செய்தல். இந்த இலக்கணங்களுடன் இன்று ஒரு துறவியையும் நம் வாழ்காலச் சமுதாயம் சந்திக்க வாய்ப்பில்லை!



காவி உடுத்தி, கற்றைச் சடைமுடி வளர்த்து, கமண்டலமேந்தி, கானகத்தில் அத்துவானத் தனிமையில் கண்மூடித் தவமிருக்கும் துறவை விவேகானந்தர் விரும்பவில்லை. அவருடைய துறவு என்பது, எல்லாவற்றையும் நீத்தல் இல்லை. சுயநலமின்றி அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செய்து ஆரத்தழுவி அவற்றின் நலனுக்காகத் தன்னை முற்றாக அர்ப்பணம் செய்வது.


சந்நியாசம் என்பது வாழ்வைத் துறப்பது அன்று; செய்யும் செயலின் பலனைத் துறப்பது. வேள்வி என்பது நெய்யூற்றி நெருப்பு வளர்ப்பதல்ல; சமூக நலன் என்னும் அக்கினியில் சுயநல ஆசைகளைச் சுட்டெரிப்பது. இந்தப் புரிதலோடு பொதுவாழ்வில் இன்றைய இளைஞர்கள் ஈடுபட வேண்டும். அதுதான் ஆன்மிக ஞானி விவேகானந்தரின் ஆசைக் கனவு!

விவேகானந்தர் வலியுறுத்திய தொண்டும் துறவும் கொண்ட மனிதர்களைப் பொதுவாழ்வில் நாம் கண்டெடுக்க வேண்டாமா? அப்படிப்பட்ட மனிதர்கள் இந்த மண்ணில் நரம்போடும், சதையோடும் நடமாடவில்லையா? கடந்த காலத்தைக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்போம்.

மூட நம்பிக்கைகளில் மூழ்கிக்கிடந்த தமிழினத்தைத் தட்டியெழுப்பி அறிவுச்சுடர் கொளுத்திய பகுத்தறிவுப் பகலவன் பெரியார்.

'ஈ.வே.ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகிலுள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்கொண்டு அதே பணியாய் இருப்பவன்' என்று பிரகடனம் செய்து பொதுவாழ்வுக்கு வந்தவர் பெரியார்.

ஜீவானந்தம்



'இந்த நாட்டில் பார்ப்பனர்,பஞ்சமர், பறையர், சக்கிலியர் இன்னும் எந்தச் சாதியினரையும் காண முடியாது; பெயரைக்கூட காதில் கேட்க முடியாது. எல்லாரும் மனிதர்கள் என்று எங்கு பார்த்தாலும் முழங்க வேண்டும். இதுவே நம் முதல் லட்சியம்' என்று முழங்கி, இந்த மண்ணில் சாதிகளற்ற சமுதாயம் மலர்வதற்குத் தள்ளாத வயதிலும் இடையறாது உழைத்த மகத்தான மனிதர்.



தேர்தல் களத்தில் வாக்குகளைப் பெறுவதற் காக நாக்கு யாகம்

நடத்தாதவர் பெரியார். அரசியல் களத்தில் அடியெடுத்து வைப்பதற்கு முன், தான் வகித்த ஈரோடு முனிசிபல் சேர்மன் பதவியைத் துறந்தார். 1919-களில் மாத வருவாய் 20 ஆயிரம் தந்த வணிக நிறுவனத்தை இழுத்து மூடினார். கதர்த் துணியைத் தலையில் சுமந்து தெருத் தெருவாய் விற்றார். கள்ளுக்கடை மறியலில் மனைவியுடன் கைதானார். கள் தரும் மரங்கள் என்பதற்காகத் தனக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். தாழ்த்தப்பட்ட புலையரும், ஈழவரும் கோயில் வீதியில் நடக்க வைக்கத்தில் போராடிச் சிறை சென்று வெற்றி வீரராய் வலம் வந்தார்.


வருணாசிரமத்தின் ஆணிவேரை அறுப்பதற்காகவும், சாதிகளற்ற சமுதாயத்தை வளர்ப்பதற்காகவும், வர்க்க பேதங்களை அழிப்பதற்காகவும், பெண்ணடிமை ஒழிப்புக்கும் தான் நடத்திய புரட்சி வேள்வியில் தன்னையே ஆகுதியாக்கிக் கொண்டவர் பெரியார். 94 வயதிலும் உடல் நலிவைப் பொருட்படுத்தாமல், நோய் தந்த வேதனையைத் தாங்கிக்கொண்டு ஊர் ஊராய் மக்களைத் தேடிச் சென்று, மூத்திரச் சட்டியுடன் மேடையில் அமர்ந்து மூன்று மணி நேரம் சுயமரியாதைக் கருத்துக்களை முன்வைத்து முழங்கிய பெரியாருக்கு இணை சொல்ல இன்றைக்கும் உலகம் முழுவதிலும் இன்னொருவர் இல்லை!

'காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கஞ்சியுமில்லை, பாழுக்கு உழைத்தோமடா! என் தோழனே... பசையற்றுப் போனோமடா!' என்று கண்ணீர் விட்டுக் கதறியவர்.... ஏழையாய்ப் பிறந்து, ஏழைகளுக்காகவே வாழ்ந்து, கூரை ஒழுகும் குடிசையில் ஏழையாகவே கண் மூடியவர் தோழர் ஜீவானந்தம்.

காரைக்குடிக்கு அருகில் சிராவயலில் ஆசிரமம் நடத்திய காந்தியவாதியாய், பெரியாரின் சுயமரியாதைத் தொண்டராய், பின்னாளில் ஒரு காங்கிரஸ் சோஷலிஸ்ட்டாய் வெவ்வேறு பாதைகளில் பயணித்து, இறுதியில் மார்க்சியத்தில் மனம் கலந்து, கடைசி வரை அப்பழுக்கற்ற கம்யூனிஸ்ட்டாய் வாழ்ந்து மறைந்த ஜீவா ஒரு கட்சிக்காரரில்லை; கொள்கைக்காரர்!

காரைக்குடி கல்லூரியில் ஜீவா பேசுகிறார். உணர்ச்சியின் விளிம்பில் நின்று உரத்த குரலில் மாணவர்களிடையே அவர் முழங்கும்போது, அவருடைய காலில் இருந்த கட்டி உடைந்து ரத்தம் வழிந்து வேட்டி நனைகிறது. பார்த்த கல்லூரி முதல்வர் பதறித் துடிக்கிறார். இரண்டு நாட்கள் விருந்தினர் விடுதியில் தங்கி ஓய்வெடுக்க ஜீவாவை

வற்புறுத்துகிறார்.


காமராஜர்

அப்போது முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜா, ஜீவாவைப் பார்க்க ஓடோடி வருகிறார். 'உங்களை ஏன் இப்படி வருத்திக் கொள்கிறீர்கள்? நாம் அனைவரும் காங்கிரஸில் ஒன்றாய் உழைத்துச் சிறை சென்றவர்கள்தானே! நேரு அணை கட்டவில்லையா? தொழிற்சாலைகள் அமைக்கவில்லையா? நேருவே ஒரு நல்ல சோஷலிஸ்ட்தானே! நீங்கள் ஏன் எங்களோடு நலமாய் இருக்கக் கூடாது? இப்படி இடைவிடாமல் ஊர் ஊராய்ப் பேசிப் பேசி ஏன் உங்களை அழித்துக் கொள்கிறீர்கள்?' என்று பாசம் ததும்பப் பரிவுடன் கேட்கிறார்.



'நீங்கள் அணைகள் கட்டியது; தொழிற்சாலைகள்

தொடங்கியது;கல்விக் கூடங்கள் உருவாக்கியது எல்லாம் உண்மைதான். ஆனால், இன்னமும் அரை வயிற்றுக் கஞ்சிக்கு வழியற்று ஏழைகள் வாடுகின்றார்களே... ஏழைகள் இந்த மண்ணில் உள்ளவரை, அவர்கள் நலனுக்காக ஏழைக் கட்சி மேடைகளில் அன்றாடம் பேச வேண்டியதுதான்; பேசிப் பேசிச் சாக வேண்டியதுதான். வேறு என்ன வழி?' என்று சொன்னவர் ஜீவா. ஏழைத் தொழிலாளிக்கும், கூலி விவசாயிக்கும் பேசிப் பேசியே தன்னுடைய 56-வது வயதில் மரணத்தின் மடியில் சாய்ந்தார்.

ஜீவா என்ற அந்த அரிதினும் அரிதான மானுடன் மாற்று வேட்டிக்கும் வழியில்லாமல்தான் வாழ்ந்தார். வண்ணாரப்பேட்டை சட்டமன்ற உறுப்பினராய் 1952-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பும், சேரிக் குடிசையில்தான் விளிம்பு நிலை மனிதர்களுடன் வாழ்ந்தார். மரணம் அவரைத் தழுவியபோது அவருக்கிருந்த ஒரே உடைமை மேற்கு தாம்பரம் கஸ்தூரிபா நகரில் புறம்போக்கு நிலத்தில் மண்சுவர் கூட இல்லாத, மழை விழுந்தால் ஒழுகும் ஒரு கீற்றுக் கொட்டகை மட்டும்தான்!

ஊழலின் நிழல் படாத ஓர் உயரிய ஆட்சியை ஒன்பது ஆண்டுகள் தமிழ் மக்களுக்குத் தந்தவர் காமராஜர். இருண்ட ஏழை நெஞ்சங்களில் கல்வி வெளிச்சத்தை இலவசமாகப் பாய்ச்சி, ஆறுகள் ஓடும் இடங்களில் எல்லாம் அணைகள் கட்டி விவசாயத்தை வளர்த்து, தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை இந்தியாவில் இரண்டாம் இடத்தில் நிறுத்தி, பொய்மையும் போலித்தனமுமின்றி நேர்மையான நல்லரசியல் நடத்தி, ஆட்சி அதிகாரத்தைத் தானாகவே துறந்து, தேர்தலில் தோற்ற பின்பும், கண் மூடும் வரை மக்கள் நலனுக்காகவே தொண்டு புரிந்தவர் காமராஜர்.

'பெற்ற தாயைப் பக்கத்தில் வைத்துக்கொண்டால் அந்தத் தாயைத் தேடி விருதுநகரிலிருந்து ஒவ்வொரு உறவாய் நம் வீடு வந்து சேரும், அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசும். அதிகார துஷ்பிரயோகம் நடந்தாலும் நடக்கும். அதற்கு நாம் இடம் தரலாகாது' என்று தாயையே தவிர்த்து, திருமலைப் பிள்ளை வீதியில் தனிமைத் தவமிருந்தவர். முற்றும் துறந்த ஆதிசங்கரரும், பட்டினத்தாரும் கூடத் துறக்க முடியாத உறவு, தாயின் உறவு! அந்தத் தாயையும் பொதுவாழ்க்கைத் தூய்மைக்காக தள்ளி வைத்தவர் காமராஜர்.

விடுதலை வேள்வியில் 9 ஆண்டுகள் சிறைவாசம்; 12 ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரஸின் தலைமை; 5 முறை சட்டமன்ற உறுப்பினர்; 4 முறை நாடாளுமன்ற உறுப்பினர்; 9 ஆண்டுகள் தமிழகத்தின் முதல்வர்;

5 ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸின் தலைவர்; 2 முறை இந்தியப் பிரதமர்களை உருவாக்கிய ஒரே தமிழர்... காமராஜர். இவ்வளவுக்குப் பிறகும் தனி வாழ்வில் அவருக்கென எஞ்சியது 60 ரூபா; 10 கதர் வேட்டி, சட்டை.

காமராஜர் கண் மூடினார். அவர் வாழ்ந்த வீட்டை அதன் உரிமையாளர் எடுத்துக் கொண்டார். அவர் பயன்படுத்திய காரை கட்சி எடுத்துக் கொண்டது. அவருடைய உடலை அக்கினி எடுத்துக் கொண்டது. அவரது பெயரை வரலாறு எடுத்துக்கொண்டது!

'ஜனத் தலைவர் யார்?' என்ற கேள்விக்கு பாரதி தந்த பதிலைப் படியுங்கள். 'யாவன் ஒருவன் தனது ஜனன தேசமாகிய இந்தியாவானது, இந்த வறிய நிலையில் இருப்பது பற்றி இராப்பகல் வருந்துகிறானோ, யாவன் ஒருவன் இந்த முப்பது கோடி இந்தியரும் வயிறாற உண்பதற்கு உணவும், உடுக்க உடையுமின்றித் தவிக்கிறார்களே என மனமிரங்கி கண்ணீர் சொரிகிறானோ, யாவன் ஒருவன் பொதுஜனங்களுக்கு வந்த சுக துக்கங்களும், கஷ்ட நஷ்டங்களும் தனக்கு வந்ததாக எண்ணி அனுதாபிக்கிறானோ, யாவன் ஒருவன் இந்தத் துன்பங்களை நிவர்த்திப்பதன் பொருட்டுத் தனது உயிரையும் இழக்கத் தயாராய் இருக்கிறானோ... அவன் ஒருவனே ஜனத் தலைவன்!' - (இந்தியா 12.1.1907).

திருத்தப்படாத நிலம் பயனற்றுப் போகும். தடுக்கப்படாத வெள்ளம் தாளாத துன்பத்தைத் தரும். கடிவாளம் இல்லாத குதிரை கண்டபடி ஓடும், நம் இந்தியச் சமூகத்தின் பொதுவாழ்க்கை இப்போது களர்நிலமாய், காட்டாற்று வெள்ளமாய், கடிவாளமற்ற குதிரையாய் நசிந்துவிட்டது. சமூகப் பொறுப்பு உணர்வுடன், இனி இளைஞர்கள்தான் இதைச் சீர்செய்ய வேண்டும்.

பாரதியின் பார்வையில் பெரியாரும், காமராஜரும், ஜீவாவுமே ஜனத் தலைவர்கள். தன்னலம் மறுத்துப் பொதுநலத்துக்காகத் தொண்டாற்றும் மனிதர்கள்தான் விவேகானந்தரின் பாதையில் உண்மையான துறவிகள். அவர்கள் ஆன்மிகத்தில் இருந்தால் என்ன? அல்லது, அரசியல் அரங்கில் கலந்தால் என்ன? பெரியாரும், பெருந்தலைவரும், ஜீவாவும் துறவிகள் இல்லையெனில், இங்கே யார் துறவி?

# 2

# தாய்மை

உலகத்தின் எல்லா மொழிகளிலும் மிக அழகான சொல்... அம்மாவைக் குறிக்கும் சொல்!

பிரபஞ்சத்தைப் படைத்தளித்த பரம்பொருள் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியாத தால்தான், ஒவ்வோர் உயிருக்கும் ஒரு தாயைத் தந்தது. தாயும் தெய்வமும் தனித்தனி வடிவங்கள் இல்லை!

கடவுளின் படைப்பில் தன்னலத்தின் நிழல்கூடப் படாதது, தாயின் படைப்பு ஒன்றுதான். இதில் யாருக்காவது சந்தேகம் இருந்தால், தான் பெற்ற விழியற்ற இரு பிள்ளைகள் பார்வையைப் பெறுவதற்காகத் தன் விழிகளைத் தரும் நோக்கில் சமீபத்தில் தற்கொலை செய்துகொண்ட தமிழ்ச்செல்வியைச் சிந்தித்தால் போதும். இதயமுள்ள அனைவரையும் அழச் செய்த தமிழ்ச்செல்வியின் தற்கொலை ஒரு தவறான நடவடிக்கை... ஆனால், அதைத் தன்னலமற்ற ஒரு தாயால் மட்டுமே செய்ய முடியும்.



தாயை வேறெந்த மொழியில் விளக்கினாலும் வராத பொருள் தமிழில் விளக்கினால் வரும். தாய் தன்னுடைய குழந்தைக்கு உயிர் கொடுக்கிறாள். கருவில் உயிர் கொடுத்தவள், அந்த உயிர் உறைவதற்கு மெய்(உடல்) கொடுக்கிறாள். பத்து மாதம் சுமந்து பின்பு அதை

உலகத்தில் உயிர்மெய்யாய் உலவ விடுகிறாள். இந்த உண்மையை உணர்த்தவே உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் சேர்ந்து உருவானது 'அம்மா'!



'இந்தியாவில் ஓர் லட்சியப் பெண் தாயே. அவள்தான் தன்னலமற்று துன்பங்களைச் சகித்துக்கொள்கிற, எந்தப் பாவத்தையும் மன்னிக்கிற மனோபாவம் கொண்டவள்.

மேலை நாடுகளில் பெண், ஒருவனால் மனைவியாகப் பார்க்கப்படுகிறாள். ஆனால் கிழக்கில் அவள் எப்போதும் தாயாகவே போற்றப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் நம் கண்களுக்குத் தரிசனம் தரும் தெய்வம். அவள் தன் முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள்' என்றார் சுவாமி விவேகானந்தர்.

பூ அரும்பாகி, மலராகி, கனியாய்க் கனிவதுபோல், பெண்ணுக்கும் வாழ்வில் பெண்மை, தாய்மை, இறைமை என மூன்று நிலைகள் உண்டு. பெண்மைக்குள் தாய்மை மலர்ந்தால் இறைமை தானாய் மலரும். மலையில் உள்ள கல்லை யாரும் மதித்து வணங்குவதில்லை. அது சிற்பியின் கைபட்டுச் சிலையாகும்போது அதற்கு ஒரு மரியாதை பிறக்கிறது. அந்தச் சிலை கோயிலின் கருவறையில் வைக்கப்படும்போது தொழுகைக்குரிய தெய்வமாகிறது. கன்னிப்பெண் ஒரு கல்லைப் போன்றவள். இல்லற வாழ்க்கையில் அவள் சிற்பமாகச் செதுக்கப்படுகிறாள். தாயாகும்போது குடும்பக் கோயிலின்

கருவறைக்குள் அவள் கடவுளாக்கப்படுகிறாள்.

உலகத்தின் எந்த இடத்திலும் கெட்ட பிள்ளை உண்டு. ஆனாலும் எங்கேயும் கெட்ட தாய் இல்லை. இதற்கு நம் இதிகாசத்திலும் சான்று உண்டு.

கௌரவர்களின் தாய் காந்தாரி. கணவன் காணமுடியாத உலகைத் தானும் காண்பதில்லை என்று கண்களைப் பட்டுத் துணியால் மூடி மறைத்துக் கொண்டவள். காலம் முழுவதும் கற்புத் தவம் புரிந்த அந்தத் தாயுள்ளம், பாண்டவர்களால் துரியோதனனுக்குத் துன்பம் நேர்ந்துவிடுமோ என்று கலங்கித் தவித்தது. போர் மேகம் சூழ்ந்தபோது அவள் துரியோதனை அழைத்தாள். 'மகனே! என் கற்புத் தவத்தை உன் உடலுக்குக் கவசமாக்குகிறேன். குழந்தையாய்ப் பூமியில் நீ பிறப்பெடுத்த போதிருந்த நிர்வாணக் கோலத்தில் என் முன் வந்து நில். துணியால் மூடி வைத்திருக்கும் என் விழி திறந்து உன் மேனி பார்க்கிறேன். என் பார்வை படுமிடமெல்லாம் உருக்கின் வலிமை பெறும். அதன் பின் உன்னை யாராலும் அழிக்க முடியாது!' என்றாள்.

தாயின் முன்னால் நிர்வாணமாக நிற்க நாணிய துரியோதனன் இடுப்பில் ஓர் அரையாடை அணிந்து வந்தான். கணவனின் கரம் பற்றிய காலம் தொட்டு மூடிவைத்த விழிகளைப் பட்டுத் திரை விலக்கி, முதன்முதலாக மகனைப் பார்த்தாள் காந்தாரி. ஆடை மூடிய தொடைப் பகுதியில் அவள் பார்வை படாததால் அந்த இடம் மட்டும் பலவீனமுற்றது. அதை அறிந்து வைத்திருந்த கண்ணன் காட்டிய சமிக்ஞையின்படி, களத்தில் பீமன் துரியோதனனின் தொடையில் கதையால் அடித்து நிலத்தில் வீழ்த்தினான்.

தான் பெற்ற நூறு பிள்ளைகளும் அழிந்ததற்கு மூல காரணம் கண்ணனே என்று புரிந்துகொண்டாள் காந்தாரி. 'கண்ணா! நான் ஒரு பத்தினி என்பது உண்மையானால் இவ்வளவு அழிவுக்கும் அடித்தளமான நீ அழிந்து போவாய். இன்றிலிருந்து முப்பத்தாறு ஆண்டுகள் முடியும்போது உன் குலம் முழுவதும் அழியும். உறவுகளின்றி அநாதையாய் நீ மரணத்தைச் சந்திப்பாய். இது சத்தியம்!' என்று சபித்தாள். அவளுடைய சாபம் அப்படியே நிறைவேறியதாகப் பாரதம் கூறுகிறது. கெட்ட பிள்ளைக்குத் தாயாக இருந்தாலும், பாசமில்லாத கெட்ட தாயை எங்கும் பார்க்க முடியாது. அவதார புருஷனையும் சபிக்கும் ஆற்றல் பெற்றது தாயின் பாசம்!

உலகத்தின் எல்லா உறவுகளையும் துறந்துவிட்ட துறவிகள்கூட, எந்த

நிலையிலும் துறக்க முடியாத உறவு தாயின் உறவு. பற்றுகளிலிருந்து விடுபட்ட துறவிகளுக்குப் பூர்வாசிரமம் இல்லை என்கிறது சனாதன தர்மம். ஒரு துறவியை, அவரைப் பெற்ற தந்தை சந்திக்க நேர்ந்தால், தந்தைதான் அந்தத் துறவியின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும். ஆனால் தாய் சந்திக்க நேர்ந்தால், அவள் திருவடிகளில் துறவி விழுந்து தொழ வேண்டும். தந்தைகட்கு இல்லாத மதிப்பை இந்து தர்மம் தாய்க்குத் தந்திருக்கிறது.

கேரளத்தில் உள்ள காலடியில் அவதரித்த ஆதிசங்கரர், எட்டு வயதில் நான்கு வேதங்களைக் கற்று முடித்து, பன்னிரண்டு வயதில் சாத்திரங்கள் அனைத்தையும் தேர்ந்து தெளிந்து, பதினாறு வயதில் பாஷ்யம் எழுதி, முப்பத்திரண்டு வயதில் அத்வைதியானவர். அவர் துறவுக் கோலம் பூண்டபோது, தான் மட்டும் தனி மரமாக எப்படி வாழ்வது என்று தவித்தாள் அன்னை ஆர்யாம்பிகை. மரணத்தின் மடியில் மூச்சுத் திணறும் போது மகனுடைய மடியில் தலைசாய்க்கும் வரம் வேண்டினாள். 'தாயே! நான் எங்கிருந்தாலும் உன் மரணப் பொழுதில் வந்து மடி சுமப்பேன்' என்று சத்தியம் செய்தார் சங்கரர்.

காலம் அதன் போக்கில் வேகமாக ஓடியது. ஒருநாள் சிருங்ககிரியில் சீடர்களுக்கு நடுவே அமர்ந்திருந்தபோது அவருடைய நெஞ்சில் தாயின் மரணப்படுக்கை நிழலாடியது. உடனே, காலடி நோக்கி விரைந்தார். மரண வாசலில் தடுமாறிக்கொண்டு இருந்த தாயின் தலையை மடியில் சுமந்தார். ஆர்யாவின் ஆன்மா அமைதியடைந்தது. ஊரும், உறவும் கூடியது. ஈன்ற அன்னைக்கு இறுதிக்கடன் முடிக்க சங்கரர் முடிவெடுத்தபோது 'துறவிக்கு ஏது உறவு?' என்று உரத்த குரலில் ஊர் கேட்டது. 'சந்நியாசம் வாங்கியவன் பிரேத சம்ஸ்காரம் செய்ய முடியாது' என்று அது தீர்ப்பு வாசித்தது. 'தர்மத்தை மீறினால் தள்ளி வைத்துவிடுவோம்' என்று சனாதனச் சமூகம் மிரட்டியது.

ஊரின் மிரட்டலுக்கும், உறவின் ஒப்பாரிக்கும் சங்கரர் வளைந்து கொடுக்கவில்லை. தன்னைப் பெற்ற தாயின் சடலத்தைத் தோளில் சுமந்தார். தனியனாய் கொல்லைப்புறம் நோக்கி நடந்தார். அன்னையின் சடலத்தை இறக்கி வைத்து, 'அக்கினித் தேவனே! சந்நியாச தர்மத்தைத் தாங்கி நிற்கும் நான் இதுவரை உனக்கு அவிர்ப்பாகம் அளிக்கவில்லை. இன்று என் தாயின் தேகத்தை உனக்கு ஆகுதியாய் அளிக்கிறேன். ஏற்றுக்கொள்' என்றார். அன்னை ஆர்யாவின் உடலை உடனே நெருப்பு சூழ்ந்தது. விருப்பு வெறுப்புகளைக் கடந்து ஞானநிலை அடைந்த ஆதிசங்கரர், சுகதுக்கங்களுக்கு ஆட்பட்ட சாதாரண மனிதனைப் போல் தாயின் அன்பை நினைந்து நெஞ்சம் உருகி, ஐந்து பாடல்களில் தன்

சோகம் முழுவதையும் இறக்கிவைத்தார். அந்தப் பாடல்கள் வடமொழியில் 'மாத்ருகா பஞ்சகம்' என்று அமரத்துவம் பெற்றுவிட்டன.

வாழ்க்கை உறவுகளை ஒரே நொடியில் உதறித் தள்ளிய பட்டினத்தாராலும் தாயின் உறவைத் தள்ள முடியவில்லை. தெரு மண்ணில் உருண்டும், குப்பையில் புரண்டும், காடு மேடுகளில் கால் கடுக்கத் திரிந்தும் பட்டினத்தாரின் காலம் நடந்தபோது, ஒருநாள் அவரைப் பெற்றெடுத்த தாய் கண் மூடிய செய்தி வந்து சேர்ந்தது. மயானம் நோக்கி ஓடினார். சுற்றத்தார் அடுக்கியிருந்த சிதையைத் தள்ளிவிட்டுப் பச்சை வாழைமட்டையில் தாயின் சடலத்தைக் கிடத்தி ஞான நெருப்பால் எரித்தார். பாசத்தால் ஆற்றமாட்டாமல் அனைவரும் தேம்பித் தேம்பி அழும்படி பத்துப் பாடல்கள் பாடினார். தாயின் தியாகத்தை விளக்கும் பட்டினத்தாரின் பத்துப் பாடல்களை விஞ்சி நிற்கும் படைப்பு உலகத்தின் எந்த மொழியிலும் இருக்க முடியாது.

கன்னி மேரிக்கு மகனாய்ப் பிறந்த கர்த்தர் இயேசு கல்லூரி மலையில் சிலுவையில் அறையப்பட்ட போது, கண்மூடும் கடைசி நிமிடத்தில் தன் தாயை நினைத்தார். உடற் கூட்டிலிருந்து உயிர்ப் பறவை பறக்கும் அந்தக் கடைசி நொடியில் ஒவவொருவர் நெஞ்சிலும் தாயின் நினைவே நிழலாட வேண்டும் என்று உணர்த்துவதற் காகவே தன்னுடைய மரணப் பொழுதில் அவர் தாயை நினைத்தார்.

'தாயின் காலடியில்தான் சொர்க்கம் இருக்கிறது' என்று நபிகள் நவின்றார். 'ஒரு மனிதனின் அழிக்க முடியாத பாவங்களுள் ஒன்று தாயையும், தந்தையையும் புறக்கணித்தல்' என்கிறது திருக்குர்ஆன்.

'நிலத்துக்கடியில் நிறைந்து கிடக்கும் நீர் கிணற்றில் தெரிவதுபோல், பசுவின் உடலில் வியாபித்திருக்கும் பால் மடிக்காம்பில் சுரப்பது போல், தெய்வம் ஒவ்வொருவனுக்கும் தாயில் தரிசனம் தருகிறது' என்பது நம் வைதீக மதத்தின் வாக்கு. ராமகிருஷ்ண பரமஹம்சர் தக்ஷிணேசுவரம் காளி கோயிலில் அம்பிகை தரிசனத்தில் ஆழ்ந்து கிடந்தாலும், பெற்ற தாயை இறுதிவரை பராமரிக்க மறக்கவில்லை. அவருடைய ஆன்மிகச் சீடர் விவேகானந்தர் வேதாந்த சிகரத்தில் நின்ற நிலையிலும், தாயின் விருப்பத்தை நிறைவேற்ற, தனக்குச் சடங்குகளில் நம்பிக்கை இல்லாவிடினும் கங்கையில் நீராடி, ஈர உடையுடன் காளி கோயிலில் அங்கப் பிரதட்சணம் செய்யத் தயங்கவில்லை.

'என்னுடைய நல்ல குணங்கள் எல்லாவற்றுக்கும் என் தாய்க்கு நான் கடன் பட்டவன்' என்றார் ஆபிரகாம் லிங்கன். 'பிரெஞ்சு நாட்டில் நல்ல

குடிமக்கள் உருவாக நல்ல தாய்மார்கள் பெருக வேண்டும்’ என்றான் நெப்போலியன். 'அன்னையின் செல்வாக்கில்தான் என் பண்புகள் சிறந்தன. அவளால்தான் என் இலக்கிய ரசனையும் வளர்ந்தது’ என்று நன்றி செலுத்தினார் காந்தியைச் சிந்தனையளவில் மகாத்மாவாகச் செதுக்கிய ரஸ்கின்.

கோடிக் கணக்கில் மக்களைக் கொன்று குவித்த ஹிட்லரின் இதயத்தில்கூட இறுதிவரை தாய்ப்பாசத்தின் ஈரம் இருந்தது. இரண்டாம் உலகப் போரில் மோசமான தோல்வியைத் தழுவியதும் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட ஹிட்லர், தன் மார்பில் தாயின் படத்தைத் தழுவியபடி நாற்காலியில் சரிந்து கிடந்தார் என்று சரித்திரம் சொல்கிறது.

'முள்ளில் படுக்கையிட்டுப் பெற்றோர் இமையை மூடவிடாத பிள்ளைக் குலங்கள்’ பல்கிப் பெருகுவது பாரதப் பண்பாட்டுப் பெருமைக்கு உகந்ததன்று. முதியோர் இல்லங்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பது இந்த மண்ணுக்குரிய நாகரிகத்தின் நல்ல அடையாளமில்லை. குடந்தையில் தாயைத் தவிக்கவிட்டு, காசியில் கோதானம் செய்பவனைக் கடவுள் கண் திறந்து பார்க்க மாட்டான். நன்றி மறந்து தாயையும், தந்தையையும் புறக்கணிப்பவன், வாழும் உலகிலேயே நரகத்தை நாள்தோறும் அனுபவிப்பான். பெற்றோர்க்குச் சோறு போடாதவன் வாழ்க்கையில் உயர்ந்ததாக வரலாறில்லை.

அரசியலும், சினிமாவும் நம்மைப் பாதித்துபோல் வேறு எதுவும் பாதித்தில்லை. ராஜரிஷியாய் வாழ்ந்த காமராஜர் தாய்க்கு மட்டும் மாதம் தோறும் அடிப்படைச் செலவுக்கு 120 ரூபாய் அனுப்பிவைத்தார். கலைஞர் கருணாநிதி நாத்திகம் பேசினாலும் தாயைத் தெய்வமாகத் தொழுதிடும் ஆத்திகர். எம்.ஜி.ஆரும், சிவாஜி கணேசனும் அம்மா என்ற சொல்லின் ஆழம் கண்டவர்கள். இவர்கள் அனைவரும் வாழ்க்கையில் வளர்ந்தவர்களே தவிர, வீழ்ந்தவர்களில்லை. இந்த இரண்டு துறைகளாலும் எத்தனையோ வழிகளில் மோசமாகப் பாதிக்கப்பட்ட என் வாழ்கால இளைஞர்கள் தாயைப் போற்றுவதில் இவர்களைத் தாராளமாகப் பின்பற்றலாம்.

பணத்தை மையமாக வைத்து உறவுகள் மதிக்கப்படும் காலம் இது. தாய்ப்பாலில் வளர்ந்து, தந்தையின் வியர்வையில் உயர்ந்து, வெளிநாடுகளில் பணியாற்றிப் பணம் சேர்க்கும் இளைஞர்கள் சிலர் இன்பங்களைப் பட்டியலிட்டு அனுபவிக்கும் அவசரத்தில், ஆதரவற்று நிற்கும் பெற்றோரைப் புறக்கணித்துவிடுகின்றனர். அப்படிப்

புறக்கணிக்கப்பட்ட பெற்றோரின் கண்ணீரில்

வரையப்பட்டதுதான் இந்தக் கவிதை...

மகனே...

நீ பிறந்த அன்று

தோட்டத்தில் வைத்தோம்

ஒரு தென்னங்கன்று

எங்கள் வியர்வையில்

நீ உயர்ந்தாய்

நாங்கள் வார்த்த தண்ணீரில்

தென்னை வளர்ந்தது

எங்கோ இருந்து நீ ஈட்டும் பணம்

உனக்கு இன்பம் தருகிறது

இங்கே இருக்கும் தென்னை மரம்

எங்கள் இருவருக்கும்

சுக நிழலும் சுவை நீரும் தந்துதவுகிறது

ஒருநாள்...

நீ ஈ மெயிலில் மூழ்கியிருக்கும்போது

எங்களை ஈ மொய்த்த செய்தி வந்து சேரும்

இறுதிப் பயணத்தில்

நீ இல்லாமற் போனாலும்

தென்னை ஓலை

*எங்கள் கடைசி மஞ்சமாகும்!*

*பாசத்தின் வேர்களினால்தான் பாரதத்தின் பண்பாட்டு மரம் பூத்துக் குலுங்குகிறது. அந்த வேர்களை யாரும் வெட்டி விடாதீர்கள். மறைந்த காஞ்சி மகாப் பெரியவர் சொல்கிறார்... "தாயன்பு போன்ற கலப்படமற்ற அன்பு இந்த உலகில் வேறு எதுவுமில்லை. பிள்ளை தன்னுடைய அன்பைப் பிரதிபலிக்காவிடினும், தாய் அதைப் பொருட்படுத்த மாட்டாள். பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு! துஷ்டப் பிள்ளை உண்டு. துஷ்ட அம்மா கிடையவே கிடையாது. பரிபூரணமான அன்பையும், தன்னலமற்ற உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம் மட்டுமே பார்க்க முடியும்.''*

*'அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே*

*அம்மாவை வணங்காமல் உயர்வில்லையே'*


*என்னும் வாலியின் வைர வரிகள் எப்போதும் வேத மந்திரமாக நம் இதயங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்!*

# 3

# குடும்பம்

காலத்தின் ஓட்டத்தில், நாகரிகத்தின் வளர்ச்சியில், பண்பாட்டு மலர்ச்சியில் மனித குலத்துக்குப் பரிசாக வாய்த்ததுதான் குடும்பம்! அது உறவுகளின் சங்கிலியால் உருவெடுத்தது. ஒரு வளையம் பலவீனமடைந்தால் சங்கிலி முழுவதும் பலவீனமடைவதுபோல் ஒரு நபர் நலிவடைந்தால் குடும்பம் முழுவதும் நலிந்துவிடும். ரோம் ஒரே நாளில் கட்டி முடிக்கப்படவில்லை. குடும்பம் என்னும் அமைப்பும் ஒரே நாளில் உருவாகிவிடவில்லை. குரங்கிலிருந்து மனிதன் உருவாவதற்குள் எத்தனை பரிணாம மாற்றங்கள் நிகழ்ந்தனவோ... அத்தனை மாற்றங்கள் குடும்பம் உருவாவதிலும் நிகழ்ந்தன.

பரம்பரை பரம்பரையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடும்ப மாளிகை சிதைந்து தனிக் குடும்பமாகி விட்டது. இப்படிக் குடும்ப அமைப்பு முற்றாகச் சிதைந்து போனால், உலகம் உறவுகளற்றுப் போகும். உறவுகள் அற்ற உலகில் வன்முறையும், சுயநலமுமே வாழ்க்கை முறைகளாக மாறும்!



இன்று குடும்ப வழக்கு மன்றங்களில் வாடிய முகங்களுடன் விவாகரத்துக்காக வந்து நிற்கும் தம்பதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இந்தக் கூட்டத்தில் பெற்றோர் பார்த்து

சேர்த்துவைத்தவர்களும் உண்டு; தாங்களாகவே காதலித்துச் சேர்ந்தவர்களும் உண்டு. விட்டுக்கொடுத்தலும், சரியான புரிதலும் இல்லாதபோது, பெற்றோர் பார்த்து மணமுடித்தாலும், காதலித்துக் கைப்பிடித்தாலும் குடும்பக் கோயிலின் கட்டுமானம் குலைந்துதான் போகும். சேர்ந்து வாழ்வதில் மட்டுமே சிறப்பிருக்கிறது. விட்டுக் கொடுத்தலில்தான் மனப்பூர்வமான மகிழ்ச்சி மலர்கிறது. உறவுகளுக்காக உதவிக்கரம் நீட்டுவதில்தான் நிஜமான நேசத்தின் நிறம் தெரிகிறது. சரியான புரிதலில்தான் வாழ்க்கை ஒளிமயமாகிறது! ஒருவருக்காக ஒருவர் உருகித் தவித்து அன்பு செலுத்தும் வீட்டில் தான் தெய்வம் தரிசனம் தருகிறது.



ஆணின் துணையின்றிப் பெண்ணும், பெண்ணின் உறவின்றி ஆணும் வாழ முயல்வது இயற்கைக்கு முரணானது. ஒன்று மட்டும் போதுமென்றால் இரண்டெதற்கு? இரண்டின் இணைப்பில்தானே ஒன்றே பிறக்கிறது! இந்த இணைப்பு வெறும் உடலின்பத்துக்காக இல்லை. காமம், சரீரம் சம்பந்தப்பட்ட சதை மயக்கம். அது உடம்பில் தொடங்கி, உடம்பிலேயே முடிந்துவிடும். தூய்மையான அன்பு மட்டுமே இறுதிவரை நிலைத்திருக்கும்.

அமைதியான குடும்ப வாழ்க்கை, உலகத்தின் உயர்ந்த மனிதர்

களுக்குக்கூட அற்புதமாய் அமைந்துவிடவில்லை. நாம் சிந்திப்பதற்கு முதன்முதலில் சாளரங்களைத் திறந்து வைத்த சாக்ரடீஸின் குடும்ப வாழ்க்கை சோகமயமானது. படித்துக்கொண்டும், தோழர்களோடு விவாதித்துக் கொண்டும், இளைஞர்களுடன் பேசிக்கொண்டும் பொழுதைக் கழித்த சாக்ரடீஸை அவர் மனைவி ஆராதிக்கவில்லை. அவள் கடுமையாக உரத்த குரலில் வசைபாடும்போது 'இடி இடிக்கிறது' என்பவர், தண்ணீரைத் தலையில் கோபத்துடன் வாரி இறைக்கும்போது, 'இடி இடித்த பின்னால் மழை பொழிகிறது' என்பார். கிரேக்கம் புகழ்ந்த தத்துவ ஞானிக்கு வீட்டில் கிடைத்த மரியாதை இதுதான்.


ஆங்கில இலக்கிய உலகில் 'சுவர்க்க நீக்கம்' மூலம் அழியாப் புகழ்பெற்ற மில்டன் தன்னுடைய முப்பத்தைந்தாவது வயதில் மேரி பாவல் என்ற அரச குடும்பத்துப் பெண்ணை மணந்தார். எளிமையான மில்டனின் வீட்டில் வசதிகளற்ற வாழ்க்கையை விரும்பாத மேரி, கணவனைக் கைவிட்டு தன் பிறந்த வீடு திரும்பினார். மீண்டும் மில்டனுடன் சேர்ந்து வாழ மறுத்தார். மனைவியின் அலட்சியத்தால் அவமானமுற்ற மில்டன் மனம் ரணமானது. விவாகரத்துக்கு ஒத்த மனமின்மையும் ஒரு நியாயமான காரணமாகச் சட்டம் அங்கீகரிக்க வேண்டும் என்று கட்டுரை எழுதி வெளியிட்டார். மூன்று முறை மணமுடித்தும், முழுப் பார்வை இழந்து, அமைதியைத் தேடி அலைந்து, இறுதிவரை நிம்மதியில்லாமலே இறந்துபோன மில்டனைப் பொறுத்தவரை இழந்த சுவர்க்கத்தைக் குடும்ப வாழ்வில் திரும்ப அவர் அடையவே இல்லை.

'என்னுடைய வழிகாட்டிகளில் ஒருவராக நான் நீண்டகாலமாகக் கருதிவரும் அந்த மாபெரும் குருநாதரின் தாழ்மையான சீடன்' என்று மகாத்மா காந்தியாரைப் பணிவுடன் போற்றினாரோ, அந்த எழுத்து உலக ஞானி டால்ஸ்டாயின் குடும்ப வாழ்க்கையிலும் குதூகலமில்லை.

உலகப் புகழ்பெற்ற 'அன்னா கரீனா'வைத் திருத்தித் திருத்தி அவருக்குத் திருப்தி ஏற்படுகிறாற்போல் எழுதி முடிக்கவே டால்ஸ்டாய்க்கு மூன்று ஆண்டுகள் கடந்தன. ஒவ்வொரு நாளும் இரவு வெகுநேரம் விழித்திருந்து அவருடைய தெளிவற்ற எழுத்துகளை மீண்டும் மீண்டும் சுத்தமாகப் பிரதி எடுத்துப் புத்தகமாக வெளிக்கொண்டு வரத் துணை நின்றவள்தான் துணைவியாக வாய்த்த சோன்யா.

'இயேசுநாதர் பணத்துக்காகவா கலிலேயா கடற்கரை மணலில் கால் கடுக்க நடந்து மக்களை நல்வழிப்படுத்த அறிவுரைகளைப் பகர்ந்தார்?

*என்னுடைய படைப்புகளை நான் பணத்துக்கு விற்பனை செய்வது விரும்பத்தக்கதா?' என்று ஒரு கணம் யோசித்த டால்ஸ்டாய், மனைவிக்குத் தந்திருந்த வெளியிடும் உரிமையை விலக்கி, யார் வேண்டுமானாலும் தன் இலக்கியப் படைப்புகளை வெளியிட்டுக் கொள்ளலாம் என்று அறிவிப்புச் செய்யவிருப்பதாக சோன்யாவிடம் தெரிவித்தார். அவ்வளவுதான். அதுவரை தென்றலாய்த் தவழ்ந்த சோன்யா சூறாவளியானார். ஒவ்வொரு நாளும் நரகமானது. 'நான் எங்கிருக் கிறேன் என்றறிந்து என்னைப் பின்தொடர்ந்து வராதே. மீறி வந்தால் நிலைமை மேலும் மோசமாகுமே ஒழிய என் முடிவை உன்னால் மாற்றிவிட முடியாது' என்று காலை நான்கு மணிக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு, எண்பது வயதைக் கடந்த டால்ஸ்டாய் வீட்டை விட்டு வெளியேறினார். தேடி வந்த சோன்யாவை, மரணப்படுக்கையில் விழி திறந்து பார்க்காமலே மண்ணுலகில் இருந்து விடைபெற்றுக்கொண்டார் அந்த ருஷ்யப் பேரறிஞர்.*



*குடும்பத்தில் பெண்களால் ஆண்கள் நிம்மதி இழந்த கதை நூற்றுக்கு மூன்று இருக்கலாம். ஆனால், ஆண்களால் பெண்கள் அலைக்கழிக்கப்படுவது கடலலை போல் ஓயாமல் காலங் காலமாய்த் தொடர்ந்து வருகிறது. கணவனும், மனைவியும் கற்க வேண்டிய முதற்பாடம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல். அதுவே கடைசிப் பாடமும் கூட!*

*குடும்பம் என்பது வாழ்க்கை இன்பத்துக்காகவே வளர்த்தெடுக்கப் பட்டது. இல்வாழ்வின் இனிமைக்கும் பணத்தைவிட அன்பு நிறைந்த மனம்தான் அவசியம். மனிதர்களின் அன்பு வயப்பட்ட வாழ்க்கைக்கு விலங்குகளின் காதல் வாழ்க்கையைக் காட்சிப்படுத்துகிறது நம் சங்க இலக்கியம்.*

*அது ஒரு கோடை காலம். ஆண் மானும் பெண் மானும் வெப்பத்தைக் தாள முடியாமல் தாகத்தில் தவிக்கின்றன. நெடிய தேடலில் அவற்றின் பார்வையில் ஒரு சிறிய பள்ளம் தென்படுகிறது. பள்ளத்தின் அடியில்*

சேறும் சகதியுமாய் சிறிதளவு தண்ணீர். நீரருந்த மான்கள் பள்ளத்தை நெருங்கின. ஒரு ஜீவனுக்கு மட்டுமே போதுமான அந்த நீரைத் தான் அருந்தினால், தன் துணைக்குக் கிடைக்காது என்று இரு மான்களும் ஒரே மாதிரி நினைத்து, நீரில் வாய் வைத்து அருந்துவதுபோல் நடிக்கின்றன. நீரின் அளவு கொஞ்சமும் குறையாமல் இருந்தபடியே நீடிக்கிறது. இந்த மான்களின் அன்பு மனிதர்களுக்கு இருந்தால் வாழ்க்கை எவ்வளவு சுகமாக நடக்கும்!

நம் 'குறுந்தொகை' காட்டும் ஒரு குடும்பக் காட்சி... ஆண் குரங்கு இறந்து விடுகிறது. காதல் மிக்க பெண் குரங்கு கைம்மைக் கோலத்தில் கண்ணீரோடு வாழ விரும்பாமல் தானும் இறக்கத் துடிக்கிறது. ஆனால், தன் வயிற்றை இறுகப் பற்றியிருக்கும் குட்டிக் குரங்கை நினைத்ததும் சாவைப் பற்றிய சிந்தனையை அது தள்ளி வைக்கிறது; தாயின் துணையின்றித் தானே மரக் கிளையைக் குட்டிக் குரங்கு பற்றிக் கொள்ளும் காலம் வரை காத்திருக்கிறது; அதற்குப் பின்பு மலை உச்சியிலிருந்து விழுந்து மரணத்தை முத்தமிடுகிறது. ஆண் குரங்கின் மீதிருந்த அளப்பரிய காதலும், குட்டிக் குரங்கு சொந்தக் கால்களில் நிற்கும் வரை அதைக் காக்கக் கருதும் பொறுப்பு உணர்வும் ஒரு பெண் குரங்கிடம் இருந்ததை நம் பேரிலக்கியம் விளக்குகிறது. மானும், குரங்கும் நடத்திய காதல் வாழ்வை ஆணும், பெண்ணும் நடத்த முடியாதா?



பாலியல் தவறுகள்தான் பல குடும்பங்களைப் பாழாக்குகின்றன. பறவைகளிடம் நாம் பார்க்கும் வாழ்க்கை ஒழுக்கம் மனிதர்களில் பலரிடமில்லை. ஒரு புறா தன்னுடைய துணையைத் தவிர வேறொன்றைத் தேடாது. 'இலினோயிஸ்' என்னும் கிளி தன்

*துணைக்கிளி இறந்ததும், தானும் இறந்துவிடும். 'வீட்டியா' என்னும் பறவை தன் இணை மறைந்த ஒரு மாதத்துக்குள் அதே நினைவாய் இருந்து மரணத்தைத் தழுவும். 'கோல்டன் ஈகிள்' பறவை வேறொன்றை நாடாமல், தன் துணையோடு மட்டுமே நூறாண்டு வாழும்.*

*'வீட்டு ஈ ஒரு சமயம் அழுகிய புண்ணின் மீதும், மறுசமயம் இறைவனுக்குப் படைக்கப்பட்ட நிவேதனப் பொருளின் மீதும் அமரும். ஆனால், தாமரையில் தேன் உண்ணும் வண்டு அதைத் தவிர அடுத்த ஒன்றைத் தேடிச் செல்லாது' என்றார் பரமஹம்சர். ஆணும், பெண்ணும் ஈக்களாக இல்லாத வரை குடும்பக் கோயிலில் குழப்பமில்லை!*

*தவறுதல் மனித இயல்பு. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை. ஒருவர் தவறிழைத்தால் மற்றவர் மன்னித்து மறத்தலே நல்லது. அன்பில் நெகிழ்ந்து நிற்கும் பெண்கள் எளிதில் ஆண்களை மன்னிப்பது உண்டு. ஆனால், பெண்ணின் தவற்றை மன்னிக்கும் மனோபாவம் ஆணிடம் அவ்வளவாக இருப்பது இல்லை.*

*சூதில் பணயமாகத் தன்னை வைத்த தருமனைப் பாஞ்சாலி மன்னித்தாள். நடுக்காட்டில், நள்ளிரவில் கைவிட்டு ஓடிய நளனைத் தமயந்தி மன்னித்தாள். நெருப்புக் குளியல் நடத்திய ராமனின் சிறுமையைச் சீதை மன்னித்தாள். மாதவியிடம் மையலுற்று கைப்பொருளை இழந்து கண்ணீருடன் வந்து நின்ற கோவலனைக் கண்ணகி மன்னித்தாள். ஆனால், இந்திரனிடம் தன்னை இழந்த அகலிகையைக் கௌதம முனிவன் மன்னிக்க மனமில்லாமல், கோபத்தில் சாபம் தந்து கல்லாக்கினான். ரேணுகையை மன்னிக்காத ஜமதக்னி, மகன் பரசுராமனை அழைத்துத் தாயின் தலையைத் துண்டிக்கச் செய்தான். ஆதிக்கச் சிந்தனையிலிருந்து முதலில் ஆண்கள் விடுபட வேண்டும்.*

*கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் அடிமையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. விட்டுக் கொடுத்தல் அடிமைத்தனம் அன்று. 'இணைந்திருங்கள். ஆனால், உங்கள் இணைப்பில் இடைவெளி இருக்கட்டும். கோயிலைத் தாங்கும் தூண்கள் இடைவெளிவிட்டே நிற்கின்றன. இசை தரும் இனிய வீணையின் நரம்புகள் விலகியே இருக்கின்றன' என்ற கலீல் கிப்ரானின் சிந்தனை நம் கவனத்துக்குரியது.*

*அன்புதான் குடும்பத்தின் ஆதார சுருதி. 'இருப்பது ஓர் ஆடை. அதை இரு கூறாக்கி இருவரும் அணிந்தால் மட்டுமே மானங் காக்க முடியும். அந்த அளவு வறுமையின் முற்றுகை! அப்படிப்பட்ட நிலையிலும்*

கணவனும் மனைவியும் ஒன்றிணைந்து வாழும் வாழ்க்கையே உயர்வான வாழ்க்கை' என்கிறது கலித்தொகை. கலித்தொகைப் பாடலுக்கு இலக்கணமாக அமைந்தது கார்ல் மார்க்ஸ் - ஜூலியா ஜென்னியின் குடும்ப வாழ்க்கை.

பிரிட்டிஷ் மியூசியத்தின் நூல்நிலையத்தில் படிப்பதிலேயே 35 ஆண்டுகளைச் செலவழித்தவர் மார்க்ஸ். அந்த ஆழமான படிப்பறிவும். வாழ்க்கை தந்த மோசமான பட்டறிவும் சேர்ந்துதான் அவரை 'மூலதனம்' படைக்கச் செய்தது. வறுமையில் வாடிய மார்க்ஸ், வீட்டு வாடகை தர முடியாத நிலையில் மனைவியோடும் நான்கு குழந்தைகளோடும் நடுங்கும் குளிரில், கொட்டும் அடைமழையில் வீதியில் தள்ளப்பட்டார். வேறு வழியின்றி அழுக்கும், புலை நாற்றமும் மண்டிக்கிடந்த சேரியில் ஆறு ஆண்டுகள் மார்க்ஸின் குடும்பம் நரகத்தை அனுபவித்தது. ஒரு வயதுப் பெண் குழந்தை இறந்தபோது அடக்கம் செய்வதற்குச் சவப்பெட்டி வாங்கவும் வழியற்று நின்ற கணவனுக்காக உருகினாள் ஜென்னி.

உயர் குலத்தில் பிறந்து, செல்வத்தில் மிதந்து, சிறந்த கல்வி கற்று, பிரஷ்யா அமைச்சரின் சகோதரியாய் வலம் வந்த ஜென்னி, மார்க்ஸைக் காதலித்துக் கைப்பிடித்தது முதல் அவருடைய வறுமையை முகமலர்ச்சியுடன் சேர்ந்து சுமந்தாள். மார்க்ஸுக்கு வாய்த்த ஜூலியா ஜென்னியைப் போல் ஒருவனுக்கு மனைவி வாய்த்தால் அவன் எழு பிறவியிலும் ஏழையாகவே பிறக்கலாம். விவாகரத்து வேண்டி வழக்கு மன்றத்தின் வாசலில் நிற்பவர்கள் ஒரு முறை கார்ல் மார்க்ஸ் - ஜூலியா ஜென்னியின் காதல் வாழ்க்கையைப் படித்துப் பார்ப்பது நல்லது.

'உலகம் ஒழுங்காய் இருக்க, நாடு ஒழுங்காய் இருக்க வேண்டும். நாடு ஒழுங்காய் இருக்க, குடும்பம் ஒழுங்காய் இருக்க வேண்டும். குடும்பம் ஒழுங்காய் இருக்க, தனி மனிதன் ஒழுங்காய் இருக்க வேண்டும். தனி மனிதன் ஒழுங்காய் இருக்க, அவனுடைய இதயம் ஒழுங்காய் இருக்க வேண்டும்' என்ற சீனத்துச் சிந்தனையாளர் கன்பூஷியஸ் வழங்கிய கருத்து, வாழும் மக்களின் இதயங்களில் கல்வெட்டாய் நிலைத்திருந்தால், வைரமுத்து எழுதியது போல் வாழ்வில் நூறானந்தம்: வாழ்வே பேரானந்தம்!

# 4

# புலனடக்கம்

**மா**வீரன் அலெக்சாண்டர் காலத்தில்தான் கிரேக்கத்தின் புகழ்பெற்ற தத்துவஞானி டயோஜனிஸ் வாழ்ந்தார். மக்கள்அலெக்சாண் டரைவிட டயோஜனிஸிடமே மிகுந்த மரியாதை செலுத்தினர். ‘பூமிப் பந்தைக் காலடியில் புரட்டிய தன்னைவிட, டயோஜனிஸ் எந்த விதத்தில் உயர்ந்தவர்?’ என்று சிந்தித்தவன், விடை கிடைக்காமல் குழம்பினான். அவரையே நேரில் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தான். இருவரும் ஒரு நாள் சந்தித்தபோது, 'மக்கள் என்னைவிட உங்களை மிகுதியாக மதிப்பது ஏன்?’ என்றான்.

'அலெக்சாண்டர்! நீ மண்ணை வென்றவன். நான் என்னை வென்றவன். அதுதான் காரணம்’ என்று டயோஜனிஸ் புன்முறுவல் பூத்தபடி விளக்கினார். அதனால் தான் 'புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்’ என்றாள் ஔவைப் பாட்டி.



இன்றைய இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தைச் சிறப்பாகச் செதுக்கிக்கொள்ள வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் உள்ளவர்களாக இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. ஆனாலும், சில இளைஞர்கள் சின்னஞ்சிறு வயதிலேயே சிற்றின்பச் சிலந்தி வலையில் சிக்கிக்கொள்வதும், கல்லூரிப் பெண்களைச் சீண்டுவதில் பேரின்பம்

காண்பதும், 'ஈவ் டீசிங்' என்ற மலினமான மனோவிகாரத்தில் மயக்கமுறுவதும் நமக்குக் கலக்கம் தருகிறது. இந்தச் சிலர், பலர் ஆகாமல் பார்த்துக்கொள்வது சமூகத்துக்கு நல்லது.



இளம்பருவத்தில் புலனடக்கம் இல்லாமற்போனால், வாழ்க்கை முழுவதும் வருந்தவேண்டி இருக்கும். நாம் வாழ்க்கைப் பாதையில் ஒழுங்காகப் பயணிக்க, நம் முன்னோர்கள் நான்கு படிநிலைகளை அமைத்துக் கொடுத்தனர். முதலில் பிரம்மச்சரியம். பிறகு கிருகஸ்தம். அடுத்து வானப்பிரஸ்தம். இறுதியில் சந்நியாசம்!

கல்வி கற்கும் பருவம்தான் பிரம்மச்சரியத்துக்குரியது. இளமையில் சிந்தனையைச் சிதறவிடாமல், சிற்றின்பத்தில் நாட்டம் செலுத்தாமல், கல்வியில் மட்டும் கவனம் வைக்கும் பிரம்மச்சரியன், பின்னாளில் மனைவியுடன் நிறைவான இன்பம் கண்டு, மக்களைப் பெற்று வாழ்க்கையை வெற்றிமயமாக்கும் கிருகஸ்தனாகிறான். சகல இன்பங்களையும் நெறி தவறாமல் சுவைத்துச் சலித்தபின், உறவுகளிலிருந்து விலகி, மனைவியோடு மட்டும் தனிமைப்பட்டு, வானப்பிரஸ்த வாசலில் நுழைந்து, இறுதியில் முற்றாகச் சுயநலம் துறந்து, சமூக நலனை மட்டும் சிந்தித்துச் செயல்படும் துறவியாக பரிபூரணத்துவம் பெறுகிறான். இதுதான் நிறைவான வாழ்க்கை முறை!

'காகிதத்தைத் தொடும்போது என்ன உணர்ச்சி இருக்குமோ, அதே

போன்றுதான் ஒரு பெண்ணைத் தொடும்போதும் மனம் அமைதியாகவும், சலனம் இல்லாமலும் இருக்க வேண்டும்' என்றார் அண்ணல் காந்தியடிகள்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் தன் மனைவி சாரதாதேவியை, தான் வணங்கும் பராசக்தியின் வடிவமாகவே பார்த்தவர். இளமையில் தன்னைத் திருமணம் செய்து, பின்பு பிரிந்து தட்சிணேசுவரம் காளிகோயிலில் அம்பிகை தரிசனத்தில் ஆழ்ந்து விட்டவரைத் தேடி வந்து சரணடைந்தார் சாரதா தேவி. நெஞ்சத்தால் துறவியான பரமஹம்சர் மஞ்சத்தை நினைக்கவே தயங்கினார். ஆனாலும் கணவன் என்ற முறையில், கைப் பிடித்த மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறுக்க மன மில்லாமல் மயங்கினார். 'நீ என்ன எதிர்பார்த்தாலும் அதை நிறைவேற்ற நான் கடமைப் பட்டவன். உன் மனதில் உள்ளதை மறைக்காமல் சொல்' என்றார் பரமஹம்சர். 'இல்லற உறவுக்காக நீங்கள் இருக்கும் இடம் தேடி நான் வரவில்லை. உங்கள் ஆன்மிகப் பயணத்தில் துணை நின்று, தொண்டு செய்யவே வந்தேன்' என்றார் சாரதை.



'என்னை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?' என்று சாரதை கேட்டதும் பரமஹம்சர், 'என்னைப் படைத்த பராசக்தியும், ஈன்றெடுத்த அன்னையும், துணை நிற்கும் நீயும் எனக்கு ஒன்றே!' என்றார். இல்லற சுகத்தைத் தன் இதயம் நாடுகிறதா என்று சோதனை செய்து பார்க்கத் துணிந்தவர், ஒரே அறையில் இரவுப் பொழுதில் மனைவியுடன் ஆறு

மாத காலம் ஒன்றாகத் துயின்றார். இருவர் மனதிலும் ஒரு நொடி கூட உடலின்பம் பற்றிய சிந்தனை எழவில்லை. ஒருமுறை, காளி பூஜையின்போது தன் அறையில் சாரதையைக் கடவுளின் பீடத்தில் அமரச் செய்து, அம்பிகையாகப் பாவித்து, ஆலய முறைப்படி ஆராதனை செய்து, பாதங்களில் விழுந்து தொழுதார் பரமஹம்சர். உலகத்துப் பெண்கள் அனைவரையுமே அம்பிகையின் வடிவமாகப் பார்க்க வேண்டும் என்பது அவரது விருப்பம்.

குருதேவர் பரமஹம்சரின் பாதையில் சுவடு மாறாமல் கால் பதித்தவர் சுவாமி விவேகானந்தர். சிகாகோ நகரில் அவர் ஆற்றிய ஆன்மிக உரைக்குப் பின்னால் அமெரிக்கர்கள் அவரை வழிபாடு செய்தனர். பார்த்தவர் மயங்கும் பேரழகனாக விளங்கிய விவேகானந்தர் மீது ஒரு பெண் மையலுற்றாள். 'உங்களை மணக்க விரும்புகிறேன்' என்று மனம் திறந்தாள். 'என்னை ஏன் நீங்கள் மணக்க விரும்புகிறீர்கள்?' என்று சுவாமி காரணம் கேட்டபோது, 'அறிஞராகிய உங்கள் மூலம் அறிவிற் சிறந்த குழந்தையை அடைய விரும்புகிறேன்' என்றாள். 'அறிவார்ந்த பிள்ளையைப் பெறுவதுதான் உங்கள் ஆசை என்றால் இப்பொழுதே என்னை நீங்கள் மகனாக ஏற்கலாம் அன்னையே!' என்றார் ஆன்மிகத் துறவி விவேகானந்தர். பெண்கள் அனைவரையும் தாயாகப் பார்த்த ஞானி அவர்.

மகாத்மா காந்தி, சாதாரண மோகன்தாஸ் கரம்சந்தாக இருந்தபோது, காமக் கணைகளால் காயப்பட்டவர்தான். தந்தை மரணப்படுக்கையில் இருந்தபோது, அவருக்குப் பணிவிடை செய்வதைத் தவிர்த்துவிட்டு, மனைவி கஸ்தூரிபாயுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டதற்காக நீண்ட காலம் நெஞ்சில் நெருப்பைச் சுமந்தார். பின்னாளில் கடுமையாகப் பிரம்மச்சரிய விரதமேற்று, அதை அன்னை கஸ்தூரிபாயும் கடைப்பிடிக்கச் செய்தார்.



பதினான்கு வயதில் ஜெயப்பிரகாஷ் நாராயணனைக் கைப் பிடித்த பிரபாவதி தேவி, படிப்புக்காகக் கணவர் அமெரிக்கா சென்றதும் வார்தா ஆசிரமத்தில் தங்கி மகாத்மாவுக்குச் சேவை செய்து வந்தார். படிப்பை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பிய ஜெ.பி. தன் மனைவியை வார்தாவில் சந்தித்தார்.

'மகாத்மாவின் முக்கியக் கொள்கையான பிரம்மச்சரியத்தை நாம் ஏற்று வாழ வேண்டும்' என்று பிரபாவதி கூறியதும் முதலில் தயங்கிய ஜெ.பி., இறுதியில் மனைவிக்காக மனம் இசைந்தார். தேச விடுதலை வேள்விக்காக இருவரும் தேக சுகத்தைத் தியாகம் செய்தனர். உடல் இன்பத்தை அவர்கள் இறுதிவரை நாட வில்லை. பிரபாவதியும், ஜெ.பி-யும் வாழ்ந்தது போல் இந்த மண்ணில் யாரும் வாழ முடியாது. மன்மதனை, சிவன் எரித்தது பொய்யோ கற்பனையோ, பரமஹம்சரும், ஜெ.பி-யும் மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு மன்மத உணர்வுகளை எரித்துச் சாம்பலாக்கியது நிஜம்.

இன்றுள்ள இளைஞர்கள் இவர்களைப் போல் உடலின்பத்தை முற்றாக மறுதலிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், வாழ்க்கையில் காலூன்றும் வரை, வெற்றிக்கான இலக்குகள் தெளிவாகும் வரை புலனடக்கம் பேணுவது நல்லது. புலனடக்கம் கைவரப் பெற்றவர்கள் எதையும் எளிதில் சாதிப்பர். வெளிப் பகையை வெல்வதல்ல வெற்றி. நம் உள்ளத்தை உருக்குலைக்கும் காமம் போன்ற

*உட்பகையை முறியடிப்பதுதான் உண்மையான வெற்றி!*

*நாகரிகம் என்ற பெயரில் டேட்டிங், அவுட்டிங் என்று எல்லை மீறுவதும், ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமின்றி ஆடை அணிவதும், வாழ்க்கையின் ரசனையே பாப் இசைக்குத் தலையசைத்துத் தாளம் போடுவதில்தான் இருப்பதுபோல் பாவனை காட்டுவதும், போதைப் பொருள்களின் மயக்கத்தில் பாதை மாறுவதும், சபலங்களுக்கும் சலனங்களுக்கும் தீனி போடும் கவர்ச்சிச் சாதனங்களுடன் கைகுலுக்குவதும் வணிக கலாசாரம் வளர்த்தெடுத்த நோய்கள். இந்த நோய்கள் நம்மைப் பற்றாமல் பாதுகாத்துக்கொள்ள, நம் முன்னோர்கள் பரிந்துரைத்த ஒரே மருந்து, புலனடக்கம்!*



*மனிதனின் ஒரே நோக்கம் இன்பத்தை அனுபவிப்பதுதான். அவனுடைய ஒவ்வொரு செயலும் அதை நோக்கித்தான் செய்யப்படுகிறது. நாய்க்கு இன்பம் உணவைத் தேடி உண்பது. அதற்கு மேல் அதற்கு வேறெந்த லட்சியமும் இல்லை. ஆனால், ஆறறிவு படைத்த மனித குலத்துக்கு எத்தனையோ நோக்கங்களும் லட்சியங்களும் உள்ளன. அவற்றைச் சாதிப்பதில் அடைகின்ற இன்பமே பேரின்பம்!*

*ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மனச்சான்றின் சுவர்களில் நல்லொழுக்கத்தின் குரல் எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கிறது.*

அதை நன்றாக உற்றுக் கேட்டால் யாருக்கும் தவறு செய்யத் தோன்றாது. இளைஞர்களுக்கு ஒரு சொல்... தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் வெளிப்பட்டது ஆலகால விஷம். அதற்குப் பின்பு வந்ததுதான் உயிர்காக்கும் அமுதம். படிக்கும் வயதிலேயே அவசரப்பட்டு ஆலகால விஷத்தை அருந்துவதைவிட, புலனடக்கம் காத்துப் பின் பொறுமையாக அமுதம் பருகுங்கள்.

# 5


# மதம்

உலகப் போர்களைவிட, மனித ரத்தம் மண்ணில் அதிகமாக ஓடுவது மதப் போர்களால்தான்!

முரணும் மோதலும் இல்லாத சமுதாயத்தை உருவாக்கப் பிறந்த மதமே, இன்று மனிதர்கள் முரண்படவும், மோதிக்கொள்ளவும் முக்கிய முதல் காரணம். மதங்கள் பிறந்தது மனித குலத்தைப் பிரிப்பதற்காக அன்று; அன்பு சார்ந்த பண்புகளை ஒவ்வொருவர் இதய நிலத்திலும் விதைப்பதற்காக!


பல்வேறு வண்ணங்களைக் கொண்ட பூக்களின் நந்தவனம் போல், வெவ்வேறு சமய நம்பிக்கைகளைச் சார்ந்தவர்கள் சேர்ந்து வாழும் நம் இந்திய மண்ணில், மதங்களின் பேரால் மனித ரத்தம் இனி வீழ்வது தகாது.

எந்த மதமும், 'பகைமை பாராட்டு, பிறரைப் பழி வாங்கு, அன்பை மற, அறத்தைத் துற' என்று போதிப்பதில்லை. வேதம், விவிலியம், திருக்குர்-ஆன் அனைத்துக்கும் அடிப்படை அன்பு... அன்பு... அன்பு மட்டுமே!



இந்து மதத்தின் லட்சியத்தை மகாகவி பாரதி அழகாகப் படம்

பிடித்துக் காட்டுகிறான். 'ஸர்வ ஜீவ ஸமத்வம் - எல்லா உயிர்களும் தம்முள்ளே நிகர் என்பது. ஸர்வ ஜீவ ஐக்கியம் - எல்லா உயிர்களும் ஒன்று என்பது. இவையே சனாதன இந்து தர்மத்தின் வேர்க் கொள்கைகள். இவற்றை மனிதர் எப்போதும் தம்முடைய நினைப்புகளிலும், செயல்களிலும் விளங்கச் செய்யும்போதுதான் இந்து மதத்துக்கு உண்மையான வெற்றி ஏற்படும்' என்று விளக்குகிறான் பாரதி.



ஏசு பிறந்ததும் வானில் தேவ தூதர்கள் சூழ்ந்து நின்று வழங்கிய முதல் கிறிஸ்துமஸ் பாடல், 'விண்ணில் கடவுளுக்கு மகிமையும், மண்ணில் சமாதானமும், மனிதர் மேல் பிரியமும் உண்டாவதாக!' என்பதுதான். மண்ணில் சமாதானம், மனிதரிடையே அன்பு தவழ்ந்தால் மட்டுமே சாத்தியம். கிறிஸ்துவத்தின் ஒவ்வொரு கிளையும் அன்பு மலர்களால் ஆனது; அன்புக் கனிகளைக் கொண்டது. அன்பெனும் ஆணிவேரில் நிமிர்ந்து நிற்பது!

இஸ்லாம் அன்பை ஆராதிப்பது. மனிதரில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் கொண்டுவந்து சேர்ப்பது. ஏழை, பணக்காரன் என்று பேதம் பார்க்காதது. சாதிகளை முன் வைத்துச் சமூகத்தைப் பிரிவுபடுத்தாதது. 'பூமியில் மனிதர்கள் பிரச்னைகளை உருவாக்கக் கூடாது' என்று திருமறையில் உபதேசம் செய்வது. இல்லாதவன் அனுபவிக்கும் பசிக் கொடுமையைத் தானும் அனுபவித்து, அந்தக் கொடுமையை உலகத்தில் இல்லாமல் செய்வதற்காக, ரமலான்

நோன்பைச் செல்வர்க்கும் கட்டாயப்படுத்தியது. மார்க்கக் கடமைகளில் தானம் செய்வதை ஒன்றாக வைத்துக் கருணையில் கடவுளைக் காட்டியது!

விவேகானந்தர், இந்து மதம் கண்டெடுத்த புரட்சிகரமான சிந்தனைப்போக்குள்ள ஆன்மிக ஞானி. 'இந்தியாவின் ஆன்மா மதம்தான்!' என்று ஆணித்தரமாக முழங்கிய அவர் விளக்கும் மதத்திலிருந்து ஈர மனமுள்ள யாரும் விலகி நிற்க முடியாது. மதம் குறித்த அவருடைய பார்வைதான் ஒவ்வொரு இந்தியனுக்கும் இன்றைய அவசரத் தேவை.

'எனது நாட்டில் ஒரு நாய் உணவில்லாமல் இருந்தாலும், அதற்கு உணவிடுவதே என் மதமாகும்!' என்று அன்பை ஆதர்சமாகக்கொண்ட ஒரு புதிய மதத்தைப் புனருத்தாரணம் செய்த அந்தப் புரட்சித் துறவி மனித சமூகத்தைப் பார்த்து, 'ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகிய இவர்களே உங்களுடைய கடவுள்களாக விளங்கட்டும்!' என்று முழங்கினார்.

'பசியால் நலிந்து வாடும் மக்களிடம் சென்று மதப் பிரசாரம் செய்வதும், தத்துவ விளக்கங்கள் தருவதும் அவர்களை அவமதிக்கும் செயல்களாகும். அவர்களுக்குத் தேவை உணவே தவிர, மதமன்று!' என்று ஆவேசம் பொங்க போலி மதவாதிகளைச் சாடிய விவேகானந்தர், 'சிவன் யாரை விரும்புவான்?' என்ற கேள்விக்கு வழங்கும் விளக்கம் நம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. 'ஏழையிடமும், பலவீனரிடமும், நோயுற்றோரிடமும் சிவபிரானைக் காண்பவனே உண்மையில் சிவனை வழிபடுகிறான். விக்கிரகத்தில் மட்டும் அவரைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில்தான் உள்ளது. ஒரே ஓர் ஏழைக்காவது அவனுடைய சாதி, இனம், மதம் பாராமல், அவனில் சிவனைக் கண்டு, உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் சிவபிரான் மகிழ்ச்சியும், நிறைவுமாகக் குடிகொண்டிருக்கிறார்!' என்கிறார் விவேகானந்தர்.

சத்தியம், ஞானம், ஆனந்தம் ஆகிய மூன்றின் கலவையாகக் காட்சி தரும் கடவுளைத் தேடும் தேடல் மட்டுமே மதம் இல்லை. கதியற்றவர்களுக்குத் தொண்டு செய்வதுதான் கடவுளுக்குச் செய்யும் வழிபாடு. மனிதனும், கடவுளும் வேறு வேறல்ல. மனிதனை ஒதுக்கிவிட்டுக் கடவுளை மட்டும் காட்டினால், அது மதம் அல்ல. 'தத்துவ ஞானி' என்ற மகா வாக்கியத்தின் உட்பொருள் 'நீயே கடவுள்!' என்பதுதான். இந்து சமயத்தின் இந்த உண்மையைப் பௌத்தத்திலிருந்து கிளைத்த 'ஜென்', ஒரு கதை மூலம் விளக்குகிறது.

இரவு நேரம். வெளியில் தலைகாட்ட முடியாதபடி கடுங்குளிர். புத்த விகாருக்குள் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் தங்கினார். குளிரின் முற்றுகையில் அவர் உடல் நடுங்கியது. திரும்பும் திசையெல்லாம் தென்பட்ட மர புத்தர் சிலைகளில் ஒன்றை எடுத்துக் கொளுத்தி, அந்த முதியவர் குளிர் காய்ந்தார். அந்தக் காட்சியைக் கண்ட புத்த குரு கோபம் கொண்டு, அவரை அங்கிருந்து வெளியேற்றினார்.

இரவு முடிந்தது. பொழுது விடிந்தது. குரு வாசலில் வந்து நின்றார். வீதியின் மைல் கல் மீது முதியவர் மலர் தூவி, புத்தம்... சரணம்... கச்சாமி சொல்லித் தொழுவதைப் பார்த்து வியந்தார். முதியவரின் அருகில் வந்து, 'மைல் கல் புத்தரா?' என்று கேட்டார். 'மரம் புத்தர் ஆனால், மைல் கல் புத்தர் ஆகாதா?' என்று திருப்பிக் கேட்டார் முதியவர். கூடவே, 'மர புத்தருக்காக உயிருள்ள புத்தரை குளிரில் வெளியே துரத்தியது சரியா?' என்றும் கேட்டார். நாணத்துடன் தலை கவிழ்ந்தார் குரு.

மனித வாழ்க்கையில் அமைதியைத் தருவதே மதங்களின் முதன்மையான நோக்கம். சொர்க்கம், நரகம், ஊழ்வினை, வினைப்பயன் என்றெல்லாம் மனிதனை மதம் அச்சுறுத்துவதன் அடிப்படை இலக்கு, மனிதனின் அளவற்ற ஆசைகளை நெறிப்படுத்துவதுதான்!

நபிகள் நாயகம் ஒரு நாள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார். அவரைச் சந்தித்து உரையாட ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் வந்தார். இருவரும் நீண்ட நேரம் இதயம் கலந்து பேசி மகிழ்ந்தனர். 'தேவாலயத்தில் பிரார்த்தனை செய்யும் நேரம் வந்து விட்டது' என்று கூறியபடி பாதிரியார் எழுந்தார். 'கொளுத்தும் வெயிலில் ஏன் உங்களை வருத்திக் கொள்ள வேண்டும்? நீங்கள் விரும்பினால், இங்கேயே இறைவனைப் பிரார்த்திக்கலாமே!' என்று நபிகள் சொன்னதும், நெஞ்சம் நெகிழ்ந்த பாதிரியார், அந்தப் பள்ளிவாசலின் ஒரு மூலையில் முழந்தாளிட்டு தேவனைப் பிரார்த்தித்தார்.

பாதிரியார் விடைபெற்றுச் சென்ற பின், நாயகத்தின் தோழர்கள், 'ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் இங்கு பிரார்த்தனை செய்தால், பள்ளிவாசலின் தூய்மை பறிபோய்விடாதா?' என்று பதற்றத்துடன் கேட்டனர். 'நாம் வணங்கும் இறைவனும், அவர் வணங்கிய இறைவனும் ஒருவரே!' என்று அமைதியாகப் பதிலளித்தார் நபிகளார். இந்த உணர்வும், பார்வையும்தான் இன்று எல்லோருக்கும் தேவைப்படுகிறது.

இந்து மதத்தின் தர்மங்களில் மூழ்கி, காளியிடம் தன் வசமிழந்து நின்ற

ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒவ்வொரு மதத்தின் உட்பொருளையும் உணர்ந்து போற்றினார். இஸ்லாத்தின் பேருண்மைகளைப் புரிந்தகொள்ள, அந்தச் சமயத்தைச் சேர்ந்த பெரியவர் ஒருவரிடம் பாடம் கேட்டபோது, தன்னை முழுமையான இஸ்லாமியராகவே மனத்தளவில் முற்றிலும் பாவித்துக்கொண்ட பரமஹம்சர், அப்போது தன் உயிரில் கலந்துவிட்ட காளியைத் தரிசிக்கவும் கோயிலுக்குள் நுழையாமல் விலகி நின்றார். வேதாந்த சிகரத்தில் நின்றுகொண்டு, 'உலகில் இப்போதிருக்கும் எல்லா மதங்களையும், இனி பிறக்கப் போகும் புதிய மதங்களையும் இரு கை நீட்டி வரவேற்கிறேன்' என்றார் பரமஹம்சரின் சீடர் சுவாமி விவேகானந்தர்.



'என்னுடைய மதத்துக்குப் பூகோள எல்லைகள் எதுவும் கிடையாது. அன்பும், அகிம்சையுமே என் மதம். எவரையும் வெறுக்க என் மதம் அனுமதிக்காது. மதம் மனிதர்களை இணைப் பதற்குத்தானே தவிர, பிரிப்பதற்கில்லை' என்றார் மதவெறிக்குத் தன்னுயிரைப் பலி கொடுத்த மகாத்மாகாந்தி. ஒவ்வொரு பிரார்த்தனைக் கூட்டத்திலும் கீதையுடன் சேர்ந்து, பைபிளும் குர்-ஆனும் வாசிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திய அண்ணல் அவர்.

மனிதகுல நலனுக்காகத்தான் மதம். மதத்தின் நலனுக்காக மனிதன் தன்னை அழித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மதத்தை விடாமல் மனதில் சுமப்பவர்களுக்காகப் புத்தர் ஒரு கதை சொன்னார்.

'குமுறிக் கொந்தளிக்கும் ஒரு கடல். கடலின் இக்கரை நரகத்தைவிட மோசமானது. அக்கரையோ சொர்க்கத்தைவிடச் சுகமானது. இக்கரையிலிருந்து எப்படியாவது தப்பி, அக்கரைக்குச் செல்ல ஒருவனுக்கு ஆசை. மரத் துண்டுகளைச் சிரமப்பட்டு ஒன்றாகச் சேர்த்து, அவன் ஒரு படகு செய்து, அதில் ஏறி அக்கரையை அடைந்து விட்டான். நரகத்திலிருந்து சொர்க்கம் சேர தனக்கு இந்தப் படகுதானே உதவியது என்று நன்றியோடு நினைத்தவன், போகுமிடமெல்லாம் அந்தப் படகைத் தோளில் சுமந்து திரிந்தான். அந்த மூடனால் சொர்க்கத்தின் சுகத்தை அனுபவிக்க முடியவில்லை!'

நம்மில் பலரும் அப்படித்தான் மதத்தை எங்கும் இறக்கி வைக்காமல், தோளில் சுமந்து சமூக வீதியில் வலம் வருகிறோம்.



'உண்மை ஒன்றுதான். அது பல வடிவங்களில் பார்க்கப்படுகிறது' என்ற ரிக் வேதத்தின் குரல்தான், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரில் எதிரொலிக்கிறது.

'அன்பே கடவுள்' என்பதை மறப்பவன் இந்து அல்ல. 'ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைக் காட்டு' என்ற கர்த்தரின் வாசகத்தை வாழ்வில் கடைப் பிடிக்காதவன் எப்படி உண்மையான கிறிஸ்துவனாக முடியும்? சகோதரத்துவத்தில் நம்பிக்கை அற்றவன் நபிகள் வழி நடக்கும் இஸ்லாமியன் என்று யார் சொல்லக் கூடும்?

அன்பையே சிந்தித்து, அன்பையே மூச்சுக் காற்றாக சுவாசித்து, ஆண்டவனையும் அன்பின் வடிவாகவே தரிசித்து மனிதம் வளர்ப்பதுதான் மதம்!

6

# மனிதம்

***யா***ருக்கும் நேரம் இல்லை!

*இயந்திரகதியில் ஓடிக்கொண்டு இருக்கிறது உலகம். என்றாலும், சக மனிதர்களைப் பற்றிச் சிந்திக்க மனமில்லாதவன் எப்படி சமூக மனிதனாவான்?*

*வணிகப் பொருளாதார வாழ்க்கை வேகத்தில் மக்களுக்கு 'மனிதம்' முற்றாக மறந்து போய்விட்டதா?*

*சுனாமி அலைகள் ஒரு செய்தியைச் சுமந்து வந்தன. இந்தியப் பண்பாட்டு நதி மீது புதிய கலாசாரக் குப்பைகள் குவிந்து கிடந்தாலும், அதனுடைய ஜீவ ஊற்றுக்கண் இன்னமும் அடைபட்டுவிடவில்லை என்பதே அந்தச் செய்தி!*



*ஆயிரமாயிரம் சக மனிதர்கள் துயருற்றுத் தவித்தபோது, அவர் களின் கண்ணீர் துடைக்கப் பல்வேறு திசைகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான கைகள் போட்டியிட்டதை நினைக்கும்போது, மழை விழுந்த செம்மண் நிலமாக மனம் நெகிழ்கிறது. சக மனிதர்களின் நலனில் நாட்டம் உள்ளவர்களால்தான் சமூகம் சிறப்புறும். கால ஓட்டத்தில்*

தோன்றிய ஞானிகளும், சிந்தனையாளர்களும், தலைவர்களும் சுயநலமற்றுச் சிந்திய கண்ணீரில்தான் சமூக நந்தவனம் செழித்தது.



ஒரு பௌர்ணமி இரவில் ஊரும், உறவும் உறங்கும்போது, மனைவி யசோதரை, மகன் இராகுலன் மீதிருந்த பாசத்தைத் துறந்து, யாருமறியாமல் அரண்மனையைவிட்டு வெளியேறியதும், தேரோட்டி சந்தகனைத் தட்டியெழுப்பித் தன் குதிரையைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான் சித்தார்த்தன். பிறவிப் பிணியால் வாடும் உயிர்கள் துயரின்றி வாழும் வழியறிய துறவு மேற்கொள்வதாகச் சொன்ன இளவரசனை மறுத்துப் பேசும் துணிவில்லை சந்தகனுக்கு. 'கண்டகன்' என்னும் குதிரையுடன் வந்து நின்றான் அவன். இரவுப் பயணம் முடிந்து வைகறை விடியும்போது, அவர்கள் அநோமை ஆற்றைக் கடந்தனர்.

சித்தார்த்தன் குதிரையிலிருந்து இறங்கினான். மணிமுடியைக் கழற்றிச் சந்தகனிடம் கொடுத்தான். உடைவாளை எடுத்துத் தலைமுடியைச் சிரைத்தான். அரச ஆடை அகற்றித் துறவுக் கோலம் பூண்டான். தன்

தலைவனின் பாதத்தை நாவால் நக்கிக் கண்ணீரால் கழுவிய கண்டகக் குதிரை, பிரிவைத் தாங்காமல் மண்ணில் விழுந்து உயிர் நீத்தது. புத்தன் ஆக, சித்தார்த்தன் ஏற்ற இந்தப் பெருந்துறவு 'மகாபி நிஷ்கிரமணம்' என்று போற்றப் படுகிறது. சிற்றின்பச் சுகங்களில் சிறைவைத்த தந்தை சுத்தோதனன் விரும்பியபடி, அரச மாளிகையின் வாழ்க்கைச் சுகங்களை அனுபவித்திருந்தால், சித்தார்த்தன் புத்தனாகப் பரிமாணம் பெற்றிருக்க முடியாது.

மண்ணில் வாழும் மனிதர்களின் பாவங்களைச் சுமப்பதற்காகப் பிறப்பெடுத்த ஏசு, பாவிகளுடைய கைகளில் ஒப்புக் கொடுக்கிற வேளை வந்ததும் சிறைப் பிடிக்கப்பட்டார். விசாரணை மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் அவருடைய முகத்தில் காறித் துப்பினார்கள். கன்னத்தில் அறைந்தார்கள். தலையில் குட்டினார்கள்.

தீர்ப்பு வழங்கப்பட்டதும் அவருடைய ஆடைகளைக் களைந்து, சிவப்பு மேலங்கியை உடுத்தி, முள் முடியைச் சிரசில் வைத்து, வாரினால் அடித்து, கசப்புக் கலந்த காடியைக் குடிக்கச் செய்து, கல்வாரி மலையில் கள்வர்களுக்கு நடுவே சிலுவையில் அறைந் தார்கள். 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கை விட்டீர்?' என்று கதறியபடி கர்த்தர் தலை சாய்த்தார்.



அரபுப் பாலையில் முரட்டு மூட நம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி

*வைக்கவும், ஓர் இறைக் கொள்கையில் அனைவரும் ஒன்றுபடவும், சகோதர ரத்தத்தால் சிவந்து கிடந்த மண்ணில் சாந்தியும், சமத்துவமும் சங்கமிக்கும் சமுதாயத்தைப் படைக்கவும் முகம்மது நபிகள் முயன்றார். அதற்காக அவர் கல்லடி பட்டார். வசை மொழிகளால் பழிக்கப்பட்டார்.*

*செத்த ஒட்டகத்தின் நிணமும், சதையும் அவர் தலைமீது வீசப்பட்டன. சமூக விலக்குக்கு ஆளாகி மெக்காவுக்கு அருகில் இருந்த பள்ளத்தில் அவருடைய உறவுகளோடு மூன்றாண்டுகள் சொல்ல முடியாத துயரங்களைச் சுமந்தார் நபிகள். வாளால் வெட்டிச் சாய்க்க வந்தவர்களால் இரவில் அவருடைய வீடு முற்றுகை இடப்பட்டது. இறுதியில் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, தோழர் அபூபக்கருடன் மெதினாவுக்கு நபிகள் ஓட வேண்டியதாயிற்று.*

*ஆஃப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் அவல நிலையை, இந்தியாவில் தலைவர்களைச் சந்தித்து விளக்கிய காந்தி, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் நிறவெறிக் கொடுமைகளை மேடையேறி, உலகறியச் செய்தார்.*

*டர்பனில் இருந்த இந்தியர்களிடமிருந்து அவசர அழைப்பு வந்ததும் குடும்பத்துடன் கப்பல் ஏறினார். தென்னாப்ஃபிரிக்க வெள்ளையரைத் தரக்குறைவாக விமர்சித்ததாகக் குற்றம்சாட்டி, அவரை டர்பனில் இறங்கவிடாமல் ஆர்ப்பாட்டம் செய்தனர்.*

*காந்தியும், அவருடைய குடும்பமும் 23 நாட்கள் கப்பலிலேயே சிறையிருந்தனர். இறுதியில், அவர்கள் டர்பனில் இரவில் நுழைய அட்டர்னி ஜெனரலிடம் இருந்து அனுமதி கிடைத்தது. திருடனைப் போல் இரவில் நுழைய மகாத்மா மறுத்தார்.*

*துறைமுகத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இருந்த ருஸ்தும்ஜி என்பவரின் வீட்டுக்கு வண்டியில் குடும்பத்தை அனுப்பிவிட்டு, மகாத்மா நடக்கத் தொடங்கினார். வெள்ளையர் சூழ்ந்து கற்கள் எறிந்து, அழுகிய முட்டைகளை வீசி, கண்மூடித்தனமாக அவரைத் தாக்கினர். வெள்ளை போலீஸ் அதிகாரி ஒருவரின் மனைவியால் அன்று காந்தி காப்பாற்றப் பட்டார்.*



அரச போகங்களைத் துறந்து, ஆறு ஆண்டுகள் காட்டில் கடுந்தவம் இயற்றி, இறுதியில் போதி மரத்தடியில் ஞானம் பெற்று, 80 வயது வரை ஊர் ஊராக நடந்து திரிந்து புத்தர் மக்களிடம் பௌத்தம் பரப்பியது ஏன்?

பாடுகளைச் சுமந்து, சிலுவையில் அறையப்பட்டு, 'தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று வேதனையில் குரல் கொடுத்து, ஏசு தலைசாய்த்தது ஏன்?

செல்வச் சீமாட்டி கதீஜாவின் கணவனாய் இன்பங்களை அனுபவிக்காமல், கல்லடியும், சொல்லடியும், காயங்களும் ஏற்று இஸ்லாமை அரபு மக்களின் இதயங்களில் இறக்கி வைக்க நபிகள் துடித்தது ஏன்?

தானுண்டு, தன் வக்கீல் தொழில் உண்டு என்றிருக்க மனமின்றி, மக்கள் உரிமையை நிலைநாட்ட மிக மோசமான தாக்குதல்களுக்கு மகாத்மா உள்ளானது ஏன்? அடிமை முறையை ஒழிக்க முயன்று, ஆபிரகாம் லிங்கன் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானது ஏன்? கறுப்பர்களின் நலன் காக்க மார்டின் லூதர் கிங் ரத்தம் சிந்தியபடி மண்ணில் சாய்ந்தது ஏன்?

இந்த எல்லா கேள்விகளுக்கும் ஒரே பதில்... சமூக மனிதர்களிடம் அவர்களுக்கு இருந்த எல்லையற்ற அன்புதான்! அந்த அன்பில் விளைந்ததுதான் மனிதம்!

பிறர்பால் ஊற்றெடுக்கும் கைம்மாறு கருதாத உண்மையான அன்பு, அடுத்தவர் துன்பம் தீர்க்கத் துடிக்கும் அருட்கருணை, பகைவரிடத்தும் வெறுப்பின் நிழல் படியாத பாசம், தன்னுயிர் போல் எல்லா உயிர்களையும் பாவிக்கும் பண்புநலம் ஆகியவற்றின் கூட்டுறவில் பிறப்பதுதான் மனிதநேயம். இதயத்தின் ஈரம்தான் மனிதநேயத்தின்

சாரம்!

சங்ககாலத் தமிழன் தோகை விரித்த மயிலுக்கும், துவண்டு விழுந்த கொடி மலருக்கும் மனம் இரங்கினான். வண்ண மலரில் வாசம் செய்த வண்டுக்கும்கூட அவன் இரங்கினான் என்று அகநானூறு விளக்குகிறது.

'கார்காலம் வரும்போது தவறாமல் வருவேன்' என்று பிரிந்து சென்றவன், வாக்குறுதியைக் காக்க, தலைவியின் இடம் நோக்கித் தேரில் காற்றாகப் பறந்தான். மரங்களும், கொடிகளும், மலர்களும் சூழ்ந்த சோலை வழியே தேரைச் செலுத்தியவன், மலரொன்றின் மடியைப் பஞ்சணையாக்கி, இரண்டு வண்டுகள் இன்புறுவதைக் கண்டான்.

‘அழகிய தேரை அலங்கரிக்கும் மணியின் நாவசைந்து எழும் ஒலியில், கூடிக் கலக்கும் வண்டுகள் கூடல் கலைந்து துடிக்குமே என்று பதைத்தவன், ஓடும் தேரில் ஓசை எழுப்பிய மணியின் நாவைக் கயிற்றால் கட்டினான்' என்று மனிதநேயத்தைக் காட்சிப் படுத்துகிறது நம் சங்க இலக்கியம்.

வண்டுக்குச் செவியறிவு இல்லை என்பதை அந்தத் தலைவன் சிந்திக்கவில்லை. முல்லைக் கொடிக்கு ஒரு மூங்கில் போதும் என்று பாரிக்குத் தோன்றவில்லை. மயிலுக்கு மேகத்தால் நடுக்கமில்லை என்று பேகனுக்குப் புரியவில்லை. காரணம், அவர் களுடைய இதயங்களை ஈரப்படுத்தியது இன்னொரு ஜீவனின் துயர் துடைக்கும் அன்பும், அருளுமே!



அந்தச் சங்கத் தமிழரின் வாரிசுகள் மனிதம் மறந்து சாதி, மதங்களின் பேரால் பேதம் வளர்த்துப் பிரிந்து நிற்றல் தகுமோ?

# 7

# நட்பு

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை, நரம்பற்ற வீணைக்குச் சமம். நரம்பு இல்லாத வீணைக்கும் விறகுக் கட்டைக்கும் வித்தியாசம் அதிகம் இல்லை!

ஆழமான அன்பே அழுத்தமான நட்புக்கு அணிகலன். சேர்ந்து அமர்ந்து திரைப்படம் பார்ப்பதும், தேநீர் அருந்துவதும், கடற்கரை மணலில் கனவுகளைப் பகிர்ந்து கொள்வதும் பழக்கத்தை வளர்க்கலாம். ஆனால், இவற்றால் மட்டுமே ஆழமான நட்பு அரும்பி விடாது. இந்தச் சுயநலப் பொழுதுபோக்குகளில் நாம் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். இதயத்தைப் பகிர்ந்து கொள்ள இயலாது!



இந்தியமண்ணில் இன்னும் இளமை ததும்ப வலம் வரும் இதிகாசங்கள் இரண்டும், கடந்த காலப் பெருமைகள் சொல்லும் காகிதப் பேரேடுகள் அல்ல. அவை, எல்லாக் காலங்களிலும் வாழ்க்கைக்கு வழிகாட்டவல்ல சத்திய விளக்குகள்! அன்பு கனிந்த நட்பின் பல்வேறு பரிமாணங்களை அவை அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன.



மகாபாரதத்தில்... கர்ணன்!

பெற்ற தாயால் குழந்தையிலேயே புறக்கணிக்கப்பட்டு, தேரோட்டி மகனாக வளர்ந்தவன்; பிறப்பறியா பாவத்துக்காகப் பழி சுமந்து நின்றவன்; ஆனாலும், அர்ஜுனனுக்கு நிகராக வில்வித்தையில் தேர்ச்சி பெற்றவன்; மக்கள் மன்றத்தில் விஜயனுக்கு எதிராக வில் எடுத்தபோது, 'கீழ்க்குலத்தில் பிறந்தவனுக்கு ஆயுதம் ஏந்தும் அருகதை இல்லை' என்று கிருபாச்சாரியாரால் அவமானமுற்றுத் தலை கவிழ்ந்தவன்; 'வேள்வித் தீயில் இடப்படும் பொருளை எடுத்து உண்ணும் உரிமை நாய்க்கு இல்லை' என்று பீமனால் ஏளனம் செய்யப்பட்டவன்; அவனது இழிநிலை துடைத்து, அங்க தேசத்தின் அரசனாக அவனுக்குப் பட்டம் சூட்டினான் துரியோதனன்.இரண்டு இதயங்களும் நட்பில் அன்று இணைந்தன!

குருக்ஷேத்திரத்தில் போர் மேகம் சூழ்ந்தது. வெற்றிமாலை பாண்டவர் கழுத்தில் விழ வேண்டுமானால், 'கர்ணனைக் கட்சி மாறச் செய்வதுதான் சரியான அரச தந்திரம்!' என்று கண்ணன், குந்திக்கு ஆலோசனை வழங்கினான். கன்னிப்பருவத்தில் பெற்றெடுத்து, ஊர்ப் பழிக்கு அஞ்சி ஆற்றில் கைகழுவிவிட்ட அந்தத் தாய், கர்ணனை ரகசியமாகச் சந்தித்துப் பாசவலை விரித் தாள். 'நீ தேரோட்டி மகன் இல்லை. நீதான் என் முதல் மகன். பாண்டவர்களுக்கு மூத்தவன். கௌரவர்களைக் கைவிட்டு, பாண்டவர் படைக்குத் தலைமை ஏற்க வா!' என்று அழைத்தாள்.

அப்போது கர்ணன், குந்திக்குச் சொன்ன பதில் என்ன தெரியுமா?

''தாயே! நீ சொல்லும் பாதையில் நான் செல்லத் துணிந்தால், நட்புத் துரோகம் இழைத்த பாவியாவேன். என்னைப் பெற்றவள் நீ. ஆனால், ஒரு தாய்க்குரிய எந்தக் கடமையையும் எனக்கு நீ செய்யவில்லை. இன்று உன் சுயநலத்துக்காகவே, என்னிடம் சொந்தம் கொண்டாடுகிறாய். என் நண்பன் துரியோதனனுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் நெருங்கி விட்டது. 'மனிதர்கள் தங்கள் தேவைகள் நிறைவேறும்வரை நட்பு செய்து, கைம்மாறு செலுத்த வேண்டிய சமயத்தில் நட்பை மறந்து திசை மாறி நடந்தால், அந்தப் பாவிகளுக்கு மண்ணிலும் விண்ணிலும் நற்கதி கிடைக்காது' என்று சாத்திரம் சொல்கிறது. எதன் பொருட்டும் எவர் பொருட்டும் என் நண்பனுக்குத் துரோகம் செய்ய என்னாலாகாது!'' என்றான்.

தாயும் தம்பியரும் அஸ்தினாபுரத்து அரசும் தன்னைத் தேடி வந்தபோது, நண்பனுக்காக மறுதலித்து, பதினாறாம் நாள் பாரதப் போரில் நட்புக் கோயிலுக்கு தன்னையே உயிர்ப்பலி கொடுத்தான் கர்ணன்!

துரியோதனன் ஆயிரம் குறைகள் உடையவன்தான். ஆனாலும், கர்ணனிடம் அவன் காட்டிய அன்பும் நட்பும் என்றும் நம் வியப்புக்குரியது. ஒரு நாள் தன் மனைவி பானுமதியும் நண்பன் கர்ணனும் சொக்கட்டான் விளையாடிக்கொண்டு இருக்கும்போது துரியோதனன் வந்தான். கணவன் வரவை அறிந்து பானுமதி எழுந்தாள்.

'தோல்வியைத் தவிர்க்கவே, இடையில் எழுந்தாய்' எனத் தவறாகப் புரிந்துகொண்ட கர்ணன், அவள் இடையைப் பற்றி இழுத்தான். அவன் இழுத்த வேகத்தில், அவள் மேகலை அறுபட்டு, முத்துக்கள் சிதறி ஓடின. கர்ணன் முகம் உயர்த்தியபோது எதிரில் நண்பன் நிற்பது தெரிந்தது. இருவரையும் அவன் தவறாக எண்ணிவிடுவானோ என்று அஞ்சியவனின் இதயம் துடித்தது. ஆனால், துரியோதனனோ மெள்ள நகைத்து, 'சிதறிய முத்துக்களை எடுக்கவோ, கோக்கவோ?' என்று கேட்டபடி, அந்த முத்துக்களைக் கையில் எடுக்க முற்பட்டான். மனைவியின் கற்பின் மீதும், கர்ணனின் நட்பின் மீதும் அவனுக்கு இருந்த அழுத்தமான நம்பிக்கைக்கு ஓர் உதாரணம் இது!

ராமாயணம் முழுவதுமே நட்பினால்தான் நடக்கிறது. வேடன் குகனின் நட்புதான் ராமன், சீதை, இலக்குவன் மூவரையும் படகில் கங்கையைக் கடக்கச் செய்தது. சுக்ரீவனின் நட்புதான், சீதையின்

இருப்பிடம் காணத் துணை செய்தது. வீடணன் நட்பே ராவணன் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது.

சுக்ரீவன், வீடணன் நட்பில் சுயநலம் இருந்தது. அண்ணன் வாலியிடம் பறிகொடுத்த தன் மனைவியையும், தனக்கு உரிமையில்லாத கிஷ்கிந்தை அரசையும் அடைவதற்கு ராமனிடம் அடைக்கலம் தேடியவன் சுக்ரீவன். ராவணன் வீழ்ச்சிக்குப் பின் இலங்கை மகுடத்தையும், மரணத்துக்குப் பின் முக்தியையும் அடைவதற்காக, பரம் பொருள் ராமனின் பாதம் பணிந்தவன் வீடணன். ஆனால், தன்னலமே இல்லாமல் ராமனைத் தழுவிக்கொண்டவன் குகன் ஒருவனே!

அவனுக்கு ராமனிடம் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. அரச கோலத்தில் பார்க்க வேண்டிய ராமனைத் தவக் கோலத்தில் காண நேர்ந்ததற்காகக் கண்ணீர் விட்டவன்; அன்பின் உயர்வையும், ஆழத்தையும் வெளிப்படுத்த தேனும் மீனும் தந்தவன்; பரிவாரங்களுடன் பரதன் தன் அண்ணனை அழைத்துச் செல்ல வருவதைத் தவறாகப் புரிந்து, அவனோடு மோத படை திரட்டியவன்; வேடர் தலைவனாக இருந்தும், ஒற்றை மனிதனாக மூவரை அமர்த்தி படகு செலுத்தியவன்; வனவாசம் முழுவதும் உடனிருந்து, தொண்டு செய்யத் துடித்தவன்; பிரிந்த ராமன் வரவுக்காக வழி மேல் விழி வைத்து நின்றவன் குகன்.

படிநிலைச் சமூக அமைப்பில் மேல் தட்டிலிருந்த அரசகுமாரன் ராமன், கீழ் நிலையில் இருந்த குகனிடம், 'நீ என் இன்னுயிர்த் துணைவன். என் தம்பி உன் தம்பி. சீதை உன் தோழி!' என்று சொல்லி ஆரத் தழுவிக்கொள்கிறான். நல்ல நட்புக்கு சாதி, மதம், இனம், மொழி, உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமைகள் எதுவும் கிடையாது என்கிறது ராமாயணமும்!

முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல் பாரியின் நட்புக்காக உயிர் கொடுத்தவர் புலவர் கபிலர்!

பாரியின் பெருமையும், புகழும் வளர்பிறையாக வளர்ந்ததால், சேர, சோழ, பாண்டியர்களின் கீர்த்தி தேய்பிறையானது. பொறாமைத் தீயில் தீய்ந்த மூவரும் பாரியைப் போரிட்டுக் கொல்ல முடிவு செய்தனர். பாரியின் பறம்பு மலையை அவர்கள் முற்றுகை இட்டனர். மூங்கில், நெல், பலா, வள்ளிக் கிழங்கு, தேன் ஆகியவை யாருடைய உழைப்பும் இன்றி, இயற்கையின் சீதனமாகப் பறம்பு மக்களின் பசி தீர்த்ததால் மூவேந்தரின் முற்றுகை வெற்றி பெறவில்லை.



'போரிட்டுப் பாரியை நீங்கள் வெல்ல முடியாது. கை நீட்டிப் பரிசிலாக எதைக் கேட்டாலும் அள்ளி வழங்கும் வள்ளல் அவன்' என்றார் கபிலர். வாள் வீசிப் பெற முடியாத வெற்றியை வஞ்சகத்தால் பெற, மூவேந்தரும் கூத்தர் போல் வேடமிட்டுப் பாரி முன் ஆடினர். 'என்ன வேண்டும்?' என்ற பாரியிடம், 'நீதான் வேண்டும்' என்று மூவரும் அவனைக் கொன்று பழி சுமந்தனர்.

அரச மகளிர் அங்கவை, சங்கவை இருவரும் பெற்ற தந்தையையும், பிறந்த பறம்பையும் இழந்து ஆதரிப்பாரற்று அநாதைகளாக நின்றனர். புலவர் கபிலர், நண்பனின் பெண்களைத் தன் பெண்களாக நெஞ்சில் தத்தெடுத்தார். மகளிருக்கு மணமுடிக்க மன்னர் பலரை நாடினார். மூவேந்தரின் பகைக்கு அஞ்சி ஒரு மன்னனும் முன்வரவில்லை. காடு மேடு நடந்து திரிந்து, கடைசியில் ஒரு பெண்ணைத் திருக்கோவிலூர் மலையமானுக்கு மணமுடித்தார். மற்றொரு பெண்ணை அந்தணர் ஒருவரிடம் அடைக்கலம் அளித்தார். பாரி இல்லாத பாரில் உயிர் வாழ விரும்பாமல், திருக்கோவிலூரில் தருப்பைப் புல் அடுக்கி, அதன் மேல் வடக்கு நோக்கி அமர்ந்து, ஊண் உறக்கம் நீக்கி, நோன்பிருந்து உயிர் நீத்தார் கபிலர்!

உறையூரை ஆண்டவன் கோப்பெருஞ்சோழன். அவனை நேரில் காணாமலே நெஞ்சம் கலந்தவர் புலவர் பிசிராந்தையார். பிள்ளைகளிடம் ஏற்பட்ட பிணக்கால் உலகை வெறுத்து உயிர் துறக்க

முடிவெடுத்தான் சோழன். நண்பன் வடக்கிருக்கும் செய்தியறிந்து நெஞ்சம் அதிர்ந்தார் புலவர். அவன் இருக்குமிடம் நோக்கி விரைந்தார். அரசனும், புலவரும் சேர்ந்து வடக்கிருந்து சாவிலும் இணைந்தனர். கபிலரும் பிசிராந்தையாரும் நட்பு வானில் காலமெல்லாம் சுடர்விடும் இரு துருவ நட்சத்திரங்கள்!

உலக சரித்திரம் எத்தனையோ நண்பர்களைச் சந்தித்திருக்கிறது. அந்த நண்பர்களுள் மார்க்ஸும், ஏங்கல்ஸும் தனி மரியாதைக்குரியவர்கள். இவர்களைப் போல் வேறெந்த இரண்டு நண்பர்களின் சங்கமத்திலும் புதுயுகம் படைக்கும் புரட்சிக்கான பூபாளம் பிறந்ததில்லை!

'ஏங்கல்ஸ் இல்லாமல் மார்க்ஸ் 65 ஆண்டுகள் வாழ்ந்திருப்பாரா?' என்பது ஐயமே! மார்க்ஸின் மகத்தான வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைந்ததே ஏங்கல்ஸின் அழியாத அன்புதான். ஆண்டுதோறும் 350 பவுன் பணம் தந்து மார்க்ஸின் புறத்தேவைகளை ஓரளவு ஏங்கல்ஸ் பூர்த்தி செய்ததால்தான், 35 ஆண்டுகள் அவர் பிரிட்டிஷ் மியூசிய நூலகத்தின் புத்தகங்களுக்கு நடுவில் தன் சிந்தனையைப் புரட்சிகரமாகச் செதுக்க முடிந்தது. மார்க்ஸின் குடும்பக் கவலைகளை ஏங்கல்ஸ் ஏற்றிருக்காவிடில், உலகக் கவலைகளுக்கு உரிய தீர்வைக் காண்பதற்கு அவருடைய அன்றைய வாழ்க்கை அவலம் அனுமதித்திருக்காது. இரண்டு நண்பர்களும் கூட்டாகத் தயாரித்த பொதுவுடைமை அறிக்கை தான், இன்றளவும் மார்க்ஸியவாதிகளின் விவிலியமாய் விளங்குகிறது!

நம் வாழ்க்கை நதியின் போக்கை மாற்றும் வல்லமை நட்புக்கு இருப்பதால்தான், வார்த்தைச் சிக்கனத்தில் சிறந்த வள்ளுவன், நான்கு அதிகாரங்களில் நட்பை ஆய்வு செய்கிறான். நட்பு, நட்பாராய்தல் என்று உடன்பாட்டு முறையிலும் கூடா நட்பு, தீ நட்பு என்று எதிர்மறையாகவும் நாற்பது குறள்களில், நட்பு செய்பவருக்கு அவன் ஆலோசனை வழங்குகிறான்.

நண்பர்களைத் தேர்வு செய்வதில் அதிக விழிப்பு உணர்வு அவசியம். ஆயிரம் பேர்களிடம் அறிமுகம் நிகழ்ந்தாலும், ஆழமான நட்புக்கு உரியவர்கள் ஆறுபேர்கூடத் தேற மாட்டார்கள்.

முதல் பார்வையிலேயே ஏற்படும் காதலும், நட்பும் முழுமையானவை அல்ல. சோதனை வரும்போது, இந்தக் காதலும் நட்பும் சொல்லிக் கொள்ளாமலே கழன்றுவிடும். சோதனைகளின் வெம்மை தாளாமல், பாளம் பாளமாகப் பிளந்து கிடக்கும் நெஞ்சில், அமுத தாரையாக அன்பைப் பொழிந்து, வாழ்வின் மீது வசீகரத்தை வளர்ப்பதே நட்பு!

அன்பின் ஆதிக்கத்தில் தன்னலம் தகர்ந்துவிடும். தன்னலத்தின் ஆட்சியிலோ அன்பு அழிந்து விடும். காலை நேர நிழல், நேரம் ஆக ஆகக் குறையும். மாலை நிழல் நீண்டு கொண்டே போகும். நல்ல நட்பு, மனிதனின் மரணம் வரை மாலை நிழலாக நீளும். வறுமையிலும் துயரத்திலும் இளைப்பாறுதல் தருவது இனிய நண்பர்களே!

'என் புகழ் பாடும் பரிவாரங்களை மட்டுமே நான் பக்கத்தில் வைத்துக் கொண்டேன். நண்பனைப் போல் யாரிடமும் நான் நடித்ததுகூட இல்லை' என்றான் மாவீரன் நெப்போலியன்.

அவன் தன் அந்திமத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில், விழி களுக்குத் தென்படாத வெகு தொலைவில், ஆளரவமற்ற செயின்ட் ஹெலினா தீவில் ஆயுள் கைதியாக, நண்பர்களற்று, நோயுற்று, அநாதையாக, சாட்சிகூட இல்லாமல் ஒரு நாள் சாவைச் சந்தித்தான்.

மறந்துவிடாதீர்கள்... நண்பர்கள் இல்லாத வாழ்க்கை, சாட்சி இல்லாத மரணத்துக்குச் சமம்!


# 8

# நன்றி

இந்திய மண்ணில் சுதந்திர வெளிச்சம் இல்லாமல் அடிமை இருள் கவிழ்ந்திருந்த காலம்!

அச்சமும், பேடிமையும், அடிமைச் சிறுமதியும் உச்சத்தில்கொண்ட ஊமைச் சமுதாயம் மெள்ள மெள்ள விடுதலை உணர்வு பெறத் துவங்கிய நேரம்!

இருள் கிழிக்கும் வைர ஊசிகளாய் சுதந்திர வானில் சுடர் பரப்பிய முதல் மரியாதைக்கு உரிய மூன்று தமிழர்கள்... வ.உ.சிதம்பரம் பிள்ளை, பாரதியார், சுப்பிரமணிய சிவா!



ஒட்டப்பிடாரத்தில் தன் பிள்ளை ஆங்கிலக் கல்வி பெற வாய்ப்பில்லாத நிலையில் தானே ஓர் ஆங்கிலப் பள்ளியை உருவாக்கியவர் வ.உ.சி-யின் தந்தை உலக நாதம் பிள்ளை. வளமான குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, புகழ்மிக்க வழக்கறிஞராய் தூத்துக்குடியில் மலர்ந்து, செல்வச் செழிப்பில் மிதந்தவர் வ.உ.சி!

நாட்டுப்பற்று நெஞ்சில் பெருக்கெடுக்க விடுதலைப் போரில் ஈடுபட்டார். சுதேசிப் பண்டக சாலை, தரும நெசவு சங்க சாலை,

ஜனசங்கம் என்ற மூன்று அமைப்புகளைத் தொடங்கினார். கப்பல் வணிகத்தில் வெள்ளையர் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, சுதேசி நாவாய் சங்கத்தை நண்பர்கள் உதவியால் 10 லட்சம் ரூபாய் மூலதனத்தில் தொடங்கி, தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு எஸ்.எஸ்.காலியோ, எஸ்.எஸ்.லாவோ என்ற இரண்டு கப்பல்களைச் செலுத்தி புதிய சரித்திரம் படைத்தார்!



திலகரின் வழியில் தீவிரத் தேசியவாதத்தை வளர்த்தெடுத்த வ.உ.சி., பாரதியுடன் காங்கிரஸில் பங்கேற்றார். மிதவாதிகளின் முற்றுகையிலிருந்து காங்கிரஸை விடுவிக்க முடியாமல் தேசியக் கட்சியைத் தொடங்கிய திலகர், அதற்கு அரவிந்த கோஷையும், வ.உ.சி.யையும் செயலாளர்களாக நியமித்தார். தேச விடுதலைப் போரில் தென்னாட்டுத் திலகராகப் போற்றப்பட்டவர் வ.உ.சி... இந்தியாவிலேயே முதன்முதலாக வெள்ளையருக்குச் சொந்தமான தூத்துக்குடி கோரல் பருத்தி ஆலையில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேலை நிறுத்தம் நடத்தி அதில் வெற்றி பெற்றவர்.

'வந்தே மாதரம்' இதழில் கட்டுரை எழுதிய அரவிந்தருக்கு எதிராகச் சாட்சி கூற மறுத்து, ராஜ துரோகக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, ஆறு மாதத் தண்டனை பெற்று, சிறைவாசத்துக்குப் பின் வங்க வீரர் விபின்

சந்திர பாலர் விடுதலையடைந்த நாளில், தடை உத்தரவை மீறி கூட்டத்தில் பேசிய வ.உ.சி-க்கு மீண்டும் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு ஜென்மத்தில் இரு ஜென்மத் தண்டனை பெற்றவர் வ.உ.சி!

கோவை சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் வார்த்தைகளில் அடங்காத கொடுமைகளை அனுபவித்தார் வ.உ.சி. சணல் உரிக்கும் இயந்திரத்தைத் தொடர்ந்து சுற்றி, கைத்தோல் உரிந்து ரத்தம் கசிந்தது. கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில், பகல் முழுவதும் வெயிலில் செக்கிழுத்தார். நூற்பு வேலை, அச்சுக் கோக்கும் வேலை என்று இடைவிடாமல் மாறி மாறி அவர் உழைப்பு உறிஞ்சப்பட்டதில், 20 பவுண்டு எடையை இழந்தார். வ.உ.சி. சிறையிருந்த இடத்தை ‘எல்லா மதத்தவர்க்கும் பொதுவான புதிய புண்ணியஸ்தலம்!’ என்று வர்ணித்தான் பாரதி. தமிழகத்தின் விடுதலைப் போர் வீரர்களில் வ.உ.சி. மட்டுமே பாரதியால் பாடப்பட்டவர்!

கப்பலோட்டிய தமிழர் கைது செய்யப்பட்டதும் நெல்லையும், தூத்துக்குடியும் கலவர பூமி ஆனது. நெல்லை நகர் மன்றம் சூறையாடப்பட்டது. அரசு அலுவலகங்களில் ஆவணங்கள் எரிக்கப்பட்டன. அஞ்சலகங்கள் நெருப்புக்கு இரையாயின. தந்திக் கம்பங்கள் தகர்க்கப்பட்டன. மண்ணெண்ணெய்க் கிடங்கு நாள் கணக்கில் தீப்பிடித்து எரிந்தது. துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் உயிரிழந்தனர். தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கடைகள் மூடப்பட்டன. 'வந்தே மாதரம்’ கோஷம் எங்கும் முழங்கியது. சிதம்பரம் பிள்ளையின் செல்வாக்கைக் கண்டு ஆட்சியாளர்கள் அதிர்ந்தனர்!

காலத்தின் ஓட்டத்தில் வ.உ.சி-யின் விடுதலை நாளும் வந்தது. கட்டுக்கடங்காத மக்கள் கூட்டம் வரவேற்க வருமென்று எதிர்பார்த்த அரசு, நிலைமையைச் சமாளிக்க ரகசிய நடவடிக்கைகளில் இறங்கியது. ஆனால், செக்கிழுத்த செம்மலை வரவேற்க அவருடைய மனைவியும், மைத்துனரும், சுவாமி வள்ளிநாயகமும், முன்பே விடுதலையாகிவிட்ட சிவமும் மட்டுமே சிறைவாயிலில் நின்றனர். தேச விடுதலைக்காகத் தன்னை அழித்துக்கொண்ட அந்த மாமனிதருக்கு அதுதான் தமிழகம் காட்டிய தனிப் பெரும் நன்றி!

வெள்ளையருக்கு எதிராக நடத்திய விடுதலை வேள்வியில் வ.உ.சி. வழக்கறிஞராகப் பணியாற்றும் உரிமையைப் பறி கொடுத்தார். சிறை மீண்டவர் சென்னை வந்தார். வறுமை அவர் குடும்பத்தைக் கடுமையாக வாட்டியது. 'கவிஞன் என்று வாசல் தேடி வந்தவர்க்கெல்லாம் மாரியைப்

போல் வாரி வழங்கிய நான் இன்று நிலை தாழ்ந்து, நாச் சொல்லும் தோலும் நலியப் பிறரிடம் கையேந்தி உதவி கேட்க நேர்ந்துவிட்டதே' என்று தன் சுயசரிதையில் தன்னிரக்கத்தோடு குறிப்பிட்டு இருக்கிறார் அந்தத் தன்னிகரில்லாத தியாகத் தலைவர்!

வ.உ.சி. சைவத்தின் வேதமாகப் போற்றப்படும் சிவஞான போதத்துக்கு உரை எழுதிய சிவனருட் செல்வர். ஆனாலும், தன் உயிர் பிரியும் வேளையில் தேவாரமோ, திருவாசகமோ பாடச் சொல்லாமல், பாரதியின் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?' என்ற தேசியப் பாடலை சிவகுருநாதன் என்ற தொண்டரைப் பாடச் சொல்லிக் கேட்டபடி கண் மூடினார். வ.உ.சி. மட்டும் வங்கத்தில் பிறந்திருந்தால், நேதாஜியைப் போல் அனைவர் நெஞ்சிலும் நின்றிருப்பார். தமிழனாகப் பிறந்ததா அவர் செய்த பாவம்?!



சுப்பிரமணிய சிவா... வத்தலக் குண்டில் பிறந்து திருவனந்தபுரத்தில் வளர்ந்தவர். உடற்பயிற்சியால் உடம்பை உருக்குபோல் வைத்திருந்தவர். சின்னஞ்சிறு வயதில் மணமுடித்த போதும் மனைவியுடன் இரண்டரை ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தவர். லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்ட செய்தியறிந்த நாள் முதல், பாரத மாதாவின் அடிமை விலங்கை உடைக்கும் பணியில் முற்றாகவும், மூர்க்கமாகவும் ஈடுபட்டவர். திருவனந்தபுரத்திலிருந்து தூத்துக்குடி வரை நடந்தே வந்து கிராமம் கிராமமாய் நாட்டுப்பற்றை மக்களிடையே ஊட்டியவர். சூறைக் காற்றும், நெருப்பும் போல் வ.உ.சி-யோடு இணைந்து வெள்ளையருக்கு எதிராக சுதந்திரக் கனலை மூட்டியவர்.

'சிவம் பேசினால் சவம் எழுந்து நிற்கும்!' என்பார்கள். 'மூட்டை முடிச்சுகளோடு வெள்ளையரை வெளியேற்றவே கப்பல் கம்பெனி

தொடங்கப் பட்டது!' என்று சிதம்பரம் பேசியபோது சிவம் இடை மறித்து, 'மூட்டை முடிச்சுகள் இந்த நாட்டில் சுரண்டிச் சேர்த்தவைதானே! அவற்றை அவர்கள் இங்கேயே போட்டுவிட்டுப் போகட்டும்!' என்று எரிமலையாய் முழங்கியவர்.

வ.உ.சி-க்கு நீதிபதி பின்ஹே, இரண்டு ஜன்ம தண்டனை வழங்கிய வழக்கில் சிவத்துக்குப் பத்தாண்டு தீவாந்தர தண்டனை தரப்பட்டது. மேல் முறையீட்டில் அது ஆறாண்டு கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது. சிறைவாசத்தில் கம்பளி மயிரைச் சுண்ணாம்பு நீரில் ஊறவைத்து வெட்டும் வேலையில் ஈடுபட்ட சிவம் தொழு நோயால் பாதிக்கப்பட்டார். அடிமை நோயை அகற்ற முனைந்தவரின் உடல் பெருநோயால் உருக்குலைந்தது. விடுதலை அடைந்ததும் உடல் தளர்ந்தாலும் மனம் தளராமல் பட்டி தொட்டிகளில் எல்லாம் புரட்சிப் பேச்சுரமிட்டுச் சுதந்திர மணம் பரப்பினார் சிவம்!

தொழுநோய் பிடித்த சிவம் புகைவண்டியில் பயணம் செய்யக் கூடாது என்று வெள்ளையர் சட்டம் தடுத்தது. உடல் துவண்டாலும், சுதந்திரச் சிந்தனை சுடர்விட்ட சிவத்தின் மனம் துவளவில்லை. மாட்டு வண்டியிலும், கட்டை வண்டியிலும், இரண்டும் கிடைக்காத இடங்களில் கால்களால் நடந்தும் மக்களைச் சந்தித்தார். மூண்டெழுந்த சூறாவளியை முறத்தால் தடுத்த பேதை நிலையில் அரசு விழித்தது. பாரதிய மதம் காண விழைந்த சிவம் பாப்பாரப்பட்டியில் பாரத மாதாவுக்கு கோயில் கட்ட முயன்றார். ஆனால், அந்தக் கனவு கனவாகவே முடிந்தது!



நாடு குறித்தே நாளும் சிந்தித்தவர், ஆதரவின்றி அலைக் கழிந்தார். தன்னுடைய மரணத்தின் மாலைப் பொழுதில், தொழுநோய் முற்றிய

நிலையில், நண்பர் சின்னமுத்து முதலியாருக்கு வரைந்த கடிதத்தில், ‘இன்னும் படுத்த படுக்கையில் இருக்கிறேன். கடும் பத்தியத்துடன் மருந்து சாப்பிட்டு வருகிறேன். எனது வாழ்நாட்களை எல்லாம் அர்ப்பணம் வாங்கிக் கொண்ட தமிழ்நாட்டிலே என்னைக் கவனிப்பவர் இல்லாது போயிற்று!’ என்று மனம் நொந்து குறிப்பிட்டார். தன் உயிர் மூச்சு உள்ளவரை புரட்சியைக் கக்கும் எரிமலையாக வாழ்ந்தவர், 41 வயதில் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொண்டார்.

பாரதி... மாளிகையில் வீசிய கவிதைத் தென்றலை மண் குடிசைக்குள் குடியேற்றியவன். நிலாவையும், முடிமன்னர்களின் உலாவையும் கிழடுதட்டிப் போன உவமைகளின் துணையோடு பாடிக் கொண்டு இருந்தவர்களுக்கு நடுவே பாடுபொருளில் சமூகச் சார்பைக் கொண்டுவந்து சேர்த்தவன், மன்மதனின் மலர்க்கணை பட்டு, மாலைத் தென்றலில் மதி மயங்கி, ஆளன் வருகைக்காக அணையாத விரகத்தை நெஞ்சிலேற்றி கிளியையும், காற்றையும் தூதனுப்பி துடித்து நிற்கும் கன்னியரின் காமப் புலம்பலை இலக்கியமாக்கிய கவிராயர்களுக்கிடையில், சமூக இழிவுகளுக்குத் தீர்வு காண அமிலத்தாரை வழியும் அருவியாகத் தன் பேனா மையை மாற்றிக் கவிதையைக் கௌரவித்தவன் பாரதி!

'ஏழை பாடு எப்போதும் கஷ்டம். பணக்காரனுக்குப் பலவித சௌக்கியங்களுண்டு. கோயில் காத்தவனுக்குப் பஞ்சமில்லை. சாமிகள் முக்கால்வாசிக்குக் குறையாமல் பாதி கல்; பாதி சாமி. முழுச் சாமி இருந்து கோயில் நடத்தினால் உடனே கிருதயுகம் பிறந்துவிடாதா?’ என்று பெரியாருக்கு முன்பே பழமைச் சனாதனத்துக்கு எதிராக ஏவுகணை வீசியவன் பாரதி! தாழ்த்தப் பட்ட சமூகத்தில் பிறந்த கனகலிங்கத்தை வீட்டுக்கு அழைத்து, அவன் நெற்றியிலும், தோளிலும், மார்பிலும் திருநீற்றுக் காப் பிட்டு, ஓமம் வளர்த்து, காயத்ரி மந்திரம் உச்சரித்து, பிரம்மோபதேசம் செய்து பூணூல் அணிவித்து, ‘இன்று முதல் யார் கேட்டாலும் நான் பிராமணன் என்று தைரியமாகச் சொல்!’ என்று கட்டளையிட்ட கலகக்காரன் பாரதி!

அந்த மகா கவிஞன், 'கடன்காரர் தொல்லை. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணமில்லை. குழப்பம், குழப்பம், தீராத குழப்பம். எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருடங்கள்! வீட்டுக்கார செட்டியாருக்கு எத்தனை நாள் பொய் வாயிதா! தினம் இந்தக் கொடுமைதானா?’ என்று வாய் விட்டுப் புலம்பி, கண்கலங்கி நின்றான். எந்த எட்டயபுரம் ஜமீன்தாரை மையமாக வைத்து எள்ளல் சுவையுடன் 'சின்னச் சங்கரன் கதை’ எழுதினானோ, அதே ஜமீன்தாரிடம் உதவி

கேட்டு ஓலைத் தூது வரையச் செய்து வேடிக்கை பார்த்தது வறுமை!

கடையத்தில் வாழ்ந்த வீட்டை ஒழுங்குபடுத்த பணம் வேண்டி எட்டயபுரம் வந்தான். ஆங்கிலேய ஆதிக்கத்தின் அடித்தளம் தகர்க்க நாட்டு விடுதலைப் பாட்டு யாகம் நடத்தியவன் என்பதால் ஜமீன்தார் உதவி செய்ய அஞ்சினார். ஏமாற்றத்துடன் சேற்றூர் ஜமீன், எலிமலை ஜமீன் என்று அலைந்து திரிந்து, எங்கும் பணம் கிடைக்காமல் பசித்த வயிற்றுடன் ராஜபாளையம் வீதியில் இருந்த ஒரு கீற்றுக்கொட்டகையில் அவன் அமர்ந்திருந்த செய்தியைப் படிக்கும்போதே அடிமனதில் வலிக்கிறது. ‘தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்!’ என்று மானுட நேசத்துடன் பாடியவனுக்கு இந்த மண்ணில் உணவு கிடைக்கவில்லை!

கற்பனைச் சிறகடித்துக் கனவுச் சுகத்தில் நம்மை ஆழ்த்திவிடாமல், தன் வாழ்காலச் சமூகத்தின் தேவையறிந்து, அடிமைத் தளையறுக்க எழுத்தை ஆயுதமாக்கிப் போராடிய அந்தப் புதுயுகக் கவிஞனின் பாடல்கள் இன்னும் பல தலைமுறைக்கு எழுச்சியும், நெகிழ்ச்சியும் ஊட்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்று தெய்வீக நெறிகளைப் பாதுகாக்கும் நோக்கில், காலமெல்லாம் எழுத்துத் தவம் நடத்தியவன் தன் 39-வது வயதில் விழி மூடினான். அவனுடைய இறுதி ஊர்வலத்தில் பங்கேற்க இருபது பேர்கூட வரவில்லை. இதுதான் தமிழகம்!

‘நன்றியுணர்வே நற்பண்புகளின் தாய்!’ என்றான் சிசரோ. ‘நன்றிமிக்கவர் நெஞ்சமே கடவுள் வாழும் ஆலயம்!’ என்பது சான்றோர் சிந்தனை. 'பசுவின் மடிக்காம்பை அறுத்தவனுக்கும், பெண்ணின் கருவைச் சிதைத்தவனுக்கும் கூட மன்னிப்பு உண்டு. ஆனால், நன்றி மறந்தவர்க்கு மன்னிப்பே இல்லை!’ என்கிறது புறநானூறு!

ஒருவன் ஒரு தனி மனிதனுக்குச் செய்த சிறிதளவு நன்மையைக்கூட வாழ்நாள் முழுவதும் மறவாமல் நெஞ்சில் நிறுத்தி நன்றி பாராட்ட வேண்டும் என்ற நாகரிக நீர் பாய்ச்சிப் பண்பாட்டுப் பயிர் வளர்த்த நம் மண்ணில், ஒட்டு மொத்த சமூகத்தின் நலனுக்காகவும் தங்களை முற்றாக அர்ப்பணித்த மகத்தான மனிதர்களிடம் மட்டும் மக்கள் நன்றியற்று நடந்து கொள்வது ஏனென்று புரியவில்லை!

வாழும்போது அவர்களைப் புறக்கணித்து, வறுமையில் தள்ளி, செத்த பின்பு சிலையெழுப்புவதும், புகழ்மாலை சூட்டுவதும் எந்த வகையில் நியாயமென்று தெரியவில்லை.

நேர்மையும், நல்லொழுக்கமும், வாய்மையும், தூய்மையும் துலங்க பொதுவாழ்வில் பவனி வந்தால் அவர்களுக்கு ஏழ்மையும், வறுமையும்தான் பரிசாகக் கிடைக்கும் என்ற எழுதப்படாத விதி இனியாவது மாறட்டும். முதலில் நன்றி கற்போம் நாம்!

# 9

# முயற்சி

**வீ**தியோரத்தில், நிழல் தரும் நெடிய மரத்தடியில், விதியை நம்பி வீணாய்ப்போகும் மனிதர்களின் வருகைக்காக விழிநோக வழி பார்த்து அமர்ந்திருந்தான் கிளி சோதிடக்காரன். பக்கத்தில் சோதிடனின் சோற்றுக்கு வழிதேடும் சுயநலத்திற்காகச் சிறகு வெட்டப்பட்ட பச்சைக் கிளி, இரும்புக் கூண்டில் சிறையிருந்தது!

உழைப்பில் அரும்பும் வியர்வையை நம்பாமல் விதியை நம்பும் ஒருவன், 'எப்போது எனக்கு நல்ல காலம் பிறக்கும்?' என்ற கேள்வியோடு சோதிடம் பார்க்க அமர்ந்தான். சோதிடன் கைக்கு காசு வந்ததும் கிளிக் கூண்டின் கதவு திறந்தது. காற்றைப் போல் வானில் சுதந்திரமாய்ப் பறப்பதற்குப் பெயர்தான் பறவை. ஆனால், இங்கே, கூண்டின் கதவு திறந்த பின்பும் கிளி விண்ணில் பறக்க விரும்பவில்லை.



திறந்த கூண்டிலிருந்து கிளி நளினமாய் மெள்ள நடை பயின்று வெளியே நின்றது. அடுக்கப்பட்ட சீட்டுகளை அங்குமிங்கும் புரட்டியது. ஒரு சீட்டை அலகினால் கவ்விப் பிடித்து சோதிடன் கையில் கொடுத்தது. தகரப் பெட்டியில் இருக்கும் தானியத்தை அவன் கிளியின் வாயில் வைத்ததும், தானாகவே அது மீண்டும் கூண்டுக்குள் போய் அமர்ந்து கொண்டது. விடுதலை வேட்கை ஏன் கூண்டுக் கிளிக்கு இல்லை?



கிளியின் சிறகு பறக்க முடியாதபடி வெட்டப்பட்டிருக்கலாம். ஆனால், சிதைக்கப்பட்ட சிறகசைத்து, உடலை வளைத்தும், நெளித்தும் ஏன் அது பறப்பதற்கு முயலவில்லை? ஏனென்றால், அடிமைக் கிளிக்கு உரிமைக்காக உடலை வருத்தி உழைக்காமல், இருக்கும் இடத்தில் கிடைக்கும் சலுகைத் தானியம் போதும். உரிமை மறந்து சலுகையில் நிறைவடையும் இது போன்ற கிளிகளுக்குச் சாகும் வரை கூண்டுதான் சாசுவதம். சுதந்திர பிரக்ஞையின்றி, சின்னஞ்சிறு சலுகைகளில் தன்னை இழந்து நிற்கும் அடிமைகளுக்கான குறியீடுதான் கூண்டுக் கிளி!

இது போட்டியும், பொறாமையும் நிறைந்த உலகம். தன்னுடைய இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள ஒவ்வொருவரும் ஓயாமல் போராட வேண்டியுள்ளது. முயற்சியும், உழைப்பும் இல்லாத மனிதனுக்கு வாழ்க்கையும் இல்லை. வளர்ச்சியும் இல்லை. தன்னுடைய வியர்வையின் விளைச்சலில் பசியாறுவதற்குப் பெயர்தான் சுயமரியாதை!

'உனக்கு வேண்டிய ரொட்டித் துண்டை உன் வியர்வையில் தேடு!' என்றார் கர்த்தர். 'உழைப்பின்றி உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம்!' என்றார், கீதையில் கிருஷ்ணர். 'சோம்பியிருப்பதைவிட உழைப்பதே சுகமானது!' என்றார் எட்வின் அர்னால்ட். ‘எப்போதும் பாடுபடு. எப்போதும் உழைத்துக் கொண்டு இரு. உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய்கள் எல்லாம் உழைப்பைக்

கண்டவுடன் ஓடிப்போய் விடும்!' என்றான் பாரதி.

உழைத்து உண்ணும் வாழ்க்கைதான் உயர்வானது. அதனால்தான் ஆட்சியதிகாரத்தை அறவே விரும்பாத அண்ணல் காந்தியடிகள் 'ஒரேயொரு மணி நேரம் நான் ஆட்சி நாற்காலியில் அமர்ந்தால், நம் நாட்டிலுள்ள எல்லா அன்ன சத்திரங்களையும் உடனே இழுத்து மூடும்படி ஆணை பிறப்பிப்பேன்' என்றார். தன்னுடைய ஆசிரமத்தில் எவ்வளவு பெரிய மனிதராயினும் உழைக்காமல் உணவு ஏற்க மகாத்மா ஒரு நாளும் அனுமதித்ததில்லை.

வாழ்க்கைப் பயணத்தில் வழி தவறி விழுந்துகிடக்கும் எவனைக் கேட்டாலும் விதியைத்தான் நொந்துகொள்வான். 'என்னுடைய தலையெழுத்து என்னை இப்படி ஆக்கிவிட்டது' என்று தன்னுடைய தோல்விக்குத் தானே சமாதானம் தேடுவான். 'ஏற்கெனவே எழுதியதை அழித்துப் புதிதாய் மாற்றி எழுத யாரால் முடியும்?' என்று தத்துவப் புலம்பலில் தப்ப முயல்வான். 'அந்த ஆண்டவனுக்கு ஏன் கண்ணில்லாமல் போனது?' என்று கையறுநிலையில் கண்ணீர்விடுவான். 'விழுவது மீண்டும் எழுவதற்கே!' என்ற முயற்சியின் மூலமந்திரத்தை மனிதர்கள் ஏன் மறந்து விடுகின்றனர்?

உலகின் தலைசிறந்த அறிவியல் மேதையாய்ப் புகழ்க் கொடி பறக்கவிட்ட ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், சுவிட்சர்லாந்தில் மேற்படிப்புப் படிக்க எழுதிய முதல் நுழைவுத் தேர்வில் தோல்வியைத் தழுவியவர். மூன்று இடங்களில் ஆசிரியர் பணியில் சேர்ந்து திறமை போதாதென்று புறக்கணிக்கப்பட்டவர். வறுமையில் வாடியவர். இடைவிடாத முயற்சியும், உழைப்பும் அவரைச் 'சார்புக் கொள்கை'யை நிறுவச் செய்தது. அதன் மூலம் நோபல் பரிசைப் பெற முடிந்தது. முயற்சிக்குச் சிறிதும் விடுமுறை தர விரும்பாத அவர், முடிவெட்டவும் நேரம் ஒதுக்காமல் தலைமுடியை நீளமாக வளர்த்தார். சலவை செய்யாத கசங்கிய ஆடைகளையே அணிந்தார். எப்போதும் தன் ஆய்விலேயே சிந்தனை சிறைப்பட்டிருந்ததால் சில சமயம் இடுப்பில் பெல்ட்டுக்குப் பதில் 'டை' கட்டிக் கொள்வார். ஒரு சிறந்த கர்மயோகிக்கு அவரே சரியான சான்று!

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் சர்வாதிகாரம் சரிவதற்கு ஐன்ஸ்டீன், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்டுக்கு எழுதிய அணு ஆயுதக் குறிப்புகள் அடங்கிய கடிதமே மூல காரணம்!

ஜெர்மனியிலிருந்து விரட்டப்பட்டு, அமெரிக்கக் குடியுரிமை பெற்ற

இந்த யூதரை இஸ்ரேல் ஜனாதிபதியாக்க முன் வந்தபோது, 'என்னைத் தனியாக விட்டுவிடுங்கள். நான் மேலும் தீர்க்கமாகச் சிந்திக்க அறிவியல் துறையில் பணியாற்ற வேண்டும்' என்று மறுதலித்த அதிசய மனிதர் இவர்.

சீனாவில் சன்யாட்சென் மறைந்ததும் அதிகாரத்தில் அமர்ந்த ஷியாங்கே ஷேக் கம்யூனிஸ்டுகளை ஈவிரக்கமின்றி வேட்டையாடினார். உயிர் தப்பிய கம்யூனிஸ்டுகள் தொலைதூர நாட்டுப்புறங்களில் பதுங்கினர். கட்சி தடை செய்யப்பட்ட நிலையில் மாசேதுங் தன் தோழர்களுடன் சீனாவின் தென்பகுதிக்குப் பின் வாங்கினார். அங்கு ஒடுக்கப்பட்ட விவசாயிகளைக் கிளர்ந்தெழச் செய்து செம்படையை உருவாக்கினார். கெரில்லாப் போர் மூலம் அரசுப் படையைத் தாக்கினார். ஷியாங்கே ஷேக்கின் ஏழு லட்சம் பேர் கொண்ட ராணுவம், கியாங்கி மாகாணத்தில் மாசேதுங்கை முற்றுகையிட்டது. உணவு, உடை, மருந்தின்றி மாவோவின் தோழர்கள் தவித்தனர்.

மாசேதுங்கின் செம்படையில் இருந்த பத்து லட்சம் பேர் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து யென்னான் மலையைக் கடந்து, தெற்கிலிருந்து வட மேற்குப் பகுதியை நோக்கிச் செல்வது என்று முடிவெடுக்கப்பட்டது. உலக வரலாற்றில் தனியிடம் பெற்ற இந்த 'நெடும் பயணம்' 11 மாகாணங்களைக் கடந்து 6000 மைல் தூரம் நடந்தது. வழி நெடுக ஷேக்கின் படை பாலங்களைத் தகர்த்து வைத்தது. அரசுப் படை, பழங்குடிகள், வழிப்பறிக்காரர்கள் என்று பல தடைகளை மீறி மாவோவின் செம்படை ஓராண்டு முடிவில் யென்னான் பகுதியை அடைந்தபோது, 10 லட்சம் பேரில் 20 ஆயிரம் பேர் மட்டுமே எஞ்சி நின்றனர். பல சோதனைகளைச் சந்தித்த மாசேதுங் 14 ஆண்டு இடையறாத முயற்சியினால் 1949-ல் சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை அமைத்தார். விதியை நம்பி விழுந்துகிடக்காமல் முயற்சியுடன் எழுந்து நடப்பவர்களையே காலம் தன் கணக்கில் வைத்துக்கொள்கிறது.

உலக மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பொதுவுடைமை ஆட்சியின் கீழ் வருவதற்குக் கால்கோள் விழா நடத்திய ரஷ்யப் புரட்சியின் நாயகன் லெனினைப் போல் கடுமையாக உழைத்தவர்களின் எண்ணிக்கையை வரலாற்றில் விரல்விட்டு எண்ணிவிடலாம். தன் வாழ்வின் இறுதியில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, வலக் கை செயலற்று, வாய் பேச இயலாத போதும் அவர் தன் உழைப்பைக் கைவிடவில்லை. ஆபத்தான புரட்சி வாழ்க்கையிலும் அவர் எழுதிக் குவித்த நூல்கள் 55 தொகுதிகளாக இன்று தொகுக்கப்பட்டுள்ளன.



‘அடக்கப்பட்ட பாலுணர்வுதான் மனநோய்க்கும், நரம்புக் கோளாறுக்கும் முக்கிய காரணம்!’ என்று கண்டறிந்தும், ‘பாலுணர்ச்சியும், சிற்றின்ப வேட்கையும் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலேயே தோன்றிவிடுகின்றன’ என்று விளக்கியும் உளவியல் துறையில் அதிர்ச்சி தரும் உண்மைகளை வெளிப்படுத்திய உளநிலை பகுப்பாய்வின் தந்தை சிக்மண்ட் ப்ராய்ட், தன்னுடைய தாடை எலும்பில் உருவான புற்றுநோயிலிருந்து விடுபட முப்பது முறை அறுவைசிகிச்சை செய்துகொண்டார். அந்த நோய் தந்த வேதனைக்கிடையிலும் அவர் கடுமையாக உழைத்தார். அவருடைய புகழ்பெற்ற நூல்கள் அனைத்தும் புற்றுநோயின் பிடியில் துயருற்ற காலத்தில்தான் அவரால் எழுதப்பட்டன.

உலகத்தின் புகழ் மிக்க இசைமேதை லுட்விக் வான் பீத்தோவன் தன்னுடைய முப்பதாவது வயதில் கேட்கும் திறனை இழக்கத் தொடங்கினார். தற்கொலை செய்துகொள்ளும் சிந்தனையைத் தூக்கி எறிந்துவிட்டு, அவர் தன் இசை முயற்சிகளைத் தொடர்ந்தார். பீத்தோவனின் இசைத் தொகுப்புகள் அனைத்தும், 50 வயதில் அவர் முழுமையாகக் கேட்கும் திறனை இழந்த பின்னால் உருவாக்கப்பட்டவைதான். முயற்சியும், உழைப்பும் உள்ள இடத்தில் எந்த ஊனமும் முட்டுக்கட்டையாக முடியாது.

*புதுக்கவிதைப் பிதாமகர்களுள் ஒருவரான ந.பிச்சமூர்த்தியின் கவிதை, விதியை நம்பியிருக்கும் முயற்சியற்ற மனிதர்களின் பார்வைக்கு ஒரு புதிய சாளரத்தைத் திறந்து வைக்கிறது. 'அடர்ந்து படர்ந்து ஓங்கி உயர்ந்த ஒரு காடு. விண் முட்டும் பெரிய மரங்களுக்கிடையில் ஒரு சின்னஞ்சிறு கமுகு(பாக்கு) செடி கண் விழிக்கிறது. அதற்கு அவசியமான நீர், வெளிச்சம் எதுவும் கிடைக்காதபடி நீண்ட மரங்கள் முற்றுகையிட்டு மூடிக்கொண்டன. பட்டப் பகலில் கரிய இருளைக் காட்டும் அந்த அடர்ந்த காட்டில் பெரிய மரங்களின் முற்றுகையில், விதையாய் விழுந்த இடத்தில் செடியாய் முளைத்து மரமாய் ஓங்கி வளரும் விதி தனக்கில்லையே என்று கமுகு கண்ணீர்விட்டதா? அதுதான் இல்லை'*

*விதியைப் போற்றினால் சோம்பலில்தான் உழல வேண்டும். பிறந்த இடத்தில்தான் வளர்வேன் என்று அடம்பிடித்தால் சாவைத்தான் சேர வேண்டும். ஆனால், மனிதன் அறியாத வளர்ச்சியின் மந்திரத்தைக் கமுகு அறியும். அது பிறவி இருளைத் துளைத்தது. சூழ்ந்த நிழலை வெறுத்து முகமுயர்த்தியது. விண்ணிலிருந்து வழியும் ஒளியமுதைத் தேடிப் பிடித்தது. சூரியக் கதிர்களின் ஸ்பரிசத்தை பெற உடலை நெளித்து நீட்டி, வளைத்து வளர்ந்தது.*

*'ஒளியை வேண்டி பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகிறது! அதுதான் வாழ்க்கைப் போர்! முட்டி மோதும் துணிவே இன்பம்! உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி!'*

*ஆம், மண்ணுக்குள் விழுந்த விதை அந்த மண்ணைப் பிளந்து வெளிவரும் முயற்சியை விட்டுவிட்டால், விதை விருட்சமாகும் வாய்ப்பில்லை. வாழ்க்கையின் உன்னதம், அடைப்பட்ட கூண்டுக்கிளியாய் சலுகைகளுக்காகச் சிறைப்பட்டுச் சீரழிவதில் இல்லை; பூமியைப் பிளந்து வெளிவரும் விதையின் சுதந்திர வேள்வியில் இருக்கிறது. 'இருந்த இடத்தில் கிடப்பேன். தானாக வந்து விழுந்ததை வாய் திறந்து தின்பேன்' என்று மலைப்பாம்பு இருக்கலாம். அப்படி மனிதன் இருத்தல் இழிவு!*

*'உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி!'*


*ஓ... இதுதான் எவ்வளவு ஆழ்ந்த அர்த்தமுள்ள மகாவாக்கியம்!!*

10

# வாழ்க்கை

***அ****து ஒரு மார்கழி மாத மாலைப் பொழுது. தபோவனத்தின் அமைதியும் பர்ணசாலையின் எளிமையும் கைகோத்தபடி காட்சி தரும் ஆற்றங்கரை ஆலயத்தின் வெளிப் பிராகாரம். மலர்கள் பூத்துச் சொரியும் அந்தப் பிராகாரத்து மரத்தடியில் திரளான மக்கள் கூட்டம். ஆன்மிக ஒளி பரப்பும் ஞானி ஒருவர் சொர்க்கம், நரகம் குறித்து விரிவாக விளக்கிக்கொண்டு இருந்தார்.*

*சொர்க்கத்தின் சுகத்தையும் நரகத்தின் கொடுமையையும் இரண்டு மணி நேரம் இடைவிடாமல் விளக்கிய பின்பு, 'உங்களில் சொர்க்கம் செல்ல விரும்புவோர் கை தூக்குங்கள்’ என்றார் அந்த ஞானி. ஒருவனைத் தவிர, அங்கிருந்த அனைவரும் ஆயிரம் கற்பனைக் கனவுகள் கண்களில் மிதந்திட, கைகளை உயரத் தூக்கினர்.*



*அதிசயமாகக் கை தூக்காமல் தலை தாழ்ந்து அமர்ந்திருந்த அந்த மனிதனை ஞானி உற்றுப் பார்த்தார். 'இங்கிருக்கும் அனைவரும் சொர்க்கம் செல்ல விழையும்போது, நீ ஒருவன் மட்டும் துன்பம் நிறைந்த நரகம் புக நினைக்கிறாயா?’ எனக் கனிவுடன் கேட்டார். 'நரகம் புக விரும்புவதாக நான் தங்களிடம் எப்போது சொன்னேன்?’ என்று அவன் திருப்பிக் கேட்டான். ஞானியின் சிந்தனையில் குழப்பம் கூடுகட்டிக்*

கொண்டது. 'அப்படியானால், நீ எங்கு செல்வதாக உத்தேசம்?' என்று கேட்டார். 'நான் இருக்கும் இடமே எனக்குப் போதும்' என்றான் அவன் புன்னகை ததும்ப!



'இந்த உலகம் பொய். நம் உடம்பு பொய். பூமியில் நாம் வாழும் வாழ்க்கை பொய்' என்ற சாக்குருவி வேதாந்தத்திற்குச் சாவு மணி அடித்தவன் பாரதி.


'குடும்பத்தில் இருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? அவச்சொல் அன்றோ? நமக்குத் தந்தை வைத்துவிட்டுப் போன வீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல் நிற்கிறாள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர் விட்டுக் கரைகிறாள். நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரிக்கிறாள். நமது குழந்தைகளை வளர்க்கிறாள். அவள் பொய்யா? குழந்தைகளும் பொய்தானோ? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?' என்று மாயவாதத்துக்கு எதிராக ஆவேசம் கொள்கிறான் மகாகவி.

'இருக்கும் இடமே போதும்' என்ற மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும் இந்த மண்ணில் வாழ்பவர்கள் குறைவு. வேதனை, விரக்தி, நிராசை, ஆற்றாமை, நம்பிக்கை வறட்சி, வெறுப்பு, கோபம், கசந்த நினைவுகள் என்று கணக்கற்ற மனக்காயங்களுக்கு மருந்து தேடும் மனிதர்கள்தான் இங்கே அதிகம்.

மனிதர்களில் மூன்று வகை உண்டு. நிகழ்காலத்தை நிராகரித்துவிட்டு இறந்த காலத்திலேயே நின்றுவிடுபவர்கள், முதல் வகை. கடந்த காலத்துக் கசந்த அனுபவங்களின் பிடியிலிருந்து விடுபட்டு நிகழ்காலத்துக்கு வந்து சேர முடியாத இவர்கள் நம் அனுதாபத்துக்குரிய மன நோயாளிகள். இவர்களுக்குச் சுமைகளை இறக்கவும் தெரியாது. சோகங்களிலிருந்து விலகி நிற்கவும் முடியாது. இவர்கள் 'நேற்றைய மனிதர்கள்'!

இரண்டாம் வகை மனிதர்கள், எதிர்காலக் கனவுகளில் நிகழ்கால நிஜங்களைப் பறிகொடுத்தவர்கள். நாளைய பொழுதைத் திட்டமிடு வதிலேயே இன்றைய பொழுதை இழந்து நிற்பவர்கள். வயோதிகத்தில் வளமாக வாழ்வதற்குக் கணக்குப் போட்டபடியே வாலிபத்தின் வசந்தத்தைத் தொலைத்துவிடுபவர்கள். இவர்களுக்கு வாசலில் நிற்கும் 'இன்று' முக்கியமல்ல. வரவிருக்கும் 'நாளை'யே முக்கியம். இவர்கள் 'நாளைய மனிதர்கள்'!

மூன்றாம் வகை மனிதர்கள், வாழ்க்கையை அனுபவித்து வாழும் ரகசியத்தைப் புரிந்து கொண்டவர்கள். 'நேற்று போய்விட்டது. அதை மறந்துவிடுவோம். நாளை நம்மிடம் இல்லை. அதைப் பற்றிக் கவலைப்படாதிருப் போம். இன்று நம் முன் இருக்கிறது. அதைச் சரியான முறையில் பயன் படுத்துவோம்' என்று 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற தத்துவம் உணர்ந்தவர்களாய், ஒவ்வொரு நொடியையும் சுகானுபவத்துடன் சுவைத்து மகிழ்பவர்கள். இவர்கள் 'இன்றைய மனிதர்கள்!'





புத்தர்பிரான் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தார். அவருடைய அருளமுதைப் பருகுவதற்குச் சீடர்கள் ஆவலுடன் காத்திருந்தனர். சீடர்களை நோக்கி, 'ஒரு மனிதனின் ஆயுள் எவ்வளவு காலம்?' என்று கேட்டார் புத்தர். 'எழுபது ஆண்டுகள்' என்று ஒரு சீடர் சொன்னதும், 'தவறு' என்றார் புத்தர். 'அறுபது ஆண்டுகள்' என்று மற்றொரு சீடர் சொல்ல, அதையும் மறுத்தார். 'ஐம்பது ஆண்டுகள்' என்றார் இன்னொருவர். 'இல்லை' என்றார் அந்தச் சாக்கிய முனிவர். 'ஐம்பதாண்டுகள்கூடவா ஒரு மனிதனால் வாழ முடியாது?' என்ற ஐயத்துடன் அமைதி காத்தனர் சீடர்கள். 'மனித வாழ்க்கை ஒரு நொடி' என்றார் புத்தர். 'என்ன, ஒரே ஒரு நொடிதானா மனித வாழ்வு?' என்று

சீடர்கள் அனைவரும் ஏக காலத்தில் வாய் திறந்து கேட்டனர்.

'வாழ்வு ஒரேயொரு நொடி அல்ல. ஆனால், ஒவ்வொரு நொடியாக வாழ வேண்டும். ஒவ்வொரு நொடியிலும் முழுமையாக வாழ வேண்டும்' என்று புத்தர் விளக்கினார்.

சொந்த வீடு, சுகமான வாகனம், வண்ணத் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, விதம்விதமாக ஆடைகள், வகைவகையாக அணிகலன்கள், கம்ப்யூட்டர் கருவிகள், எலெக்ட்ரானிக் பொருள்கள், வங்கிக் கணக்கில் வளரும் பணம் என்ற இடைவிடாத தேடலில் பலருக்கு வாழ்வே இயந்திரமயமாகி விட்டது. இரவில் நிலா பார்க்க, நட்சத்திரங்களின் கண்சிமிட்டலை ரசிக்க, வான ஓவியன் வரையும் வண்ணக் காட்சிகளைக் கண்டு களிக்க, கடலலைகள் கால்களைத் தழுவ, கடற்கரை மணலில் பாதம் புதைய நடந்து மகிழ, புல்லில் படுத்துப் புரள, பூக்களின் மலர்ச்சியில் மயங்க, குழந்தையின் மழலையில் குதூகலிக்க, தாயின் மடியில் தலை சாய்த்துக் கதை பேச, புலர்காலைப் பொழுதில் புள்ளினங்களின் இசையில் இதயம் பறிகொடுத்து நிற்க நம்மில் யாருக்கும் இப்போது நேரமே இல்லையெனில், இது என்ன வாழ்க்கை?

'இன்று நாம் புதிதாய்ப் பிறந்தோம்' என்ற உற்சாகத்துடன் ஒவ்வொரு விடியலையும் வரவேற்கும் உள்ளம் உடையவனால் மட்டுமே வாழ்க்கைப் பிரவாகத்தில் மூழ்கிவிடாமல் எளிதாக நீந்த முடியும்.

ஒரு துறவி இருந்தார். அவரிடம் வாழ்க்கை குறித்த தெளிவைப் பெற இரண்டு பேர் சீடர்களாக வந்து சேர்ந்தனர். 'என்னிடம் போதனை பெறுவதற்கு முன் உங்கள் இருவருக்கும் ஒரு சோதனை வைக்கிறேன். ஆளுக்கு ஒரு விதை தருகிறேன். அதைச் செடியாக்கி, ஆறு மாதங்களுக்குப் பின் அதில் பூத்த மலர்களுடன் என்னிடம் வாருங்கள்' என்றார் துறவி. ஆறு மாதங்கள் மறைந்தன. மாணவர்கள் இருவரும், பூத்த செடிகளில் பறித்த மலர்களுடன் மீண்டும் வந்து நின்றனர்.



ஒரு மாணவன் கையில் இரு மலர்கள் மட்டுமே இருந்தன. 'இரு மலர்கள் மட்டுமா உன் செடியில் பூத்தன?' என்று துறவி கேட்டதும், 'ஆம் ஐயனே! நீங்கள் தந்த விதை பழுது. பயிரிட்ட மண் வறண்டு கிடந்தது. இடுவதற்கோ உரம் கிடைக்கவில்லை. அதனால் என் செடியில் இரு மலர்கள் மட்டும்தான் பூத்தன' என்றான் அவன். அடுத்தவனைத் திரும்பிப் பார்த்தார் துறவி. அவனிடம் நூற்றுக்கு மேற்பட்ட மலர்கள் இருந்தன. 'உன் செடியில் மட்டும் எப்படி இத்தனை மலர்கள் பூத்தன?' என்று கேட்டார் துறவி.

'ஐயனே! நீங்கள் தந்த விதையை நான் நெஞ்சார நேசித்தேன். விதைத்த மண்ணை மனம் நிறைய வாழ்த்தினேன். மலரப்போகும் செடிக்கு நாளும் நன்றி சொன்னேன். மகிழ்ச்சியடைந்த செடி ஏராளமாகப் பூத்துச் சிரித்தது. அதனால்தான் இத்தனை மலர்களை என்னால் கொண்டு வர முடிந்தது' என்றான் இரண்டாம் மாணவன்.

'உயிருள்ள, உயிரற்ற அனைத்தையும் நேசிக்கும் நெஞ்சம் வேண்டும். கிடைத்ததை நெஞ்சார வாழ்த்த வேண்டும். நம்பிக்கையோடு வளர்ச்சியை எதிர்கொள்ள வேண்டும். வாழ்க்கை நேசிப்பை எப்போதும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே உங்கள் இருவருக்கும் நான் தரும் வாழ்க்கைப் பாடம்' என்று சொல்லிவிட்டு, வழி நடந்தார் துறவி.

சமீபத்தில் மரணித்த இந்தி நடிகை பர்வீன் பாபி 1980-களில் கொடி

கட்டிப் பறந்த திரைத் தாரகை. ‘தீவார்’, ‘அமர் அக்பர் ஆன்டனி’, ‘மஜ்பூர்’, ‘ஷான்’ போன்ற படங்களில் அமிதாப் பச்சனின் நாயகியாக நடித்த இவர் அழகுக்கும் ஆடை அலங்காரத்துக்கும் பெயர் பெற்றவர். இரு முறை காதலித்துத் தோல்வியுற்றவர். விரக்தியுற்ற மனோநிலையுடன் அமெரிக்கா சென்று பத்தாண்டுகள் தலைமறைவுத் தனிமை வாழ்க்கை நடத்தியவர். பர்வீன் பாபியின் சொந்தக் கதையே இந்தியில் 'அர்த்' என்றும், தமிழில் பாலுமகேந்திராவின் 'மறுபடியும்' என்றும் வெளிவந்து வெற்றி நடைபோட்டது.

அமெரிக்க அஞ்ஞாத வாசத்துக்குப் பின்பு பாபி, மும்பை திரும்பி ஒரு குடியிருப்பில் தனியாக வாழ்ந்தார். ஒருநாள் யாருமறியாத நிலையில் வீட்டில் பிணமானார். பிரேதக் கிடங்கில் அவர் சடலம் கேட்பாரற்றுக் கிடந்தது. வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த சடலத்தின் பாதத்தில் காவல்துறை கட்டி வைத்த துண்டு அட்டையில் டோக்கன் எண் 62 அறிவிப்பு தொங்கிக்கொண்டு இருந்தது. கடந்த காலத்துக் கசந்த நினைவுகளிலிருந்து மீள முடியாதவர்களின் வாழ்க்கை இப்படித்தான் முடிந்துவிடுகிறது.



'இருக்கும் இடத்தில், இந்த நொடியில் இன்புற்றிரு’ என்பதுதான் அமெரிக்க அறிஞர் இங்கர்சால் வழங்கும் வாழ்க்கை நேசிப்புக்கான மூலமந்திரம்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நல்ல கவிஞர். அவருடைய அழகிய கவிதைகளில் ஒன்று, 'எல்லா நம்பிக்கைகளும் கால நடையில் என்னைக் கைவிட்டுப் போய்விட்டன. கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் பற்றியே கவலைப்பட்டதால் நிகழ்கால யுத்தத்தில் நான் தோற்றுவிட்டேன்’ என்கிறது.

ஆயிரம் அவலக் கவலைகள் தன்னைச் சுற்றி முற்றுகையிட்டாலும், அவற்றின் தாக்குதலில் தோல்வியுற்றுத் துவண்டுவிடாமல், காணும்

*அனைத்திலும் இன்பத்தைத் தரிசித்து, 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா' என்று ரசனையுடன் வாழ்ந்து பார்க்கும் மனிதன் நேற்றைய நினைவிலும், நாளைய கனவிலும் காலத்தைக் கழிப்பதில்லை!*

# 11

# தானம்

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய ஆண்டவன் பூமியைப் படைத்தபோது, அது நிலையாக நிற்காமல் கொஞ்சம் அதிர்ந்து அசைந்தது. அப்போது உயிர்க்குலம் அனைத்தும் அச்சத்தில் ஆழ்ந்தன. தான் படைத்த பூமி அசைவதைப் பார்த்து இறைவன் அதன்மேல் பிரும்மாண்டமான மலைகளைப் பொருத்தினான். அதன்பின், பூமி அசைவற்றும், அதிர்வற்றும் நிலையாக நின்றது.

மலைகளின் வலிமையைக் கண்டு வானவர்களின் விழிகள் வியப்பால் விரிந்தன. 'மலைகள்தான் உன்னுடைய படைப்பில் மிக்க வலிமை வாய்ந் தவையா?' என்று அவர்கள் அடி பணிந்து கேட்டனர். 'இல்லை! அந்த மலைகளை உடைத்துத் தகர்க்கும் கடினமான இரும்பை நான் படைத் திருக்கிறேன். பாறையைவிட என் படைப்பில் இரும்பு அதிக வலிமை யானது' என்றான் இறைவன்.



'இரும்பை விடவும் வலிமையானது உன் படைப்பில் வேறொன்றும் இல்லையா?' என்று அவர்கள் மீண்டும் கேட்டதும், 'இருக்கிறது. இரும்பை உருக்கும் நெருப்பும் என் படைப்பே!' என்றான் ஏகநாயகன்.

'நெருப்பினும் வன்மையானது உன் படைப்பில் உண்டோ?' என்று விடாமல் அவர்கள் வினா எழுப்ப, 'நெருப்பை அணைக்கும் நீரைப் படைத்திருக்கிறேன்' என்று புன்னகைத்தான் அந்தப் பேரருளாளன்.



'நீரை விட ஆற்றல் மிக்கது அகிலத்தில் இல்லையா?' என்று வானவர்கள் வினவ, 'அந்த நீரைக் கிளர்ந்தெழச் செய்யும் காற்று இருக்கிறதே!' என்று வாய்விட்டுச் சிரித்தான் இறைவன்.

'அப்படியானால் உன் படைப்பில் எல்லாம் வல்லது காற்றுதானா?' என்று ஆர்வத்துடன் அவர்கள் கேள்விக் கணை தொடுத்ததும், மௌனத்தில் ஆழ்ந்த ஆண்டவன், சிறிது நேர இடைவெளிக்குப் பின், 'இடது கைக்குத் தெரியாமல், துயருற்றவனைத் தேடிச் சென்று எவனொருவன் வலது கையால் தானம் அளிக்கிறானோ, அந்த ஈர மனமுள்ள மனிதனே என் படைப்பில் எல்லாவற்றினும் வலிமை வாய்ந்தவன்' என்று சொல்லி, அமைதியானான்.

'அறம் செய விரும்பு' என்றாள் ஔவை. ஆனால், இஸ்லாம்

வறுமையில் வாடுபவனைத் தேடிச் சென்று தானம் செய்வதை மார்க்கத்தின் கட்டாயக் கடமையாக விதித்துள்ளது. தான் உழைத்துத் தேடிய செல்வத்தில் நாற்பதில் ஒரு பங்கைத் தனக்கு எந்த வகையிலும் அறிமுகமற்ற ஏழை எளியவர்க்குத் தானம் செய்பவரே உண்மையான இஸ்லாமியராக இருக்க முடியும். பெறுபவனின் தேவையறிந்து அவன் வாய் திறந்து கேட்பதற்கு முன்பே தருபவன் உதவ வேண்டும் என்பதே இஸ்லாம் அறிவுறுத்தும் தானத்தின் அடிப்படை.

'அல்லாவின் மார்க்கத்தில் தம்மிடமுள்ள பொருளைச் செலவிடும் நல்லவர்களின் செல்வத்துக்கு, மண்ணிலிடும் ஒரு தானிய மணியிலிருந்து நான்கு கதிர்கள் வெடித்து, ஒவ்வொரு கதிரிலும் பல நூறு தானிய மணிகள் விளைவதை உதாரணமாகச் சொல்லலாம்' என்கிறது திருக் குர்-ஆன். 'பிறரிடம் அன்பு பாராட்டாமலும், பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இருப்பதில்லை' என்ற நபிகள் நாயகம், 'அண்டை வீட்டான் வயிற்றுக்கில்லாது வாடுகையில், தான் வயிறு புடைக்க உண்பவன் 'மோமின்' (இறை நம்பிக்கையாளன்) ஆகமாட்டான்' என்கிறார். இஸ்லாம் மார்க்கத்தின் ஐந்து முக்கியமான கடமைகளில், தானம் செய்வது நான்காவது கடமையாக இடம் பெற்றுள்ளது. தொழுகை வற்புறுத்தப்படும் இடங்களில் எல்லாம் திருமறை தானத்தையும் வலியுறுத்துகிறது.

ஒருவனிடம் செல்வம் அளவுக்கு மேல் சேர்ந்தால் அதை அடுத்தவர்க்கு வழங்க வேண்டும். தானும் அனுபவிக்காமல், ஏழை எளியவர்க்கும் அள்ளித் தராமல் பெட்டியில் வைத்துப் பூட்டி மகிழ்ந்தால், அச்செல்வம் 'நாய் பெற்ற தெங்கம் பழம்' என்கிறது பழமொழி நானூறு. தேங்காயை நாயால் உடைத்து உண்ணவும் முடியாது. அடுத்தவனை அது தின்னவும் விடாது.

சீக்கிய மதத்தை உருவாக்கிய குருநானக் ஊர்தோறும் சென்று மக்களுக்கு உபதேசம் செய்தார். ஒரு நாள் நகரத்தை அடைந்தார். அவருடைய வரவு அறிந்து நகரின் எல்லையில் மக்கள் திரண்டு நின்று வரவேற்பளித்தனர். அந்த நகரத்தின் பெரும் செல்வந்தருக்கு அது வியப்பைத் தந்தது. மக்களின் மரியாதைக்குரிய மகான் தன் மாளிகைக்கு வந்தால் தன்னுடைய மதிப்பு மேலும் கூடும் என்று அவருடைய மனம் கணக்கிட்டது. அவரும் நகரின் எல்லையில் போய் நின்றார். குருநானக்கை வற்புறுத்தி தன் மாளிகைக்கு வரவழைத்தார்.

அந்த நகரில் அதற்கு இணையான மாளிகை வேறெதுவும் இல்லை. பார்க்குமிடமெங்கும் செல்வத்தின் செழுமை பளிச்சிட்டது. எத்தனை

அறைகள் அந்த மாளிகையில் இருந்தன என்று எவரும் எண்ணிவிட முடியாது. ஒவ்வொரு அறைக்கு உள்ளும் குவிந்து கிடந்த விலை மதிப்பற்ற பொருள்களையெல்லாம் செல்வந்தர் பெருமிதத்துடன் காட்டினார். இறுதியில் ஆடம்பரமாக அறுசுவை உணவளித்தார். அவருடைய ஒவ்வொரு அசைவிலும் செல்வத் திமிர் முகம் காட்டியதை நானக் உணர்ந்தார். ஏழைகளின் வியர்வையில் கொழுத்திருக்கும் அந்த மனிதருக்குப் பாடம் புகட்ட முடிவு செய்தார்.

'நண்பரே! நீங்கள் எனக்கு ஓர் உதவி செய்ய முன்வந்தால் மகிழ்வேன்' என்றார் நானக். 'நாடு போற்றும் மகான் நம்மிடம் உதவி கேட்கிறாரே' என்று பூரித்துப் போனார் செல்வந்தர். 'என்ன வேண்டும் சொல்லுங்கள். எதைக் கேட்டாலும் தருகிறேன்' என்று தன் இயல்பை மீறி வாக்களித்தார். குருநானக் தன் சட்டைப் பையில் நீண்ட நேரம் துழாவி, ஒரு ஊசியைத் தேடியெடுத்தார். 'நண்பரே! உடைமையைக் காப்பாற்றத் தெரியாத பரதேசி நான். என்னிடம் உள்ள சொத்து இந்த ஊசி ஒன்றுதான். இதை உங்கள் பொறுப்பில் தருகிறேன். பத்திரமாகப் பாதுகாத்து வாருங்கள். சொர்க்கத்தில் உங்களைச் சந்திக்கும்போது என்னிடம் இதை மறக்காமல் ஒப்படைத்தால் போதும்!' என்றார் நானக்.

செல்வந்தரின் முகம் கோபத்தில் சிவந்தது. 'இவர் நம்மிடம் வேண்டுமென்றே விளையாடுகிறாரோ' என்ற சந்தேகம் எழுந்தது. 'சொர்க்கத்துக்கு இந்த ஊசியை எப்படி ஐயா கொண்டு வர முடியும்?' என்று சூடான குரலில் கேட்டார். புன்முறுவல் பூத்த குருநானக், 'நண்பரே! செத்தபின்பு ஒரு சிறிய ஊசியைக்கூடக் கொண்டு செல்ல முடியாது என்ற உண்மையை உணர்ந்திருக்கும் நீங்கள், யாருக்கும் தராமல் இவ்வளவு செல்வத்தைச் சேர்த்து வைத்து எதைச் சாதிக்கப் போகிறீர்கள்? தனக்குப் போக மீதமுள்ளதை வறியவர்க்கு வழங்குவதுதான் செல்வர்களின் கடமை' என்று உபதேசித்தார்.

இருப்பவன் இல்லாதவனுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் தர்மகர்த்தா கொள்கை. இதை எத்தனை காந்தியச் செல்வர்கள் இன்று கடைப்பிடிக்கின்றனர்?

ஹோடீஸ் என்ற ஜென் ஞானி ஒருவர் இருந்தார். எப்போதும் கவலையற்றுச் சிரித்த முகத்துடன் அவர் காணப்பட்டதால் 'சிரிக்கும் புத்தர்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப் பட்டார். அவர் அணிந்திருந்த அங்கியில் நிறைய இனிப்புகளை வைத்திருப்பார். குழந்தைகளைப் பார்க்கும்போது சிரிக்கச் சிரிக்கப் பேசி இனிப்பு வழங்குவார். பெரியவர்கள் எதிர்ப்பட்டால், அவர்களிடம் கைநீட்டி, 'ஒரு

காசு கொடு' என்பார். பார்ப்ப வரிடம் பிச்சைக்குக் கையேந்துவது அவருடைய நோக்கம் அன்று. 'அடுத்தவனுக்குக் கொடுக்க நீ என்ன வைத்திருக்கிறாய்?'என்பதுதான் அவர் செய்கையில் பொதிந்திருக்கும் கேள்வி. 'உன்னிடம் உள்ளதைப் பிறருடன் பகிர்ந்துகொள்' என்பதுதான் 'ஒரு காசு கொடு' என்று கைநீட்டியதன் பொருள்.



அருணகிரிநாதர் ஒரு பாடலில், மனிதர்கள் செய்ய வேண்டிய முக்கியமான செயலை மிக அழகாக விளக்குகிறார். மரத்தின் நிழலில் பல மனிதர்கள் இளைப்பாறலாம். ஆனால், மனிதனின் நிழலில் யாரும் இளைப்பாற இயலாது. மரத்தின் பயன்கூட மனிதனால் சமூகத்துக்குக் கிடைப்பது இல்லை. இந்த நிலையற்ற அற்ப உடலைத் தாங்கி உலவும் மனிதன், அடுத்தவர்க்கு அன்பு சார்ந்து உதவுவதன் மூலமே தன் வாழ்க்கைக்கும், எடுத்த பிறப்புக்கும் ஓர் உண்மையான அர்த்தத்தை உருவாக்க முடியும்.

'வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்போல் கையில்

பொருளும் உதவாது' என்று சொல்லும் அருணகிரிநாதர், 'நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்' என்று மனித சமூகத்திடம் மன்றாடுகிறார். அரிசியைத் தந்துதவும் நிலையில் இல்லாதவன் நொய்யைத் தந்தால் கூடப் போதும். அந்த நொய்யில் ஒரு பிளவைத் தந்தாலும் சம்மதமே! பிறரோடு தன்னுடையதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உள்ளம் ஒருவனுக்கு இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

வள்ளலாரின் பார்வையில் பக்தியை விட அன்புதான் உயர்ந்தது. அன்புதான் ஆன்மநேயத்தின் அடித்தளம். அன்புதான் சமயங்களின் சாரம். அன்பும், இரக்கமும்தான் சன்மார்க்கம். 'ஈரமும், அன்பும் கொண்டு இன்னருள் பெற்றேன்: என் மார்க்கம் இறவாத சன்மார்க்கம்' என்கிறார் வள்ளல்பெருமான். சக உயிர்களுக்கு இரங்கும் சன்மார்க்கத்தை வலியுறுத்திய வள்ளலாரின் அன்பு இதயம், ஓரறிவு பெற்ற உயிரிலிருந்து, ஆறறிவு பெற்ற மனிதம் வரை அனைத்து உயிர்களையும் தன்னுயிராய்ப் பாவித்து, அவற்றின் துயர் துடைக்கத் துடிக்கிறது.

'பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச் சாதியாராயினும், எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமயம் ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவற்றைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து, பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்துக்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்' என்று விளக்கினார் வள்ளலார். 'பசியெனும் ஓர் பெரும்பாவிப் பயலே' என்று அவர் விளிப்பதிலேயே, பசிக்கு எதிரான அவர் கோபம் வெளிப்படுகிறது.



'நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில், படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆமே' என்பது திருமூலரின் திருமந்திரத்தில் ஒரு மந்திரம். 'படங்களும் ஓவியங்களும் அமைந்த மாடங்களை உடைய கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கை தந்தால் அது நடமாடும் கடவுள்களான ஏழைகளைப் போய்ச் சேராது. ஆனால், நடமாடும் ஏழையர்க்கு நாம் ஒன்று கொடுத்தால், அது படமாடும் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நிச்சயம் போய்ச் சேரும்' என்பது திருமந்திரம்.

கை நீட்டி யாசிப்பவனுக்கு நாம் போடுவது பிச்சை. கேட்காதபோதே ஒருவன் தேவையறிந்து நாம் உதவுவது தானம். பிச்சை சமூகத்தின் சாபம். தானம், மனிதன் சகமனிதனுக்கு வழங்கும் வரம்!

# 12

# ஆசை

**ஆ**டையின்றிப் பிறந்த நாம் ஆசையின்றிப் பிறக்கவில்லை. ஆசை, ஆண்டவன் வழங்கிய சாபம். வாழ்க்கையில் ஏற்படும் கவர்ச்சிக்கு ஆசைதான் ஆதார சுருதி. ஆசைகள் இல்லாத வாழ்க்கை, வண்ணங்கள் இல்லாத வானவில்!

'ஆசையே வாழ்வின் உயிர்நாடி' என்கிறது அதர்வன வேதம். இன்ப உணர்வுதான் ஆசை நதியின் மூலம். உயிர்களின் வாழ்க்கைப் பயணத்துக்கு ஆசையே உந்து சக்தி. ஆசைப்படும் மனிதர்கள் துன்பம் இல்லாத இன்பத்தையே அடைய விரும்பு கின்றனர். ஒவ்வொரு இன்பத்திலும் நீங்காத நிழலாய் துன்பமும் தொடர்வதை நினைத்துப் பார்க்க அவர்கள் மறந்து விடுகின்றனர்.



புத்தர், மனிதனின் துயரங்கள் அனைத்துக்கும் ஆசையே காரணம் என்று தேர்ந்து தெளிந்தார். 'எண்ணெயும் திரியும் எரிந்து முடிந்ததும் விளக்கு அணைந்துவிடும். விறகுகள் எரிந்து முடிந்ததும் நெருப்பு அணைந்து விடும். அதுபோன்று, மனவிருப்பங்களான ஆசையும் காமமும் அழியும்போது பிறப்பும், இறப்பும் அழிந்துவிடுகின்றன. ஆசைகளிலிருந்து முற்றிலும் விடுபடும் நிலையே நிர்வாணம். நிர்வாணம் என்றால் அணைதல்!' என்று போதிக்கிறது பௌத்தம்.



'பொருள்களை நினைப்பதால் பற்று உண்டாகும். பற்று நாளடைவில் ஆசையாகப் பரிணமிக்கும். ஆசை நிராசையாகும்போது கோபமாக மாறும். கோபத்தால் மனம் மயங்கும். மயக்கத்தால் நினைவு அழியும். நினைவின் அழிவால் புத்தி நாசமுறும். புத்தி நாசத்தால் மனிதன் அழிவான்' என்று சங்கிலித் தொடராக நிகழும் ஆசையின் விளைவுகளைப் பட்டியலிடுகிறது பகவத்கீதை. இகவுலகின் ஆசைகளிலிருந்து விடுபட இறைவனிடம் மட்டுமே ஆசை வைக்கச் சொல்கிறது வள்ளுவம். 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்!' என்று ஆசையின் ஆணி வேரையே அறுக்கிறது திருமந்திரம்.

ஆசையே இல்லாமல் மனிதன் வாழக் கூடுமா? அப்படி வாழ்தல் அவசியம்தானா? ஆசை இல்லாத இதயத்தில் கனவுகள் இல்லை. கனவுகள் இல்லாத இடத்தில் முயற்சி இல்லை. முயற்சி இல்லாவிடில் உழைப்பு இல்லை. உழைப்பு இல்லையேல் உலகமே இல்லை. ஆசையை முற்றாக மறுதலிக்க எல்லாரும் முனிவர்கள் இல்லை. முனிவர்களே ஆசையிலிருந்து விடுபட்டதாக வரலாறு இல்லை. ஆசையற்ற உலகில் உயிர்த் துடிப்பில்லை. 'ஆசை அறுமின்' என்று சொல்ல நாம் சித்தர்கள் இல்லை. அது தேவையும் இல்லை!

*அளவாக ஓடினால் ஆறு. அளவற்றுப் போனால் வெள்ளம். மிதமாக வீசினால் சுகம் தரும் தென்றால். அதுவே ஓங்கியடித்தால் சோகம் வளர்க்கும் சூறாவளி. சிறு நெருப்பு அடுப்பெரிக்கும். அடங்காத பெரு நெருப்பு ஊரையே அழிக்கும். கொஞ்சம் காமம் இதயத்துக்கு இன்பம். மிஞ்சும் காமம் உயிர்க்கு இறுதி. எல்லைக்குள் இருந்தால் எல்லாம் இன்பம். எல்லை மீறினால் எதுவும் துன்பம். ஆசை - அமுதம். பேராசை - ஆல கால விஷம். இந்த உண்மையை விளக்க இதிகாசங்களிலும், வரலாற்றிலும் ஒரு நூறு சம்பவங்கள் உண்டு.*

*மாவீரன் ராவணன் வேதமனைத்தும் கற்று உணர்ந்தவன். 'ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன்' என்கிறான் கும்பகர்ணன். முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந்தவமும் கொண்டவன்; சாமகானம் பாடி இறைவன் நெஞ்சில் இடம் பெற்றவன். கயிலை மலையைக் கையில் எடுத்தவன். கற்பகம், காமதேனு, சிந்தாமணி, சங்க பதும நிதிகள் அவன் கேட்டதைக் கொடுத்தன. மூன்றுலக நாயகர்களும் ஓயாமல் அவனுக்களித்த பரிசுகள் மலையாய்க் குவிந்தன. அவன் கால்களில் இருந்த வீரக்கழல்கள், தேவரும் பிறரும் தங்கள் மணிமுடி பொருந்த வணங்கியதால் தேய்ந்து புத்தொளி வீசின. சீதைக்கு நிகரான 'கற்பின் கனலி' மண்டோதரியை மனைவியாகப் பெற்றவன். இரு மனைவியரோடு, விரும்பிய மகளிரைக் கூடி மகிழ்ந்தவன். ஆசை அத்துடன் நின்றிருந்தால் ராவணவதம் நிகழ்ந்திருக்காது. அடுத்தவன் மனைவி மீது கொண்ட அறம் பிறழ்ந்த ஆசையே இலங்கேஸ்வரனை அழித்தது.*

*துரியோதனன் நட்பில் சிறந்தவன். மனைவியிடம் பாசம் மிக்கவன். கதை யுத்தத்தில் இணையற்றவன். 'நீ பெரிய அறிவாளிகளின் குலத்தில் பிறந்தவன். கல்வியில் யாருக்கும் நீ இளைத்தவன் இல்லை. ஆசாரங்களை முறையாகக் கடைப்பிடிக்கும் உன்னிடம் நல்ல குணங்கள் நிரம்பியிருக்கின்றன' என்று எதிரிக்குத் தேரோட்டிய கண்ணனால் புகழப்பட்டவன். அந்தக் கண்ணனே பாண்டவர்களின் தூதனாக வந்து. 'உங்கள் கட்டளையின்படி, பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் வனவாசமும், தலைமறைவு வாழ்க்கையும் நடத்தி முடித்துவிட்டனர். இப்போது அவர்கள் நியாயத்தை எதிர்நோக்கி நிற்கின்றனர். அரசில் அவர்களுக்குரிய பங்கினை அளிப்பதே அறமாகும்' என்று நீதியுரைத்தான். 'அரசில் சரி பாதி தர மறுத்தாலும், ஐந்து கிராமங்கள் தந்தால்கூடப் போதும்' என்று தருமன் வேண்டினான். 'ஊசி நிலம் கூட தருவதற்கு நான் தயாராக இல்லை' என்ற துரியோதனனின் மண்ணாசையால் குருக்ஷேத்திரம் சிவந்தது. கௌரவர் குலம் முழுவதும் அழிந்தது.*

ஆசை, பேராசையாகப் பெருகும்போது, ஒருவன் இருப்பதையும் இழந்து நிற்பான் என்பதற்கு உதாரணமாக இருந்தது நெப்போலியன், ஹிட்லர், முசோலினி ஆகியோரின் கதை. இவர்கள் மூவரும் ஆசையின் வேகத்தில் இருந்ததையும் இழந்தவர்கள்.

நெப்போலியன் மத்திய தரைக்கடலில் உள்ள சின்னஞ்சிறு கார்சிகா தீவில் எளிய குடும்பத்தில் பிறந்தவன். பிரெஞ்சு நாட்டின் பிரைன் நகர ராணுவப் பள்ளியில் பயின்று, பதினேழு வயதில் பிரெஞ்சுப் படையில் சேர்ந்தவன். வீரத்தால் அனைவரையும் கவர்ந்து, பிரெஞ்சு மண்ணில் பிறக்காதவன் என்ற நிலையிலும் பிரெஞ்சுப் பேரரசனாய்த் தன்னுடைய 35-வது வயதில் முடிசூட்டிக் கொண்டவன். 'பிரெஞ்சுப் புரட்சியில் தரையில் விழுந்துகிடந்த அரச மகுடத்தை என் வாளின் வலிமையால் தலையில் எடுத்துச் சூடிக்கொண்டேன்' என்று பெருமிதத்துடன் பிரகடனம் செய்தவன்.

'உழைப்பைத் தவிர என்னிடம் வேறெந்த செல்வமும் இல்லை. நான் மிகக் குறைவான நேரமே உறங்குகிறேன். இரவு 10 மணிக்குப் படுத்து 4 மணிக்கு எழுகிறேன். நாளில் ஒரே முறை பிற்பகல் 3 மணிக்கு உண்கிறேன். செய்வதற்கு எதுவுமில்லாத நிலையிலும், நேரத்தை இழப்பதற்கு நான் விரும்புவதில்லை' என்று உழைப்பைக் கொண்டாடியவன் நெப்போலியன். தோல்வியைத் தழுவிய வாட்டர்லூவில் 37 மணி நேரம் தொடர்ந்து குதிரையில் அமர்ந்து போரிட்டவன். தன் வாழ்நாளில் அதிகம் படித்தவன். 2300 கட்டுரைகள் தீட்டியவன். 50 ஆயிரம் கடிதங்கள் வரைந்தவன்.

'ஐரோப்பிய வரலாறு 1879-ல் இருந்து ஒரு நாட்டின், ஒரு சம்பவத்தின், ஒரு மனிதனின் வரலாறாய் மாறியது. அந்த நாடு பிரான்ஸ்; அந்தச் சம்பவம் பிரெஞ்சுப் புரட்சி; அந்த மனிதன் நெப்போலியன் போனபார்ட்' என்கிறார் ஹேசன். அப்படி 'சென்றான், கண்டான், வென்றான்' என்ற பெருமைக்குரிய வீர வாழ்க்கை வாழ்ந்தவன் நெப்போலியன். இத்தாலி, எகிப்து, ஆஸ்திரியா, ஜெர்மனி என்று அவனுடைய வெற்றி உலா தொடர்ந்து. 'பிரிட்டனுடன் எந்த ஐரோப்பிய அரசும் வணிகத் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது' என்று அவன் ஆணை பிறப்பித்ததும் அத்தனை நாடுகளும் அதற்கு அடிபணிந்தன. போனபார்ட்டின் அதிகார ஆசை அத்துடன் நின்றிருந்தால், 'என் அகராதியில் தோல்வி என்ற வார்த்தைக்கு இடமில்லை!' என்ற அவன் புகழுரை பொய்யுரையாய்ப் போயிருக்காது.

தேவையில்லாமல் பிரிட்டனைப் பகைத்துக்கொண்ட நெப்போலியன்,

காரணமின்றி, செய்துகொண்ட சமரச ஒப்பந்தத்தை மீறி ரஷ்யாவைத் தாக்கினான். அப்போதுதான் அவனுடைய வீழ்ச்சிப்படலம் ஆரம்பமானது. ரஷ்ய விவசாயிகள் வழியெங்கும் இருந்த விளை நிலங்களைத் தீயிட்டுக் கொளுத்தியபின், காடுகளிலும் ஒளிந்தனர். ரஷ்ய ராணுவம் மாஸ்கோவுக்கு அப்பால் பதுங்கியது. ஆறு லட்சம் வீரர்களுடன் ஆக்கிரமிப்பில் இறங்கினான் நெப்போலியன். அப்போது கடுங்குளிர்ப் பருவம் வந்து சேர்ந்தது. ஜனவரியும், பிப்ரவரியும்தான் ரஷ்யாவின் உண்மையான ராணுவத் தளபதிகள். உணவின்றிப் பட்டினியாலும், ரஷ்யப் படைகளின் திடீர் தாக்குதல்களாலும், தாங்கமுடியாத குளிராலும் ஐந்து லட்சம் பிரெஞ்சு வீரர்கள் அழிந்தனர். ‘தப்பித்தது தம்பிரான் புண்ணியம்’ என்று நெப்போலியன் நாடு திரும்பினான். மனிதகுல வரலாற்றின் மிக மோசமான துயரச் சம்பவங்களில் ஒன்று ரஷ்யாவில் போனபார்ட் படை சந்தித்த பேரழிவு.

ரஷ்யப் படையெடுப்பில் வலிமை இழந்தவன், பிரிட்டிஷ் படையிடம் வாட்டர்லூவில் தோல்வியைத் தழுவினான். ஐரோப்பாவின் சக்கரவர்த்தியாக விளங்கியவன், நாடு பிடிக்கும் ஆசைக்கோர் அளவில்லாததால், அட்லாண்டிக் பெருங்கடலின் நடுவில் செயின்ட் ஹெலீனா தீவில் சிறைவைக்கப்பட்டு, ஆறாண்டுகள் அவமானகரமான வாழ்க்கையை அனுபவித்து, நோயில் விழுந்து, காலத்தில் ஒரு நாள் கரைந்தான். பிரெஞ்சு மக்கள் மத்தியில் சீன் நதிக்கரையில் தன் கல்லறை அமைய வேண்டும் என்ற அவனுடைய கடைசி ஆசையைப் பிரிட்டன் புறக்கணித்து, ஹெலீனா தீவிலேயே அவன் சடலத்தை அடக்கம் செய்தது. 19 ஆண்டுகளுக்குப் பின் பிரெஞ்சு அரசு அவனுடைய கடைசி ஆசையை நிறைவேற்றியது என்பது வேறு கதை.

ஆஸ்திரியாவில் பிறந்து, ஜெர்மனியின் சர்வாதிகாரியானவன் ஹிட்லர். வறுமையின் தோழமையோடு வளர்ந்தவன். ஓவியனாக முயன்று தோற்றவன். 'கல்லூரி ஆசிரியர் என் ஓவியங்களைப் புறக்கணித்ததால் நான் அரசியலுக்கு வந்தேன்’ என்று தன்னுடைய 'மெயின் காம்ப்’ நூலில் அவன் குறிப்பிட்டிருக்கிறான். முதல் உலகப் போரில் ஜெர்மானியப் படையில் இடம் பிடித்த ஹிட்லர், இரண்டாம் உலகப் போருக்கு முழுமுதற் காரணமாக விசுவரூபம் பெற்றது வரலாற்று அதிசயம். அவன் மது அருந்தியதில்லை; இறைச்சி உண்டதில்லை; புகை பிடித்ததில்லை. அவனுடைய காதலி ஈவா பிரவுனை இறுதிமூச்சு வரை கைவிடவில்லை. ஆனால், சர்ச்சிலின் வார்த்தைகளில் சொல்வதென்றால். அவன் 'ரத்த வெறி பிடித்த இராட்சசன்’ ஆக விளங்கினான்.

பாரம்பரியப் பின்னணி, பணபலம், அரசியல் அந்தஸ்து எதுவுமில்லாமல், வெறும் பேச்சாற்றல் மூலம் ஜெர்மனியின் பழம் பெருமை பேசி, பிரிட்டன், பிரான்ஸுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டி, தேசிய சோஷலிசக் கட்சியைத் தொடங்கி 14 ஆண்டுகளில் உலக வல்லரசின் அதிகார பீடத்தில் அமர்ந்தவன் ஹிட்லர். டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க் என்று வெற்றிகளைக் குவித்தவன். ஒரே நேரத்தில் இங்கிலாந்தையும், அமெரிக்காவையும் எதிர்த்தவன். நெப்போலியனிடமிருந்து பாடம் படிக்காமல் ரஷ்யாவின் மீது படை நடத்தி பேரழிவைச் சந்தித்தான். அளவற்ற அதிகார ஆசையில், இருப்பதை இழந்து, இறுதியில் வாழ வழி இன்றித் தற்கொலையில் முடிந்தது ஹிட்லரின் சரித்திரம்.

இரும்படிக்கும் ஏழைத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தவன் முசோலினி. ஹிட்லரைப் போல் மனித உணர்வுகளைத் தூண்டுகிறாற் போல் பேசுவதில் வல்லவன். பாசிஸ்ட் கட்சியை மக்கள் ஆதரவுள்ள கட்சியாக மாற்றி இத்தாலியின் அதிகாரத்தைக் கைப்பற்றியவன். இருபது ஆண்டுகள் மனம்போன போக்கில் நாட்டைச் சீரழித்தவன். ஹிட்லருக்குத் தோழனாய் துணை நின்றவன். வன்முறையை வளர்தெடுத்து அந்த வன்முறைக்கே இரையானவன். எந்த மிலான் நகரிலிருந்து இத்தாலியின் சான்சலர் பொறுப்பேற்கப் புறப்பட்டபோது பல்லாயிரக்கணக்கான மக்களின் மாலைகளும், வாழ்த்தொலிகளும் வழியனுப்பி வைத்ததோ, அதே மிலான் நகர வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட முசோலினியின் பிணத்தின் மீது மக்கள் காறி உமிழ்ந்தனர். கால்களைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துச் சென்றனர். 'முசோலினி காலத்தில் வாழ்வதற்குப் பெருமைப்படுங்கள். இதுவே இத்தாலியின் பொற்காலம்!' என்று முழங்கியவனுக்கு இழிவுச் சாவுதான் இறுதியில் வந்து சேர்ந்தது.

அடுத்தவன் மனைவி மீது ஆசை வைத்தால் அவமானம் நிச்சயம் என்று ஈறாயிரம் ஆண்டுகளாய் இந்த மண்ணில் ராவணன் கதை பேசப்பட்டாலும், இன்று வரை பெண்ணாசையில் விளைந்த தவறான பாலியல் தொடர்புகளால் படுகொலைகள் நிகழ்வது நிற்கவில்லை. அண்ணன் தம்பிகள் விட்டுக்கொடுக்கும் விவேகம் இல்லாமல் சொத்துச் சண்டையில் ஈடுபட்டால், இருப்பதும் இழந்து இன்னுயிர் துறக்கவும் நேரிடும் என்று திரும்பத் திரும்பப் பாரதம் படித்துச் சொன்னாலும், வரப்புத் தகராறில் வழக்கு மன்றம் வந்து நிற்கும் உடன்பிறப்புகளின் மனோதர்மம் மாறவில்லை. அளவற்ற அதிகாரம் ஆணவத்தை வளர்த்து அழிவை உண்டாக்கும் என்று வரலாற்றுத் தாழ்வாரங்களில் வலம் வரும் சர்வாதிகாரிகளின் சரித்திரம் அறிவுறுத்தினாலும் உலகம் முழுவதும்

மனிதர்களின் அதிகார ஆசை அடங்கவில்லை. அதுதான் ஆசையின் வலிமை!

ஆசைப்படுபவர்களுக்கு ஓர் உண்மை புரிய வேண்டும். 'ஆசைப்படி ஒன்றை அனுபவிப்பதனால் அதன் மீதிருந்த தாகம் தீர்ந்துவிடாது. உறங்குவதன் மூலம் நித்திரையை வெல்ல முடியாது; அந்த நித்திரை மீண்டும் வரும். சுகம் தருவதால் ஒரு பெண்ணைத் திருப்தி செய்ய முடியாது; அவளுக்கு அது மீண்டும் தேவைப்படும். விறகினால் நெருப்பு நிறைவடையாது; அதற்கு மேலும் விறகு வேண்டும். குடிப்பதால் மதுவின் மோகம் தீராது. நதிகள் எவ்வளவு நீரைக் கொண்டு வந்து சேர்த்தாலும் கடல் நிறைவடையாதது போல், ஆண் தரும் இன்பத்தில் பெண் திருப்தியுறாதது போல், ஆசைப்பட்டவைகளை அனுபவிப்பதன் மூலம் எந்த மனிதனின் ஆசைகளும் அடங்குவது இல்லை' என்கிறது நம் மகாபாரதம்.

'ஆசை துன்பம் தரும் நோய்!' என்று ஆயிரம் முறை சொன்னாலும் யாரும் ஆசையைத் துறந்துவிடப் போவதில்லை. முட்செடியைத் தின்று நாக்கில் ரத்தம் வடிந்தாலும், ஒட்டகம் அந்த முட்செடியையே மீண்டும் நாடும். துன்பத்தில் ஒவ்வொரு நாளும் துடித்தாலும் மனித மனம் ஆசைத் தேரில்தான் ஊர்வலம் போகும்.

'என் செல்வம் எல்லையற்றது போல் தோன்றினாலும், எனக்கென்று சொந்தமாக ஒன்றுமில்லை. மிதிலை எரிக்கப்பட்டாலும், என்னுடையது எதுவும் எரிக்கப்படுவதில்லை' என்றார் ஜனகர். உடைமை மறுப்புதான் ஆசை நெருப்பை அணைக்கும் உபாயம். ஆசை உள்ளவரை மனிதன் எவ்வளவு இருந்தாலும் ஏழைதான்!


ஆசையை அறவே ஒழிக்க வேண்டுமா? அவசியமில்லை. பேராசையிலிருந்து முதலில் விடுபடுவோம். நியாயமான ஆசைகளை நெஞ்சில் நிறுத்துவோம். நெறி பிறழாமல் நாளும் இன்புறுவோம். ஆசை நெருப்பில் நாம் சோறு சமைப்போம். அதே நேரத்தில் நம் வீட்டுக்கூரை அதில் எரிந்துவிடாமல் எச்சரிக்கையுடன் இருப்போம்.

முற்றிலும் இல்லையென்றாலும் முறையற்ற ஆசைகளையாவது துறந்துவிட ஆசை கொள்வோம்!

# 13

# நேர்மை

சூப் தயாரிப்பதற்கு அவரைக்காய் விதைகளைக் கழுவிக்கொண்டு இருந்தார், புகழ்பெற்ற கிரேக்கத் தத்துவஞானி டயோஜனிஸ். மன்னரைத் துதிபாடு வதையே தொழிலாகக்கொண்டு இருந்தவர் அரிஸ்டிபஸ் என்ற அறிஞர். அவர் டயோஜனிஸிடம், ‘நீங்கள் மட்டும் என்னைப் போன்று மன்னரைப் புகழ்ந்து துதிபாடும் கலையில் தேர்ந்திருந்தால், இந்த மாதிரி சூப்புக்காக அவரைக்காய் விதைகளைக் கழுவும் அவசியம் நேர்ந்திருக்காதே’ என்றார் அலட்சியப் புன்னகையுடன். 'நீங்கள் என்னைப் போல் சாதாரண அவரைக்காய் விதை சூப் குடித்து வாழப் பழகியிருந்தால் அரசருக்குத் துதிபாடும் அவலம் உங்கள் வாழ்வில் வந்திருக்காதே’ என்று சிரித்தார் டயோஜனிஸ்.



பொதுவாழ்க்கை ஏன் இப்படி நாளுக்கு நாள் புழுத்துப்போனது? நேர்மை தவறியவர்களின் எண்ணிக்கை ஏன் அதிகரிக்கிறது? பரந்து விரிந்த பாரதம் முழுவதும் சகல துறைகளிலும் ஊழல் தேவதைக்கு ஏன் வாணவேடிக்கைகளுடன் வண்ணக் கோலங்களில் உற்சவம் நடக்கிறது? தேவைகளையும் ஆசைகளையும் அளவில்லாமல் வளர்த்துக் கொள்ளும் அரிஸ்டிபஸ் வாழ்க்கை முறைதான், இவை அனைத்துக்கும் அடிப்படைக் காரணம்.



எந்த நிலையிலும் நேர்மையிலிருந்து எள் முனையளவும் பிறழ்ந்துவிடக் கூடாது என்ற பிரக்ஞை, அன்று பொதுவாழ்வில் ஈடுபட்ட பெரும்பாலான மனிதர்களின் மனங்களில் மேலோங்கி நின்றது. ஆசாபாசங்களை அறுத்தெறிந்த தவயோகிகள் தலைமையேற்றனர். காந்தி யுகம், தேவைகளைக் குறைத்து வாழ்ந்த டயோஜனிஸ் வாரிசுகளைக் கண்ட யுகம்!

நேருவுக்குப் பிறகு நாட்டின் பிரதமர் நாற்காலியில் அமர்ந்தவர் லால்பகதூர் சாஸ்திரி. குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்து, வறுமையின் தாலாட்டில் வளர்ந்த அவர், பள்ளியில் படித்தபோது படகில் பயணிக்கப் பணமின்றி, நோயுற்ற தாயைக் காண காசியிலிருந்து முகல்சராய் வரை கங்கையில் நீந்திச் சென்றவர். மத்திய உள்துறை அமைச்சராக இருந்தும், அலகாபாத்தில் தன் குடும்பம் தங்கியிருக்க ஒரு கூரை வீடுகூட சொந்தமாக இல்லாமல் தவித்தவர். அரியலூர் ரயில் விபத்தில் 112 பேர் உயிரிழந்த போது, தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியைத் துறந்த முதல் மனிதர். பதவி துறந்ததும் அரசு வாகனத்தில் ஏற மறுத்து, பேருந்தில் வீடு வந்து சேர்ந்த வித்தியாசமானவர்.

காமராஜ் திட்டத்தின் கீழ் உள்துறை அமைச்சர் பதவியிலிருந்து

விலகிய பின்பு, தன் குடும்பம் வாழ்ந்த வாழ்க்கையை ராஜேஷ்வர் பிரசாத் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் விவரித்திருக்கிறார் சாஸ்திரி. 'அரசு வீட்டில் இருந்து மிகச் சிறிய வீட்டுக்கு என் குடும்பம் இடம் மாறி விட்டது. இனிமேல் ஒரேயொரு காயை மட்டும் உணவில் சேர்ப்பது என்றும், பால் வாங்குவதை நிறுத்தி விடுவதென்றும் முடிவெடுத்திருக்கிறோம். எங்கள் துணிகளை நாங்களே துவைத்துக்கொள்கிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார் சாஸ்திரி.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்காக ரஷ்ய அதிபர் கோசிஜினின் அழைப்பை ஏற்று பிரதமர் சாஸ்திரி தாஷ்கண்ட் புறப்படுவதற்கு முதல் நாள், காங்கிரஸ் தலைவர் கமலபதி திரிபாதியுடன் பேசிக்கொண்டு இருந்தார். ''அங்கே குளிரைச் சமாளிக்க நீங்கள் கம்பளி ஆடைகளைத் தயார் செய்துகொண்டீர்களா?'' என்று திரிபாதி கேட்க, ''எப்போதும் அணியும் வேட்டியே எனக்குப் போதும். கால்களுக்கு மட்டும் கம்பளி உறைகள் வாங்கியிருக்கிறேன். அதற்கு மேல் செலவழிக்க இந்த ஏழைக்குத் தாங்காது!'' என்றார் சாஸ்திரி.

தாஷ்கண்டில் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானுடன் சேர்ந்து கையொப்பமிட்ட சாஸ்திரி, அன்றிரவே மாரடைப்பால் மரணமடைந்தார். அவர் பிரதமராக இருந்தபோது, அவருடைய குடும்பம் தவணைமுறையில் பணம் செலுத்தி ஒரு சிறிய காரை வாங்கியது. சாஸ்திரியின் மறைவுக்குப் பின்பு பணம் கட்ட முடியாததால், கடன் கொடுத்த நிறுவனம் காரை திரும்ப எடுத்துக் கொண்டது. நம்புவதற்கு அரிய நல்வாழ்க்கையை நடத்தியவர் லால்பகதூர் சாஸ்திரி!

நெறி தவறாத வாழ்க்கையை ஒரு தவம்போல் நடத்தியவர் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய். அவர் பிரிக்கப்படாத பம்பாய் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது, அவருடைய மகள் இந்து, மருத்துவக் கல்லூரியில் இறுதித் தேர்வு எழுதினாள். முதல் வகுப்பில் தேறவேண்டியவள் தேர்வில் தவறிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. சக மாணவிகளால் இதை நம்ப முடியவில்லை. தேர்வுத் தாளின் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும்படி அவர்கள் இந்துவை வற்புறுத்தினர். மகள், தந்தையின் அனுமதி கேட்டபோது கிடைக்கவில்லை.

'மறுமதிப்பீடு செய்து, திருத்திய ஆசிரியரின் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, உரிய மதிப்பெண்களைப் பெற்று நீ தேர்ச்சி யடைந்தாலும், நான் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாகவே உலகம்

பழி சொல்லும். நீ அடுத்த தேர்வுக்கு உன்னைச் சிறப்பாகத் தயாரித்துக் கொள்வதே நல்லது' என்று தேசாய் சொன்னதும், மனமுடைந்த இந்து தற்கொலை செய்துகொண்டாள். கீதையின் பாதையில் வாழ்க்கையை வகுத்துக் கொண்ட தேசாய், மகளின் இழப்பை மௌனமாகத் தாங்கிக்கொண்டார்.

பம்பாய் முதல்வராக, பாரதத்தின் நிதியமைச்சராக, பிரதமராகப் பணியாற்றிய தேசாய், தன் நெடிய வாழ்வின் இறுதி நாட்களில் பலர் வாழும் அடுக்குமாடிக் கட்டடத்தில் வாடகை வீட்டில் காலம் கழித்தார். வீட்டின் உரிமையாளர் தொடுத்த வழக்கில், தேசாய் குடும்பம் வெளியேற வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதிர்ச்சியிலும் அவமானத்திலும் உறைந்துபோன மொரார்ஜியின் மருமகள் மனநிலை பாதிக்கப்பட்டு, மாடியிலிருந்து கீழே விழுந்து மரணத்தைத் தழுவிக்கொண்டார். இந்தியப் பிரதமராக இருந்தவருக்குச் சொந்தமாக ஒரு வீடு இல்லை என்பது இதிகாசச் செய்தியன்று. கண் முன்னே நாம் கண்ட நிஜம்!



இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரல், வங்கத்தின் ஆளுநர், நேருவின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சர், வெள்ளையர் ஆட்சியில் சென்னை மாநிலப் பிரிமியர், தமிழகத்தின் முதல்வர் என்று பல பதவிகளுக்குப் பெருமை சேர்த்த ராஜாஜி, ஊழலின் நிழல்கூட தன் மீது படிந்துவிடாமல் பரிபாலனம் செய்தவர். ஆட்சிக்கும், ஆளுங்கட்சிக்கும் இடையில் இலக்குவன் கோடு கிழித்து, கதர்

வேட்டிகள் கோட்டைக்குள் நுழைந்துவிடாதபடி சலுகைச் சாளரங்களை இழுத்துச் சாத்தியவர்.



மேற்கு வங்கத்தின் ஆளுநர் பொறுப்பிலிருந்து விடைபெற்ற போது 12 கண்ணாடி பீரோக்கள் செய்து, அவற்றில் தனக்கு வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் அனைத்தையும் வைத்து அரசிடம் ஒப்படைத்தவர் ராஜாஜி. 'உங்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களை நீங்கள் ஏற்றாக வேண்டும்' என்று அரசு தரப்பில் வேண்டியபோதும், முற்றாக மறுத்துவிட்ட மூதறிஞரிடம், தந்தத்தாலான கைத்தடியையாவது எடுத்துச்செல்ல வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ராஜாஜி சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. இன்னும் கொல்கத்தா ராஜ்பவனில் அந்தக் கைத்தடி அரசியல் நேர்மைக்கு ஓர் அழகிய சாட்சியாகக் காட்சி தருகிறது.

ராமாயணத்து ஜனகரைப் போல் பற்றற்ற மனிதராக முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருந்தவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். 'சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வரும் சிபாரிசுகளைத் தள்ளிவிட்டு, மக்கள் குறைகளை நீங்களே கேட்டு நிவர்த்திக்க வேண்டும். சரியென்று நினைப்பதைச் செய்யுங்கள். தூய்மையான நிர்வாகத்துக்கு நீங்களே பொறுப்பு' என்று மாவட்ட கலெக்டர்களுக்கும் காவல்துறை அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பிய அதிசய முதல்வர் அவர். ஆத்திரம் அடைந்த ஆளுங்கட்சி உறுப்பினர்கள் முதல்வர் பதவியிலிருந்து அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.



காந்தி யுகத்தின் கடைசிப் பொழுதுகளில் நேர்மையின் நிறம் மாறத் தொடங்கியது. ஒரு முறை ரயில்வே இலாகாவில் சரக்கு வேகன்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. தகுதி அடிப்படையில் முன்னுரிமை வழங்க அமைச்சகம் முடிவெடுத்தது. ஒரு தனியார் நிறுவனம் 50 வேகன்களுக்கு அமைச்சரிடம் 50 ஆயிரம் ரூபாய் லஞ்சம் தர இசைந்தது. முன்பணமாக 22 ஆயிரம் ரூபாய் கைமாறியது. கோப்பில் ‘Approved’ என்று எழுதிக் கையொப்பமிட்டார் அமைச்சர். கையெழுத்தானதை அறிந்த நிறுவனம், மீதிப் பணம் தராமல் போக்குக் காட்டியது. அமைச்சர் விடுவாரா? பாடம் புகட்ட முடிவெடுத்தார். ‘Approved’-க்கு முன்னால் ‘Not’ என்று எழுதி வைத்தார். செய்தியறிந்த நிறுவனம் அலறியடித்து வந்து, அமைச்சரிடம் மீதிப் பணம் தந்தது. மகிழ்ச்சியடைந்த அமைச்சர், அடித்தல் திருத்தலின்றி ‘Not’-உடன் ‘e’ சேர்த்தார். அவ்வளவுதான். ‘Note: Approved’ என்றானது. இதற்குப் பெயர்தான் அறிவார்ந்த ஊழல்.

நேர்மைக்கு மாறாகவும் அறத்துக்குப் புறம்பாகவும் பொதுச்சொத்திலிருந்து ஒரு செப்புக்காசைக்கூடத் தன் சுயதேவைக்காகக் கள்ளக் கணக்கில் சேமிக்காத நல்ல மனிதர்கள் நடை பழகிய அரசியல் உலகம் மெள்ள மெள்ள இன்று நாகரிகத் திருடர்களின் சூதாட்டக் களமாகச் சீரழிந்துவிட்டது. மேய்ப்பவர்களே மேய்பவர்களாக மாறியதால், ஆடுகளின் கூடாரத்தில் அன்றாடம் மரண ஓலம்.



நேர்மைதான் மனிதனை எப்போதும் தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும். கண்ணகியின் கற்பு பாண்டியனைக் காலில் விழச் செய்தது. சீதையின் கற்பு ராவணனைத் துரும்பினும் கீழாய் மதிக்க வைத்தது. நம் ஒவ்வொருவருக்கும் நேர்மைதான் கற்பு!

நெருப்பைக் கரையான் அரிக்க முடியாததுபோல் நேர்மையாளனைப் பழியும், பாவமும் நெருங்க முடியாது. ஒவ்வொரு தனி மனிதனும் நேர்மையுடன் நடந்தால், சமூகத்தின் பொதுவாழ்வும் தானாகவே தூய்மையுறும்!

# 14


# மன்னிப்பு

ஒரு துறவியும், அவருடைய சீடரும் தங்கள் தவச்சாலை நோக்கி நடந்தனர். ஒரு முரடன், அவர்கள் இருவரையும் வழிமறித்தான்.

"போலித் துறவிகள் இருவரும் எங்கே போகிறீர்கள்?'' என்று ஏளனம் பொங்கக் கேட்டான். துறவி பதிலேதும் சொல்லாமல் புன்முறுவல் பூத்தார்.

சீடர் சிரமப்பட்டுத் தன்னுள் வெடித்துக் கிளம்பிய சினத்தை அடக்கிக்கொண்டார். வம்புக்கு வந்த வழிப் போக்கன், அவர்களை எளிதில் விடுவதாக இல்லை!


"ஊரை ஏமாற்ற இந்தக் காவி உடை மிகவும் வசதியாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்வது உண்மைதானா?'' என்றான்.



துறவியின் முகத்தை அலங்கரித்த புன்முறுவல் மாறவில்லை. ஆனால், சீடருக்கோ மனம் தாளவில்லை. வசைபாடிய வழிப்போக்கனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

அக்கணமே துறவி, சீடரை விட்டு விலகி விரைவாக நடந்தார். துறவியின் வேகத்துக்குக் காரணம் விளங்காத சீடர், ஓடிச்சென்று அவர்

பாதம் பணிந்து, "ஐயனே! என்னை விட்டு விலகிச் செல்ல, நான் இழைத்த குற்றம் என்ன?'' என்று விம்மியபடி கேட்டார்.



"மகனே! நீ சினத்தின் பிடியில் சிக்காத வரை, உன்னுள் வானத்துத் தேவதைகள் வாசம் செய்தன. அதனால்தான் நான் உன்னுடன் நெருங்கியிருந்தேன். நீ கோபமுற்று, வன்மையான வார்த்தைகளால் வசைபாடி, உன் உடல் வலிமையைக் காட்டிய கணத்தில், உன் ஆன்மாவை அசுரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். எனவேதான், உன்னிடமிருந்து நான் விலக நேர்ந்தது!'' என்று விளக்கிய துறவி, அவர் வழியில் தனியே நடந்தார்.

'கர்வம் உள்ளவன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். கோபக்காரன் தன்னையே இழக்கிறான்!' என்பது இந்த மண்ணின் முதுமொழி.

'காமம், கோபம், பேராசை மூன்றும் நரகத்தின் முக்கிய வாசல்கள். இவைதான் நம் ஆன்மாவைக் களங்கப்படுத்தும் மோசமான எதிரிகள்!' என்கிறது விதுர நீதி.

"பாவ நோக்குடன் ஒருவன் எதைப் பேசினாலும், செய்தாலும், வண்டியில் பூட்டிய எருது பாரம் சுமப்பது போல, வலியைச் சுமக்க நேரும். தூய நோக்குடன் எதைச் சொன்னாலும், செய்தாலும், சூரிய

வெளிச்சத்தைத் தொடரும் நிழல் போல மகிழ்ச்சி தொடரும்!'' என்றார் புத்தர்.

கோபம் எப்போதும் பகைமைக்குப் பால் வார்க்கும். கோபம், மனிதன் தனக்குத்தானே வழங்கிக்கொள்ளும் சாபம். கோபத்தின் ஏணியில் ஏறி, எவனும் ஆன்ம கோபுரத்தை அடைந்து விட முடியாது.

"பகையைக்கொண்டு பகையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. அன்பைக்கொண்டுதான் பகையை முடிவுக்குக் கொண்டுவர முடியும்'' என்றார் புத்தர் பெருமான். அவருடைய வாழ்வில் ஒரு செய்தி, நம் சிந்தனையைச் செதுக்கக் கூடியது; சினத்தைப் போக்க வல்லது.

பூரண அமைதியும், பெருங்கருணையும் விழிகளில் வழிய, புத்தர்பிரான் வீற்றிருந்தார். பூர்மா என்ற துறவி அங்கு வந்தார். ஸ்ரோண பரந்தகர்கள் வாழும் பகுதியில், பௌத்த தர்மத்தைப் போதிக்க விடைபெறுவதாகக் கூறினார்.

"நீ தர்மத்தைப் போதிக்கும்போது, அந்தப் பகுதி மக்கள் உன்னை நிந்தனை செய்து, வசைமாரி பொழிந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டார் புத்தர். "இவர்கள் நல்லவர்கள். கை நீட்டிக் காயப்படுத்தாமல், வாயளவில் நிற்கிறார்களே என்று மகிழ்வேன்!'' என்றார் பூர்மா.

"வாய் திறந்து வசைபாடியவர்கள், கை நீட்டி அடிக்கவும் செய்யலாம். அப்போது உன் நிலை என்னவாக இருக்கும்?'' என்று கௌதமர் அடுத்த கேள்வியை எழுப்பினார். "இவர்கள்தான் எவ்வளவு நல்லவர்கள்! ஆயுதங்களால் தாக்காமல், வெறும் கைகளால் அடிப்பதோடு நின்றுவிட்டார்களே என அகம் மகிழ்வேன்!'' என்றார் துறவி.

"சரி, ஆயுதங்களால் அவர்கள் தாக்கத் தொடங்கினால், நீ எப்படி எதிர்கொள்வாய்?'' என்று பெருமான் கேட்டதும், "இவர்கள் மிக மிக நல்லவர்கள். பிறவித் துன்பத்திலிருந்து விடுபட, ஒவ்வொருவரும் எந்தெந்த வழியிலோ முயலும்போது, எனக்கு இவர்கள் எளிதாக முக்திக்கு வழி செய்துவிட்டார்களே என்று இதயம் மகிழ்ந்து, இருகரம் கூப்பி வாழ்த்துவேன்!'' என்றார் துறவி.

"பூர்மா! உனக்குப் புத்த ஞானம் கனிந்துவிட்டது. போய் வா!'' என்றார் புத்தர்.

கோபமும், பழிவாங்கும் எண்ணமும் அரக்கப் பண்புகள். மன்னிக்கும் மனோபாவமே தெய்வத்தின் சீதனம். விலங்கு அடிக்கும், தெய்வம்


அணைக்கும். மனிதன் நினைத்த கணமே விலங்காக மாற முடியும். காரணம், அவனுக்கும் விலங்குக்கும் உள்ள இடைவெளி நூலிழையே!

அவன் தெய்வமாகப் பரிணமிக்க, மனம் பண்பட வேண்டும். அதற்கு இடையறாத முயற்சியும், பயிற்சியும் அவசியம். மன்னிக்கும் மனம் இருந்ததால்தான், புத்தரும், ஏசுவும், நபிகளும், காந்தியும் மனிதர்களில் புனிதர்களாகப் போற்றப்படுகின்றனர்.

ஏசு தன் சீடர்களுடன் கடைசி விருந்தை ஏற்கும்போது, அவர்களின் கால்களைக் கழுவி தனது ஆடையினால் துடைத்தார். தன் சீடர்களில் ஒருவனான யூதாஸ் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்று உணர்ந்த நிலையிலும், 'உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்' என்று மொழிந்தவர், வெறுப்பை வெளிப்படுத்தாமல், துரோகி யூதாஸின் பாதங்களையும் தன் பரிசுத்தமான கைகளால் கழுவித் துடைத்தார்.

அவருடைய தலையில் முள் முடியை வைத்து, அவர் மேல் காறி உமிழ்ந்து, உடுத்தியிருந்த மேலங்கியை விலக்கி, கோலினால் சிரசில் அடித்து, கசப்புக் கலந்த காடியைக் குடிக்கக் கொடுத்து, இரண்டு கள்வர்கள் அறையப்பட்ட சிலுவைகளுக்கு நடுவில் அவரைச் சிலுவையில் அறைந்து,''நீ தேவனுடைய குமாரன் என்பது உண்மையானால், சிலுவையிலிருந்து இறங்கி வா!'' என்று ஏளனம் செய்தவர்கள் மீதும் கர்த்தர் கோபம் கொள்ளவில்லை.

'பிதாவே! தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கும் இவர்களை மன்னியும்!' என்றுதான் மனமுருகி வேண்டினார், அந்தத் தேவ மைந்தர்.




தன்னை வாழவிடாமல் விரட்டியடித்த மெக்கா நகருக்குள், எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு பத்தாயிரம் முஸ்லிம் படைவீரர்கள் சூழ நபிகளார் வந்தார். அவருக்கு எழுத்தில் வடிக்க முடியாத எண்ணற்ற இன்னல்கள் இழைத்த மெக்காவின் மக்கள், தங்களுக்கு என்ன நேருமோ என்று நடுங்கியபடி நின்றனர்.

மெக்காவில் பெருமானார் இருந்தபோது, அவர் செல்லும் வழியில் கல்லும் முள்ளும் பரப்பியவர்கள், அவர் தலையில் செத்த ஒட்டகத்தின் குடலையும் குப்பையையும் வீசியவர்கள், பித்தன் என்று ஏசியவர்கள், அவருடைய உற்றார், உறவினர்களைக் கொலைவாளால் கொன்று குவித்தவர்கள், அவரையே கொல்ல முயன்றவர்கள் கூடியிருந்த கூட்டத்தில், 'இறைவன் நமக்கு வெற்றியை வழங்கியிருக்கும் இந்த வேளையில், விரோதங்களில் இருந்து விடுபடுங்கள். மெக்காவாசிகள் அளித்த துன்பங்களையும், துயரங்களையும் மன்னித்து மறந்துவிடுங்கள். அனைவருக்கும் பொது மன்னிப்பை வழங்குகிறேன்!' என்றார் நபிகளார்.

அண்ணலாரின் திருமகள் ஜைனப், மெக்காவிலிருந்து மதீனா செல்ல ஒட்டகத்தில் ஏறியபோது, அவரை ஹப்பார் என்பவன் ஈட்டியால் தாக்கினான். அதனால் கருச்சிதைவு ஏற்பட்டு, மதீனா சென்றடைந்த சில நாட்களில் ஜைனப் மரணமடைந்தார்.

மெக்காவில் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட செய்தி அறிந்து, அயலகத்தில் மறைந்திருந்த ஹப்பார் தாய் மண்ணுக்குத்

திரும்பி, நபிகளாரின் மன்னிப்பை வேண்டினான். தன் அன்புக்குரிய மகளின் மரணத்துக்குக் காரணமானவன் அவன் என்று தெரிந்தும், 'ஹப்பார்! ஆண்டவன் உன்னை மன்னிப்பார்!' என்றார் அந்த அருளாளர்.



'உலகத்தின் முதல் சிந்தனையாளர்' என்ற சிறப்புக்குரிய சாக்ரடீஸ், ஏசுவுக்கு முன்பே தன்னுடைய லட்சியத்துக்காக இன்னுயிரைப் பலி கொடுத்தவர். மூட நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்ற முதல் புரட்சியாளர் அவர்.

ஓர் எளிய சிற்பிக்கும், ஏழை மருத்துவச்சிக்கும் மகனாகப் பிறந்த சாக்ரடீஸ், கிரேக்கத்தின் பெருமைக்கு உரிய சிந்தனையாளராக உயர்ந்தார். சாக்ரடீஸின் செல்வாக்கைக் கண்டு மனம் வெதும்பிய சிலர் சுமத்திய வீண்பழியின் விளைவாக, அவர் விஷம் அருந்தி உயிர் துறக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

பழைமைவாதிகளும் மதவாதிகளும் ஆட்சியாளர்களும் சேர்ந்து நடத்திய சதி நாடகம் அது. சிறையிலிருந்து சாக்ரடீஸை விடுவித்து, வேறு நாட்டுக்கு அனுப்பி வைக்க, அவருடைய நண்பர்களும் மாணவர்களும் முயன்றபோது, அவர் அதற்கு இணங்கவில்லை!

'நாட்டின் சட்டத்துக்குத் தலை வணங்குவதுதான் நல்ல குடிமகனின் நற்பண்பாகும். மரண தண்டனையை நான் மனம் விரும்பி ஏற்கிறேன்.

எவரிடத்தும் எனக்குக் கோபமில்லை. உயிர் போகும்வரை, எத்தனை முறை வேண்டுமானாலும் விஷம் குடிக்க நான் தயாராக இருக்கிறேன்' என்ற சாக்ரடீஸ், தன் மனைவி சாந்திப்பி, நண்பன் கிரிட்டோ ஆகியோரிடம் ஆறுதலாகப் பேசிக்கொண்டு இருந்தபோது நச்சுக் கோப்பை வந்து சேர்ந்தது.

கோப்பையைக் கொண்டு வந்தவனைக்கூட, 'நலமாக இருப்பாயாக!' என்று வாழ்த்திய பின்பே, சாக்ரடீஸ் 'ஹெம்லாக்' என்ற அந்தக் கொடிய விஷத்தை முகமலர்ச்சியுடன் அருந்தி உயிர் துறந்தார்.

தவறுவது மனித இயல்பு. மன்னிப்பது தெய்வப் பண்பு. கோபம், அரக்க மனத்தின் ஆயுதம். அதற்கு அழிக்கத்தான் தெரியும். சினம், வாழ்க்கையைச் சிக்கலாக்கும்; உறவுகளைச் சிதைக்கும்; அமைதியைக் குலைக்கும்; ஆயுளைக் குறைக்கும்.

சினத்தின்வயப்படும்போது, மனம் சமநிலை இழந்துவிடும். சமநிலை இழந்தவன் வாழ்க்கை, எழ முடியாத பள்ளத்தில் சரிந்துவிடும். சினம் கொண்ட நெஞ்சில், சிந்தனைத் தெளிவு இருக்காது.

'தான்' என்னும் அகந்தை உணர்வு, எங்கே வேர் பிடித்து விருட்சமாக வளர்ந்து விடுகிறதோ, அங்கேதான் கோபம் என்னும் விஷக்கனி காய்த்துக் குலுங்கும்.

கோப நெருப்பு, அடுத்தவனைவிட தன்னையே அதிகமாக எரித்துச் சாம்பலாக்கும். அதனால்தான் பாரதி, 'கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம், கொடுங்கோபம் பேரதிர்ச்சி!' என்று பாடினான்.

கர்ணன் கவசகுண்டலங்களுடன் பிறந்தது போல், நாம் கோபத்துடன் பிறந்திருக்கிறோம். 'கோபம் உள்ள இடத்தில் குணமிருக்கும்' என்று யாரோ சொன்னதைச் சொல்லிச்சொல்லியே, நம்முடைய கோபத்தை நாம் நியாயப் படுத்துகிறோம்.

குணம் உள்ளவனாக இருப்பதற்குக் கோபம்தான் முதல் முட்டுக்கட்டை. உள்ளுக்குள் அடக்கிவைத்திருக்கும் ஊமைக் கோபத்துக்கு ஒரு வடிகால் தேவைப்படும்போது, யாராவது ஒருவர் அதற்குப் பலியாக நேருகிறது.

'ரௌத்ரம் பழகு!' என்று பாரதி சொன்னதை நாம் தவறாகப் புரிந்துகொண்டோம். சமூகத் தீமைகளிடம் நாம் சமரசம் செய்துகொண்டு, பலவீனர்களிடம் நம் கோபத்தைக் காட்டுகிறோம்.

இயலாமையின் வெளிப்பாடுதான் நம் கோபம். எந்தக் கோபமும் நம் முட்டாள்தனத்தில் பிறந்து, கழிவிரக்கத்தில் முடிகிறது.

'ஆசை, கோபம், கனவு கொள்பவன், பேசத் தெரிந்த மிருகம்... அன்பு, நன்றி, கருணை கொண்டவன், மனித வடிவில் தெய்வம்!' என்றார் கண்ணதாசன். அன்பும் கருணையும் நன்றி உணர்வும் பூத்துச் சொரியும் மனங்களில்தான் மன்னிக்கும் மனோபாவம் மணம் பரப்பும். அடுத்தவர் தவற்றை மன்னிப்பவன் எவனோ, அவனுடைய தவற்றை ஆண்டவன் மன்னிப்பான்.

ஒவ்வொரு மனிதனின் மனதிலும் மிருகமும் கடவுளும் கலவையாகக் காட்சி தரும். கோபம் என்ற மிருகத்தை வெளியேற்றிவிட்டு, கருணை என்ற கடவுளுக்கு அன்றாடம் ஆராதனை செய்தால், எது நமக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, நிச்சயம் அமைதியான வாழ்வு கிடைக்கும்.


சூரசம்ஹாரம் போல், இனி கோப சம்ஹாரம் செய்வோம்!

# 15

# அடிக்கற்கள்

விண்ணைத் தொடுவது போல் உயர்ந்து நிற்கும் கோபுரங்களைப் பார்த்து விழிகள் வியப்பில் விரிய, பிரமிப்பும் பக்தியும் பிரவாகமாக இதயத்தில் பொங்கிப் பெருக, கைகூப்பி வணங்கும் மனிதர்கள், அந்த அழகிய கோபுரத்தைத் தாங்குவதற்காக மண்ணில் மறைந்து நிற்கும் அடிக்கற்களை மறந்தும் நினைப்பதில்லை! விரிந்திருக்கும் கிளைகள் பரப்பும் மரத்தின் நிழலில் இளைப்பாறி, பழுத்திருக்கும் கனிகளைப் பறித்து உண்ணும் வழிப்போக்கர்கள் யாரும் அந்த மரத்தின் வேர்களுக்கு நன்றி சொல்வதில்லை.

அடிக்கற்கள் இல்லாமல் கோபுரங்கள் இல்லை. ஆணிவேர் இல்லாமல் மரங்கள் இல்லை. இந்த உண்மை தெரிந்திருந்தும், மனிதர்கள் அவற்றை ஆராதிப்பதில்லை!



எந்தக் கட்சிக்கும் தொண்டர்கள் தான் அடிக்கற்கள். அவர்கள் மட்டும் இல்லாவிடில், தலைவர்கள் அனைவருக்கும் முகம் இருக்கும்; முகவரி இருக்காது. போஸ்டர் ஒட்டவும், பொதுக்கூட்டம் போடவும், பதாகை தூக்கவும், புகழ் பாடவும் தங்கள் வியர்வையை, ரத்தத்தை, நேரத்தை, பணத்தைச் செலவழிக்கும் தொண்டர் எவரும் அமைச்சர் நாற்காலியில் அமர முடிந்ததாகத் தகவல் இல்லை.



'உழைக்கும் காளை மாடு கொல்லைப்புறத்தில்; குரைக்கும் நாய் பட்டுப் படுக்கையில்!' என்பதுதான் இன்று சமூக நீதி.

**1**919 - ஏப்ரல் 13... ஞாயிற்றுக்கிழமை. நான்கு பக்கம் மதிற்சுவரும், ஒரு குறுகிய வழியும் கொண்ட ஜாலியன் வாலாபாக் திறந்தவெளி மைதானத்தில், ரௌலட் சட்டத்தை எதிர்த்து அமைதியாக ஒரு பொதுக் கூட்டம் நடந்தது.

திடீரென்று, கூட்டத்தில் ஜெனரல் டயர் தலைமையில் நுழைந்த பிரிட்டிஷ் காவல்படை, துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டது. 1600 முறை குண்டுச் சத்தம். 379 பேர் பலி. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம். நாட்டின் ஆன்மாவை நடுங்கச் செய்த இந்தச் சம்பவத்தால் மனம் உடைந்துபோனான் பகத்சிங்!

லாகூர் தேசியக் கல்லூரி மாணவனாக இருந்தபோது, புரட்சிகரமான சிந்தனைப் போக்கு உள்ள நண்பர்கள் சிலருடன் 'நவ ஜவான் பாரத்

சபா' என்னும் அமைப்பைத் தொடங்கினான் பகத்சிங். காந்தியக் கொள்கைகளுக்கு எதிராக ஒரு புரட்சி இயக்கம் கட்டுவதற்கு முயன்று, சிதறிக்கிடந்த புரட்சியாளர்களை ஒன்று திரட்டி, சந்திர சேகர் ஆசாத் தலைமையில் 'இந்துஸ்தான் சோஷலிஸ்ட் ஜனநாயக சங்கம்' உருவாக்கினான். விவசாயிகள்- தொழிலாளர்கள் இணைப்பில் ஒரு புதிய சமத்துவ சமுதாயத்தை அமைப்பதுதான் பகத்சிங்கின் ஒரே லட்சியம்.

1928 - அக்டோபர் 30 அன்று சைமன் கமிஷன் லாகூர் வந்தபோது, அதை எதிர்த்து மாபெரும் மக்கள் கூட்டம் லாலா லஜபதிராய் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மிருகத்தனமான போலீஸ் தாக்குதலில் லஜபதிராய் படுகாயமுற்று, பதினேழு நாட்களுக்குப் பின்பு மண்ணை விட்டு மறைந்தார்.

'பாரதத் தாய்க்கு நேர்ந்துவிட்ட இந்தக் களங்கம் துடைக்கப்பட வேண்டும்' என்று பகத்சிங் துடித்தான். பஞ்சாப் சிங்கம் கண் மூடி முப்பது நாள் முடிவதற்குள், லாகூர் தலைமைக் காவல் நிலையத்திலிருந்து வெளியே வந்த டி.எஸ்.பி. சாண்டர்ஸை பகத்சிங்கும் அவன் தோழன் ராஜகுருவும் சுட்டு வீழ்த்தினர். அவர்களைப் பிடிக்க முயன்ற கான்சிங் என்ற தலைமைக் காவலரை ஆசாத்தின் துப்பாக்கி தீர்த்துக் கட்டியது.

இதற்கு நான்கு மாதங்களுக்குப் பின், நாடாளுமன்றத்தில் தொழிலாளர்கள் உரிமைகளைப் பறிக்கும் தொழில் தகராறு மசோதா, பாதுகாப்பு மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது, பகத்சிங்கும் பட்டுகேஸ்வர தத்தும் பார்வையாளர்கள் பகுதியிலிருந்து ஆளில்லாத இடத்தில் வெடிகுண்டு வீசினர். 'செவிடாகிப் போன அரசுக்கு எங்கள் குரல் கேட்கவேண்டும் என்பதைத் தவிர, யாருடைய உயிரையும் பறிக்கும் எண்ணம் இல்லை' என்ற அறிவிப்பைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை வீசிவிட்டு, 'தொழிலாளர் வர்க்கம் வாழ்க! ஏகாதிபத்தியம் ஒழிக! புரட்சி ஓங்குக!' என்று முழங்கினர். பகத்சிங்கையும் புரட்சியாளர்கள் பலரையும் அரசு கைது செய்து சிறையில் தள்ளியது.

1931 - மார்ச் 23. இந்திய விடுதலை வரலாற்றில் மறக்க முடியாத துக்க நாள். அன்றுதான் புரட்சிக் கொடி பிடித்து, லட்சியப் பயணம் நடத்திய பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூவரும் மாலைப்பொழுதில் லாகூர் சிறையில் தூக்குக்கயிற்றில் மரணத்தை முத்தமிட்டனர். மூவரின் உடல்களும் சிறையின் பின்வாசல் வழியாக, ரகசியமாக வெளியேற்றப்பட்டன. ஊருக்கும் யாருக்கும் தெரியாமல், அவை அரைகுறையாக எரிக்கப்பட்டு, ஆற்றில் வீசப்பட்டன.

*தூக்குமேடை உறுதியான பின்பு தோழர் ஜெயதேவ் கபூர், பகத்சிங்கிடம் ''சர்தார்! நீ மரணத்தை நெருங்கிவிட்டதற்காக வருத்தப்படவில்லையா?'' என்று கேட்டார். பகத்சிங் கம்பீரம் கலையாமல் உரக்கச் சிரித்து, ''நான் புரட்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கும்போது, 'இன்குலாப் ஜிந்தாபாத்' (புரட்சி ஓங்குக) என்னும் முழக்கத்தை நாடு முழுவதும் பரப்புவதற்கு உயிரை அர்ப்பணிக்க நினைத்தேன். இன்று, இந்தச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபடி, கோடிக்கணக்கான மக்கள் அந்தக் கோஷமிடுவதை என்னால் கேட்க முடிகிறது. இவ்வளவு சிறிய வாழ்க்கையில், இதைவிட வேறென்ன வேண்டும்?'' என்றான்.*

*மரணத்தைச் சந்திக்கப் புறப்பட்ட பகத்சிங், அங்கு நின்ற வெள்ளைக்கார நீதிபதியிடம், ''நீங்கள் மிகவும் கொடுத்து வைத்த மனிதர். ஓர் இந்தியப் புரட்சியாளன், தன் மகத்தான லட்சியத்துக்காகப் புன்முறுவல் பூத்தபடி உயிரை அர்ப்பணிக்கப் போகும் அரிய காட்சியைக் காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது!'' என்றான். 'இப்படியொரு லட்சியவாதியா?' என்று நீதிபதி வியந்தபடி நின்றார்.*


*ஒரு கிரிமினல் குற்றவாளியைப் போல் தூக்கில் தொங்கவிடாமல், ராணுவத்தை நிறுத்தித் துப்பாக்கியால் சுடும்படி கேட்டு, ஆளுநருக்குக் கடிதம் எழுதியவன் பகத்சிங்.*

*பகத்சிங்கின் தோழர்களும் தேசத்துக்காக உயிரைத் தருவதில் போட்டியிட்டவர்கள்தான்!*

*ராஜகுரு... விடுதலைப் போரில் பகத்சிங்கிற்கு முன்பே உயிரை அர்பணிக்கத் துடித்தவன். ஒவ்வொரு புரட்சி நடவடிக்கையிலும் தன் பங்களிப்பு இருக்கவேண்டுமென்று போராடியவன். சாண்டர்சை பகத்சிங் சுடுவதற்கு முன்பே சுட்டவன். நாடாளுமன்ற வெடிகுண்டு வீச்சிலும் தான் இடம்பெறவேண்டுமென்று விரும்பியவன். கொஞ்சமும் கலங்காமல் தூக்குத் தண்டனையை மகிழ்ச்சியுடனும் கம்பீரத்துடனும் ஏற்றவன். சிறுவயதிலேயே பெற்றோரின் பாசத்தை இழந்து, வீட்டை விட்டு வெளியேறி இரவும் பகலும் பல மைல்கள் நடந்து, நாசிக் நகரை அடைந்து அங்கிருந்து காசி சென்றவன். இளமை முழுவதும் வறுமையில் வாடியவன். 'வறுமை ஒரு சாபக்கேடு. அன்பின்மையே நரகம். இது என் 22 வயது வாழ்வின் அனுபவம்' என்றவன். 'புரட்சியாளனுக்கு மரணம் ஒரு வரப்பிரசாதம். இந்த அழகான இறப்புக்கு இதயம் வருந்துபவன் முட்டாளாகத்தான் இருக்க முடியும்' என்று சொல்லி மரணப்*

பொழுதிலும் மனம் மலர்ந்து சிரித்தவன்.

சுகதேவ்... பகத்சிங்கிடம் அளவற்ற அன்பை பொழிந்தவன். புரட்சி இயக்கத்தை நடத்துவதில் தேர்ச்சி பெற்றவன். சோஷலிசம் பற்றி அதிகமாய் சிந்தித்தவன். வாழ்வின் கடைசி நொடிவரை மரணபயம் அறியாதவன். தூக்கில் தொங்குவதற்கு முன்பு மகாத்மா காந்திக்கு வரைந்த கடிதத்தில், ‘இந்திய மண்ணில் சோஷலிச ஜனநாயக அமைப்பை நிறுவுவதுதான் எங்கள் ஒரே லட்சியம். புரட்சியாளர்கள் வெறும் கற்பனையாளர்கள், அழிவுக் காரியங்களில் மட்டுமே மகிழ்ச்சி காண்பவர்கள் என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நம்புகிறேன். எங்கள் தூக்குத் தண்டனையை ரத்துச் செய்வதைவிட தூக்கில் இடுவதினாலேயே நாட்டுக்கு அதிக நன்மை விளையும்’ என்று எழுதியவன்.



பகத்சிங்

சந்திரசேகர ஆசாத்...மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்தில் 1921-ல் ஈடுபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது பதினைந்தே

வயது நிரம்பிய சிறுவன். 'உன் பெயர் என்ன?' என்று நீதிபதி கேட்டபோது, 'சுதந்திரம்' என்றும், 'எங்கே வீடு?' என்றபோது, 'சிறைச் சாலை' என்றும் துணிவுடன் பதில் தந்து, 15 கசையடிகளைத் தண்டனையாகப் பெற்றவன். ஒவ்வொரு கசையடிக்கும் 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று முழக்கமிட்டவன்.

யதீந்திரநாத் தாஸ்... வங்கப் புரட்சியாளன். லாகூர் சதிவழக்கில் சிறை புகுந்து, அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக 63 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தவன். கடைசிவரை எதையும் ஏற்க மறுத்தவனைப் பத்து வார்டர்கள் பலவந்தமாகப் பிடித்து, நெஞ்சில் கால் வைத்து, மூக்குத் துவாரம் வழியாக ரப்பர் குழாய் மூலம் வயிற்றில் செலுத்திய பால், சுவாசப் பைக்குள் சென்று மூச்சுத் திணறி, அங்குலம் அங்குலமாக மரணத்தை அடைந்தவன்.

பகத்சிங்கும் அவருடைய தோழர்களும் மரணத்தைத் தழுவியபோது, 25 வயதைக்கூட எட்டிப் பிடிக்கவில்லை. அகிம்சை ஆயுதத்தை மறுதலித்து, வன்முறை சித்தாந்தத்தை வளர்த்து எடுத்ததால் விளைந்த விபரீதம் இது. சுதந்திரப் போரை வேகப்படுத்தும் முயற்சியில் தங்கள் வாழ்க்கையை விரும்பியே வேகமாக முடித்துக்கொண்ட வீரர்கள் இவர்கள். இந்த லட்சியவாதிகளின் தியாகத்துக்கு, இவர்களின் வன்முறையை ஏற்காத மகாத்மாவாலும் தலை வணங்காமல் இருக்க முடியவில்லை. 'அரசியல் வன்முறையை எந்த வடிவத்திலும் ஏற்க மறுக்கும் காங்கிரஸ் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் செய்திருக்கும் தியாகத்தையும் அவர்களுடைய வீரத்தையும் வியந்து பாராட்டுகிறது' என்று காந்தியத் தலைமை தீர்மானம் நிறைவேற்றியது.

ஆனாலும், காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுமுன், காந்திஜியால் பகத்சிங்கைக் காப்பாற்ற முடியவில்லை என்று நாடு முழுவதும் இளைஞர்கள் கோபம் கொண்டனர். கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற அண்ணலுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டினர்.

மகாத்மா, அவர்களிடம் வன்முறையின் பலவீனத்தையும் அகிம்சையின் ஆற்றலையும் விளக்கினார். வன்முறை மூலம் ஏற்படும் சமூக மாற்றங்களைத் தொடர்ந்து பராமரிக்க வன்முறையே அவசியமாகிறது. எனவேதான், 'நிரந்தர நன்மைகளை வன்முறை ஒருபோதும் வழங்கமுடியாது' என்றார்.

‘புரட்சியின் பலிபீடத்தில் ரத்தம் சிந்துவது தவிர்க்க முடியாதது’

என்ற வன்முறைச் சித்தாந்தத்துக்கு நாம் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

அதே சமயம், பகத்சிங் போன்ற இந்திய விடுதலை வரலாற்றில் இடம்பெற்ற மற்றும் இடம்பெறாத எண்ணற்ற இளைஞர்களின் தியாக வாழ்க்கைதான், நம் சுதந்திர மாளிகையின் அடிக்கல். தங்களை முற்றாக எரித்துக்கொண்டு, அவர்கள் வழங்கிய வெளிச்சத்தில்தான் தேசத்தின் அடிமை இருள் விலகியது. அதை நாம் மறந்துவிடக்கூடாது. கோபுரங்களைக் கொண்டாடுபவர்கள், அடிக்கற்களை அவமதிக்கக்கூடாது.

இதோ, சர்தார் பகத்சிங் சொல்வதைச் செவிமடுப்போம்... 'வைரங்கள் மாளிகையின் அழகை அதிகரிக்கலாம். காண்பவரை வியப்பில் ஆழ்த்தலாம். ஆனால், நிறுத்தி வைக்க முடியாது. பல நூற்றாண்டுகள் தம் தோள்களில் சுமந்திருக்க முடியாது. நாம் இதுவரை வைரங்களைத் திரட்டினோம். அடிக்கற்களைத் திரட்டவே இல்லை. அதனால்தான் நாம் இத்தனை மாபெரும் தியாகங்கள் புரிந்தும், இன்னும் மாளிகையைக் கட்ட ஆரம்பிக்கவில்லை. இன்று நமக்குத் தேவை அடிக்கற்களே!'

அப்துல் ரகுமான் அழகாகச் சொல்வார்... 'ஏற்றப்பட்ட விளக்கைவிட ஏற்றிவைத்த தீக்குச்சியே உயர்வானது!'

# 16

# ஊக்கம்

*<u>ஊ</u>க்கம் என்பது உள்மனத்தின் உந்துதல். ஊக்கத்தின் அளவுதான் ஒவ்வொரு மனினுடைய உயர்வின் அடித்தளம். ஊக்கம் இல்லாத வாழ்வில் சாதனைகளும் இல்லை; சரித்திரமும் இல்லை.*

*முன்னேற்றமே மனித வாழ்வின் லட்சியம். முன்னேற்றத்துக்கு அடிப்படையான ஊக்கம் மட்டுமே மனிதனின் நிலையான உடைமை. 'நீரின் உயரத்துக்கேற்ப தாமரை மலர் உயர்வதுபோல், ஊக்கத்தின் அளவுக்கேற்ப வாழ்க்கை உயரும்' என்கிறது வள்ளுவம்.*



*நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த மாபெரும் தத்துவ மேதை ஜே.கிருஷ்ணமூர்த்தி. ஒரு சமயம், அவருடைய உரை முடிந்ததும், கேள்வி கேட்க ஓர் இளைஞன் எழுந்து நின்றான். ''என் பெற்றோர் சொன்னபடி படித்தேன். அவர்கள் சொன்ன வேலையில் அமர்ந்தேன். அவர்கள் பார்த்துச் சொன்ன பெண்ணையே மணந்தேன். ஆக, மற்றவர் விருப்பப்படிதான் என் வாழ்க்கை நடக்கிறது. சின்னஞ்சிறு வயது முதல் சிறந்த ஓவியனாக வர வேண்டுமென்று நான் விரும்பினேன். இதுவரை என் விருப்பம் நிறைவேறவில்லை. இனியாவது நிறைவேற என்ன வழி?'' என்றான்.*



ஜே.கே. அந்த இளைஞனைப் பார்த்து, ''உண்பதற்கும் உறங்குவதற்கும் உன் பெற்றோரின் அனுமதியை நீ எதிர்பார்த்தது உண்டா? பசித்தபோது விரும்பியபடி உண்டவன், உறக்கம் வரும்போது யாரையும் கேட்காமல் உறங்கியவன்... ஓவியனாக வேண்டும் என்று உண்மையில் உனக்குள் உந்துதல் இருந்திருந்தால், இந்நேரம் ஆகியிருக்க முடியும். அடுத்தவர் மேல் பழி போடுவது சரியில்லை!'' என்றார். அவர் சொன்னதை மறுக்க முடியாமல் அந்த இளைஞன் அமர்ந்தான்.



மைக்கேல் ஏஞ்சலோ பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் புகழ் மிக்க சிற்பியாகவும், கட்டடக் கலை வல்லுநராகவும் விளங்கியவர். ஒரு நாள், போப் ஆண்டவர் இரண்டாம் ஜூலியஸ், ஏஞ்சலோவை ரோமில் இருந்த சிஸ்டைன் தேவாலயத்துக்கு அழைத்துச் சென்று, பத்தாயிரம் சதுர அடி பரப்பில் விரிந்து இருந்த தேவாலய விதானத்தில், கிறித்துவ சமயத்தின் முக்கிய நிகழ்வுகளை விளக்கும் ஓவியங்களை வரைந்து தரும்படி கேட்டார். ஏஞ்சலோ அதிர்ந்து போனார். ''நான் ஒரு சிற்பி; ஓவியன் இல்லை'' என்று மெதுவாகச் சொன்னார்.

''அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. உங்கள் ஆசிரியர் கிர்லாண்டையோ சொல்லிக் கொடுத்ததை நினைவில் கொண்டுவந்து இந்தப் பணியில் இறங்குங்கள்'' என்றார் போப். ''ஐயா! நான் ஓவியம் தீட்டிப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. எனவே, இன்று மிகச் சிறந்த ஓவியராகப் பெயர் பெற்றுத் திகழும் ரஃபேலிடம் இந்தப் பணியை ஒப்படைப்பது நல்லது'' என்று தயங்கித் தயங்கிக் கூறினார் ஏஞ்சலோ. ''முடியாது! இந்தப் பணியை நீங்கள்தான் மேற்கொள்ள வேண்டும்'' என்று உறுதியான குரலில் கட்டளையிட்டார் போப்.

விரிந்து கிடந்த மேல் விதானத்தைப் பார்த்தபோதே ஏஞ்லோவின் அடிவயிறு கலங்கியது. 'இந்தப் பரந்த உள்முகடு முழுவதும் எப்படி ஓவியம் வரைவது? இதற்கான சக்தியை எங்கிருந்து நான் பெறுவது? இது என்னால் முடியக்கூடிய காரியமா?' என்று திகைத்து நின்றார். சில நாட்கள் கழிந்தன. அதிர்ச்சியிலிருந்து மெள்ள அவர் விலகி, ஓவியங்கள் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினார்.

மற்றவர்களிடமிருந்தும், புறச் சூழல்களிலிருந்தும் தன்னைத்

தனிமைப்படுத்திக்கொண்டார் ஏஞ்சலோ. விடியற் பொழுதி லிருந்து நள்ளிரவு வரை யாருமற்ற தனிமையில், வசதியற்ற சூழலில், கீழ்நோக்கிக் கவிழ்ந்திருக்கும் விதானப் பரப்பில் ஓவியங்களைத் தீட்டினார். அவர் நடத்திய இந்த ஓவிய யாகம் நாட்கள், வாரங்கள், மாதங்கள் என நீண்டு, முழுமையாக நான்கு ஆண்டு களுக்குப் பின்பு அந்தப் பணி முடிந்தது. அதற்குள் அவருடைய உடல் வெளுத்து, நோயுற்று நலிந்து கிடந்தது. நிற்கக்கூடச் சக்தியற்றவரானார். ஆனால், அவருடைய விழிகளில் மட்டும் வெற்றி வெளிச்சம் வீசியது.

சிஸ்டைன் தேவாலயத்தின் கதவுகள் மக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட்டன. இருளில் இருந்து ஒளியைப் பிரிக்கும் இறைவனின் தோற்றம், முதல் மனிதன் ஆதாம், அவன் மனைவி ஏவாள், சொர்க்கத்தின் சோலை, பிரளயப் பெருக்கு என விதானம் முழுவதும் விரிந்து கிடந்த வரலாற்றின் தலை சிறந்த கலைப் படைப்புகளைக் கண்டு மக்கள் பரவசப்பட்டனர்.

இத்தாலியின் ஓவியச் சக்ரவர்த்தியாக விளங்கிய ரஃபேல், சிஸ்டைன் தேவாலயத்துக்குள் நுழைந்து விதானத்தில் விழிகளைச் செலுத்தினார். மைக்கேல் ஏஞ்சலோவின் கைவண்ணம் கண்டு மெய்சிலிர்த்து மண்டியிட்டார். ஏஞ்சலோவின் காலத்தில் தானும் வாழ நேர்ந்த நல்வாய்ப்புக்காக ஆண்டவனுக்கு மனம் நெகிழ்ந்து நன்றி கூறினார். 'நம்மால் முடியுமா?' என்று அவநம்பிக்கைப் பள்ளத்தில் மனம் தடுமாறி விழாமல், ஊக்கத்துடன் செயல்பட்டால், உலகில் எதையும் சாதிக்கலாம் என்று நிரூபித்துப் புகழ் முகட்டில் ஏறி நின்றார் மைக்கேல் ஏஞ்சலோ.



சார்லி சாப்ளினை அறியாதவரும் உண்டோ? அவருடைய இளமைக்

காலம் வறுமை நிறைந்தது. பேப்பர் போடும் பையனாக, முடிவெட்டும் கடை ஊழியனாக, பொம்மை செய்பவனாக, பழைய துணிகளை ஏலம் போடும் வியாபாரியாகப் பல்வேறு அவதாரம் எடுத்தவர் சாப்ளின்.



வளரும் பருவத்தில் தேவையான உணவு கிடைக்காததால் வளர்ச்சி குறைந்து, தலை, உடம்பு, கைகள் என்று எதுவுமே அவருக்குச் சரியான விகிதத்தில் அமையவில்லை. ஆனால், அத்தனை குறைகளுக்கு இடையிலும் தான் ஒரு நாள் ஒரு பெரிய நாடக நடிகராக வளரப்போவது நிச்சயம் என்ற நம்பிக்கை மட்டும் அவருள் வேரூன்றி இருந்தது. 'சார்லி! நீ ஒரு நாள் உலகின் மிகச் சிறந்த மேடைக் கலைஞன் என்று புகழ் பெறுவாய். உன் நடிப்பைக் காண மக்கள் போட்டி போட்டு ஓடி வருவார்கள்' என்று தாய் சொன்னது அவருடைய அடிமனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

பதினைந்து வயதில் மேடை நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய சாப்ளின், தன் தோற்றம் சோகப் பாத்திரங்களுக்கு மட்டுமே பொருத்தமாக இருக்கும் எனறு நம்பினார். ஆனால், அவருடைய சகோதரர் சிட்னி, 'கோமாளி நடிப்புதான் உனக்குக் கைகொடுக்கும்' என்று கணித்த ஆருடம்தான் பின்னாளில் பலித்தது. ஒரு மேடை நாடகத்தில் சிரமப்பட்டு நகைச்சுவையாகப் பேசி நடித்தார் சாப்ளின். இருந்தும், பார்வையாளர்களில் யாரும் சிரிக்கவில்லை. சாப்ளின் பேசிய ஆங்கிலம், வேற்று மொழிக்காரர்களான அவர்களுக்குப் புரியவில்லை என்ற உண்மை பிறகுதான் தெரிந்தது. மொழி கடந்து, நடை உடை பாவனைகளால் செய்யும் நகைச்சுவையே உலகம் முழுவதும் சென்று சேரும் என்று இந்தச் சம்பவத்தின் மூலம் அறிந்துகொண்டார் சாப்ளின்.

*நாடக மேடையிலிருந்து திரைப்படங்களுக்கு வந்த சாப்ளின், அடைந்த அவமானங்கள் சொல்லில் அடங்காதவை. அவரது முதல் படம் படு தோல்வி. அதற்காக அவர் சிறிதும் துவண்டுவிடவில்லை. ஆழ்ந்து யோசித்தபோது அவருக்குள் ஒரு மின்னல் தெறித்தது.*

*அபத்தமாக உடையணிந்து தன் தோற்றத்தை மாற்ற முடிவெடுத்தார். தொளதொள கால்சட்டை, அதற்கு நேர்மாறாக இறுக்கமான மேல்சட்டை, சிறிய கால்களில் சற்றும் பொருந்தாமல் இடம் மாற்றித் தரித்த காலணிகள், 'டெர்பி' விளையாட்டுத் தொப்பி, கையில் பிரம்பு, மேல் உதட்டில் ஒட்டிய டூத் பிரஷ் மீசை சகிதம் அவர் திரையில் தோன்றியபோது, அகிலம் முழுவதும் குலுங்கிச் சிரித்தது. தன் குறைகள் அனைத்தையும் வெற்றி பெறும் ஊக்கத்துடன் நிறைகளாக்கி, உலக சினிமாவில் ஒரு புதிய சகாப்தம் படைத்தவர் சார்லி சாப்ளின்!*

*இன்றைய வாழும் வரலாறாய் நம்முன் வலம் வருபவர் அப்துல் கலாம். ராமேஸ்வரத்தில், மீன் பிடிக்கும் மரைக்காயர் குடும்பத்தில் பிறந்த இவர், சாதாரணப் பள்ளிகளில் கல்வி கற்று, சென்னை எம்.ஐ.டி-யில் விமானத் தொழில் நுட்பம் பயின்றார். பள்ளி விடுமுறை நாட்களில் சைக்கிளில் வீடு வீடாகச் செய்தித்தாள் போட்டவர், இன்று தலைப்புச் செய்திகளில் இடம் வகிக்கிறார். ஹோமி ஜஹாங்கீர் பாபாவுக்குப்பின் அறிவியல் சாதனைக்காகப் 'பாரத ரத்னா' விருது பெற்ற அப்துல் கலாம், இன்று மற்றவர்க்கு விருதுகளை வழங்கும் குடியரசுத் தலைவராக உயர்ந்து நிற்கிறார்.*



ஒன்றை எப்படியும் சாதித்துவிட வேண்டும் என்ற உள்மனத்தின் உந்துதல்தான் ஊக்கம்! சாதனையாளர்கள் மூன்று படிநிலைகளைச் சந்திக்க வேண்டும். முதற்படி, ஆசைப்படுவது. அடுத்தது, ஆசைப்படுவதை அடைய முடியுமென்று அழுத்தமாக நம்புவது. மூன்றாவது, அந்த நம்பிக்கை நிறைவேறும் வரை மாறாத ஊக்கத்துடன் உழைப்பது. லட்சியத்தை முடிக்க இதுவே மூலமந்திரம். இதன் சூட்சுமத்தைப் புரிந்து செயல்பட்டால், வெற்றித் தேவதையின் கைகளில் இருக்கும் மாலை, ஒரு நாள் உங்கள் கழுத்தை நிச்சயம் அலங்கரிக்கும்!

ஆகவே, 'ஊக்கமது கைவிடேல்!'

# 17

# திறவுகோல்

பிறர் துயர் தீர்க்கும் பெருங்கருணை ஒன்றுதான் மனித வாழ்வை அர்த்தம் உள்ளதாக ஆக்கும்!

'வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது; அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று' என்றார் பிரெஞ்சுப் படைப்பாளி விக்டர் ஹ்யூகோ.

'அன்பில்லாத இடத்தில் மனித முகங்கள் வெறும் படங்கள். அவர்கள் பேசும் பேச்சு, ஜீவனில்லாத கிண்கிணி ஓசை!' என்றார் ஆங்கில அறிஞர் பேகன்.

அன்புக்கு வேற்றுமை இல்லை; பகைமை இல்லை; ஆணவம் இல்லை; சுயநலம் இல்லை. அன்பு இருக்கும் இதயமே ஆண்டவன் இருக்கும் ஆலயம்.



'அன்பே சிவம்' என்று அடித்துச் சொல்கிறது திருமந்திரம். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்று வாழ்வை வரையறுக்கிறது வள்ளுவம். இந்த இலக்கிய வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் அன்னை தெரசா.

ஏழைகளையும், அநாதைகளையும், இரக்கமில்லாத உறவுகளால் கைவிடப்பட்டவர்களையும், தொழுநோயாளிகளையும், மன நோயாளிகளையும் அரவணைத்து ஆதரவு தருவதற்காகவே அல்பேனியாவில் இருந்து கொல்கத்தாவுக்கு வந்த கருணைத் தெய்வம் அவர். 'கதியற்றவர்களுக்குத் தொண்டு செய்வதுதான் சமயத்தின் நோக்கம்' என்று காந்தியடிகள் சொன்னதை நிறைவேற்றவே, கர்த்தரால் அனுப்பி வைக்கப்பட்ட தேவதை!



19 வயதில் தாயகம் துறந்து பாரதம் வந்து, 21 வயதில் துறவற வாழ்வைத் தழுவிய தெரசா, ஏசுவின் வழியில் பிறர் நலனுக்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

அடிப்படை வசதிகள் எதுவுமின்றி, ஜனங்கள் ஆடு மாடுகளைவிட மோசமாக வாழ்வதையும், சுகாதாரச் சூழல் அறவே இல்லாமல் தொற்று நோய்களுக்குப் பலியாவதையும் பார்த்து இதயம் ரணமானவர், அவர்களுக்குத் தொண்டு செய்வதையே தன் வாழ்வின் ஒற்றைக் குறிக்கோளாக நெஞ்சில் நேர்ந்து கொண்டார்.

கழிவுநீர் தேங்கி நாறிக் கிடக்கும் ஓர் அருவருப்பான குட்டையை ஒட்டிய பொட்டல் பகுதி 'மோத்தி ஜீல்' (முத்துக் குளம்?!) என்று அழைக்கப்பட்டது. அங்குதான் அன்னையின் மனிதகுலச் சேவை ஆரம்பமானது. உறவுகளால் விலக்கப்பட்டு வீதிகளிலும், சாக்கடைப்

பகுதிகளிலும் சாவை நோக்கிச் சரிந்து கிடந்த நோயாளிகள், வயோதிகர்கள், ஆதரவற்ற அநாதைகள் பக்கம் தெரசாவின் பார்வை திரும்ப, 'அன்புப் பணியாளர் சபை' மலர்ந்தது. அதுவரை அவர்களுக்குக் கிடைத்திராத அன்பையும், பரிவையும் அள்ளி வழங்கி ஆறுதல் அளிப்பதற்கென்றே அவரால் அமைக்கப்பட்டதுதான் 'நிர்மல் ஹிருதய்' விடுதி.

அந்தக் கிறித்துவ அன்னையின் மடியில் அன்பைத் தேடி ஆறுதல் அடைந்த அநாதைகளில் இந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியர்களுமே அதிகம். ஆம். அன்புக்கு மதமும் இல்லை; சாதியும் இல்லை.


கொல்கத்தாவில் பார்க்குமிடமெல்லாம் தொழுநோயாளிகள் பரவிக் கிடந்த காலமும் இருந்தது. ஹௌரா பாலத்துக்குப் பக்கத்தில் இருந்த திறந்த வெளியில் ஆயிரக்கணக்கில் அவர்கள் கூடி வாழ்ந்தனர். விரல்கள் முடங்கி, உதடுகள் வீங்கி, உடலே உருமாறிக் காட்சி தரும் அவர்களை வீட்டில் வைத்துக்கொள்ள யாரும் விரும்பவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு அடைக்கலம் அளித்துத் தன் கரங்களால் அவர்களின் புண்களைக் கழுவி சிகிச்சை செய்தவர் அன்னை தெரசா. 'ஒரு தொழு நோயாளியின் புண்களைக் கழுவும்போது, ஏசுவுக்கு நான் தொண்டு செய்வதாகவே உணர்கிறேன்' என்றார் அந்த அன்புத் தாய்.



தென்னாப்பிரிக்காவில் இருந்த போது, ஒரு தொழுநோயாளியை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று சிகிச்சையளித்தவர் காந்தியடிகள். 'என் வீட்டுக்கு வந்த தொழுநோயாளியை ஒருவேளை உணவுடன் அனுப்பி வைக்க எனக்கு மனம் இல்லை. என் வீட்டிலேயே அவரை இருக்கச் சொல்லி, அவருடைய புண்களுக்கு மருந்திட்டு, அவருக்கு வேண்டிய மற்ற சௌகரியங்களையும் கவனித்து வந்தேன்' என்று 'சத்திய சோதனை'யில் குறிப்பிட்டிருக்கும் மகாத்மா, இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டபோது, 'உண்மையைக் கொண்டு அகிம்சையின் பாதையில் நடந்து நாம் விரைவில் சுதந்திரம் அடைந்ததும், நாட்டில் தொழுநோயாளி, பிச்சையெடுப்பவர் என ஒருவர்கூட இல்லாத சூழலை, அவர்கள்மீது கொண்ட அன்பினால் உருவாக்க வேண்டும்' என்றார். அதை நினைவில் நிறுத்திய அன்னை தெரசா, தான் அமைத்த தொழுநோயாளிகளின் குடியிருப்புக்கு 'சாந்தி நகர்' என்று பெயர் சூட்டியபோதும், தற்போது அது 'காந்திஜி பிரேம் நிவாஸ்' என்றே அழைக்கப்படுகிறது.

இந்து மதத்தில், ஒவ்வொருவருக்கும் ஐந்து யக்ஞங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. கைம்மாறு கருதாமல், பிறர் நலன் கருதி செய்யப்படும் செயலே யக்ஞம் எனப்படும். இதுவே வேள்வி என்றும் வழங்கப்படுகிறது. தேவ யக்ஞம், ரிஷி யக்ஞம், பித்ரு யக்ஞம், நர யக்ஞம், பூத யக்ஞம் ஆகிய இந்த யக்ஞங்கள் அனைத்தையும் மண்ணுலகில் கடைப்பிடிப்பவனுக்கு, மரணத்துக்குப் பின் விண்ணுலகக் கதவுகள் திறக்கும் என்பது நம்பிக்கை.


இவற்றில், இறுதியாகச் சொல்லப்பட்ட இரு யக்ஞங்களில், சுயநலமாக வாழாமல் சக மனிதர்களின் துயர் துடைக்கத் துணைநிற்பது நர யக்ஞம். பறவைகள், உயிரினங்கள் அனைத்திடமும் அன்பு செய்வது பூத யக்ஞம்.



இவை இரண்டுமே உறவில்லாத உயிர்களுக்கெல்லாம் ஓடிச்சென்று உதவத் துடிக்கும் நிர்மலமான அன்பு சார்ந்தவை என்று உணர்தல் முக்கியம்.

அரபு இலக்கியத்தில் ஓர் அற்புதமான செய்தி. மார்க்க நெறிப்படி வழுவாமல் வாழ்ந்த சுலைமான், மரணத்துக்குப் பின் சொர்க்கத்தில் நிறுத்தப்பட்டார். ‘சுலைமான், இந்த இனிய சொர்க்கம் உனக்கு எதனால் சித்தித்தது சொல்?’ என்று கேட்டார் இறைவன். 'ஆண்டவனே, உம்மை

நாள்தோறும் மறவாமல் ஐந்து முறை தொழுதேனே... அதனால் இந்த அருட்கொடையை எனக்கு நீங்கள் அளித்திருக்கக்கூடும்' என்றார் சுலைமான். 'இல்லை மகனே! ஒரேயொரு வேளை மட்டும் என்னை நீ தொழ முடியாமல் போனதல்லவா... அதற்காகவே இன்று நீ சொர்க்கத்தில் என் முன் நிற்கிறாய்' என்று சொல்லிச் சிரித்தார் இறைவன்.



'ஆண்டவனைத் தொழ முடியாமல் போனதால் சொர்க்கத்தின் கதவு திறந்ததா?' எனப் புரியாமல் சுலைமான் மருண்டு நிற்க, 'மகனே, ஒரு குளிர்காலப் பருவத்தின் புலர்காலைப் பொழுதில், பள்ளிவாசலின் அழைப்பொலி கேட்டு அவசரமாகப் புறப்பட்டாய். கடும் பனியில் வாடி, குளிரில் நடுங்கித் தவித்த ஒரு சின்னஞ்சிறு பூனைக்குட்டி உன் கண்களில் பட்டது. உடனே, ஓடிச் சென்று அதை அள்ளியெடுத்து, உன் நெஞ்சில் புதைத்தாய். விரல்களால் அதன் மெல்லுடல் நீவி, ஆறுதல் அளித்தாய். மார்புறத் தழுவியதால் உன் உடல் வெப்பம் பூனையின் உடலை ஊடுருவியது. நேரம் கடந்தது. பூனை மெல்லச் சமநிலை அடைந்தது. நெஞ்சில் அணைத்த பூனையை நிலத்தில் விட்டுவிட்டு நீ நிமிர்ந்தபோது, பள்ளிவாசலில் தொழுகை முடிந்தது.

அன்று ஒரு சிறிய பூனையின் சிரமம் தவிர்க்க முயன்றதில், உன் தொழுகையைத் துறந்தாய். பிற உயிர்களிடம் காட்டும் பெருங்கருணைதான் எனக்கு மிகவும் பிடித்தமானது. அதனால்தான், என் அன்பின் பரிசாக இந்த இனிய சொர்க்கம் உனக்கு இன்று வாய்த்தது' என்றார் இறைவன்.

'எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பக்தி' என்பது வள்ளல் பெருமானின் வாய்மொழி.

உயிர்ப் பலியைக் கடுமையாக எதிர்த்தார் புத்தர். தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட சமாரியர் இனத்தைச் சார்ந்த பெண்ணிடம் தண்ணீர் கேட்டுப் பருகினார் ஏசு. அநாதைகள் துயர் கண்டு துடித்தார் நபிகள். வேடன் குகன் கொடுத்த மீனையும், தேனையும், பரிசுத்தமாகப் பாவித்தான் ராமன். தாழ்த்தப்பட்டவர்கள் பேரின்பவுலகம் செல்ல, அவர்களின் செவிகளில் திருமறை ஓதினார் ராமானுஜர். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்று முழங்கினார் விவேகானந்தர். இவர்கள் ஒவ்வொருவரும் கையில் எடுத்த இசைக் கருவி வேறுவேறு என்றாலும், அவர்கள் வாசித்த ராகம் அன்புதான்.

ஜீவகாருண்யமே சொர்க்கத்தின் திறவு கோல்!

# 18

# அந்த நாள்


'இறைவா! என்னை ஓர் ஏழையாகவே இறக்கச் செய்' என்று நெஞ்சுருக வேண்டி நின்றார் நபிகள் பெருமான். இஸ்லாமியர்களின் இதயங்களில் ஏற்றிப் போற்றும் இறைத் தூதராக விளங்கியவர், சர்வ அதிகாரங்களும் கொண்ட மனிதராக உயர்ந்து நின்றவர், எளிமையே வடிவெடுத்து மண்ணில் வந்ததுபோல் வாழ்ந்தவர்.

அவர் தமது கிழிந்த ஆடைகளைத் தாமே தம் கைகளால் தைத்தார்; பழுதுபட்ட செருப்பைத் தாமே செப்பனிட்டார்; வீட்டுப் பெண்களின் வேலையைப் பகிர்ந்துகொண்டார். காய்ந்த பேரீச்சம் பழங்களும், தண்ணீரும்தான் அவருடைய உணவு. களிமண் சுவர் மேல் ஈச்ச ஓலை வேய்ந்த குடிசையே அவரது அரண்மனை.



அருமை மகள் பாத்திமாவுக்கு மணமுடித்து, தந்தை வீட்டுச் சொத்தாக அவர் தந்தது ஒரு பாய், ஒரு திண்டு, ஒரு மண் பாத்திரம், ஒரு ஜோடி மாவரைக்கும் கற்கள், ஒரு ஜாடி ஆகியவை மட்டுமே! மரணத்தின் மடியில் தலை சாய்க்கும்போதும், மனைவி ஆயிஷாவிடம் எஞ்சியிருந்த ஏழுதினார் நாணயங்களை எடுத்து வந்து, ஏழைகளுக்குத் தர்மம் தரச் சொன்னவர் அவர். வீட்டுக்குத் தேவைப்படும் மாவை, வேலையாள் உதவியின்றி, தம் கைகளால் தாமே அரைக்கவும், தண்ணீரைச் சுமக்கவும்

தம் மகளை நெறிப்படுத்திய நேர்மையின் திருவுருவம் அண்ணலார் நபிகள்.




மண்ணுலகிலிருந்து பெருமானார் மறைந்ததும், அவர் வகுத்த வழியில் சமயம், நீதி, நிர்வாகம் மூன்றுக்கும் தலைமையேற்றவர்கள் கலீஃபாக்கள் எனப்பட்டனர். எளிமையும், தூய்மையும் துலங்க அண்ணலைப் போன்றே ஆட்சியை நடத்தினர். அவர்களுக்கு மாளிகைகளும், மணிமகுடங்களும் இல்லை. வெண்கொற்றக் குடையும் இல்லை. வெண்சாமரங்கள் வீசப்படவும் இல்லை.

முதல் கலீஃபாவாகப் பொறுப்பேற்ற அபூபக்கர், நபிகளாரின் ஆருயிர் நண்பர். வாழ்க்கைத் தேவைகளுக்காக வணிகத்தில் ஈடுபட்டவர். ஈட்டிய பெருஞ்செல்வத்தை இறைத் தூதருக்காக இழந்தவர். ஆட்சித் தலைவராக ஆன பின்பும் வணிகத்தை அவர் விடவில்லை. தோளில் துணிகளைச் சுமந்தபடி வீதியில் அவர் நடந்தபோது, அண்ணலாரின் மற்றொரு உற்ற நண்பர் உமர் எதிர்ப்பட்டார். 'நாடாளும் மனிதர் கடைவீதியில் வணிகராக நடந்தால், நிர்வாகத்தை யார் நடத்துவது?' என்றார் உமர்.

'வயிற்றுப் பிழைப்புக்கு நான் வணிகம் செய்யாவிடில் என் குடும்பம் பசியாற யார் பொறுப்பேற்பது?' என்று திருப்பிக் கேட்டார் கலீஃபா. அவருடைய கேள்வியின் நியாயத்தை உமரால் உணர முடிந்தது.

இருவரும் யோசித்த பின்பு, அரசுக் கருவூல அதிகாரியிடம் சென்றனர். 'கலீஃபாவின் குடும்பத்துக்குக் கருவூலத்திலிருந்து உதவ முடியுமா?' என்று உமர் கேட்டார். அதன் பொறுப்பாளர் அபூஉபைதா, 'மெக்காவிலிருந்து மதீனாவுக்குக் குடி பெயர்ந்தவருக்கு வழங்கப்படும் உதவிப் பணம் கலீஃபாவுக்கும் கிடைக்கும். அவர் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜோடி உடைகள் தரப்படும்' என்றார். நபிகள் வகுத்த சமுதாயச் சட்டத்தில் சாமானியனுக்கும், கலீஃபாவுக்கும் சமநீதி. ஆட்சித் தலைவருக்கென்று சிறப்புச் சலுகைகள் எதுவும் கிடையாது.

கலீஃபா அபூபக்கரின் துணைவியார் அஸ்மா ஒரு நாள் தேன் அருந்த ஆசைப்பட்டார். 'நமக்குக் கிடைக்கும் உதவிப் பணத்தில் அடிப்படைத் தேவைகளுக்கே சிரமப்படும் போது அதிகப் பணம் கொடுத்து எப்படித் தேன் வாங்க இயலும்?' என்றார் அபூபக்கர். அஸ்மா குடும்பச் செலவில் சிக்கனம் செய்து, தேன் வாங்கும் தொகையைச் சேமித்துக் கணவரிடம் கொடுத்து, வாங்கி வரச் சொன்னார். குடும்பம் மிகவும் சிக்கனமாக நடந்தால் எவ்வளவு பணம் மீதப்படும் என்றறிந்த அபூபக்கர், அதை அரசுக் கருவூலத்தில் சேர்த்ததுடன், அந்த அளவுத் தொகையை அடுத்த மாதத்திலிருந்து குறைத்துத் தரும்படி பொறுப்பாளருக்கு ஆணையிட்டார். ஆட்சி அதிகாரத்தில் அமர்பவர்கள் மக்களின் பொதுப் பணத்தை எவ்வளவு நேர்மையும், தூய்மையும் துலங்க நிர்வகிக்க வேண்டும் என்பதற்கு இதைவிட நல்ல உதாரணம் கிடையாது.

அந்த கலீஃபாக்களைப் போன்றே தமிழகத்தில் ஆட்சி செய்த இரண்டு பெருமக்கள் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், குமாரசாமி ராஜாவும்! நாடு சுதந்திரம் பெறுவதற்கான சூழல் கனிந்தபோது, பிரகாசம் பதவியிழந்த பின், 1947 - பிப்ரவரியில் ஓமந்தூரார் சென்னை மாநிலத்தின் முதலமைச்சர் ஆனார். குறைந்த ஆங்கில அறிவும், கிராமப்புறப் பின்னணியும் கொண்டு நிர்வாகப் பயிற்சி இல்லாமல் அதிகாரத்தில் அமர்ந்த முதல் மண்வாசனை மனிதர்.

அரசுக் கோப்புகளின் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க விரும்பிய ஓமந்தூரார் அவசியம் இல்லாமல் தன் நேரத்தைப் பேட்டி கொடுப்பதிலோ, சட்டமன்ற உறுப்பினர்களுடன் உரையாடுவதிலோ செலவழிக்காதவர். 'பதவி வகிப்பது மக்களுக்கு நன்மை செய்வதற்காக மட்டுமே; வேண்டியவர்களுக்கும்; பணக்காரர்களுக்கும் சலுகை

வழங்குவதற்காக இல்லை’ என்று முகத்தில் அறைந்தாற் போல் சொன்னவர். ஓர் அமைச்சர் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்துக்கு நெல் கடத்துவதை அறிந்ததும், அவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு ஆணையிட்டவர் அவர். முதல்வராக டெல்லி சென்றபோது, விமான நிலையத்தில் காத்திருந்த சென்னைத் தொழிலதிபரின் காரில் ஏற மறுத்து, வாடகை வண்டியில் காசு கொடுத்துச் சென்றவர்.

பொதுப்பணித் துறைக்கு அமெரிக்காவிலிருந்து சில இயந்திரங்களை வரவழைப்பதில் தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்ததும் தலைமைப் பொறியாளர் மீது கடும் நடவடிக்கை எடுத்தார் ஓமந்தூரார். இது சம்பந்தமாக, 'மூத்த அதிகாரிகள் விஷயத்தில் நிதானம் தேவை’ என்று நேரு தொலைபேசியில் அறிவுறுத்த, 'இதைப் பற்றி உங்களிடம் பேச ஒன்றுமில்லை’ என்று சொல்லித் தொலைத் தொடர்பைத் துண்டித்தார். ஒழுங்கு தவறும் அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க, இவர்தான் ஒழுங்கு நடவடிக்கை நடுவர் குழு, லஞ்ச ஊழல் ஒழிப்புக் குழு ஆகியவற்றை அமைத்தார்.

ஓமந்தூராரின் தம்பி லட்சுமி நாராயண ரெட்டியார், கிணறு தோண்ட அரசு வேளாண்மைத் துறையிலிருந்து பவர் டிரில்லர் வரவழைத்துத் துளை போட்டார். தண்ணீர் வரவில்லை. வேறு இடத்தில் முயன்று பார்ப்பதற்காக, அந்த இயந்திரத்தைப் பண்ணையில் சில நாள் நிறுத்தி வைத்திருந்தார் அவர். தம்பியின் இந்தச் செயலை அறிந்த முதல்வர், உடனே அங்கிருந்து இயந்திரங் களை அகற்றவும், பயன்படுத்தாதிருந்த நாட்களுக்கும் சேர்த்து வாடகை வசூலிக்கவும் ஆணையிட்டார். 'உறவினர்களுக்குச் சலுகையளிக்கும் அதிகாரி மீது ஆண்டவனின் சாபம் உண்டாகட்டும்’ என்ற நபிகளின் மொழி அறிந்து அதன் வழி நடந்தவர் ஓமந்தூரார்.

தன் சொந்த நிலங்களையும், வடலூரில் குடியிருந்த கட்டடத் தையும் வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நிலையத்துக்கு எழுதி வைத்தார் ஓமந்தூரார். 1970-ல் அவர் நோய்வாய்ப்பட்டபோது, அன்று முதல்வராக இருந்த கலைஞர், அரசு செலவில் அரசினர் மருத்துவமனையில் வைத்து அவருக்குச் சிகிச்சை வழங்குவதாகத் தெரிவித்தும், அதை ஏற்க மறுத்து, தன் தம்பியின் வீட்டில் தங்கி, நோயிலிருந்து மீளாமல் கண் மூடினார். ஆட்சி நாற்காலியில் அவரைப் போல் துறவியாக அமர்ந்து நிர்வகிப்பது யாருக்கும் அரிது!

ஓமந்தூராருக்குப் பின், அவரது விருப்பப்படி மாநில முதல்வராகப்

பொறுப்பேற்றார் குமாரசாமி ராஜா. பள்ளிப் பருவம் முதலே சுதந்திர வேள்வியில் ஈடுபட்டு கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, கள்ளுக்கடை மறியல் என்று காந்தியப் பாதையில் பயணித்த அப்பழுக்கற்ற அருளாளர் ராஜா. இவரது ஆட்சியில்தான் நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு, சுயேச்சையாகச் செயல்பட வழி வகுக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்தது. ஹரிஜன நலத்துறை தனி அமைச்சரைப் பெற்றது. கிராமப் புனரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.




அரசியல்வாதிகளும், அரசு அதிகாரிகளும் லஞ்சம் பெறுவதைத் தடுப்பதற்கு ராஜா கடும் முயற்சிகள் மேற்கொண்டார். அதிகாரிகள் ஊழலில் ஈடுபடுவது நிரூபிக்கப்பட்டால் அவர்களுடைய பெயர், பணி, விலாசம் மற்றும் வழக்குப் பதிவு செய்யப்பட்ட விவரம் அனைத்தும் அரசு வெளியீடான 'சென்னை செய்தி'யில் வெளியிட ராஜா ஏற்பாடு செய்ததால், லஞ்சம் வாங்குவதற்கே அரசு ஊழியர்கள் அஞ்சினர்.

தூய்மையான நிர்வாகத்தை நேர்மையான வழியில் வழங்கிய ராஜா, 1952-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், ராஜபாளைத்தில் சுயேச்சை வேட்பாளரிடம் 118 வாக்கு வித்தியாசத்தில் தோற்றார். முதல்வர் பதவியில் தொடர்ந்து நீடிக்கும்படி நேருவும் ராஜாஜியும் வேண்டியபோதும், அதை மறுத்து வெளியேறினார். 'ஒரு தொகுதி மக்களின் நம்பிக்கையை இழந்தவனுக்கு மாநிலம் முழுவதையும்

ஆள்வதற்கு அருகதையில்லை' என்றார். அகில இந்திய காங்கிரஸில் பொறுப்பேற்க நேரு அழைத்தபோதும் இணங்காதவர், அனைவரின் வற்புறுத்தலுக்கும் ஆட்பட்டு, ஒரிஸ்ஸாவின் ஆளுநரானார். நாடு முழுவதும் சுற்றியவர், 'சுதந்திரத்துக்குப் பின்பு வடக்கில் வாய்த்திருக்கும் வளர்ச்சி, தெற்கில் வாய்க்கவில்லை' என்று வெளிப்படையாக விமர்சித்தார். இதற்கு எதிர்ப்பு எழுந்ததும் ஆளுநர் பதவியில் நீடிக்க விரும்பாமல், ஒரே ஆண்டில் ராஜினாமா செய்துவிட்டு ராஜபாளையம் திரும்பினார்.

மோதிலால் நேரு ஆனந்தபவனத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தது போல் குமாரசாமி ராஜா, தான் வாழ்ந்த வீட்டையும், சொத்துக் களையும் தமிழக மக்களுக்காக ஒப்படைத்தார். அவருடைய வீடு பொது நூல்நிலையமாகவும், காந்தி கலை மன்றமாகவும் இன்றும் ராஜபாளையத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிறது. தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாத அந்த காந்தியச் செல்வரிடம் கல்கி சென்று, பாரதி நினைவு மண்டபம் கட்டுவதற்கு, முதல் நன்கொடையைக் கொடுக்கும்படி வேண்டினார். தன் எஞ்சிய சொத்தாக வங்கியில் இருந்த இருப்பு 50 ரூபாயை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொடுத்த அந்த உத்தமர், இறுதி நாளில் சுமைகள் அற்ற மனத்துடன் இயற்கையோடு கலந்தார்.

இன்று அரசியல் உலகில் கைம்மாறு கருதாத, பிரதிபலன் பார்க்காத, சுயலாபம் தேடாத தேவ மனிதர்களை எளிதில் தேடிப் பிடித்துவிட முடியாது. என்றாலும், அங்கொருவர் இங்கொருவர் என ஓரிரு நல்ல தலைவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். கர்மயோகிகளைப் போல் நாட்டின் நலனுக்காகக் கற்பூரமாகக் கரையும், மெழுகுவத்தியாக உருகும் மனிதர்கள் பொதுவாழ்வில் மீண்டும் பல்கிப் பெருக வேண்டும்.

'ஊருக்கு உழைத்திடல் யோகம். பிறர் நலம் ஓங்கிடுமாறு தன்னை வருத்துதல் யாகம்' என்று வாழ்ந்து காட்டிய அந்த நாள் தலைவர்களின் அரசியல் நேர்மை, இன்று நம் கண்முன்னே பொய்யாய், பழங்கதையாய், கனவாய்ப் போய்க்கொண்டு இருப்பதில் நல்லவர்கள் யாருக்குத்தான் வருத்தமில்லை!

வெள்ளையரிடமிருந்து இந்தியா விடுதலை பெற்றுப் பயனில்லை. முதலில், சுயநல அரசியல்வாதிகளிடமிருந்து நாடு விடுபடட்டும்!

# 19

# காதல்

காதல்... இரண்டு இதயங்களை இணைத்துவைக்கும் ஓர் உன்னதமான பசை; அன்பெனும் வீணையில் அன்றாடம் மீட்டப்படும் அமரத்துவம் வாய்ந்த இசை. இந்த மூன்றெழுத்து மோகனத்தில் இனம் புரியாத தேவ மயக்கம் இழையோடுகிறது. இந்த இனிய மயக்கத்தில் மூழ்காத மனிதர்களே இல்லை. மதம், இனம், மொழி, தேசம் போன்ற பேதப்படுத்தும் எல்லா எல்லைகளையும் கடந்து, உலக மக்கள் அனைவரையும் கவிஞன் பாரதி காதலிக்க அழைக்கிறான்!

‘கவிதையும், கானமும், சிற்பமுதற் கலைகளும் காதலர்க்கு மட்டும் கைவரப் பெற்றவை’ என்று உரத்த குரலில் உணர்த்துகிறான் அவன். காதல்தான் வாழ்க்கை நேசிப்புக்கான வழிக் கதவுகளைத் திறந்து வைக்கும் மூல முழு முதல் மந்திரம். எந்த மனிதனும் தன் வாழ்வில் ஒரு முறையாவது காதலிக்காமல் கண் மூடுவதில்லை.




காதல் ஒரே நேரத்தில் சுகத்தையும் சோகத்தையும் கலந்து தரும் ரசவாதம். ஆதாம் - ஏவாள் காலம் தொட்டு இன்று வரை காதல் அனுபவம் ஒரே மாதிரிதான் இருக்கிறது. வரலாறு வடித்துக் காட்டும் ஆன்டனி - கிளியோபாட்ராவிலிருந்து, இலக்கியங்களில் இறவா இடம்

பெற்ற ரோமியோ - ஜூலியட், கயஸ் - லைலா, சலீம் - அனார்கலி, அம்பிகாபதி - அமராவதி என உண்மையான காதல்கள் யாவும் துயரத்தில்தான் முடிந்திருக்கின்றன.



காதலுக்குள்ள ஆற்றல் அளப்பரியது. அது கடந்த காலத்தில் மன்னர்களின் தலைகளில் இருந்து மகுடங்களை இறக்கி வைத்தது; ஆதிக்கவாதிகளின் அடிமனத்தில் நுழைந்து ஆயுள் வரை அலைக்கழித்தது; இரக்கமற்ற அரக்கர்களின் இதயங்களிலும் ஊடுருவி இடம் பிடித்தது.

மார்க் ஆன்டனி, ரோமப் பேரரசின் முப்பெரும் ஆட்சியாளர்களில் ஒருவன். ஜூலியஸ் சீசரின் வலக்கரமாக விளங்கியவன். தரைப்படைப் போரில் தன்னிகரற்றவன். முதற் பார்வையிலே கறுப்பழகி கிளியோ பாட்ராவின் காதல் வலையில் விழுந்தவன். ‘டைபர் நதியில் ரோம் கரைந்து போகட்டும். அகன்று விரிந்த பேரரசு உடைந்து நொறுங்கட்டும். கிளியோபாட்ராவின் காதலே என் வாழ்வின் உன்னதம்!’ என்று பிரகடனம் செய்தவன். 'நீ வசைபாடினால் அது ஓர் அழகு. வாய் மலர்ந்து சிரித்தால் அதுவும் அழகு. கண்கலங்கி அழுதால் அதுகூட அழகு’ என்று காதல் வயப்பட்டு வர்ணித்தவன்.

அரசியல் நிர்ப்பந்தங்களால் அவளைப் பிரிந்து அவன் ரோம் செல்ல நேர்ந்தது. அந்தப் பிரிவைத் தாங்க முடியாமல் தவித்த நைல் நதி நங்கை,

கடிதத்தில் காதல் காவியம் படைத்து அன்றாடம் அவனுக்கு அனுப்பிவைத்தாள். ரோமில் எழுந்த எதிர்ப்பைத் தவிர்க்க, ஆக்டேவியஸ் சீசரின் தங்கை ஆக்டேவியாவை ஆன்டனி மணமுடிக்கும் சூழல் உருவானது. ஆனாலும், கைப்பிடித்தவளிடம் அன்பு செலுத்த இயலாமல், மாறாத காதல் மயக்கத்தால் மீண்டும் அலெக்சாண்ட்ரியா வந்து கிளியோபாட்ராவின் காலடியில் விழுந்தான் ஆன்டனி.

தங்கையைத் தவிக்கவிட்டு, பேரரசின் பெருமையைச் சிதைத்து, ஒரு பெண்ணின் அழகில் அறிவிழந்து கிடந்தவனுக்கு எதிராக ஆக்டேவியஸ் படையெடுத்தான்.

ஆக்டியம் என்ற இடத்தில், கடல் போர் நடந்தது. போரைப் பார்வையிட, கிளியோபாட்ரா தனிக் கப்பலில் சென்றாள். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்ததில் அவள் அஞ்சி, தன் கப்பலை மீண்டும் அலெக்சாண்ட்ரியாவுக்கே திருப்பினாள். களத்தில் போர் புரிந்தபோதும், காதலியின் மீது கண் வைத்திருந்த ஆன்டனி பாதிப் போரில் படையைக் கைவிட்டு, அவளைப் பின்தொடர்ந்தான். முத்தத்தின் வெதுவெதுப்பில் ஒரு மாவீரனின் சித்தம் சிதைந்ததில், வீரர்கள் மனம் நொந்தனர். வெற்றி மாலை ஆக்டேவியஸின் தோளில் விழுந்தது.

ஏற்கெனவே ஜூலியஸ் சீஸர், பாம்பே இருவரையும் காதல் வலை விரித்துச் சீரழித்தவள் ஆயிற்றே இந்தக் கிளியோபாட்ரா... தோல்வியுற்ற தன்னையும் அவள் வெறுத்துவிடுவாள் என்று எண்ணிய ஆன்டனி, அவள் காதலைச் சந்தேகித்துக் கடும் மொழியில் வசைபாடினான். அவனது சினத்தைத் தவிர்க்க நினைத்த அவள், 'ஆன்டனி' என்ற வார்த்தையைக் கடைசியாக உச்சரித்தபடி, கத்தியால் குத்தித் தற்கொலை செய்துகொண்டதாக ஒரு பொய்யைச் சொல்லும்படி மார்டியன் என்கிற அலியை அனுப்பி வைத்தாள். காதலி இல்லாத உலகில் ஒரு நொடியும் வாழ விரும்பாத ஆன்டனி, வாளை நிலத்தில் நட்டு, அதன்மேல் விழுந்து குற்றுயிராகக் கிடக்கும் நிலையில், தன் காதல் தேவதை உயிரோடு இருப்பதை அறிந்தான். அவளிடம் தன்னைக் கொண்டு சேர்க்கும்படி காவலரிடம் வேண்டினான்.

கல்லறை மாளிகையில் இருந்த கிளியோபாட்ராவிடம் சேர்ந்த ஆன்டனி, 'அன்பே! உன் கடைசி முத்தத்துக்காக இன்னும் என் உயிர் காத்திருக்கிறது' என்று சொல்லிக் கண் மூடினான். 'வானத்தில் வட்டமிடும் நிலவின் கீழுள்ள மண்ணுலகில் இனி சிறப்புக்குரியவை எதுவுமில்லை' என்று வாய்விட்டு அழுத அந்தப் பேரழகி, ஏற்கெனவே திட்டமிட்டபடி கொண்டு வரப்பட்ட விரியன் பாம்பை மார்பில்

ஏந்தினாள். 'குழந்தை என் மார்பில் தவழ்ந்து பால் அருந்துவது, என்னைக் கிறங்கச் செய்கிறது' என்று சொன்னபடி இறுதியாக உறங்கிப் போனாள். மகுடம் தாங்கிய மாவீரர்களும், பேரழகுப் பேரரசிகளும் காதல் வலையில் சிக்கியதால், கல்லறைக் காவியங்களாகவே கடைசியில் முடிந்தனர்.

நெப்பொலியன் போனபார்ட்... ஒரு சாதாரண படை வீரனாய் இருந்து, தன் பேராற்றலால் படைத்தலைவனாய் உயர்ந்து, ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகளைத் தனக்கு சாதகமாய் வளைத்துப் பேரரசனாய் மகுடம் சூட்டிக் கொண்டவன். பாரிசில் கலவரத்தைத் தடுக்க மக்களிடமிருந்து ஆயுதங்களை பறிக்க ஆணையிட்டான். ஈஜில் என்ற 12 வயது இளைஞன் ஒரு நாள் நெப்போலியனிடம் வந்து நின்றான். ‘கிலட்டின் தலைவெட்டிக் கருவிக்கு இரையாகிவிட்ட தன் தந்தையின் வாளை அவர் நினைவாக வைத்திருக்க தன்னிடம் தரும்படி வேண்டினான். மனமிறங்கிய போனபார்ட், அந்த வாளை வரவழைத்து அவனிடம் தந்து வாழ்த்தி அனுப்பினான். நெப்போலியனின் பெருந்தன்மையைப் பாராட்ட ஈஜிலின் தாய் ஜோசபைன் நேரில் வந்தாள். முதல் சந்திப்பிலேயே இருவிழிகள் கலந்து இதயங்கள் இணைந்தன.

ஜோசபைன் ஒரு விதவை. இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். நெப்போலியனைவிட வயதில் மூத்தவள். ஆனால், இளமை கொஞ்சமும் கலையாத பேரழகு பெட்டகம். கால நடையில் காதல் வளர்ந்து பதிவுத் திருமணத்தில் முடிந்தது. குடியரசுக்கு விடை கொடுத்துவிட்டு, ஃபிரெஞ்சு பேரரசின் முடிசூட்டிக் கொண்ட போனபார்ட், ஜோசபைனை பேரரசியாய் அமரச்செய்து அழகுபார்த்தான். காதல் வசந்தத்தில் 15 ஆண்டுகள் கடந்தன. தனக்குப் பின்னால் ஆட்சியில் அமர்வதற்கு நெபோலியனுக்கு ஒரு வாரிசைப் பெற்றுத்தர ஜோசபைனால் முடியவில்லை. வேறுவழியின்றி நெப்போலியன் அவளை விவாகரத்து செய்துவிட்டு ஆஸ்திரிய இளவரசி மரிய லூயிசாவை மணம் முடித்தான். நெபோலியன் நலனுக்காக ஜோசபைனும் விலகிக்கொண்டாள். ஆனால், இருவரும் ஒருவரை ஒருவர் மறக்க முடியாமல் தவித்தனர்.

ரஷ்யப் படையெடுப்புக்குப் பின்பு நெப்போலியனின் வீழ்ச்சிப் படலம் தொடங்கியது. தோல்வி தவிர்க்க முடியாதது என்று தெரிந்த நிலையில் போருக்கு புறப்பட்டவன் ஜோசபைனை சந்தித்தான். ‘என்றும் என் அன்பிற்குரியவளே! நல்வாய்ப்புத் தேவதைகளால் இதுவரை ஆசிர்வதிக்கப்பட்ட நான் முதன்முதலாய் இன்று ஆபத்து

வளையத்திற்குள் சிக்கிக் கொண்டேன். இந்த நேரத்தில் உன்னைத் தவிர உலகில் என் நம்பிக்கைக்குரியவர் வேறு எவரும் இல்லை...' என்று கட்டித் தழுவி கண்ணீர் விட்டான். எல்பாத் தீவில் அவன் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு, ' ஜோசபைன்... இனி வாளுக்கு விடை கொடுத்துவிட்டு பேனா பிடித்து என் வரலாற்றை வரையப் போகிறேன். என் நெஞ்சில் என்றும் நீங்காமல் நின்று ஒளிவிடும் எழிலரசியே! உன்னை எப்போதும் மறவாத என்னை நீ மறவாமல் இருக்க வேண்டும்.' என்று உருக்கமாக கடிதம் எழுதி அனுப்பினான். நெப்போலியன் சாவின் மடியில் சேர்ந்தபோது வாய்திறந்து சொன்ன கடைசி வார்த்தை, 'ஜோசபைன்!' உலகத்தை ஆதிக்கம் செய்தவன் உள்ளத்தைக் காலம் முழுவதும் ஆதிக்கம் செய்த அதிசயம் காதல்.



அடால்ப் ஹிட்லர்... மூன்றரைக் கோடி மக்களுக்கு மரணம் தந்தவன். 60 லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தவன். படுகொலை செய்யப்பட்டவர்களின் தங்கப் பற்களையும், திருமண மோதிரங்களையும் கொள்ளையடித்து, அவர்களுடைய சடலங்களை சோப்பு தயாரிக்கப் பயன்படுத்தியவன்.

இந்த இறுகிப்போன இதயப் பாறையிலும் காதல் ஈரம் கசிந்தது. தனது 40-வது வயதில் 17 வயது ஈவா பிரானை ஹிட்லர் சந்தித்தான். அதுவரை யாரையும் மணமுடிக்காதவன், வாழ்நாள் முழுவதும் ஈவாவிடம் மட்டுமே காதல் கொண்டான். ஜெர்மனியின் சான்சலராய் பதவியேற்ற பின்பும், அவளை அவன் கை விடவில்லை. ஆண்டுதோறும் அவள் பிறந்த நாளில் வைர நகைகளைப் பரிசளித்து வாழ்த்தினான். ஹிட்லருக்கு 50 வயதானபோது, மிகவும் இளமையாக இருந்தாள் ஈவா. அவளை வேறு யாரையாவது மணமுடித்து வாழும்படி வற்புறுத்தினான் ஹிட்லர். 'என்னை நீங்கள் மணமுடிக்காமல் போனாலும், உயிர் உள்ள வரை நீங்களே என் கணவர்' என்றாள் ஈவா பிரான்.

இரண்டாம் உலகப் போரில் மிக மோசமான தோல்வியைத் தழுவி, ரஷ்யப் படைகள் கைது செய்வதற்கு பெர்லினில் நுழைந்துவிட்ட நிலையில், சுரங்க மாளிகையின் ரகசிய அறையில் தங்கியிருந்த ஹிட்லர், தன் ஆசைக் காதலி ஈவாவிடம், தன்னைவிட்டு விலகி வெளியேறும்படி வேண்டினான். 'உங்களைவிட என் உயிர் பெரிதில்லை. இப்போதாவது என்னை மணந்து கொள்ளுங்கள். உங்கள் மனைவி என்ற உரிமையோடு நானும் மகிழ்ச்சியுடன் சாவேன்' என்ற ஈவாவின் காதலில் ஹிட்லர் நெகிழ்ந்தான். இருவருக்கும் மரணப் பொழுதில் மணவிழா நடந்தது. அதன்பின் ஹிட்லர் தற்கொலை செய்து, மேஜை மேல் சாய்ந்து சரிந்தான். அவன் காலடியில் ஈவா பிரான் சடலம் தலைகுப்புற விழுந்து கிடந்தது. கல்லுக்குள்ளும் ஈரம் கசியும் என்பதற்கு ஹிட்லரின் காதலே சாட்சி!

'அமெரிக்காவிலேயே அசிங்கமான முகம் என்னுடையதுதான்' என்றவர் ஆபிரகாம் லிங்கன். ரட்லஜ் என்கிற அழகியிடம் அவருக்குக் காதல் பிறந்தது. ஆனால், அசிங்கமான தன்னை அவள் காதலிக்க வாய்ப்பில்லை என்று எண்ணி, உள்ளுக்குள்ளேயே தன் காதலை வளர்த்து உருக்குலைந்தார். ஒரு நாள், அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடந்து முடிந்தது. லிங்கனுக்கு உலகமே இருண்டது.

அந்தப் பெண்ணை மணமுடித்தவன் ஊர் சென்று திரும்புவதாகச் சொல்லிவிட்டுப் போனான். போனவன் திரும்பவே இல்லை. ரட்லஜ்ஜின் பெற்றோரிடம், அவள் மீதான தன் காதலை வெளிப்படுத்தினார் ஆபிரகாம். பெற்றோர் மகிழ்ந்தனர். பெண்ணும் இசைந்தாள். மணநாள் நிச்சயிக்கப்பட்டது. லிங்கனின் துரதிருஷ்டம், அவள் திடீரென்று நோயில் விழுந்து இறந்து போனாள். இதயம் ரணமான லிங்கன், 'பொழியும் மழையும், வீழும் பனியும் என் காதலியின் கல்லறையின் மேல் விழுகின்றனவே' என்று கதறி அழுதார்.

காலம் நடந்தது. காயம் ஆறியது. அடுத்த காதலில் அடியெடுத்து வைத்தார் ஆபிரகாம். அவள் பெயர் மேரி ஓவன். விதவை. லிங்கனின் காதலை மனம் நோக மறுதலித்தாள் அவள். பொதுவாழ்வில் தோல்விகளையே படிக்கட்டுகளாக்கி, வெற்றி மாளிகையில் வாசம் செய்த லிங்கன், மூன்றாவது முறை தன் நண்பரின் மைத்துனி மேரி டாட் மீது காதல் கொண்டு, அவளையே மணமுடித்து இறுதிவரை இன்பமாக இல்லறம் நடத்தினார். ஆபிரகாம் லிங்கனாகவே இருந்தாலும், மூன்று முறை காதல் வந்தால், அதற்குப் பெயர் காதலே இல்லை.

நம் வாழ்காலச் சமூகத்தில், காதல் என்ற போர்வையில் காமம்தான்

களிநடம் புரிகிறது. எங்கோ அரிதாய்... அபூர்வமாய்... குறிஞ்சிப் பூவாய் சில காதலர்கள்.

காதலுக்கு உடம்பு தேவையில்லை என்பதல்ல. ஆனால், காதல் வெறும் காமம் அல்ல. காமத்துக்கு உடம்பு ஒன்றுதான் குறி. காதல், உடம்பின் சதை எலும்புகளை ஊடுருவி உள்ளத்தின் உணர்வுகளை அலங்கரிக்கும். காமம் உடம்பில் தொடங்கி உடம்பிலேயே முடிந்துபோகும். காதலோ உதிரத்தின் அணுக்களில் கலந்துவிடும்.

இரண்டு இதயங்களும் அன்பிலே தோய்ந்து, அன்பிலே நனைந்து, அன்பிலே தவழ்ந்து, அன்பிலேயே ஐக்கியமாவதுதான் காதலின் இலக்கணம்!


வீணையில் விதம் விதமாக ராகங்கள் வாசிக்கலாம். ஆனால், கைப்பிடித்தவருக்காக வாசிக்கும் காதல் ராகம் கடைசி மூச்சுவரை சுருதியும், லயமும் கலையாமல் சுத்தமாக ஒலிக்க வேண்டும். காதலென்பது ஒரு மகா யக்ஞம். அது முனிவர்களின் தவத்தைவிடவும் புனிதமானது. சாதிகளற்ற சமுதாயம் என்றாவது ஒரு நாள் காதலினால் மட்டுமே சாத்தியம் ஆகும். ஆதலால் மானிடரே, காதல் செய்வீர்!

# 20

# மரியாதை

‘புரட்சி இயக்கம் கலகக் காரர்களின் பாசறையோ, பயங்கரவாத அமைப்போ அல்ல. இந்த இயக்கத்தில் உள்ளவர்களுக்குச் சாதாரண கலகமோ, குழப்பமோ லட்சியமில்லை. சில நேரங்களில் இவர்கள் பயங்கர செயல்களில் ஈடுபட்டாலும், இவர்களின் முடிவான லட்சியம் அரசியல் புரட்சியே’ என்று வன்முறையை ஆதரித்தவர் நேதாஜி.

‘உயர்ந்த நோக்கங்களுக்காகவே இருந்தாலும், வன்முறையை ஆயுதமாக ஏந்தினால் அதை ஒருபோதும் என்னால் அங்கீகரிக்க முடியாது’ என்று மிகத் தெளிவாகவும், உறுதியாகவும் குரல் கொடுத்தவர் காந்திஜி.



இப்படிக் கொள்கையளவில் இரு வேறு துருவங்களாக இருந்தபோதிலும், மகாத்மாவை அன்பு தவழ 'தேசப் பிதா’ என்று அடைமொழி கொடுத்து அழைத்தார் நேதாஜி. அவரைப் பாசம் பெருக 'என் மகனைப் போன்றவர்’ என்று சொல்லி நெகிழ்ந்தார் மகாத்மா. இந்த மரியாதைப் பண்புதான் நம் தாய் மண்ணுக்கே உரிய தனிப்பெரும் பாரம்பரியப் பெருமை.



பம்பாயில் நிகழ்ந்த, மகாத்மாவுடனான முதல் சந்திப்பிலேயே அவருடன் நேதாஜிக்குக் கொள்கை முரண்பாடு முகிழ்த்தது.

சௌரி சௌராவில் காவல்துறையினர் 22 பேர் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தின்போது உயிரோடு தீவைத்துக் கொளுத்தப்பட்டதைக் கேள்விப்பட்ட காந்திஜி, காங்கிரஸ் தலைவர்கள் யாரையும் கலக்காமல் போராட்டத்தை விலக்கிக்கொள்ள, தேசிய விடுதலை இயக்க வேள்வியில் தேக்கநிலை உருவானது. மகாத்மாவின் செயலால் மனம் காயப்பட்ட மோதிலால் நேருவும், வங்கத் தலைவர் சித்தரஞ்சன் தாஸும் காங்கிரஸுக்குள்ளேயே சுயராஜ்ய கட்சியைத் தொடங்கினர். நேதாஜி, சித்தரஞ்சனைத் தன் அரசியல் தலைவராக ஏற்று, அவர் வழி நடந்தார். புதிய கட்சியின் செயலாளராகவும், அதனுடைய கொள்கை விளக்க இதழ் 'பங்களா கதா'வின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார்.

பின்னர், காங்கிரஸ் இயக்கத்தில் நேதாஜி படிப்படியாக வளர்ந்தார். முதலில் வங்காளத்தின் காங்கிரஸ் தலைவரானார். அதன்பின் அகில இந்திய இளைஞர் காங்கிரஸ் தலைவராகவும், அகில இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றினார். இளைஞர்களும், தொழிலாளர்களும் தங்கள் தலைவராக அவரை

இதயத்தில் ஏற்றிப் போற்றினார். தேசத் தலைவர்களில் மகாத்மாவுக்கும், நேருவுக்கும் அடுத்த இடத்தை அவர் பெற்றார். 1930-ல் கல்கத்தாவின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இடையறாத பணிகளால் உடல் நலிவுற்ற நேதாஜி மருத்துவ சிகிச்சைக்காக வியன்னா சென்று அங்கே சிகிச்சை பெற்றபோது, ஓய்வு நேரங்களில் 'இந்தியப் போராட்டம்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்த நூலில், 'காங்கிரஸின் சர்வாதிகாரியாகத் திகழ்பவர் மகாத்மா காந்தி. அவருடைய கொள்கையை ஏற்காதவர்களுக்குக் காரியக் கமிட்டியில் இடமில்லை' என்றும், 'வட்ட மேஜை மாநாட்டுக்காக இங்கிலாந்தில் இருக்கும்போது மகாத்மா அரசியல் இயக்கத் தலைவராகவும், உலக உபதேசியாகவும் இரு வேடங்களில் நடித்ததால்தான் தோல்வி அடைந்தார்' என்றும் கடுமையாக விமர்சித்தார்.

இவ்வளவு விமர்சனங்களுக்குப் பின்பும் காந்திஜி, நேதாஜியின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஈடு இணையற்ற தேசபக்திக்கும் மதிப்பளித்து, அவர் வெளிநாட்டில் இருந்தபோதும், 1938-ல் இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக அவரைத் தேர்ந்தெடுக்கச் செய்தார். அதுதான் நேதாஜிக்கு மகாத்மா காட்டிய மரியாதை.

குஜராத்தில், ஹரிபுரா காங்கிரஸ் மாநாட்டில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 51-வது தலைவராக இளம் வயதில் பதவியேற்றார்.அவர்தான் முதன்முதலாக நேருவின் தலைமையில் தேசிய திட்டக்குழுவை அமைத்தார். காங்கிரசை தன் தலைமையின் கீழ் தீவிர இடதுசாரிப் பாதையில் இளைஞர்களையும், தொழிலாளர்களையும் ஒன்றுதிரட்டி, பிரிட்டிஷ் அரசுக்கு அச்சமூட்டும் வகையில் நடத்த முயன்றார். அவருடைய போக்கு மிதவாதிகளுக்கு மனவருத்தம் தந்தது. காந்தியப் பாசறையில் அதிருப்தி வளர்ந்தது.

ஓராண்டு பதவிக்காலம் முடிந்ததும், மீண்டும் இரண்டாவதுமுறை தலைமைப் பதவியில் நீடிக்க அவர் விரும்பிய போது, மகாத்மா மறுத்தார். மகாத்மாவின் எதிர்ப்பையும் மீறி நேதாஜி இயக்கத் தேர்தலை சந்தித்தார். அண்ணலின் வேட்பாளராக ஆந்திராவைச் சேர்ந்த பட்டாபி சீதாராமையா களத்தில் நிறுத்தப்பட்டார்.ஆனால், கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்ட காந்தியடிகளின் செல்வாக்கையும் மீறி நேதாஜி வெற்றி பெற்றுத் தலைவரானார். ‘பட்டாபியின் தோல்வி என் தோல்வி!’ என்று தேசப்பிதா பகிரங்கமாக அறிவித்தார்.

மத்தியப் பிரதேசத்தில் உள்ள திரிபுரியில் 52-வது காங்கிரஸ் மாநாடு தொடங்கியது. 'ஆறு மாதங்களுக்குள் சுதந்திரம் வழங்காவிடில், தேசம் தழுவிய அளவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக மிகக் கடுமையான போராட்டம் நடத்தப்படும்' என்று நேதாஜி கொண்டுவந்த தீர்மானம் காந்திஜியின் எதிர்ப்பால் நிராகரிக்கப்பட்டது. இயக்கத்தின் தலைவரால் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக்கூடக் கொண்டுவர முடியவில்லை. தன் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில், தலைமைப் பொறுப்பிலிருந்து விலகினார் நேதாஜி.

இரண்டாம் உலகப் போருக்கான சூழல் ஐரோப்பாவில் கனிந்து வரும் நிலையைப் பயன்படுத்தி, இந்திய மண்ணில் பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிரான கிளர்ச்சியை வேகப்படுத்த வேண்டும் என்ற நேதாஜியின் குரலுக்குக் காங்கிரஸ் தலைவர்கள் செவிசாய்க்காததால், கட்சிக்குள்ளேயே இளைஞர்கள், இடதுசாரிகள் ஆதரவுடன் 'ஃபார்வர்ட் பிளாக்' என்ற அமைப்பைத் தொடங்கினார் நேதாஜி. நாடு முழுவதும், பிரிட்டிஷ் அரசிடம் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று, மக்களிடையே தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார். நேதாஜி மீது காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துக் கட்சியிலிருந்து வெளியேற்றியது. பிரிட்டிஷ் அரசு அவரை மீண்டும் சிறையில் வைத்தது. விசாரணையின்றி தன்னைச் சிறையில் வைத்ததை எதிர்த்து, நேதாஜி உண்ணாவிரதம் இருந்தார். அவர் உடல்நிலை மிகுந்த நலிவுற்றதும், அஞ்சிய அரசு அவரை வீட்டுச் சிறையில் வைத்தது.

வீட்டுச் சிறையில் நாற்பது நாட்கள் இருந்த நேதாஜி தாடி வளர்த்து, குல்லாய் அணிந்து மௌல்வி முகமது ஜியாவுதீன் என்ற பெயரில் காவலர்கள் கண் முன்னே வெளியேறி தன் சகோதரி மகன் சிசில்குமார் போஸ் உதவியுடன் கல்கத்தாவிலிருந்து காரில் புறப்பட்டு 200 கி.மீ. தூரத்தில் இருந்த கோமோ ரயில் நிலையத்தில் இறங்கி, அங்கிருந்து ரயிலில் பெஷாவருக்குப் பயணித்து, கைபர் கணவாய் வழியாகக் காரில் காபூல் செல்ல முயன்று, வழியில் கார் பழுதுபட்டதால் நடைப்பயணம் மேற்கொண்டு, லாரி ஓட்டுநர் உதவியால் காபூலை அடைந்து, உத்தம்சந்த் என்ற இந்தியர் துணையில் ஆறு வாரம் மறைந்திருந்து, இறுதியில் இத்தாலி தூதரகத்தின் மூலம் 'ஆர்லண்டோ மசோட்டா' என்ற பெயரில் பாஸ்போர்ட் பெற்று, பொகாரா - சமர்கண்ட் வழியாக மாஸ்கோவை அடைந்து, அங்கிருந்து விமானத்தில் பெர்லின் போய்ச் சேர்ந்தார். அந்த ‘கிரேட் எஸ்கேப்’ நடந்து முடிய 71 நாட்கள் ஆயிற்று.

பின்னர், ராஷ் பிகாரி போஸும், கேப்டன் மோகன் சிங்கும் உருவாக்கிய இந்திய தேசிய ராணுவத்துக்குத் தலைமை ஏற்க வரும்படி

நேதாஜிக்கு ராஷ் பிகாரி அழைப்பு விடுக்க... ஜெர்மனியின் கீல் துறைமுகத்திலிருந்து தன் ஆஸ்திரிய மனைவி எமிலியிடமும், இளங்குழந்தை அனிதாவிடமும் கடைசியாக விடைபெற்றுக் கிளம்பினார் நேதாஜி.



பிப்ரவரி 8, 1943-ல் அபிட் ஹசன் என்ற தோழருடன், போர் முற்றுகையில் கடல் மீதும் குண்டுமழை பொழிந்த நேரத்தில் உயிர் பயம் சிறிதுமின்றி, நீர்மூழ்கிக் கப்பலில் அட்லாண்டிக் பெருங்கடல் வழியாக மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையைச் சுற்றி, இந்தியப் பெருங்கடலில் நுழைந்து சுமத்ரா சேர்ந்து, அங்கிருந்து விமானத்தில் டோக்கியோ அடைந்தார். அந்த 90 நாள் பயணத்தில் உலகம் அவருடைய துணிவின் எல்லையை அறிந்து வியந்தது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழ்ந்த இந்தியர்கள் அனைவரும் நேதாஜியை வானத்திலிருந்து பூமியில் இறங்கிய தேவதூதராகவே தரிசித்தனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் தங்கள் வேலை துறந்து இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்தனர். கோடி கோடியாய் தேவைப்படும் நிதியை மக்கள் அள்ளிக் கொடுத்தனர். இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் அது ஓர் ஈடு இணையற்ற அத்தியாயம்.

நேதாஜியின் தீவிரவாதத்தை மகாத்மாவால் ஏற்க முடியவில்லை.

அவருடைய தலைமையில் காங்கிரஸ் வன்முறைப் பாசறையாக வடிவம் பெற்றுவிடுமோ என்று அகிம்சை வழி நின்ற அண்ணல் அஞ்சினார். நேதாஜியால் மகாத்மாவின் சாத்வீகப்  போராட்ட அணுகுமுறையைச் சிறிதளவும் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனவேதான், காந்தியக் கொள்கைகளுக்கு எதிராக அவர் களம் அமைத்தார். ஆனால், கையாண்ட அணுகுமுறைகளில் முற்றிலும் இரு துருவங்களாக நின்ற இருவரும் ஒருவரையொருவர் மதித்துப் போற்றினர்; மரியாதை செலுத்தினர்.

மகாத்மாவின் 75-வது பிறந்த நாளன்று, பாங்காக்கிலிருந்து நேதாஜி அளித்த வானொலிச் செய்தியில், 'இந்தியாவுக்கும் இந்திய விடுதலைக்கும் காந்திஜி செய்திருக்கும் சேவை இணையற்றது. எக்காலத்தும் இந்திய வரலாற்றில் மகாத்மாவின் பெயர் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும்’ என்று மனம் நெகிழ்ந்து பிரகடனம் செய்தார். அது மகாத்மாவுக்கு நேதாஜி செய்த மரியாதை.

இந்திய எல்லையில் இம்பால் வரை நுழைந்து சாதனை படைத்த இந்திய தேசிய ராணுவம், ஜப்பான் வீழ்ச்சியின் விளைவாகத் தோல்வியைச் சந்தித்த பின்பு, தைபேயில் விமான விபத்தில் நேதாஜி உயிர் துறந்ததாக அறிந்து வருந்திய மகாத்மா, 'நேதாஜியின் தேசபக்தி யாருக்கும் குறைந்ததன்று. அவருடைய எல்லா நடவடிக்கைகளிலும் வீரம் ஒளிர்ந்தது. அவருடைய உயர்ந்த நோக்கம் தோற்றுவிட்டது. உலகில் யார்தான் தோற்கவில்லை? அவர் என்னுடைய மகனைப் போன்றவர்’ என்று ‘ஹரிஜன்’ இதழில் எழுதினார்.

'என் கருத்து மிகச் சரியானது என்று நான் அறிந்தபோதிலும், அதை மறுப்பவர்க்கு எல்லா வாய்ப்புகளையும் தருவதற்குப் பெயர்தான் மரியாதை’ என்று விளக்கமளித்தார் எமர்சன். 'நான் சொல்வதை மட்டுமே உலகம் ஆமோதிக்க வேண்டும்’ என்பவர்கள் ஆணவத்தின் மடியில் அமர்ந்திருப்பவர்கள். சர்வாதிகாரத்திலேயே சகிக்க முடியாதது கருத்துச் சர்வாதிகாரம். கருத்து மாறுபடலாம். கொள்கை வேறுபடலாம். ஆனால், எந்த நிலையிலும் மாற்றாரை மதிக்கும் மரியாதைப் பண்பு மட்டும் நிறம் மாறக் கூடாது. 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு’ என்று அண்ணா சொன்னதற்கு இதுதான் பொருள்.

மகாத்மாவின் கொள்கையில் மாறுபட்ட நேதாஜி அவரை அன்பு தவழ ‘தேசப்பிதா‘ என்று அடைமொழி கொடுத்து அழைத்தார். நேதாஜியின் அணுகுமுறையில் வேறுபட்ட மகாத்மா அவரைப் பாசம் பெருக ‘என் மகனைப் போன்றவர்‘ என்று சொல்லி நெகிழ்ந்தார். இந்த

மரியாதைப் பண்புதான் நம் தாய்மண்ணுக்குரிய தனிப்பெரும் பாரம்பரியப் பெருமை.

# 21

# மரணம்

மனித குலத்துக்கு மரணம் மட்டும் இல்லாமல் போனால் என்னவாகும்?

வாழ்க்கை வண்ணங்கள் இல்லாத வானவில்லாகி விடும்!

இறப்பே இல்லாவிடில் மனிதனுக்கு ஒரு கட்டத்தில் வாழ்க்கையின் மீதுள்ள பிடிப்பு பறிபோய்விடும். சருகுகளே இல்லாவிட்டால் புதிய தளிர்களுக்கு யார் பூபாளம் பாடுவது? கரையே இல்லாத கடலைக் காணக்கூடுமா? முடிவே இல்லாத நதியைத் தேடலாகுமா? கரையற்ற கடலும், முடிவற்ற நதியும் இயற்கையின் மூலதர்மத்துக்கு முரணானவை. ஒவ்வொரு மூலத்துக்கும் ஒரு முடிவு தவிர்க்க முடியாதது. மனித வாழ்க்கையில் மரணமும் அப்படித்தான்!



மரணம் ஆராதனைக்குரியது; அச்சத்துக்குரியதன்று. வாழ்க்கையைச் சரியான வழியில் அதுதான் செலுத்துகிறது. மனிதனை மேலான நெறியில் அதுவே செதுக்குகிறது. ஞானம் போதிப்பதில் எந்த ஆசானும் மரணத்துக்கு இணையாக முடியாது.



ஒரு நூறு ஞானிகளும், ஓராயிரம் புத்தகங்களும் சாதிக்க முடியாததை ஒரேயொரு மரணம் எளிதாகச் சாதித்துவிடுகிறது. மரணப் பிரக்ஞை மட்டும் மனிதனுக்கு இல்லாவிட்டால், அத்தனை நியாயங்களும் அன்றாடம் சிலுவையில் அறையப்படும். ஒன்றின் மரணம் மற்றொன்றின் ஜனனம்.

பூ காயாகி, காய் கனியாகி, கனி விதையாகி, விதை மீண்டும் விருட்சமாவதில் இந்த நியதியின் நிறம் தெரிகிறது. பூவின் மரணமே கனியின் ஜனனம். ஒன்று உரமானால் இன்னொன்று உருவாகும். மரணம் அனைவருக்கும் பொதுவானது. அதனாலேயே மரணம் ஆண்டவனுக்குச் சமமாக ஆகி விடுகிறது. இதோ... அதற்குச் சான்றுகள் சில!

ஔரங்கசீப்... இந்தியாவின் முக்கால் பகுதியை ஆண்ட கடைசி முகலாயப் பேரரசர். வாழ்வின் பெரும் பகுதியை போர்க்களங்களில் செலவழித்தவர். தந்தை ஷாஜஹானை ஆக்ரா கோட்டையில் சிறை வைத்துவிட்டு, அரியாசனத்தில் அமர்ந்தவர். ஆதிக்கப் போட்டியில் சொந்த சகோதரர்களையே மனச்சான்றின் உறுத்தலின்றி மரண வாசலுக்கு அனுப்பிவைத்தவர்; இயன்றவரை எல்லாரையும் எதிரிகளாக்கிக் கொண்டவர். வாழ்வின் அந்திமத்தில் தன் தவறுகளுக்கு வருந்தினார். தன் மகன் ஆஸாமுக்கு மரணப்பொழுதில் அவர் எழுதிய கடிதத்தில், 'நான் தனியாக வந்தேன். முகவரியற்ற புதியவனாய்ப்

புறப்படுகிறேன். நான் யார் என்பதும் இதுவரை என்ன செய்தேன் என்பதும் எனக்கே புரியவில்லை. என் அதிகாரத்தின் நிழலாய் சோகம் மட்டுமே தொடர்ந்தது. இறைவன் என் இதயத்தில் இருந்தாலும் அவரை என்னால் காண முடியவில்லை. நிலையற்ற இந்த வாழ்க்கையில் நேற்று போய்விட்டது. நாளைப் பொழுதில் நம்பிக்கை இல்லை. என் கடைத்தேற்றம் குறித்தும், நியாயத் தீர்ப்பு நாளில் கிடைக்கவிருக்கும் தண்டனை குறித்தும் கவலை கொள்கிறேன்' என்று கண்ணீர் ததும்பக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆயிரம் குறைகள் உடைய ஔரங்கசீப்பிடம் அதிசயிக்கத்தக்க நிறைகளும் இருந்தன. இந்தியாவின் மாபெரும் பேரரசாக விளங்கிய அவர் எளிமையாக வாழ்ந்தார். தன் வாழ்க்கைச் செலவுகளுக்குத் தன் கையால் குல்லாய் தைத்தும், திருக்குர்-ஆனைப் படியெடுத்தும் பணம் பெற்றார். அவர் எழுதிவைத்த உயிலில், 'நான் என் கைகளால் தயாரித்த குல்லாய்களை விற்றதில் பெற்ற நான்கு ரூபாய், இரண்டு அணாவை எனக்குச் சவச் சீலை வாங்கப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். திருக்குர் -ஆனைப் படியெடுத்துத் தந்ததில் பெற்ற ரூ.305-ஐ ஏழைப் பக்கிரிகளுக்குத் தானமாகத் தந்துவிடுங்கள். என் சவ ஊர்வலத்தில் ஆடம்பரம் வேண்டாம். வெற்றுத் தலையுடன், உடல் முழுவதும் வெண்ணிற ஆடையால் மூடி மண்ணில் புதைத்து விடுங்கள். என் கல்லறையின் மீது விதானம் எதையும் எழுப்பாதீர்கள்' என்று அவர் குறிப்பிட்டிருந்தபடியே அவரது இறுதிப் பயணம் எளிமையாய் முடிந்தது. 'முடிசார்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பராய்ப் போவதுதான்' கால தேவனின் கடைசித் தீர்ப்பு!

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் ஜப்பான், அமெரிக்காவிடம் சரணடைந்தது. டோக்கியோவின் அரச மாளிகையின் மேல் அமெரிக்காவின் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது. கீழை நாடுகளின் ஈவு இரக்கமற்ற காலனாகக் கருதப்பட்ட ஜப்பான் பிரதமர் டோஜோ, போர்க் கைதியாகச் சிறைப்பட்டு இழிவைச் சந்திக்க விரும்பவில்லை. மருத்துவரை வரவழைத்துத் தன் மார்பில் இதயம் இருக்குமிடத்தின் மேல் சாக்கினால் வரைய வைத்தார் டோஜா. குறி தவறிப் பிழைத்துவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கை அது. மரணம் யாருக்கு, எப்போது, எப்படி வருமென்று யாரும் தீர்மானிக்க முடியாது. அமெரிக்க ராணுவம் அவர் வீட்டை முற்றுகையிட்டதும், இதயத்தைக் குறிபார்த்துத் தன் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டார் டோஜோ. அவர் எதிர்பார்த்தபடி சாவு உடனே அவரைச் சேரவில்லை. மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு விரைவில் நலமடைந்தார்.

எது நடக்கக் கூடாது என்று டோஜோ நினைத்தாரோ அதுதான் அவர் வாழ்வில் நடந்தது. போர்க் கைதியாக அமெரிக்க ராணுவத்தால் விசாரிக்கப்பட்ட டோஜோவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரணத்தைச் சந்திப்பதற்கு முன்பு தான் வரைந்த இறுதி விருப்ப ஆவணத்தில், ‘ஜப்பானியர்களின் உணர்வுகளைக் கடுமையாகக் காயப்படுத்துவதன் மூலம் அவர்களைஅமெரிக்கர்கள் கம்யூனிஸ்டுகளாக்கி விடக்கூடாது. ஜப்பானிய ராணுவத்தின் அரக்கச் செயல்களுக்கு நான் மன்னிப்புக் கோருகிறேன். ஜப்பானியரிடம் அமெரிக்கா கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும்’ என்று விண்ணப்பித்த டோஜோ, 'இப்போது பிரிந்தாலும், இந்த மண்ணில் நான் மீண்டும் பிறப்பேன். பிறந்து என் நாட்டுக்கு நான் பட்ட கடனை அடைப்பேன். விடைபெற வேளை வந்துவிட்டது. ஜப்பான் தீவுகளில் மலர்களின் நறுமணம் மீண்டும் பரவும் வரை நான் பாசி படிந்த நிலத்தின் கீழ் புதைந்து கிடப்பேன்’ என்று எழுதி வைத்தார். தூக்கு மரத்தை நோக்கி அமைதியாகவும் கம்பீரமாகவும் டோஜோ நடந்து சென்று மரணத்தை முத்தமிட்டார்!

சுவாமி விவேகானந்தர், தன் நாற்பதாவது வயதுக்கு முன்பு மரணம் சம்பவிக்கும் என்று முன்கூட்டியே அறிவித்தார். 'ஒருவன் நீண்ட காலம் இருந்து தன் சீடர்களைப் பாழ்படுத்தி விடக்கூடாது. மக்களை முறையாகப் பயிற்றுவித்த பின்பு, தலைவன் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி விரைவில் அவன் விடைபெறாவிடில், அந்த மக்கள் தங்களைத் தாங்களே வளர்த்துக்கொள்ள வழி பிறக்காது. பெரிய மரத்தின் நிழலில் சின்னஞ்சிறு செடிகள், செழித்து வளராது’ என்று விளக்கியவர், 1902 ஜூலை-4, மரணத்தைத் தழுவவிருக்கும் அந்த நாளின் மாலைப்பொழுதில் தன் அறையில் தியானத்தில் அமர்ந்தார். பின்பு, சீடரை அழைத்து அறையின் கதவுகள், சாளரங்கள் அனைத்தையும் திறந்துவைக்கும்படி கூறினார். தமது தலையில் சற்று விசிறும்படி பணித்தார். கால்களைப் பிடித்து விடச் சொன்னார். காலன் வரும் நேரம் நெருங்கியது.

இடப் பக்கம் படுத்திருந்தவர் சிறிது நேரத்துக்குப் பின்பு வலப் பக்கம் திரும்பிப் படுத்தார். அவரது கைகளில் நடுக்கம் தெரிந்தது. சுவாமிஜி ஆழ்ந்து மூச்சை உள்ளிழுத்தார். பிரேமானந்தர் வந்து பரிசோதித்தபோது நாடித் துடிப்பு நின்றிருந்தது. அவரது நாசித் துவாரங்களிலும், வாயிலும் சற்றே ரத்தம் கசிந்திருந்தது. மூளையின் ரத்த நாளங்கள் வெடித்ததால் மரணம் சம்பவித்ததாக விஞ்ஞானம் அறிவித்தது. தான் விரும்பியபடி தன் சமாதி நிலையில் உடலை அவர்

விடுத்ததாக மெய்ஞானம் விளக்கியது. அந்த மகா புருஷர் 39 வருடம், 5 மாதம், 24 நாட்கள் நம்முடன் வாழ்ந்தார்.

மகாத்மா காந்தியின் கடைசி நாட்கள் மாறாத மனவருத்தத்துடன் கழிந்தன. நாடு சுதந்திரம் பெற்ற சூழலில் நடந்தேறிய மதக்கலவரங்களைக் கண்டு அவர் இதயம் ஆறாத ரணமானது. 125 ஆண்டுகள் வாழ விரும்பியவர், 'இறைவா! இந்த இருளிலிருந்து இப்போதே என்னை விடுவித்து உன்னிடம் சேர்த்துக்கொண்டால் நல்லது' என்று உள்ளம் உடைபட்டு வேண்டினார். காலமெல்லாம் தான் பாடுபட்டுக் கட்டி வளர்த்த இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தன் கண் முன்னால் சிதைந்து, மனிதர்கள் ரத்தவெறி பிடித்து அலைவதைத் தடுத்து அமைதியை மீண்டும் நிலைநாட்ட முயன்றார். 'காந்தி ஒழிக' என்றும், 'காந்தி சாக வேண்டும்' என்றும் தனக்கு முன்னால் எதிர்ப்புக் குரல் ஒலிக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

மதக் கலவரங்களுக்கு எதிராக மகாத்மா உண்ணா நோன்பிருந்தார். ஆறு நாட்கள் உண்ணா நோன்பிருந்தவர், அதன் பின் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் மதன்லால் என்பவன் வீசிய வெடிகுண்டிலிருந்து தப்பினார். மரணதேவன் தன்னை நெருங்கும் நாள் தொலைவில் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். 1948 ஜனவரி 29 இரவு. தன் பேத்தி மனுவிடம் மகாத்மா, 'வெடிகுண்டு வீசியதைப்போல் ஒருவர் என் நேரில் நின்று சுட வேண்டும். நான் ராம நாமத்தை உதடுகளில் உச்சரித்தபடி உயிர் விட வேண்டும். அப்போதுதான் மக்கள் அழைப்பதுபோல் நான் உண்மையில் மகாத்மா. அப்படியில்லாமல், நோய்வாய்ப்பட்டு நான் மடிந்தால், 'இவர் மகாத்மா இல்லை' என்று கூரை மீதேறி நின்று நீ கூற வேண்டும்' என்றார்.

ஜனவரி 30 மாலை... பேசிக்கொண்டு இருந்த வல்லபாய் பட்டேலிடம் விடை பெற்றுக்கொண்டு, தாமதமாகிவிட்ட தவிப்புடன் பிர்லா மாளிகைத் தோட்டத்துப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்க மகாத்மா விரைகிறார். பிரார்த்தனை மேடைக்கு மிக அருகில் அவரை வழிமறித்து, கோட்சே கை கூப்பி வணங்குகிறான். மகாத்மாவின் பக்கத்தில் நின்ற மனு காந்தியைத் தள்ளிவிட்டு, கையில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் மூன்று முறை சுட்டான். முதல் குண்டு அண்ணலின் அடிவயிற்றில் பாய்ந்தது. அடுத்து இரு குண்டுகளும் அவர் இதயத்தைத் துளைத்தன. 'ஹே ராம்' என்று உச்சரித்தபடி மகாத்மா மண்ணில் சாய்ந்தார். அன்று மதச்சார்பின்மை, வகுப்புவாத பலிபீடத்தில் ரத்தம் சிந்தியது. அந்த நிலை இன்றும் தொடர்வதுதான் இந்தியாவின் அவலம்!

மரணம் சிலரைக் கடவுளாக்குகிறது. சிலரை மனிதகுலம் உள்ளவரை மறக்க முடியாத மகாத்மாக்களாக மாற்றிவிடுகிறது. இயேசு பெருமான் செங்குருதி கொட்ட, சிலுவையில் அறையப்பட்டு மரணித்ததால்தான் அவரைக் கடவுளின் குமாரனாய் நம்மால் காண முடிந்தது. மத ஒற்றுமைக்காகப் பலியாகி வீழ்ந்ததனால்தான் கரம்சந்த் காந்தி, மகாத்மாவாக மாற முடிந்தது.

மரணம் ஆதிசங்கரரை 32 வயதில் முத்தமிட்டது. இயேசு கிறிஸ்துவை 35 வயதில் முடித்துவிட்டது. பாரதியை 39 வயதில் பதம் பார்த்தது. விவேகானந்தரை 40 நடப்பதற்குள் அணைத்துக்கொண்டது. இப்படி ஞானிகளும், மேதைகளும் இளமையிலேயே இறக்கும்போது கண்ணதாசனைப் போல், 'சாவே உனக்கொரு நாள் சாவு வந்து சேராதோ' என்றே சபிக்கத் தோன்றுகிறது. ஆனால், அப்படிச் சாபமிடுவதும் ஓர் அறியாமையே என்பது ஆழ்ந்து உணர்ந்தால் புரிந்துவிடும்.

300 ஆண்டுகள் வாழ்ந்தும் செய்ய முடியாத சாதனையை இந்த ஞானிகளும், மேதைகளும் 30 வயதிலேயே செய்து முடித்திருக்கிறார்கள். உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை இருக்கிறது. ஒவ்வொரு பிறப்புக்குப் பின்னாலும் ஓர் அர்த்தம் இருக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் கடமையை முடித்துவிடும்போது அதற்குரிய அர்த்தம் பூரணமடைகிறது. பூணத்துவத்துக்குப் பின்பு அந்த ஜீவனுக்கு இந்தப் பூமியில் வேலை இல்லை. அந்த நேரத்தில்தான் மரணம் அதைத் தன் மடியில் ஏந்திக் கொள்கிறது. வந்த வேலையை ஆதிசங்கரரும், இயேசு கிறிஸ்துவும், விவேகானந்தரும், பாரதியும் விரைந்து முடித்தார்கள். அதனால் இளம் வயதிலேயே விடைபெற்றுக் கொண்டார்கள். நீண்ட காலம் வாழ்வதுதான் நிறைவான வாழ்க்கை என்று நினைப்பதும் அறியாமையே. வாழ்க்கையின் பெருமை வாழும் நாட்களில் இல்லை. செய்து முடிக்கும் செயலில் இருக்கிறது.



மரணம் எத்தனையோ மனிதர்களை துன்பங்களிலிருந்து விடுவித்திருக்கிறது. கூட்டுக்குள் அடைபட்ட குருவிக்குக் கிடைக்கும் விடுதலையைப் போன்றது அது. வாழ்க்கையை நேசிக்க வழியில்லாதபோது மரண நேசிப்பு மரியாதை பெறுகிறது. உடல் ரணமாகும்போது உலகிலுள்ள விதவிதமான மருந்துகள் உதவலாம். உயிரே ரணமாகும்போது மரணமே அதற்கு நிவாரணம். இந்த மரணம் மட்டும் மனித வாழ்வில் இல்லையென்றால், உலகமே நரகமாய் உருமாறிவிடும்!

அதற்காக மரணத்தை நாம் நாடிப் போகக் கூடாது. தற்கொலையைப் போல வாழ்க்கையை அவமதிக்கும் செயல் வேறெதுவும் இல்லை. ஒவ்வொருவரிடமும் மரணம் ஒரு நாள் தேவதையைப்போல் தானே வந்து கைநீட்டி அழைக்கும். அதன் அழைப்பு இசையைவிட இனிமையாக இருக்கும்.

அதுவரை ஒவ்வொரு நாளும் மலரைப் போல் மலர்ந்து சிரிப்போம். மற்றவர் நலனுக்காக வாழ்ந்து மணப்போம்!

# 22

# அடக்கம்

அடக்கம் என்ற வேரிலிருந்தே எல்லா நல்ல பண்புகளும் கிளைபரப்புகின்றன. அடக்கம் கொலுவிருக்கும் இதயத்தில்தான் ஆண்டவன் குடியிருப்பான். முற்றிய கதிர்கள் மட்டுமே தரை நோக்கித் தலை தாழ்த்தும். முதிர்ச்சியும், பக்குவமும் அடைந்த மனமே அடக்கத்துடன் பணிந்து நடக்கும்!

தன்னைவிட எதுவுமில்லை என்று ஆணவம் ஆர்ப்பரிக்கும். தனதென்று ஏதுமில்லை என்று அடக்கம் எளிமைகொள்ளும். ஆணவம் நெருப்பைப் போல் மேல் நோக்கி ஆகாயம் அளக்கும். அடக்கம் மலையிலிருந்து கீழிறங்கும் அருவியாய் விழி தாழ்ந்து நிலம் நோக்கும். ஆணவம் நிமிர்ந்து நின்று அடி வாங்கும். அடக்கம் தாழ்ந்து பணிந்து வெற்றி பெறும். அடக்கம் பொதுநலத்தின் தேவாலயம். ஆணவம் சுயநலப் பாழ்மண்டபம்!



மகத்தான மனிதர்கள் அனைவரும் ஆணவத்தை அழித்தவர்கள்; அடக்கமே வடிவாய் வாழ்ந்தவர்கள். உலகின் முதல் சிந்தனையாளராகப் போற்றப்படும் சாக்ரடீஸ், 'எனக்கு எதுவும் தெரியாது என்ற ஒன்றே ஒன்றுதான் எனக்குத் தெரியும்' என்றார். பார்ப்பவர் கண்களுக்குப் பரம் பொருளாகக் காட்சி தந்த கீதையின் நாயகன் கண்ணன், குருக்ஷேத்திரப்

போரின்போது ஒவ்வொரு நாள் போர் முடிந்ததும், தன்னுடைய குதிரைகளை ஒரு சாதாரண தேரோட்டியைப் போல் நீராட்டி உணவூட்டினான். விநயமும், பணிவும்தான் ஆன்றோர்களின் அணிகலன்கள்!



பணிவுடைமை என்ற பண்பு நலனுக்கு முதல் எடுத்துக்காட்டாக என்றும் திகழ்பவர் கர்த்தர் ஏசு. அவரைப் போல் அடக்கத்தின் பெருமையை அகிலத்துக்கு உணர்த்தியவர் வேறு எவருமிலர். உண்மைத் தொண்டனே உயர்ந்த தலைவனாக முடியும் என்று சீடர்களுக்கு அவர் சொன்னதோடு நிற்கவில்லை. தன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அதை அவர் நடைமுறைப்படுத்தினார். எதிரிகளிடம் தன்னை ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு, சீடர்களுடன் கடைசி விருந்தில் கலந்து கொண்டபோது, பாத்திரத்தில் நீரெடுத்து ஒவ்வொருவரின் பாதங்களையும் தன் பரிசுத்தமான கைகளால் கழுவி, தான் அணிந்திருந்த அங்கியால் துடைத்தார் அந்த தேவகுமாரர்.

'நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்வது சரியே. ஆண்டவரும், போதகருமாகிய நான் உங்கள் கால்களைக்

கழுவியது போல், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக் கடவீர்கள்' என்றார் ஏசு. தாழ்ச்சி உடையவனே உயர்வு பெறுவான் என்பது அவருடைய தாத்பரியம். ஏசுவுக்குப் பின்னால் இறைத்தூதராக அரபுப் பாலையில் அவதரித்த நபிகளாரும் அடக்கமே உருவெடுத்தாற்போன்று மக்களிடையே இறுதிவரை வலம் வந்தார்.

'என்னோடு உடன் பிறந்த மக்களே! என்னை அளவுக்கு மீறிப் புகழாதீர்கள். காய்ந்த ரொட்டியையும், உலர்ந்த பேரீச்சம் பழங்களையும் உண்டு வாழ்ந்த ஏழைத் தாய்க்குப் பிறந்தவன் நான். அநாதையாக வளர்ந்தவன். ஆண்டவனின் தூதர் என்று ஏற்றம் பெற்றாலும் உங்களில் ஒருவன்' என்றார் நபிகள்.

'என் சாதனைகள் என்று எதுவுமில்லை. எனக்குக் கிடைத்த வெற்றி, என் மீது இறைவன் செய்த நல்லருள். நான் அற்புதங்கள் எவற்றையும் செய்யவில்லை. இறைவனிடமிருந்து பெற்ற ஒரே அற்புதம் நம் திருமறை' என்று பணிவுடன் உரைத்த பெருமானார். இஸ்லாம் மார்க்கத்தில் ஆணவத்துக்கு அணுவளவும் இடமில்லை என்று அறிவுறுத்தும் வகையில், 'எல்லாப் பெருமையும், புகழும் அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய ஆண்டவனுக்கே' என்று அறிவித்தார்.

தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்களைத் திருக்கோட்டியூர் கோயில் மதிலில் ஏறி நின்று கூவி அழைத்து, அவர்களுக்கு மறைப் பொருளின் ரகசியத்தை அறிவித்த யதிராஜர் ராமானுஜர், தம் சீடர்களுடன் திருமலைக்குச் சென்றார். திருமாலுக்குப் படுக்கை விரித்திருக்கும் ஆதிசேஷனே திருமலையாகத் தோற்றமளிக்கிறார் என்று கருதிய ஆழ்வார்கள் எவரும் கால் வைத்து ஏறாத மலையில், தான் கால் வைத்து மிதித்தல் தகாது என்று தவழ்ந்தே சென்ற உடையவரைத் திருமலை நம்பி எதிர்கொண்டு வரவேற்றார்.

வைணவ உலகம் போற்றிய ராமானுஜர், தன்னை வரவேற்க வந்த திருமலைநம்பியின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். 'என்னை எதிர் கொண்டு வரவேற்கத் தாங்கள் இவ்வளவு தூரம் எழுந்தருள வேண்டுமோ? யாரேனும் சிறியாரை அனுப்பிவைக்கலாகாதா?' என்று பணிவு ததும்பக் கேட்டார் யதிராஜர். நம்பி மெல்ல நகைத்தார். 'அப்பனே! நானும் தேடிப் பார்த்தேன். என்னைவிடச் சிறியவன் எங்கும் தென்படவில்லை. எனவேதான், இந்த சிறியவனே வரவேண்டி நேர்ந்தது' என்று திருவாய் மலர்ந்தார்.

எந்தப் பெருமையும் இல்லாத அற்ப மனிதர்கள் தங்களை

அறிவுச்சுடராக எண்ணி ஆணவத்துள் ஆழ்ந்து கிடக்க, எல்லாப் பெருமைகளையும் கொண்ட பேராற்றல்மிக்க பெரியவர்கள், தங்களை ஏதுமறியாச் சிறியோராகவே சிந்தித்துப் பணிந்து வாழ்வதுதான் குணங்களிலேயே சிறந்த குணம். 'நீசனேன், நிறை ஒன்றுமிலேன்' என்று தாழ்ச்சியுரைப்பதே வைணவப் பெரியார்களின் வாழ்க்கை முறை. சரணாகதி பேசும் வைணவத்தில் ஆணவத்துக்குப் பல்லாண்டு பாடும் வாய்ப்பே வழங்கப்படவில்லை.

சைவப் பெரியார் திருநாவுக்கரசர் அப்பர் என்று அழைக்கப்பட்டார். அவர் திருப்பூந்துருத்தியில் திருமடம் கட்டி அங்கே தங்கியிருந்தார். உமையவளிடம் ஞானப்பால் அருந்திய ஞானசம்பந்தர் அப்பரைக் கண்டு மகிழ, திருப்பூந்துறைக்கு விரைந்தார். ஊரின் எல்லையை சம்பந்தர் அடைந்த செய்தியறிந்து அப்பர் எதிர்கொள்ளச் சென்றார். சென்றவர் சம்பந்தர் அறியாவண்ணம், அவர் அமர்ந்து பயணித்த முத்துச் சிவிகையைத் தாங்குபவருடன் தானும் சேர்ந்து சுமந்தார். அப்பர் தங்கியிருக்கும் இடமறிய, ஞானசம்பந்தர் உடன் வந்த சீடர்களிடம், 'அப்பர் எங்கிருக்கிறார்?' என்று கேட்டார். அடுத்த கணம், 'தங்கள் திருவடி தாங்கும் பேறு பெற்று, இதோ இங்கிருக்கிறேன்' என்று குரல் கொடுத்தார் நாவுக்கரசர்.

தான் அமர்ந்திருக்கும் சிவிகையை அப்பர் தாங்கி வருவதைக் கண்டு நெஞ்சம் தாளாமல் துடித்தார் சம்பந்தர். அவசர அவசரமாக முத்துச் சிவிகையிலிருந்து கீழிறங்கி அப்பர் திருவடியில் விழுந்தார். அவரைத் தடுத்து இவரும், இவரைத் தடுத்து அவரும் மாறி மாறி விழுந்து வணங்கினர். 80 வயது கடந்த நாவுக்கரசர் 16 வயது இளம்பிள்ளை ஞானசம்பந்தரைப் பணிந்து வணங்கியதைப் பார்த்து அனைவரும் வியந்து ஆரவாரித்தனர்.



'நாயினும் கடையேன்' என்று கருதி வாழ்ந்தவர்கள் மாணிக்க வாசகரும் மற்ற நாயன்மார்களும். செயற்கரிய செய்தும், அது குறித்த பிரக்ஞை அறவே இல்லாமல், தங்களை ஈனப்பிறவிகளாக உள்ளத்தில் தாழ்த்தி, உலகத்தில் உயர்ந்த உத்தமர்கள்.

மகாத்மா காந்தி தன்னை யாரும் மகாத்மா என்று அழைப்பதை விரும்பாதவர். அவருடைய இதயத்தை ஆணவ நெருப்பு ஒருபோதும் எரித்ததில்லை.



சாவர்க்கரும், வ.வே.சு.ஐயரும் தாங்கள் லண்டனில் தங்கியிருந்த இந்தியா ஹவுஸில் தசரா விழாவை நடத்த விரும்பினர். மகாத்மா காந்தி அதற்குத் தலைமை. 700 பேருக்கு உணவளிக்க டாக்டர் ராஜன் தலைமையில் ஆறு பேர் சமையல் வேலையில் ஈடுபட்டனர். விழாவில் பங்கேற்க முன்கூட்டியே வருகை தந்த மகாத்மா, சமையல் வேலை வேகமாக நடப்பதைப் பார்த்தார். அந்த இடத்தில் சாவர்க்கரும், ஐயரும் இல்லை. அங்கிருந்த ராஜனும் மற்றவர்களும் அதற்கு முன்பு காந்திஜியைக் கண்டதில்லை.

மகாத்மா பாத்திரங்களைக் கழுவி, தொட்டியைச் சுத்தம் செய்து, கறிகாய் நறுக்கி முடித்து, தண்ணீர் கொண்டு வந்து வைத்தார். அங்கிருந்தவர்கள் யாரோ ஒரு பொதுஜனம் உதவி செய்வதாக நினைத்து, மகாத்மாவிடம் ஆளுக்கொரு வேலை வாங்கினர். வெளியே போயிருந்த ஐயர் திரும்பி வந்தார். நடப்பதைக் கண்ணால் கண்டு நெஞ்சம் பதறினார். விவரம் அறிந்ததும் அனைவரும் மகாத்மாவிடம் மன்னிப்பு வேண்டினர். 'இந்தப் பணி எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இதில் மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை' என்று புன்னகை புரிந்தார் அண்ணல். வாழ்வின் இறுதி நாள் வரை தன்னை அவர் ஒரு சமூக நல ஊழியராகவே

பாவித்தார்.

அடக்கம் என்பது பிழைப்புக்காகப் போடும் கூழைக் கும்பிடு அன்று. அது சமூக நலன் சார்ந்த ஆழ்ந்த அன்பும், அச்சமின்மையும் உள்ளவர்களின் உள்ளங்களில் உருவாகும் உயரிய பண்பு. கீழ்மையானவர்கள் தங்கள் சுயநலத்துக்காக வளைந்தும், குழைந்தும், வாய் பொத்தி நிற்கும் அடிமைத்தனம் வேறு; அடக்கம் வேறு. அடக்கம் இல்லாத இடத்தில் ஆணவம் பிறக்கும். இரும்பிலிருந்து பிறக்கும் துரு அந்த இரும்பையே அரித்துவிடுவது போல, இதயத்தில் உருவாகும் ஆணவம் அந்த இதயத்தின் நல்ல பண்புகள் அனைத்தையும் அழித்துவிடும்.

பள்ளத்தில் விழுந்து கிடப்பவன் மீது ஆணவம் படிவதில்லை. பேரும், புகழும், பதவியும், பணமும் பெருகப் பெருகத்தான், 'நான்' என்ற ஆணவம் வானளாவ உயர்கிறது. தான் சொல்வதற்கு உலகமே தலையாட்ட வேண்டும் என்று அப்போது அது எதிர்பார்க்கிறது. நினைப்பது நிறைவேறாதபோது ஆணவம் கோப நெருப்பில் குளிக்கும். ஆணவமும், கோபமும் பிரிக்க முடியாத இரட்டைப் பிசாசுகள்.

ஓங்கி உயர்ந்த ஒற்றைப் பனைமரம் ஒருவருக்கும் நிழல் தராது. ஆனால், அகன்று விரிந்து, கிளை பரப்பிக் குடையைப் போல கவிழ்ந்து நிலம் பார்க்கும் மரம் ஆயிரம் பேருக்கு நிழல் தரும். புகையையும், மேகத்தையும் ஒப்பிட்டு அப்துல் ரகுமான் படைத்திருக்கும் கவிச் சிந்தனை ஆழ்ந்த அர்த்தம் செறிந்தது. தாழ்ச்சியின் பெருமை சொல்ல இதைவிட ஒரு கவிதை இல்லை.

காற்றுக்குக் கண்ணில்லை. புகையைக்கூட அது மேலே கொண்டு போய்விட்டது. உயரம் வந்த புகைக்குத் தலைகால் புரியவில்லை. சூரியனையும், சந்திரனையும் அது கர்வத்தோடு பார்த்தது. நானும் உங்களைப்போல் ராஜவீதியில் பவனி வருகிறேன் என்று பெருமை பேசியது. மேகத்தைப் பார்த்து, 'உன்னைப் போலவே நிறம். உன்னைப் போலவே உருவம். உன்னைப் போலவே உயரத்தில் இருக்கிறேன். எனவே நானும் மேகம்தான்' என்றது. சில முட்டாள் மயில்கள் புகையை மேகம் என்று மயங்கித் தோகை விரித்தாடின.

'மேகம்

கடகடவென்று சிரித்துவிட்டு

மழையாக இறங்கியது.

நனைந்து சிலிர்த்த

பூமி சொன்னது:

பெருமை

மேலே ஏறுவதில் இல்லை

கீழே இறங்குவதில் இருக்கிறது!”

# 23

# பெண்

**‘ஆ**யிரக்கணக்கான ஆண்டு களாக, ஆணாதிக்கத்தின் கொடுமைகளுக்குப் பெண் ஆளாகி வருகிறாள். பெண்ணை ஒரு போகப் பொருளாக மட்டுமே பயன்படுத்திப் பழகிவிட்ட ஆண்களுக்கு, அவளும் ஆசாபாசங்கள் நிறைந்த ஒரு முழுமையான மனுஷி என்று உணர்ந்து மதிக்கும் மனோபாவம் இன்று வரை இயல்பாக மலரவில்லை.



ஆண்களால் உருவாக்கப்பட்ட மதங்களும், சாத்திரங்களும், சட்டங்களும், இலக்கியங்களும் பெண்களுக்கு அடிமை விலங்கு பூட்டியே அழகு பார்த்தன. சிந்தனையாளர்களும் தத்துவ ஞானிகளும்கூட, பெண்ணின் உடம்பையே பார்த்தனர்’ என்பது ஒரு கசப்பான உண்மை. 'போகத்துக்காகவே படைக்கப்பட்ட பொதுவுடைமைப் பொருள் - பெண்’ என்பதுதான் சாக்ரடீஸின் சிந்தனை. 'ஒன்று ஆள்வதும், மற்றொன்று ஆளப்படுவதும் இயற்கையின் விதி. எனவேதான், ஆண் ஆள்கிறான். பெண் ஆளப்படுகிறாள்’ என்று விளக்கம் தந்து ஆணாதிக்கத்துக்கு ஆராதனை செய்தவர் அரிஸ்டாட்டில்.



கிரேக்கத்தில், பேச்சுக்கலையில் பெயர் பெற்ற டெமஸ்தனீஸ், 'சட்டப்பூர்வமான வாரிசுகளை வயிற்றில் சுமக்கவும், வீட்டைப் பராமரிக்கவும் ஒருத்தியை மனைவி ஆக்குவோம். பணிப் பெண்களைக் காமக்கிழத்திகளாக வைத்துக்கொள்வோம்.அழகுமிக்க மகளிருடன் காதலில் ஈடுபடுவோம்' என்று தன் வாழ்காலச் சமூகத்தின் காம நுகர்வுக்கு வழிக்கதவு திறந்து வைத்தான்.

பெண்ணைப் பொறுத்தவரை எல்லா மதங்களும் சமத்துவக் கதவைச் சாத்தியே வைத்தன. பணியாட்கள், வீட்டு விலங்குகளுடன் சேர்த்துப் பெண்ணைப் பேசுகிறது பழைய ஏற்பாட்டில் உள்ள பத்தாவது கட்டளை. 'ஆதாமின் எலும்பிலிருந்து உருவாக்கப் பட்டவள் ஏவாள். அவளால்தான், விலக்கப்பட்ட கனியை ஆதாம் புசித்தான். ஆணை மயக்கி அவனுக்கு வீழ்ச்சியை வழங்கியதால், பெண் அசுத்தமடைந்தாள். பாவங்களுக்குப் பெண்ணே பிறப்பிடம். நரகத்துக்கு அவள்தான் நுழைவாயில்' என்றது கிறித்துவம்.

பெண்ணுக்கு ஓரளவு உரிமை வழங்கியது இஸ்லாம். 'ஆண்கள் மீது பெண்களுக்குச் சில உரிமைகள் உள்ளன. அவை பெண்கள் மீது ஆண்களுக்குள்ள சில உரிமைகளைப் போன்றவை. ஆயினும், ஆண்களுக்குப் பெண்களைவிட ஒரு படி உயர்வு உண்டு' என்று அது வலியுறுத்துகிறது.

'பெண்ணுக்குக் காவல் இளமையில் தந்தை, பருவத்தில் கணவன், முதுமையில் பிள்ளைகள்' என்று விதி வகுத்து, பெண்ணின் சுதந்திரத்துக்கு எதிராகப் பெருஞ்சுவர் எழுப்பி மகிழ்ந்தது மனுஸ்மிருதி.

'மனைவிக்கென்று தனியாக மதச் சடங்குகள் இல்லை. கணவனுக்குச் சேவை செய்வதன் மூலமே, அவள் சொர்க்கத்தை அடைய முடியும். ஒழுக்கமும், பண்புமற்ற காமுகனாகக் கணவன் இருந்தாலும், மனைவி அவனைக் கடவுளாகப் போற்ற வேண்டும். பிறந்த வீட்டுப் பெருமை பேசி, கணவனுக்குப் பணிய மறுக்கும் பெண்ணைப் பொது இடத்தில் நாய்க்கு இரையாக்க வேண்டும்' என்று மனுதர்மம் மானுட தர்மத்துக்கு எதிராகப் போதித்தது.

மனித குலத்தின் துயரங்களுக்கு மருந்து தேடிய புத்தரும் தொடக்கத்தில் புத்த சங்கத்தில் பெண்களுக்கு இடமில்லை என்று மறுத்தார். தந்தை சுத்தோதனர் மறைந்ததும், சிற்றன்னை பிரஜாபதி கௌதமி துறவுக்கோலம் பூண்டு, பௌத்த நெறி பரப்ப விரும்பினாள். மூன்று முறை மன்றாடியும், புத்தர் அவள் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. வைசாலி நகரில் அவர் தங்கி இருப்பதை அறிந்து, கூந்தல் மழித்து, காவி தரித்து, கண்களில் நீர் வழிய, கபிலவாஸ்துவிலிருந்து கால் கடுக்க நடந்து வந்தாள் கௌதமி.

புத்தரின் அணுக்கச் சீடர் ஆனந்தரைச் சந்தித்து, தன் துறவுக்கு அனுமதி பெற்றுத் தரும்படி அன்னை வேண்டினாள். 'குழவிப் பருவத்தில் தாயை இழந்த தங்களை அன்போடு அரவணைத்து ஆளாக்கிய கௌதமிக்காக, தாங்கள் சிறிது சிந்தை இரங்க வேண்டும். புத்த சங்கத்தில் அவள் சேர அனுமதி வழங்க வேண்டும்' என்று ஆனந்தர் இறைஞ்சினார். மறுக்க மனமின்றி இசைந்தார் புத்தர். அப்போதும், ''ஆனந்தா! பெண்களுக்கு இடம் தராமல் இருந்தால், புத்த சங்கம் ஆயிரம் ஆண்டுகள் நீடித்து நிலைக்கும். அவர்களுக்கு இடம் தர அனுமதித்தால், ஐந்நூறு ஆண்டுகளில் நம் சங்கம் சீர்குலைந்துவிடும்'' என்றார்.

உடம்பில் பெண்ணுக்கு எதிராக யுகம்யுகமாக ஓடிக் கொண்டு இருக்கும் ஆதிக்க ரத்தம், ஞானிகளையும், மகாத்மாக்களையும்கூட விட்டுவிடவில்லை. 'உலகம் முழுவதையும் அன்பினால் அரவணைக்க வேண்டும்' என்று அறிவுரை வழங்கிய டால்ஸ்டாய், தன் மனைவி மீது அன்பு வைக்கவில்லை. பல சந்தர்ப்பங்களில் அவளை அவர் அவமானப்படுத்தினார். அவருடைய உலகப் புகழ்பெற்ற 'போரும் அமைதியும்' என்ற அரிய படைப்பு சிறப்பாக அமைந்ததில்

சோன்யாவுக்குப் பெரும் பங்குண்டு. திரும்பத்திரும்ப அடித்தும் திருத்தியும் ஏழாண்டுகள் டால்ஸ்டாய் எழுதிய படைப்பை ஏழு முறை பொறுமையாகப் படி எடுத்துக் கொடுத்தவள் சோன்யா. டால்ஸ்டாய் புகழ் மேலும் உயர, அவர் பெயரை உச்சரித்தபடி ஜெபமாலை உருட்டியவள் அவள்.

ஒரு கணமும் கணவர் தன்னைவிட்டுப் பிரியக் கூடாது என்று சோன்யா தவித்தாள். அவளுடைய அன்பு டால்ஸ்டாய்க்குப் பொன் விலங்காக உறுத்தியது. 'நான் எங்கிருக்கிறேன் என்றறிந்து என்னைப் பின்தொடர்ந்து நீ வர வேண்டாம். வந்தால், நிலைமை மேலும் மோசமாகிவிடும்' என்று எழுதிவைத்துவிட்டு, ஒரு வைகறைப் பொழுதில் வீட்டைவிட்டு அவர் வெளியேறினார். மரணப் படுக்கையில் இருந்தவரைக் காண்பதற்கு இதயத் தவிப்புடன் ஓடி வந்த சோன்யாவைச் சந்திக்க டால்ஸ்டாய் விரும்பவில்லை. மன்னிப்பு குறித்து மனித குலத்துக்குப் போதித்தவர், தன்னுடன் 42 ஆண்டுகள் தாம்பத்யம் நடத்தியவளிடம் ஒரு வார்த்தைகூட பேசாமல் கண் மூடினார்.

'மனைவி தன் கணவனுக்கு வாழ்க்கைத் துணையாகவும், தோழியாகவும் இருப்பவள். அவனுக்கு அவள் அடிமை இல்லை' என்று பின்னாளில் பேசிய மகாத்மா காந்தியும், ஆரம்பத்தில் ஆணாதிக்க இந்துக் கணவனாகவே இருந்திருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவில் டர்பன் நகரில் அவர் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டபோது, அவரிடம் சில உதவியாளர்கள் பணிபுரிந்தனர். அவர்களில் ஒருவர் தலித் கிறித்துவர். அவர் பயன்படுத்திய கழிவறைப் பானையைத் தன் கைகளால் சுத்தம் செய்ய இயலாது என்று கஸ்தூரிபாய் மறுத்தபோது, ''மகிழ்ச்சியுடன் நீ செய்தாக வேண்டும்'' என்று ஆத்திரம் பொங்க ஆணையிட்டார் அண்ணல். ''செய்யத் தவறினால் உனக்கு என் வீட்டில் இடமில்லை'' என்றார். கண்ணீர் பெருக்கெடுக்க அன்னை தேம்பி அழுதபோது, அவருடைய கையைப் பிடித்திழுத்து, தெருக்கதவைத் திறந்து, ''வெளியே போ'' என்றார் காந்தி. இந்தச் சம்பவத்தை 'சத்திய சோதனை'யில் குறிப்பிட்டுள்ள மகாத்மா, 'அன்பும், கொடூரமும் நிறைந்த கணவன்' என்று தன்னை விமர்சித்துள்ளார்.

'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா' என்று பாடுவதற்கு முன், மகாகவி பாரதியும் ஆண் என்ற ஆணவத்துடன்தான் தன் மனைவி செல்லம்மாளை நடத்தியிருக்கிறார்.

பெண் எந்த மதத்தையும் தோற்றுவிக்கவில்லை. எந்தப் புராண இதிகாசங்களையும் அவள் படைக்கவில்லை. எந்தச் சட்டமும் அவளால் எழுதப்படவில்லை. எந்தத் தத்துவத்தையும் அவள் பெற்றிருக்கவில்லை. எந்தக் காலத்திலும் ஒரு பெண் இறைத் தூதராக மண்ணுலகில் வந்து மனிதர்க்கு போதிக்கவில்லை. அன்று முதல் இன்று வரை இந்தப் பூவுலகம் முற்ற முழுக்க ஆண்கள் உலகம்.



தொழுநோய் பீடித்த கணவனின் காமநோய் தீர, அவனைக் கூடையில் வைத்து விலைமகள் வீடு நோக்கிச் சென்ற நளாயினி வழியில் நடப்பதுதான் தெய்வக்கற்பு என்று பெண்ணுக்குப் புராணம் போதித்தது. அசோகவனத்தில் ஆற்ற முடியாத சோகத்துடன் தனிமைத் தவமிருந்த சீதையை அக்கினிப் பிரவேசம் செய்து கற்பை நிரூபிக்கச் சொன்ன காகுத்தனுக்கு ராமாயணம் புகழாரம் சூட்டுகிறது. கைப்பொருள் இழந்து வந்தவனிடம் சிலம்பைக் கொடுத்து மீண்டும் மாதவியிடம் போகச் சொன்ன கண்ணகியின் பெருமையைத் தமிழின் முதல் காப்பியம் பறைசாற்றுகிறது.

இலக்கியங்களில் பெண் பெரும்பாலும் நுகர்பொருளாகவே காட்சி தருகிறாள். 'ஆழ் கடலில் உள்ள முத்து, அணியும் மாதர்க்கு அழகை அளிக்கும். மலையின் சந்தனம், மார்பில் பூசி மகிழ்பவர்க்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். குழலிலிருந்து புறப்படும் இசை, கேட்பவர் செவிக்கு இனிமை கூட்டும். பெண்ணும் அப்படித்தான். பிறந்த இடத்துக்குப் பயனின்றி, கைப்பிடித்தவனுக்கே இன்பம் தருவாள்' என்கிறது பாலைக் கலிப் பாடல். முத்தும், சந்தனமும் போன்று பெண்ணும் ஒரு நுகர்பொருள் என்கிற ஆணாதிக்கச் சிந்தனையின் ஆணிவேர் இன்றுவரை அறுபடவே இல்லை.

வணிகக் கலாசார முற்றுகையில், ஓர் ஆண்மகனின் உள்ளாடை விளம்பரத்துக்கும் இங்கே பெண்தான் பயன்படுகிறாள். ஊடகங்கள் எல்லாம் அழகுப் பதுமையாக, அலங்காரப் பொருளாகப் பாலியல் பசிக்குப் பெண்ணைத் தீனியாக்குகின்றன. பெண்களும் பாரதி சொன்ன புதுமைப் பெண்ணைப் பிறழப் புரிந்துவைத்துள்ளனர். பெண் விடுதலை என்பது ஆணை வெற்றிகொண்டு அலட்சியப்படுத்துவதோ, அரைகுறை ஆடைகளில் அழகுக்கு வெளிச்சமிட்டு, அரங்குகளில் பூனைநடை பயின்று அணிவகுப்பு நடத்துவதோ, அற்ப காரணங்களுக்காக விவாகரத்துப் பெறுவதோ, பெரியோரைப் பராமரிக்கும் கடமையிலிருந்து விடுபட்டு விலகி நிற்பதோ, திருமணமே தேவையில்லை என்று தீர்மானம் போடுவதோ அன்று.

முதலில் பெண்கள், கூண்டுக்கும் கூட்டுக்கும் உள்ள வேற்றுமையைப் புரிந்துகொள்ள வேண்டும். கூண்டில் சிறைப்பட்ட கிளிக்குச் சுதந்திரம் இல்லை. ஆனால், கூட்டில் வாழும் பறவை சக உயிர்களுடன் தன் தனித்துவம் கலையாமல் கைகோத்துக்கொள்ள முடியும். கூண்டு கூடாது என்பது ஆரோக்கியமான சிந்தனை. கூடும் கூடாது என்பது ஆபத்தான மனநோய்!

நகர வீதிகளில் சில மேல்தட்டுச் சிறுபான்மைப் பெண்களைப் பார்த்துவிட்டு, 'பெண்ணுக்கு இன்னும் என்ன சுதந்திரம்?' என்று சமூகம் கேட்கலாம். ஓய்வறியாமல் உழைத்து உருக்குலைந்து, பாலியல் வன்முறைக் காயங்களுக்கு ஆளாகி, குடிபோதையில் தடுமாறும் கணவன்மார்களின் கால்களில் மிதிபட்டு, பசி மயக்கத்தில் தள்ளாடும் பிள்ளைகளுக்குச் சோறிடும் பொறுப்பைச் சுமந்தபடி, அன்றாடம் வாழ்க்கையுடன் போராடும் கோடிக்கணக்கான இந்தியப் பெண்களுக்கு இன்றுவரை ஆண்களிடமிருந்து எந்தச் சுதந்திரமும் கிட்டவில்லை.

ஒருவருக்கொருவர் அன்பு சார்ந்து வாழ்வது, யாரும் யாருக்கும்

*அடிமை இல்லை என்ற புரிந்துணர்வுடன் உறவுகொள்வது, ஆணும் பெண்ணும் சகல தளங்களிலும் சமம் என்ற ஒத்திசைவுடன், அடக்குமுறையும் பாலியல் சுரண்டலும் இல்லாத சமூக அமைப்பை நிர்மாணிப்பதுதான் நம்மை நாம் நாகரிகப்படுத்திக்கொள்ள ஒரே வழி!*

*பாரதி சொல்கிறான்... 'பெண்களை மிருகங்களாகவைத்து, ஆண்கள் மட்டும் மகரிஷிகளாக மாற முயலுதல் மூடத்தனம். பெண்மை உயராமல் ஆண்மை உயராது!'*

# 24

# ஒருமை

**‘நா**ன் சாதியைத் துறந்தவன். சாதியில் நம்பிக்கை அற்றவன். எனக்கு இந்தச் சாதியே வேண்டாம். இந்துக்களுக்கு சாதி என்பது ஒரு பரம்பரை வியாபாரம்’ என்றார் சுவாமி விவேகானந்தர்.

'இந்தியாவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் முதலில் சாதிக்கு அடிமையாகிறது’ என்று ஆறாத துயரத்தில் ஆழ்ந்தார் அந்த ஆன்மிக ஞானி.

'சாதிக் கொள்கை வேரூன்றிக் கிடக்கும் நாட்டில் மனுஷ்ய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை நிலைநிறுத்துவது என்றால், அது சாதாரண வேலையா? கொஞ்ச சாதியா... அவற்றில் உட் பிரிவுகள் கொஞ்ச நஞ்சமா? பறை பதினெட்டாம், நுளை நூற்றெட்டாம்! மேலும் பறையன், பள்ளன், சக்கிலியன் எல்லோருமே வெவ்வேறு சாதிகள். ஒன்றுக்கொன்று பந்தி போஜனம் கிடையாது. கேலி, கேலி, பெருங்கேலி!’ என்று சாதிகளின் பேதங்களுக்கு எதிராகப் பொங்கினான் பாரதி.



அமெரிக்காவை நிறவெறி நீண்ட காலம் ஆட்டிப் படைத்தது. அங்கு கறுப்பர்கள் அனுபவித்த கொடுமைகளுக்கு அளவில்லை. 'மனிதர்கள் அனைவரும் சமம்’ என்று அமெரிக்க அரசியல் சட்டம் வகுத்துத் தந்த

தாமஸ் ஜெபர்சனே தன்னுடைய விவசாயப் பண்ணையில் 132 கறுப்பர் இன அடிமைகளை வைத்திருந்தார்.



அன்று 38 லட்சம் அடிமைகள் அமெரிக்காவில் இருந்தனர். 'மனிதர்கள் அனைவரும் சமம் என்கிறது நம் அரசியல் சட்டம். ஆனால், அடிமைகளாக கறுப்பர்களை வைத்திருக்கவும் அது அனுமதிக்கிறது. சட்டம் ஒரு கழுதை' என்ற லிங்கன், அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், அடிமை முறையை ஆதரித்த தென் மாநிலங்கள் போர்ப் பிரகடனம் செய்தன. உள்நாட்டுப் போர் நான்கு ஆண்டுகள் நடந்தது. ஆறு லட்சம் அமெரிக்கர்கள் இந்தப் போரில் உயிரிழந்தனர். இறுதியில் தென் மாநிலங்கள் தோல்வியைத் தழுவின.

ஆபிரகாம் லிங்கன் 1863 - ஜனவரி முதல் நாள் காலை, வெள்ளை மாளிகையில் திரண்ட மக்களின் முன்னிலையில், அடிமை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றித் தங்கப் பேனாவால் கையொப்பமிட்டார். அமெரிக்க மண்ணில் அடிமைகளாக ஒடுங்கிக் கிடந்த 38 லட்சம் கறுப்பர்களையும், அவர்களுடைய வருங்கால தலைமுறையையும் சுதந்திர மனிதர்களாக மாற்றிய ஆபிரகாம் லிங்கன், ஜான் வைக்ஸ்பூத் என்ற நிறவெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டார். செனட்டர் பிரடெரிக், ஜான் பிரவுன், கறுப்பினத் தலைவர் மார்ட்டின் லூதர் கிங் என்று பலரைப் படுகொலை செய்து கோர தாண்டவம் ஆடியது நிறவெறி. இருப்பினும் முடிவில் மனிதநேயத்தின் தோள்களில்தான் வெற்றி மாலை

விழுந்தது.

இன்று அமெரிக்காவில் கறுப்பர்களை எந்த அமெரிக்கரும் அடிமைகளாக நடத்த முடியாது. அமெரிக்க சமூகத்தில் கறுப்பும் வெள்ளையும் சமத்துவமாக சங்கமித்து விட்டன.

உலகில் இன்றளவும் ஒரே மண்ணின் மைந்தர்கள் சாதி அமைப்புகளால் பிரிந்து நிற்பது நம் பழம்பெருமை வாய்ந்த பாரதத்தில் மட்டுமே! எந்த நாட்டிலும் இல்லாத நியதியாக, வர்ணாசிரம தர்மம் என்ற பெயரில், மனுநீதியின் அடிப்படையில் மாறுதல்கள் இன்றி நம் சாதி அமைப்பு இறுகிக்கிடக்கிறது. சாதிக்குள்ளேயே திருமணம், சாதிக் கடவுள், சாதிச் சடங்குகள், சாதி ஆசாரங்கள் என்று ஒவ்வொரு சாதியும் தனித்துவ அடையாளங்களுடன் உடைக்க முடியாதபடி கெட்டிப்பட்டு விட்டது. இந்தியச் சமூகத்தின் அடித்தளம் சாதி அமைப்பு என்பதுதான் கசப்பான உண்மை.

நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட வெள்ளையர், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிரந்தரமாக நிலைநிறுத்திக் கொள்ளத் துடித்தனர். இன்று நம்மிடையே இருந்து வரும் சாதிப் பட்டியலை அவர்கள்தான் உருவாக்கினர். நான்கு வர்ணங்களில் வேர்விட்டு, இன்று மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சாதிகளாகக் கிளை பரப்பி நிற்கிறது நம் இந்தியச் சமூகம். இறுகிக் கிடக்கும் சாதி கட்டமைப்பை முற்றாகத் தகர்க்க முடியாவிடினும், அவற்றுள் நிலவி வரும் உயர்வு தாழ்வை அகற்றிச் சமத்துவம் காண நம் சமயச் சான்றோர்களும், சிந்தனையாளர்களும் பகுத்தறிவுவாதிகளும் இடையறாமல் முயன்றனர். உயர்சாதி மனோபாவத்துடன் இன்றும் மனதுக்குள் தீண்டாமைக்குத் திருவிழா நடத்தும் மனிதர்கள் இந்த மண்ணின் பழைய சமய மரபைக் கொஞ்சம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர் திருப்பாணாழ்வார்; ஒடுக்கப்பட்ட பஞ்சமர் பிரிவில் பிறந்தவர். அந்தத் தாழ்த்தப்பட்டவருக்குக் கோயிலில் நுழையும் துணிவில்லை. திருவரங்கத்தில் கால் பதியாமல் காவிரியின் தென்கரையில் அரங்கன் இருக்கும் திசை நோக்கி நின்றபடி, யாழிசைத்துத் தன்னை மறந்த நிலையில் அவர் பாடிக்கொண்டு இருக்கிறார். காவிரியில் நீராடி, நாராயணனின் திருமஞ்சனத்துக்கு நீர் கொண்டு செல்ல உலோகசாரங்கன் என்ற வேதியர் பொற்குடத்தைக் கையிலேந்தி வந்தார். வழியில் நின்ற திருப்பாணரை, 'அப்பால் விலகி நில்' என்று குரல் கொடுத்தார். பாணரின் செவியில் வேதியர் குரல் விழவில்லை. கோபமுற்ற வேதியர் ஒரு கல்லெடுத்து வீசியதில், பாணர்

நெற்றியில் காயம் பட்டுக் குருதி வழிந்தது.

பொற்குடத்து நீருடன் உலோகசாரங்கன் கோயில் கருவறைக்குள் நுழைந்தபோது, இறைவன் நெற்றியிலிருந்து ரத்தம் வழிந்தது. அரசன் முதல் அனைவரும் முயன்றும் வழிந்த செந்நீர் வற்றவில்லை.

'என் உண்மையான அன்பன் திருப்பாணனை இழிகுலத்தவன் என்று எண்ணாமல், உன் தோள் மீது சுமந்து என் முன்பு வருவாயாக' என்று இறைவன் இரவில் வேதியர் கனவில் கூறி மறைந்தான். பொழுது புலர்ந்ததும் தலைமேல் கைகூப்பி, பாணரின் பாதங்களில் விழுந்து தொழுது, அவரைத் தன் தோளில் சுமந்து இறைவன் முன் கொண்டு சேர்த்தார் வேதியர். 'குலம் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்பதற்கு வைணவம் வழங்கும் சமத்துவச் சான்று இது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சோமாசி மாற நாயனார். இவர் ஒரு வைதிக பிராமணர். தான் நடத்த இருக்கும் சோமயாகத்தில் இறைவன் நேரில் வந்து அவிர்ப்பாகம் பெற வேண்டும் என்று விரும்பினார். இறைவனையே நண்பனாக்கிக்கொண்ட சுந்தரரின் துணையை அவர் அதற்காக நாடினார். இறைவன் நேரில் வந்து தனக்குரிய அவிர்ப்பாகம் பெற நிச்சயம் உதவுவதாக சுந்தரர் வாக்களித்தார். தன்னுடைய தோழன் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன் உமையவளுடன் புலையர் வடிவம் தாங்கி, நான்கு வேதங்கள் நாய் உருவிலும், பூதகணங்கள் புலையர் தோற்றத்திலும் பின் தொடர, யாகம் நடக்கும் இடத்தில் வந்து நின்றார். சோமாசி நாயனாரின் புறக்கண்களுக்கு புலையனாக வந்த இறைவன் புலப்படவில்லை. 'அன்பே சிவம், அன்புக்கு சாதியில்லை' என்று இச்சம்பவத்தின் மூலம் அறிவுறுத்துகிறது சைவ நெறி.

வைதிக பிராமணர் குலத்தில் பிறந்த ஞானசம்பந்தர், செல்லும் தலங்களில் எல்லாம் தான் இசைக்கும் பண்ணுக்கு யாழ்மீட்ட, நீலகண்ட யாழ்ப்பாணர் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவரையே உடன் அழைத்துச் சென்றார்.

சிவநேச செட்டியார் தன் மகளை வேதியர் ஞானசம்பந்தருக்கு மணமுடிக்க விழைந்தார். பிராமண குலத்தில் பிறந்த சுந்தரமூர்த்தி நாயனார், பரத்தையர் குலத்தில் பிறந்த பரவையாரைக் கரம் பிடித்தார். வேளாளர் பிரிவில் வந்த சங்கிலியாரையும் அவர் மணம் செய்துகொண்டார்.

*ராமானுஜர் நாள்தோறும் காவிரியில் நீராடச் செல்லும்போது தம் அந்தரங்கச் சீடர்களான முதலியாண்டான், கூரத்தாழ்வான் என்ற இருவர் தோள்களின் மேல் கை வைத்துப் பற்றிச் செல்வார். நீராடித் திரும்பும்போது அந்த இருவர் கைகள் மீதும் ஈரத்துணியிட்டுப் பிடித்துக்கொண்டு வருவார்.*

*ஒரு நாள் உடையவர் நீராடித் திரும்பும் நேரம், தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த சீடர் உறங்காவல்லி எதிர்வந்து அடிதொழுது நின்றார். உடனே அவருடைய வெறுந்தோள் மேல் கை வைத்து நடந்தார் ராமானுஜர்.*

*முதலியாண்டான் பிராமணர்; ராமானுஜரின் உறவினர்; பெரும் புலவர்; மிகப் பெருஞ்செல்வந்தர். அப்படிப்பட்டவர் மேல் ஈரத் துணியிட்டுப் பிடித்து நடந்தவர், தாழ்த்தப்பட்ட வல்லியின் வெறுந்தோள் பற்றி நடந்தது முதலிக்கு வியப்பைத் தந்தது.*

*அதை உணர்ந்துகொண்ட ராமானுஜர், ''வில்லி தொண்டர் குலத்தவன். 'தான்' என்ற அகப்பற்றும் 'தனது' என்ற புறப்பற்றும் இம்மியளவும் இல்லாதவன்'' என்றார். அதைக் கேட்ட முதலியாண்டானின் தலை தாழ்ந்தது.*

*புராணங்களிலும் காவியங்களிலும் நாம் காணும் சாதி சமத்துவம், வாழ்க்கை நடைமுறையில் இன்னும் வந்து சேரவில்லை. ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சாதிப் பற்றின் தீவிரம் இன்று ஓரளவு தணிந்திருப்பது போல் தோற்றம் தருவது உண்மை.*

*இப்போது, எந்த இளைஞனும் தன் பெயருக்குப் பின்னால் சாதி அடையாளத்தைச் சேர்க்கத் தயாராக இல்லை. ஆனாலும், சாதியுணர்வு நீறு பூத்த நெருப்பாக இன்றும் இருப்பதன் அறிகுறிதான் சில கிராமங்களில் காணப்படும் இரட்டைக் குவளைகளும் பாப்பாபட்டி, கீரிப்பட்டிப் பஞ்சாயத்து நடவடிக்கைகளும்.*

*அடிமை இந்தியாவில் ஊருக்குப் புறத்தே சேரிகள், திசைகளில் அமங்கலமாகக் கருதப்படும் தென்திசையில்தான் இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்டவர்கள் சொந்தமாக நிலம், கால்நடைகள் வைத்திருக்கக் கூடாது, கூரையைத் தவிர ஓட்டு வீடுகளில் வசிக்கலாகாது, சுத்தமான உடையுடுத்தக் கூடாது, கடிகாரம், காலணி அணிதல் தகாது, நல்ல பெயர்களை வைக்கவோ, பண்பட்ட மொழியில் பேசவோ அனுமதி கிடையாது, வெள்ளி, தங்க அணிகலன்களை அணியும் உரிமை இல்லை*

*என்றெல்லாம் விதிகள் வகுத்து, நம் சொந்தச் சகோதரர்களை நாமே இழிவுபடுத்திய கொடுமை, இந்தச் சுதந்திர மண்ணில் இனியாவது பொய்யாய், பழங்கதையாய்ப் போக வேண்டும்.*

*கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்டவரை அன்பினால் ஆரத் தழுவி அரவணைத்து, ஓமம் வளர்த்துப் பிரம்மோபதேசம் செய்து, பூணூல் அணிவித்துப் புதிய சமுதாயப் புரட்சிக்குப் பூபாளமிசைத்த பாரதி, தலித்துகளுக்காகவே 'ஆறில் ஒரு பங்கு' என்ற கதையெழுதி வெளியிட்டபோது, 'இந்நூலை பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து, நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்' என்று குறிப்பிட்டார்.*

*அந்தக் கதையில், 'நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத சாதியாக வைத்திருப்போமானால் நமக்கு ஈசன் நல்ல கதி கொடுப்பாரா?' என்று மனம் நொந்து கேள்விக்கணை தொடுத்தார் அந்த மகாகவி.*

*பூமிப்பந்தின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், வாழும் சமூகத்துடன் இரண்டறக் கலந்துவிடாமல், தங்கள் தனித்துவ அடையாளங்களை இம்மியளவும் இழந்துவிடாமல் எண்ணெயும் நீருமாக அந்நியப்பட்டு வாழ விரும்பும் மனப்போக்கு உள்ளவர்கள் யூதர்கள். யாரோடும் ஒன்றாமல் ஒதுங்கி நின்றதால்தான், அவர்கள் சொல்லில் அடங்காத சோகங்களைத் தொடர்ந்து சந்தித்தனர்.*

*ஆனால், தாழ்த்தப்பட்ட தலித்துகள் வெள்ளத்துடன் வெள்ளம் கலப்பதுபோல் சாதி இந்துக்களுடன் உள்ளத்தோடு உள்ளம் கலந்து, சமத்துவப் பாதையில் கைகோத்து நடக்க விரும்பியதற்காகவே நம் சமூகத்தால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.*

*அரசமைப்புச் சட்டம் முழுவடிவம் பெற்றதும் அரசியலமைப்பு அவையில், 1949 - நவம்பரில் அம்பேத்கர் நிறைவுரை நிகழ்த்தியபோது, 'அரசியலில் ஒரு மனிதன் - ஒரு வாக்கு என்ற நிலையை நாம் இன்று எட்டிவிட்டோம். ஆனால், சமுதாய, பொருளாதார வாழ்வில் ஒரு மனிதன் - ஒரே மதிப்பு என்ற மேலான நெறியை நாம் தொடர்ந்து மறுத்து வருகிறோம்.*

*இந்த முரண்பாட்டை நாம் அகற்றாவிடில், அரசியல் ஜன நாயகம் என்ற கட்டமைப்பு தகர்ந்துவிடும்' என்றார். 'சாதிய சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட எல்லா சாதிகளுக்கும் சுதந்திரம், எல்லா சாதியினர்*

இடையிலும் சமத்துவம், சகோதரத்துவம்' என்பதுதான் டாக்டர் அம்பேத்கரின் வாழ்கால லட்சியம்.

சமுதாய சமத்துவத்துக்காகவே ஜீவ ஒழுக்கத்தை வலியுறுத்தியவர் வள்ளலார். 'ஜீவ ஒழுக்கம் என்பது எல்லா மனிதரிடத்தும் சாதி, சமயம், மதம், ஆசிரமம், கோத்திரம், சூத்திரம், குலம், சாஸ்திரம், தேசமார்க்கம், உயர்வு, தாழ்வு முதலியனவாகிய பேதமற்றுத் தானாக நிற்றல்' என்று விளக்கிய வள்ளல்பெருமான், 'ஒத்தாரும், உயர்ந்தாரும், தாழ்ந்தாரும், எவரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

அவரவர் சாதி, மத, இன அடையாளங்கள் ஒன்றையும் இழந்து விடாமல், ஒரு பொது நோக்கத்துக்காக ஒன்றுபடுவது ஒற்றுமை. அது Unity.

எல்லா தனித்துவ அடையாளங்களையும் தகர்த்தெறிந்துவிட்டு, மனிதநேயம் என்ற மையப் புள்ளியில் பேதமற்று அனைவரும் ஒன்று கலப்பது ஒருமை. அது Uniformity.

ஒற்றுமையினும் மேலானது ஒருமை. அதுதான் சமூகத்தின் உயர்ந்த லட்சியம். அதை அடைவதுதான் மனித வாழ்வின் உன்னதம்.

டால்ஸ்டாய் சொல்கிறார்: 'மனித குலத்தை எது ஒன்றுபடுத்துமோ, அதுவே நல்லது, மேலானது, அழகானது. எது பிரித்துச் சிதைக்குமோ, அது கேடானது. தவறானது, இழிவானது!'

25

# பேச்சு

பறவைக்கும் விலங்குக்கும் வாய்க்காத வரம் மனிதருக்கு மட்டுமே மொழி வடிவில் வாய்த்தது. தான் நெஞ்சில் நினைத்ததை அறிவிக்கவும், தனக்குத் தேவைப் பட்டதைத் தெரிவிக்கவும் முதலில் பேச முயன்ற மனிதன், பின்னாளில் அதையே ஓர் அற்புதக் கலையாக அழகுபடுத்தினான்.

ஒவ்வொரு சொல்லையும் மந்திரம் போல் பயன்படுத்திய மனிதர்களை உலகம் எல்லாக் காலங்களிலும் மாலையிட்டு மரியாதை செய்தது. அன்று முதல் இன்று வரை மனித உணர்ச்சிகளை மின்னல் வேகத்தில் தூண்டிவிடும் ஆற்றல் பேச்சுக்கு மட்டுமே இருக்கிறது. பேச்சின் வலிமையால் வாழ்ந்தவர்களும் உண்டு: வழி தவறி வீழ்ந்தவர்களும் உண்டு. இரண்டுக்கும் கடந்த கால சரித்திரத்தில் சாட்சியங்கள் உண்டு.



ஜூலியஸ் சீசரின் செல்வாக்கைச் சகித்துக்கொள்ள முடியாத ரோமாபுரி செனட்டர்கள் காஷியஸ், கேஸ்கா போன்றவர்கள், மக்கள் ஆராதித்த அறிவிற் சிறந்த புரூட்டஸைத் தங்கள் வலையில் வீழ்த்தி, அவனுடைய ஆதரவுடன் செனட் மண்டபத்தில் படுகொலைப் படலத்தை நடத்தி முடித்தனர். மாறி மாறிக் குத்துப்பட்ட காயங்களால் சிதைக்கப்பட்ட சீசரின் சடலத்தின் முன், சினம் பொங்கி நிற்கிற

மக்களைத் தன் பக்கம் திருப்பும் நோக்கில் புரூட்டஸ் பேச எழுந்தான்.



'ரோம சாம்ராஜ்யத்தின் ஒற்றைச் சர்வாதிகாரியாக முடி சூட்டிக்கொள்ளச் சீசர் முடிவெடுத்ததால், நாட்டு நலன் கருதி நாங்கள் அவனைக் கொன்றோம். சீசரை நானும் என் கத்தியால் குத்தினேன். சீசரை நான் குறைவாக நேசித்தவனில்லை. அவனைவிட இந்த நாட்டை நான் அதிகமாக நேசித்ததால்தான் கொல்லத் துணிந்தேன்' என்று புரூட்டஸ் பேசி முடித்ததும், 'கண்ணியத்துக்குரிய புரூட்டஸ் செய்தது சரிதான். சீசர் சாவைச் சந்திக்க வேண்டியவன்தான்' என்று, கூடிய கூட்டம் குரல் கொடுத்தது.

மார்க் ஆன்டனி எழுந்து நின்றான். படுகொலையைப் பழித்துப் பேசினால் என்ன நடக்கும் என்ற உண்மை நிலையை அவனால் உணர முடிந்தது. இக்கட்டான சூழலில் ஆன்டனி வார்த்தைகளின் வலிமையை நம்பி வாய் திறந்தான். 'நண்பர்களே! ரோமானியர்களே! நாட்டோரே! உங்கள் காதுகளை எனக்குக் கொஞ்சம் கடன் கொடுங்கள். நான் சீசரைப் புதைக்க வந்தவன். பாராட்ட வரவில்லை. கண்ணியமிக்க புரூட்டஸ்,

சீசர் ஒரு பேராசைக்காரன் என்றார். ஆம். சீசர் பேராசைக்காரன்தான்.

அகிலத்தின் நாடுகள் பலவற்றை அடிமைப்படுத்தி, அவற்றின் செல்வங்களை ரோமாபுரிக் கருவூலத்தில் நிரப்பிய சீசர் பேராசைக்காரன்தான். ஏழைகள் கதறியபோதெல்லாம் கண்ணீர் விட்டவன் அவன். புரூட்டஸுக்கு மறுப்பு சொல்ல நான் முயலவில்லை. ஆனால், எனக்குத் தெரிந்த உண்மைகளை உங்களுக்கு நான் சொல்லியாக வேண்டும். 'மன்னனாக மகுடம் சூட்ட ஆசைப்பட்டவன் சீசர்' என்றார் புரூட்டஸ். அது உண்மை அல்ல. மூன்று முறை அவனை மன்னனாக்க நாங்கள் விரும்பித் தந்த மகுடத்தை, மூன்று முறையும் மறுதலித்தவன் சீசர். அவனுடைய உயிலில் இருப்பதை நீங்கள் அறிந்தால், அவன் சடலத்தை முத்தமிடப் போட்டியிடுவீர்கள். சீசரின் காயங்களிலிருந்து கசியும் புனிதக் குருதியைக் கைக்குட்டைகளால் ஒற்றிக்கொள்வீர்கள். அவனுடைய தலைமுடி ஒன்றைக் காலம் முழுவதும் பொக்கிஷமாகப் போற்றி பாதுகாக்கக் கொடுங்கள் என்று இறைஞ்சுவீர்கள். ஆனால், அந்த உயிலை நான் படிக்கப் போவதில்லை. நீங்கள் மரமில்லை; மனிதர்கள்! அந்த உயிலில் இருப்பதை அறிந்தால் உணர்ச்சிவசப்பட்டு, சீசரைக் கொன்றவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவீர்கள்.

நண்பர்களே! சீசர், புரூட்டஸை வானத் தேவனாக நெஞ்சில் வைத்துப் போற்றினான். அந்த நெஞ்சில் புரூட்டஸ் குத்தியதுதான் எல்லாவற்றையும் விட இரக்கமற்ற கத்திக் குத்து. இதோ... சீசர் பிணமாக வீழ்ந்து கிடக்கிறான். இனி இன்னொரு சீசர் எப்போது வருவான்?' என்று ஆன்டனி பேசி முடித்ததும், வெறிபிடித்த கூட்டம் சதியாளர்களுக்கு எதிராகத் திரும்பியது. மனித உணர்ச்சிகளை எந்தச் சூழலிலும் வலிமையான வார்த்தைகளால் வளைத்துவிட முடியும் என்பதற்கு இன்றுவரை ஆன்டனியின் பேச்சே அழுத்தமான சான்று.

இரண்டாம் உலகப் போரில், ஹிட்லரின் அசுரத்தனமான தாக்குதலில் உலகமே கலங்கி நின்ற காலம்... சூரியன் அஸ்தமிக்காத பேரரசின் சொந்தக்காரர்கள் என்று பெருமை பேசிய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இங்கிலாந்தைக் காப்பாற்றச் செய்வதறியாது திகைத்து நின்ற நேரம். பிரதமராக வின்ஸ்டன் சர்ச்சில் பொறுப்பேற்றார். அச்சத்தில் ஆழ்ந்து கிடந்த ஆங்கிலேயர்களின் இதயங்களில் வீரம் செறிந்த பேச்சுக்களால் நம்பிக்கை விளக்கை ஏற்றி வைத்தவர் சர்ச்சில்.

'ரத்தம், உழைப்பு, கண்ணீர், வியர்வையைத் தவிர, என்னிடம் தருவதற்கு வேறொன்றும் இல்லை. மிக மோசமான சோதனைக் களம்

நம் கண்முன் விரிந்து கிடக்கிறது. பற்பல மாதங்கள் நடந்தாக வேண்டிய போரும், துன்பமும் நேரில் நிற்கின்றன. நம்முடைய செயல்முறைத் திட்டம் என்னவென்று நீங்கள் கேட்கலாம். நாம் இப்போது செய்ய வேண்டியது நிலம், நீர், வான் வழியாகப் போர் நடத்துவதுதான். மனிதகுலத்துக்கு எதிரான இரக்கமற்ற, பிரமாண்டமான, கொடிய கொடுங்கோன்மையை முறியடிக்க இறைவன் நமக்கு வழங்கிய முழுவலிமையுடன் நாம் போரிட வேண்டும். இதுதான் நம் திட்டம். நம் லட்சியம் எது என்று நீங்கள் கேட்டால், ஒரே வரியில் என்னால் பதில் சொல்ல முடியும். வெற்றி, எவ்வகையாயினும் எடுத்த காரியத்தில் வெற்றி, அதற்கான பாதை எவ்வளவு நீண்டதாக இருந்தாலும் வெற்றி ஒன்றே நம் இறுதி லட்சியம். வெற்றி இல்லையேல் நமக்கு வாழ்க்கை இல்லை' என்ற சர்ச்சில் தொடர்ந்து பேசிப் பேசியே மக்களின் அச்சம் நீக்கிப் போர் நடத்தி வெற்றியைச் சாதித்தார்.

சுவாமி விவேகானந்தர் இந்து சமயப் பெருமைகளைத் தன் ஆழ்ந்த அர்த்தம் செறிந்த பேச்சால் உலக அரங்கில் அறிமுகம் செய்தவர். பேரும், புகழும், பெருமையும் இல்லாத சாதாரண சந்நியாசியாய், சிகாகோவில் கொலம்பஸ் ஹாலில் நடந்த சர்வ சமய மாநாட்டில் பேச எழுந்தவர், பேசி முடித்ததும் அமெரிக்கரின் இதய ஆசனத்தில் ஆராதனைக்குரிய ஆன்மிக ஞானியாய் அமர்ந்தார். மிகக் குறைவாகப் பேசினாலும் சமயப் பேருண்மைகளை அன்று அவர் நிறைவாக விளக்கியதில் அவையே வியந்துபோனது.

'தூய்மையிலிருந்தும், மௌனத்தில் இருந்தும் ஆற்றல் வாய்ந்த சொற்கள் பிறக்கின்றன' என்ற சுவாமிஜி, 'அமெரிக்க சகோதரிகளே! சகோதரர்களே! பிற மதக் கொள்ளைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்ளுதல் என்ற இரு மேலான பண்புகளை உலகுக்குப் போதித்த சமயத்தைச் சார்ந்தவன் நான். உலகின் அனைத்து நாடுகளாலும், மதங்களாலும் கொடுமைக்குள்ளாகி விரட்டியடிக்கப்பட்டவர்களுக்குப் புகலிடம் தந்த பெருமைக்குரிய நாட்டைச் சேர்ந்தவன் நான்.


இந்தப் பேரவை கூடியபோது முழங்கிய மணியோசை மதவெறிக்கும், ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் பயணிக்கும் மக்கள் மனங்களில் நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்' என்று கூறி உரையை இறுதி செய்ததும், ஆன்மிக மாளிகையின் சாளரத்தின் வழியாக, அன்று வரை இல்லாத புதிய சமரசக் காற்று வீசத் தொடங்கியது.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று, அடிமைத் தளையிலிருந்து நீக்ரோக்களை விடுவிக்க மறுத்த தென்மாநிலங்களுடன் போர் நடத்தி வெற்றி பெற்ற பின்பு, உயிரிழந்த வீரர்களின் கல்லறைகளுக்கு மரியாதை செலுத்த, கெட்டீஸ்பர்க் நகருக்கு வருகை புரிந்தார். அங்கு கூடியிருந்த நாலு லட்சம் மக்கள் முன் உரையாற்றும்போதுதான், 'மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்பட்ட, மக்களின் அரசாங்கம்' என்று குறிப்பிட்டார். அந்த வாசகம் இன்று வரை ஜனநாயகத்தின் விளக்கவுரையாகப் போற்றப்படுகிறது. உண்மையும், எளிமையும்தான் லிங்கனின் பேச்சுக்களை உயர்த்திப் பிடித்தன.

இந்தியா சுதந்திரம் பெற்ற நள்ளிரவில் பாரதப் பிரதமராகப் பொறுப்பேற்ற நேரு, டெல்லி செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துப் பேசிய பேச்சு, உலகத்தின் உயர்ந்த இலக்கியப் படைப்புக்கு நிகரானது. 'நள்ளிரவு 12 மணி ஒலித்து ஓயும்போது, உலகம் உறங்கச் செல்லும். ஆனால், இந்தியா புதிய வாழ்வை, புதிய விடுதலையைப் பெறுவதற்காக விழித்திருக்கும். இதுபோன்றதொரு தருணம், வரலாற்றில் மிக அரிதாகவே வரும். ஆம், நாம் பழைமையிலிருந்து புதுமைக்கு நடை போடத் தொடங்குகிறோம். இதுவரை நீண்டு வந்த ஒரு யுகம் முடிகிறது. நெடுங்காலமாக ஒரு நாட்டின் ஆன்மா, தன் உரிமைக்குரலை எழுப்ப முடியாமல் ஒடுக்கப்பட்டது. இனி அதன் உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கும்' என்று உணர்வு பொங்க, உருக்கத்துடன் நேரு உரையாற்றியபோது, அந்த மாசற்ற தேசத் தலைவரின் இலக்கிய இதயத்திலிருந்து ஒவ்வொரு வார்த்தையும் காவிய மணம் கமழ்ந்தபடி வெளிப்பட்டது.

கேட்டவர்களின் ஆன்மாவை நெகிழச் செய்த பேராற்றல்மிக்க பேச்சுக்கள், நெடிய வரலாற்றின் நீண்ட தாழ்வாரங்களில் அங்கும் இங்கும் அரிதாகவே தென்படுகின்றன. சந்தர்ப்பம், மனோநிலை, பேசுபவரின் ஆளுமை, ஏற்றுக்கொண்ட லட்சியத்தில் உள்ள உண்மையான பிடிப்பு ஆகியவைதான் அமரத்துவம் வாய்ந்த பேச்சுக்களைப் பிரசவிக்கின்றன.

எட்மண்ட் பர்க், ஆங்கில உலகின் மிகப் பெரிய பேச்சாளராகப் போற்றப்பட்டவர். ஆனால், ஆபிரகாம் லிங்கனின் அந்தக் குறிப்பிட்ட சிறிது நேர உரையின் பெருமையை பர்க்கின் பேச்சுக்களால் பெற முடியவில்லை. உள்ளார்ந்த உண்மைகளின் அழுத்தமில்லாத பேச்சுக்கள் வெறும் வார்த்தைக் குப்பைகளாகவே வந்து விழும்.



ஆறடி உயரமுள்ள மனிதனின் வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் நாலங்குல நாக்கே காரணமாகிறது.

'வாய்க்குள் போன எதுவும் மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து வருவதுதான் தீட்டுப் படுத்தும்' என்றார் ஏசுநாதர். எதைப் பேசுவது என்பதைவிட, எதைப் பேசக் கூடாது என்று அறிதலே ஞானத்தின் நல் அடையாளம்.

பாத்திரத்தில் விரிசல் விழுந்திருக்கிறதா, இல்லையா என்பதை அதன் ஓசை காட்டிவிடும். ஒரு மனிதன் ஞானியா, முட்டாளா என்பதை அவன் வார்த்தை வெளிப்படுத்திவிடும். பேச்சு வெள்ளி என்றால், மௌனம் தங்கம்!

மகாபாரதம் பேச்சைப் பற்றி விளக்குவது நம் அனைவருடைய ஆழ்ந்த பரிசீலனைக்குரியது. 'பேசுவதைக் காட்டிலும் பேசாமல் இருப்பதே மேலானது. பேசித்தான் தீர வேண்டுமெனில் உணமையை மட்டுமே பேச வேண்டும். உண்மையைப் பேசும்போது கூட, மற்றவர்க்கு நன்மை

தரும் அன்பான வார்த்தைகளைக் கொண்டே பேசுவது நல்லது. உண்மையாகவும், அன்பாகவும் பேச்சு அமைந்தால் போதாது. அது தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்பட்டதாகவும் இருக்க வேண்டும்' என்று மகாபாரதம் சொல்வதுபோல் மனிதர்கள் பேசத் தொடங்கிவிட்டால், மண்ணில் அனைவருமே நல்லபடி வாழலாம்.

கன்ஃபூஷியஸ் சொல்கிறார்... 'பேசுவதற்குத் தகுதியானவர் என்று தெரிந்தும், பேசாமல் இருந்துவிட்டால் நீ ஒரு நல்ல மனிதரை இழந்துவிடுகிறாய். பேசுவதற்குத் தகுதியற்றவர் என்று புரிந்தும் நீ பேசிவிட்டால், உன் வார்த்தைகளை இழந்துவிடுகிறாய். அறிவுள்ளவன் மனிதர்களையும் இழப்பதில்லை; வார்த்தைகளையும் இழப்பதில்லை!'

# 26

# புத்தகம்

*‘நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும். நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உண்டாக்கும். நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்’ என்பார் அப்துல் கலாம். ஒரு மனிதனை நெறிப்படுத்தவும் முறைப்படுத்தவும் நல்ல நண்பர்கள் புத்தகங்களே!*

*ஒரு புத்தகத்தைப் படிப்பது, ஒரு புதிய நண்பனைப் பெறுவது போன்ற இனிய அனுபவம். அதே புத்தகத்தை மீண்டும் படிப்பது, நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பனைத் திரும்பவும் சந்திப்பது போன்ற சுகமான அனுபவம்.*



*எகிப்திய மண்ணில் என்றோ வாழ்ந்து, கால வெள்ளத்தில் கரைந்து மறைந்த அறிவார்ந்த 'பாரோ' அரசன், தான் நெஞ்சார நேசித்து வாசித்த புத்தகங்களின் இருப்பிடத்தை 'மன மருத்துவ நிலையம்' என்று பெயரிட்டு மகிழ்ந்தானாம்... எவ்வளவு அர்த்தம் செறிந்த அடைமொழி! நல்ல நூல்கள் ஒருவனை மனிதனாக மட்டுமல்ல, மகாத்மாவாகவே மாற்றிவிடக்கூடும்.*



துளசிதாசரின் ராமாயணமும், வியாசரின் பகவத் கீதையும் இந்து சமயத்தின் சாரத்தை அண்ணல் காந்தி அறிந்துகொள்ள உதவின. எட்வின் அர்னால்ட் எழுதிய விண்ணவர் பாட்டும், ஆசியாவின் ஜோதியும் பௌத்த நெறிகளில் அவரைப் பற்றுக் கொள்ளத் தூண்டின. பிளாவட்ஸ்கியின் 'பிரம்மஞானத்தின் திறவுகோல்', புதிய ஏற்பாட்டில் ஏசுவின் மலைச் சொற்பொழிவு, கார்லைல் வடித்த 'வீரர்களும் வீர வணக்கமும்' இந்து, கிறிஸ்துவ, இஸ்லாம் சமயங்களைத் தேசப் பிதாவுக்குத் தெளிவாக இனம் காட்டின.

டால்ஸ்டாயின், 'இறைவனின் அரசாங்கம் உனக்குள் இருக்கிறது' மகாத்மாவின் மனதை மலரச் செய்தது. ரஸ்கினின் 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' அவருடைய சிந்தனைகளைப் புதிய வாழ்க்கைத் தத்துவத்தில் வழி நடத்திச் சர்வோதயம் காணச் செய்தது. தோரேவின் 'சட்ட மறுப்பு' நூல்தான் காந்தி அடிகளுக்குப் புதிய போராட்ட வியூகத்துக்குப் படியமைத்துத் தந்தது. மற்றவர்கள் பொழுதுபோக்குவதற்காகவும், மன மகிழ்ச்சிக்காகவும் படித்தபோது, மகாத்மா பின்பற்றுவதற்காகப் படித்தார்.

உலக வரலாற்றில் சில புத்தகங்கள் சரித்திர நதியின் போக்கையே மாற்றிச் சாதனை படைத்தன. சில புத்தகங்கள் மனித குலத்தை நல்வழிப்படுத்தின. ஒரு சில புத்தகங்கள் இனப் படுகொலைக்கும், உலகப் போருக்கும் உந்து சக்திகளாயின. வால்டேர், ரூசோவின் படைப்புகள்

*பிரெஞ்சுப் புரட்சிக்கு வழித்தடம் அமைத்தன. ஹிட்லரின் 'மெயின் காம்ப்'பும், நீஷேவின் தத்துவச் சிந்தனைகளும் ஜெர்மனியைப் போர் வெறி கொள்ளச் செய்தன.*

*ஐரோப்பாவின் சர்ச்சைக்குரிய படைப்பாகப் பரபரப்பை ஏற்படுத்தியது மாக்கியவல்லியின் 'இளவரசன்'* [Prince]. *மிலான், பிளாரன்ஸ், நேபிள்ல், வெனிஸ், திருச்சபை என்று தனித்தனியாகப் பிரிந்து கிடந்த இத்தாலியை ஒன்று படுத்த, ஒரு வலிமையான தலைமை தேவை என்று உணர்ந்த மாக்கியவல்லி, அந்தத் தலைமைக்கு வேண்டிய பண்புகளை விளக்குவதற்காக வரைந்ததுதான் 'இளவரசன்' என்ற நூல்.*

*அரச தர்மம் வேறு, தனி மனித தர்மம் வேறு என்று வலியுறுத்துவதுதான் அந்த நூலின் அடிப்படை. நாட்டைப் படுகுழியிலிருந்து பாதுகாக்க விரும்பும் தலைவன், அன்பு ததும்பும் சொற்களையும் ரத்தம் தோய்ந்த செயல்களையும் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் மாக்கியவல்லியின் வாதம்.*

*'ஆட்சியைக் கைப்பற்றிய தலைவன் தீமைகள் அனைத்தையும் ஒரே நேரத்தில் மிக விரைவாகச் செய்து முடித்து, நன்மைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக செய்ய வேண்டும். மக்கள் விவரமில்லாதவர்கள். அப்போதைய தேவைகளே அவர்களுக்கு முக்கியம். அவர்கள் எளிதாக ஏமாறுவார்கள். அதிகாரத்தைக் கைப்பற்ற வஞ்சகம், மோசடி, பொய்யுரைகளில் ஆட்சியாளர் ஈடுபடுவதில் தவறில்லை. எப்படித் தோற்றம் தருகிறோம் என்பதைத்தான் உலகம் பார்க்கும். உண்மையில் ஒருவன் எப்படிப்பட்டவன் என்று அது ஆய்வதில்லை' என்று தார்மீகத்துக்கு முற்றிலும் எதிரான செய்திகளை 'இளவரசன்' சுமந்து வந்தது.*

*மாக்கியவல்லியின் மறைவுக்குப் பின்புதான் 'இளவரசன்' நூலாக வெளி வந்தது.* 20 *ஆண்டுகளில்* 25 *பதிப்புகள் அச்சேறிய அந்த நூலுடன்தான் பிரெஞ்சுப் பேரரசன் பதினான்காம் லூயி படுக்கைக்குச் செல்வது வழக்கம். நெப்போலியன் வாட்டர்லூ போர்க்களத்தில்கூட 'இளவரச'னைப் பிரியவில்லை. ஜெர்மனியின் இரும்பு மனிதர் பிஸ்மார்க் பக்தி சிரத்தையுடன் அதைப் படித்துப் போற்றினார். தனக்கு இடையறாத ஊக்கம் தந்த நூல் 'இளவரசன்' என்று ஹிட்லர் புகழ்ந்தான். மார்க்ஸுக்கு முன், அரசியல் சிந்தனையில் ஐரோப்பாவைப் புரட்டி எடுத்த படைப்பு மாக்கியவல்லியின் 'இளவரசன்' என்பதில் இரண்டு கருத்தில்லை.*

அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திரப் பிரகடனம் செய்து பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுபடுவதற்கு அச்சாரம் போட்டதும் ஒரு புத்தகம்தான். ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்றவர்கள் தொடக்கத்தில் பிரிட்டிஷ் விசுவாசிகளாகவே விளங்கினர். இங்கிலாந்தின் மேலாண்மையிலிருந்து விலகி, அமெரிக்கா தனி நாடாக மாறுவதில் அவர்களுக்குச் சம்மதமில்லை. ஆனால், அமெரிக்கா தனி நாடாவது தவிர்க்க முடியாதது என்று திடமாக நம்பியவர் தாமஸ் பெயின்.

'ஒரு கண்டம், ஒரு சிறிய தீவின் ஆதிக்கத்தில் நீண்ட காலம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. எந்த உபகிரகமும் தாய்க் கிரகத்தைவிடப் பெரிதாக இருக்க முடியாது' என்ற பெயின், அமெரிக்கா தனியாகப் பிரிவதற்கான காரணங்களைத் தர்க்க ரீதியாக விளக்கி வெளியிட்ட நூல் 'பகுத்தறிவு' (Common sense). 'வனவிலங்குகள்கூட தாம் ஈன்றெடுத்த குட்டிகளை விழுங்குவ தில்லை. நாகரிகமற்ற காட்டு மிராண்டிகளும் தங்கள் குடும்ப உறுப்பினர்களைத் தாக்குவதில்லை. ஆனால் இங்கிலாந்து, அடிப்படை நியாயங்கள் இல்லாமல் அமெரிக்காவின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது' என்று பெயின் அந்த நூலில் குறிப்பிட்டார்.

'பகுத்தறிவு' வெறும் 47 பக்கங்கள் கொண்ட நூலாக வெளிவந்தது. மூன்றே மாதங்களில் 1 லட்சத்து 20 ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன. மொத்தம் 5 லட்சம் பிரதிகள் விற்பனையான இந்த நூலைப் போல் மக்கள் மனங்களை மின்னல் வேகத்தில் பாதித்த நூல் வேறெதுவும் இல்லை. பொறுப்பு உணர்ச்சியற்ற பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து அமெரிக்கர்கள் போரிட வேண்டும் என்று இந்தப் புத்தகம் அறைகூவல் விடுத்த ஆறே மாதங்களில், பிலடெல்பியாவில் அமெரிக்க காங்கிரஸ் கூடி சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தது. போர் நடத்தி வென்று, பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகி அமெரிக்கா சுதந்திர நாடானது.

அடிமை முறையை ஒழிக்க, அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் உருவாவதற்குக் காரணமானதும் ஒரு புத்தகமே! சமயப் போதகராக இருந்த ஹாரியட் பீச்சர் ஸ்டோவ் என்ற பெண், அடிமைகளுக்கு இழைக்கப்படும் இன்னல்களைக் கண்டு இதயம் ரணமாகி அவர்களுடைய விடுதலைக்காக நடத்திய எழுத்து வேள்விதான் 'டாம் மாமனின் குடில்' (Uncle Tom's Cabin) என்ற புத்தகம். அடிமைகளின் அவல வாழ்வை, ஸ்டோவ் கொஞ்சம் கற்பனை கலந்து கதை வடிவில் 'நேஷனல் ஈரா' என்ற வார இதழில் ஓராண்டு வரை எழுதினார். அது நூல் வடிவில் வந்தபோது ஒரே ஆண்டில் அமெரிக்காவில் 3 லட்சம் பிரதிகள் விற்பனையானது. ஐரோப்பாவிலும், காலனி நாடுகளிலும் 15

லட்சம் புத்தகங்கள் விற்று வரலாறு படைத்தது.

நீக்ரோவை மதித்து, ஒரு கறுப்பரை நாயகனாக்கி நாவல் படைத்த முதல் எழுத்தாளர் திருமதி ஸ்டோவ். அடிமை முறை ஒழிப்புக்காக அமெரிக்காவில் நான்காண்டுகள் நடந்த உள்நாட்டுப் போருக்கு இந்தப் புத்தகமே அடித்தளமானது. இது 22 மொழிகளில் வெளியிடப்பட்டது. இந்த படைப்பின் பாதிப்பால்தான் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக வர முடிந்தது. ஸ்டோவ் 1862-ல் ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்தபோது, 'பெரிய உள் நாட்டுப் போரை உருவாக்கிய புத்தகத்தை வரைந்த சிறிய மங்கையே வருக' என்று சிரித்தபடி வரவேற்றார் லிங்கன்.

'வர்க்கப் போராட்டம் பாட்டாளி மக்களின் வெற்றியுடன் தான் முடிவடையும்' என்று முழங்கியவர் மார்க்ஸ். தொழிலாளர் வர்க்கத்தின் தேசிய பற்றுகளைப் பலவீனப்படுத்தி, அவர்களிடையே சர்வதேச ஒற்றுமை உணர்வை உருவாக்க முடியும் என்று அவர் கனவு கண்டார். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விவிலியமாகக் கருதப்படும் மூலதனத்தை (Das Capital)மார்க்ஸ் எழுதி முடிக்கப் 17 ஆண்டுகள் ஆயின. லண்டன் மியூஸியத்தின் நூலகத்தில் ஒவ்வொரு நாளும் 16 மணி நேரம் பல்வேறு தத்துவங்களையும், பொருளாதாரச் சித்தாந்தங்களையும் ஆய்வு செய்து, அவர் வடித்துத் தந்ததுதான் ‘மூலதனம்’. சுரண்டப்பட்ட ஏழைகளுக்காக விழி நீர் சிந்தி, வறிய தொழிலாளர்களின் வளத்துக்காகத் தன்னலம் இன்றி உழைத்து, வாழ்க்கை முழுவதும் அன்புத் தவமியற்றிய மாமுனிவன் மார்க்ஸ்.

எழுத்தைத் தவம் போல் போற்றியவர் டால்ஸ்டாய். சிற்பம் செதுக்குவது போல், பார்த்துப் பார்த்துப் பதம் பதமாக அவர் எழுத்தைச் செதுக்கியதால்தான், அவருடைய அன்னா கரீனாவும், போரும் அமைதியும் உலக இலக்கிய சிகரத்தில் இடம்பெற்றன.

எழுத்தை வேள்வியாக நடத்தும் டால்ஸ்டாய்கள் இன்று நம்மில் எத்தனை பேர்? 'ஓர் எழுத்தாளன் தன்னுடைய வாழ்க்கைக்காகவும், எழுதுவதற்காகவும் பணம் சேர்க்க வேண்டியது அவசியம். ஆனால், எந்தச் சூழலிலும் அவன் பணம் சேர்ப்பதற்காக வாழ்வதோ, எழுதுவதோ கூடாது' என்றார் மார்க்ஸ். பொதுவாழ்வில் மனிதப் புனிதனாக வலம் வந்த தோழர் ஜீவா, 'மக்களுக்காக எழுத வேண்டும். இதுதான் ஜனயுகத்தில் எழுத்துக் கலையின் முதல் சூத்திரம்' என்று அறிவுறுத்தினார்.

மன்மத எழுத்துகளுக்கு மாலை சூட்டும் இந்த வணிகப் பொருளாதார யுகத்தில் மனித நேய எழுத்தாளர்களுக்கு மரியாதை இல்லை. இங்கே திருக்குறளும், திரிகடுகமும், நாலடியாரும், நான்மணிக்கடிகையும் மாணவர்களால் மதிப்பெண்களுக்காகவே மனப்பாடம் செய்யப்படுகின்றன. மனித சமூகத்துக்கு மண்ணின் மரபார்ந்த அறவொழுக்கங்களைக் காலம் காலமாகக் கற்றுத் தரும் வேதங்களும், விவிலியமும், திருமறையும் இன்றைய 'நியூவேவ்' இளைஞர்களுக்கு வேண்டப்படாத வெறும் குப்பைகளாகத் தோற்றம் தருகின்றன.

இந்த மண்ணில் எழுதுவதற்கு எத்தனையோ பிரச்னைகள் இருக்கின்றன. சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்னைகளைக் கருவாக்கி, அவற்றுக்குக் கலையழகோடு தீர்வு சொல்லுவதுதான் எழுத்தின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். வறுமைக்காகச் சோரம் போவதும், எச்சிலையில் மிச்சமிருக்கும் சோற்றுக்காகச் சொறி நாயுடன் பிச்சைக்காரன் சண்டை இடுவதும் வாழ்வின் யதார்த்த உண்மைகளாக இருக்கலாம். அதே நேரத்தில், லட்சியங்களுக்காகப் போராடுவதும், தீமைகளுக்கு எதிராகத் துணிந்து துவந்த யுத்தம் நடத்துவதும், சத்திய வாழ்க்கையில் சோதனைகளைச் சந்திப்பதும் யதார்த்தத்துக்கு முரணானவை என்று முடிவுகட்டிப் படைப்புலக பிரும்மாக்கள் புறந்தள்ளலாகாது.

'எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்' என்ற பாரதியின் பாதையில் நல்ல லட்சிய வேட்கையுள்ள படைப்பாளிகள் பல்கிப் பெருகினால், இந்தச் சமுதாயத்தைச் சுத்தமாகச் சலவை செய்துவிட முடியும். நல்ல புத்தகங்களைத் தேடிப் படிக்கும் மனோபாவம் மக்களிடையே மலர வேண்டும். புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத அறை போன்றது. புத்தகங்களின் நடுவில்தான் குழந்தைகள் வளர்க்கப்பட வேண்டும். படிப்பதன் மூலம்தான் அறிவுக்கண் திறக்கும்.



நம்மைச் சிந்திக்கச் செய்யும் புத்தகங்களே நல்ல புத்தகங்கள். இசையின் இனிமை இசையமைப்பவரின் இசைக் குறிப்பில் இல்லை; அதைக் கேட்டுச் சிலிர்க்கும் இதயத்தில் இருக்கிறது. அதே போன்று, புத்தகத்தின் பெருமை அதன் உள்ளடக்கத்தில் இல்லை; அது நமக்குள் உருவாக்கும் உந்துதலில் இருக்கிறது.

புத்தகங்கள் புனிதமானவை. அவை எதிர்பார்ப்புகளுக்காக முகத்துக்கு நேரே எவரையும் முகமலரச் செய்வதில்லை. முதுகுக்குப் பின்னால் புறம் பேசுவதும் இல்லை. ஆனால், புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். மோசமான புத்தகத்தைவிட நம் நேரத்தைக் களவாடும் தீய திருடன் வேறு ஒருவரும் இல்லை.

ஆங்கில அறிஞர் பேகன் சொல்கிறார்: 'சில புத்தகங்களைச் சுவைக்க வேண்டும். சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும். சில புத்தகங்களை மட்டும் கொஞ்சம் கொஞ்சமாக அசைபோட்டு ஜீரணிக்க வேண்டும்!'

# 27

# முதுமை

**‘எ**ல்லோரும் ஏற்கக்கூடிய தர்மநெறிக்கு, நான் எப்போதும் இந்தியாவையே இனம் காட்டுவேன். ஓர் உயர்ந்த லட்சியமிக்க வாழ்க்கைக்காக, மனிதர்கள் கற்றாக வேண்டிய இலக்கியங்கள், இதிகாசங்கள் எங்கே இருக்கின்றன என்று என்னை யார் கேட்டாலும், இந்தியா இருக்கும் திசையையே என் கைகள் காட்டும்!’ என்று பேரறிஞர் மாக்ஸ்முல்லர், பிரிட்டிஷ் பேரரசி விக்டோரியாவுக்கு வரைந்த கடிதத்தில் குறிப்பிட்டார்.

மனித வாழ்க்கையை நான்கு பருவங்களாகப் பகுத்து பண்பாட்டைச் செழுமைப்படுத்தியது பாரதம். பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்கிற அந்த நான்கு நிலைகளில், கிருஹஸ்தம் என்னும் குடும்ப வாழ்க்கையே சமூகத்தின் உயிர்நிலையாகும்.



குடும்பம் என்பது தன்னுடைய மனைவி, மக்களை மட்டும் போற்றிப் பாதுகாக்கும் வீடு என்று சுயநலமாக நம் மூதாதையர்கள் வரையறை செய்து வாழவில்லை. துறவிகளுக்கும், ஏழைகளுக்கும், முதியவர்களுக்கும், முடியாதவர்களுக்கும் தம்மால் முடிந்த வரை உதவியாக இருப்பதே இல்வாழ்வின் இலக்கணம் என்று நெறிப்படுத்திய

புண்ணிய பூமி இது.



'குடும்பத் தலைவன் சேமிக்கும் செல்வத்தை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும். ஒரு பங்கு, நாம் இந்த மண்ணில் பிறப்பதற்குக் காரணமான நம் முன்னோர்க்குப் பிதுர்க்கடன் செய்ய; இரண்டாவது பங்கு, நம்மைப் படைத்த தெய்வத்துக்கு நன்றிக்கடன் ஆற்ற; மூன்றாவது பங்கு, நமக்கு எந்த வகையிலும் உறவில்லாத புதியவர்கள் வீடு தேடி வந்தால், அவர்களுக்கு விருந்தோம்ப; நான்காவது பங்கு, நம் சுற்றத்தாரின் நலம் காக்க; ஐந்தாவது பங்கு நமக்காக!' - இதுதான் வள்ளுவர் போதிக்கும் வாழ்க்கை அறம்.

நம்முடைய புராணங்களும், இதிகாசங்களும், காப்பியங்களும் நமக்கு இரண்டு கடமைகளை நினைவூட்டுகின்றன. ஒன்று, குடும்பக் கடமை; மற்றொன்று, சமுதாயக் கடமை. குடும்பக் கடமையை யாரும் தொண்டு என்று சொல்வதில்லை. நெஞ்சத்தால் நேரடித் தொடர்பற்றவர்க்கும் உவகையுடன் செய்யும் உதவிதான் உயர்வானது. அதுதான் சமூகக் கடமை.

மாதவியின் மீது இருந்த மையல் மறைந்ததும், மீண்டும் கண்ணகியுடன் இல்வாழ்வில் இணைந்தான் கோவலன். கண்ணகியைக் கண்கலங்க விட்டு, மாதவியுடன் தான் மகிழ்ந்திருந்த செயலுக்காக மனம் வருந்திப் பேசினான். 'மாதவியுடன் நீங்கள் மகிழ்ந்திருந்ததற்காக நான் மனம் வருந்தவில்லை. உங்களுடன் சேர்ந்து இல்லற தர்மத்தில் ஈடுபட்டு அறவோர்க்கும், அந்தணர்க்கும், துறவோர்க்கும் விருந்தோம்ப இயலாமல் போனதற்காகவே வருந்தினேன்' என்றாள் கண்ணகி.

விருந்தோம்பலை வீட்டின் தலைசிறந்த கடமையாகக் கருதிய இந்திய மண்ணில், இன்று வயது முதிர்ந்த பெற்றோரைப் பேணுவதே அவசியமற்ற ஒன்றாக ஆகிவிட்டது. 'பணத்தைத் தேடு; அந்தப் பணத்தின் மூலம் உன் சுகத்தை நாடு' என்ற பல்லவிதான், இன்றைய புதிய பொருளாதார வாழ்வின் பூபாளமாகி விட்டது. பாசம் இருந்த இதயத்தை இன்று ஆசைகள் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டன. பாசத்தால் நெகிழ்ந்த நெஞ்சங்கள் பாறைகளாக இறுகிவிட்டன. இன்று வெளிப்பார்வைக்குக் குடும்பம் இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு குடும்பத்திலும் சுயநலம்தான் கூடுகட்டி வாழ்கிறது.

பெற்று, வளர்த்து, ஆளாக்கிய பெற்றோரை, அவர்களுடைய வயோதிகத்தில் முதியோர் இல்லங்களில் தள்ளிவிடும் இளைஞர்களின் எண்ணிக்கை இப்போது அதிகரித்து வருகிறது. அவர்களுடைய குருதிப் புனலில், வழிந்தோடிய வியர்வையில், கடுமையான உழைப்பில் படித்து முடித்து, வேலை தேடி, வெளிநாடு சென்று, பணத்தில் மிதக்கும் பாசம் மறந்த பிள்ளைகள் சிலரின் புறக்கணிப்பால், அழுத கண்ணீரும் ஆறாத ரணமுமாய், அநாதைகளைப்போல் புலம்புகிறார்கள் பெற்றோர்கள். அடித்தட்டில் உள்ளவர்கள் பாசத்தோடு பசியைப் பகிர்ந்துகொள்ளும்போது, மேல்தட்டு மனிதர்களும், நடுத்தரவர்க்கமும் மன உறுத்தல் சிறிதுமின்றி, வீட்டு முதியவர்களை வீதியில் நிறுத்தி வேடிக்கை பார்ப்பதுதான் வேதனைக்குரியது.

ஆதரவற்ற முதியோரைப் பராமரிக்க மத்திய அரசு சட்டம் இயற்றப்போவது சமூக ஆரோக்கியத்தின் அடையாளமா? இந்த

மண்ணிலா இப்படியொரு நிலைமை? 'செடிகள் மலர்களையும், மரங்கள் பழங்களையும் உதிர்த்துவிடும். ஆனால், தந்தை இறுதிவரை தன் மகனைக் கைவிடுவதில்லை. மறுபேச்சின்றி தந்தையின் வார்த்தையை நிறைவேற்றுவதே மகனுடைய தலையாய கடமை. தாயைப் போன்ற பாதுகாப்பான சரணாலயம் உலகில் வேறு எதுவுமில்லை. தாயே தெய்வம். தாயை வணங்கினால் இம்மை, மறுமை இரண்டிலும் இன்பம் கிட்டும்' என்கிறது மகாபாரதம்.

அசுர குரு சுக்ராச்சாரியார் தந்த சாபத்தால், மன்னன் யயாதி இளமை இழந்து கிழத்தன்மையை அடைந்தான். இளமை தரும் இன்பங்களை அனுபவிக்க முடியாமல் போய்விட்டதே என்று வருந்திய யயாதி, சாப விமோசனம் வேண்டினான். 'உன் வயோதிகத்தை ஓர் இளைஞனுக்கு வழங்கி விட்டு, அவனுடைய இளமையை நீ பெற்றுக் கொள்ளலாம்' என்று வழிகாட்டினார் சுக்ராச்சாரியார். தன் இரண்டு மனைவியருக்குப் பிறந்த ஐந்து பிள்ளைகளிடமும், அவர்களின் இளமையைத் தனக்குத் தானம் கொடுக்கும்படி யயாதி வேண்டினான். பூரு என்கிற கடைசி மகனே மனமுவந்து தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி, தான் வயோதிகத்தைத் தழுவினான். இன்றுள்ள பிள்ளைகள் பூருவைப் போல் இளமையைத் தர வேண்டாம். பெற்றவர்க்கு அன்புடன் இளைப்பாறுதல் தந்தால், அதுவே போதும்! தந்தை சொல்லைத் தலைமேல் ஏற்று, அரசு துறந்து, கானகம் அடைந்து, ஆயிரம் துன்பங்களை அனுபவித்த ராமனின் கதை சொல்லும் ராமாயணத்தில் ஒரு காட்சி...

விலங்குகள் மறைந்திருந்தாலும், அவற்றின் ஓசையைக் கொண்டே அம்பெய்து கொல்லும் 'சப்த வேதனம்' என்ற வித்தையில் நிகரற்று விளங்கியவன் தசரதன். ஒரு நாள் இரவில், சரயூ நதிக் கரையோரம் தசரதன் தேரேறி வேட்டைக்குச் சென்றபோது, யானை நீரருந்தும் ஓசை என்று மயங்கி, அவன் விடுத்த அம்பு, பெற்றோரின் தாகம் தீர்ப்பதற்காகத் தண்ணீரைக் குடுவையில் முகந்துகொண்டு இருந்த ஓர் இளைஞனின் மார்பில் தைத்தது. ரத்தப் பெருக்கில் விழுந்து கிடந்தவனின் அலறலைக் கேட்டு அதிர்ச்சியுற்ற தசரதன், அவன் இருக்கும் இடம் தேடி ஓடினான்.

'பார்வை இழந்த என் பெற்றோரின் தாகம் தீர்க்க, நீர் எடுக்க வந்தவனின் உயிர் குடித்துவிட்டாயே! நான் இறப்பதற்காக வருந்தவில்லை. தாகத்தால் தவிக்கும் என் பெற்றோர் உரிய நேரத்தில் தண்ணீர் கிடைக்காமல் உயிர்விட நேருமே என்று தான் நெஞ்சம் துடிக்கிறேன். விரைந்து சென்று அவர்கள் இருப்பிடம் கண்டு, நடந்ததைக் கூறி, தண்ணீர் தந்து தாகம் தீர்த்தால் போதும். இப்போது

*அதுதான் நீ எனக்குச் செய்ய வேண்டிய உதவி’ என்று சொல்லி, உயிர் துறந்தான் அந்த இளைஞன். பார்வையற்ற பெற்றோர்க்குப் பணிபுரிவதே தன் வாழ்வின் பேரின்பம் என்று மகிழ்ந்த அந்த இதிகாச மகனைப் போல், இன்றைய இளைஞர்கள் உயிர் கொடுக்க வேண்டாம். பாசத்துடன் பெற்றோரின் கடைசி நாள் வரை பராமரித்தாலே போதும்!*

*தாயின் காலடியில் சொர்க்கம் இருப்பதாகச் சொன்ன நபிகளாரிடம் ஒருவர் வந்து, 'நான் பெரிய பாவம் இழைத்து விட்டேன். அதிலிருந்து விடுபட்டு உய்வதற்கு விமோசனம் உண்டா?’ என்று வினவினார். ‘உன் அன்னை உயிருடன் இருக்கிறாளா?’ என்று கேட்டார் பெருமானார். 'சிற்றன்னைதான் இருக்கிறாள்’ என்றார் வந்தவர். 'அப்படியானால், போய் அவளுக்குப் பணிவிடை செய். உன் பாவம் மன்னிக்கப்படும்’ என்றார் நாயகம்.*

*இன்று, நம் வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வோர் அடியும் வணிக மயமாகி விட்டது. 'வாழும் பண்பாடு* (Living Culture) *இந்தியாவில் மட்டுமே உண்டு’ என்று வில்டியூரண்ட் கொண்ட நம்பிக்கை பொய்யாய்ப் போனது. இந்த விஷச் சுழலிலிருந்து இந்திய சமூகம் இனியாவது விடுபட வேண்டும். காற்று எப்போதும் ஒரே திசையில் வீசாது. ஒவ்வொரு புதிய தளிரும் ஒரு நாள் காய்ந்த சருகாக உதிரப்போவது உறுதி. மழைக் காலத்தில் கரை புரண்டு வெள்ளமாக ஓடும் காட்டாறு, கோடை வெம்மையில் கால்கள் நனைக்கவும் நீரின்றிச் சுடுமணலாகத் தகிக்கும். வாலிபத்தின் நிமிர்ந்த நன்னடையும், நேரியபார்வையும், கால ஓட்டத்தில் கூனல் முதுகாக, குழி விழுந்த பள்ளமாக உருமாறும். இளமையின் மலர்ச்சி, முதுமையின் தளர்ச்சியில் முடிந்து போகும். வாழ்க்கை முழுவதும் பதினாறு வயதே இருக்க எந்த மார்க்கண்டேயனும் இந்த மண்ணில் வரம் வாங்கி வரவில்லை.*

*வாழ்க்கையில், வயோதிகம் கொடுமையானது. இயலாமையைவிடப் பெரிய நரகம் வேறெதுவும் இல்லை. உறவுகளிடமிருந்து அன்பென்னும் வரத்தை எதிர்நோக்கித் தவமிருக்கும் முதியவர்களால் புறக்கணிப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது. குழந்தைகளுக்கு மட்டுமல்ல, வாழ்வின் அந்திமத்தில் நிற்கும் வயோதிகர்களுக்கும் அடுத்தவரின் உதவி மிகவும் அவசியம். அன்பெனும் வரத்தை ஆதரவுக் கரங்களால் அவர்களுக்கு வழங்காமல் போனால், அடுத்த பிறவியிலும் நாம் சபிக்கப்படுவோம்.*

*எனவே... அன்பையே விதைப்போம். அன்பையே அறுவடை செய்வோம்!*

# 28

# ஒரு மனம்

மனிதர்களின் மனம், ஒரு மோசமான மயான பூமி. அதில்தான் எத்தனை எத்தனை எண்ணங்கள் ஞாபகக்கல்லறை களுக்குள் கண் துயில்கின்றன!

மனதுக்கு வாய்த்ததோ, ஒரு வழிப் பாதை. நினைக்கத் தெரிந்த மனதுக்கு மறக்கத் தெரிவதில்லை. சந்தோஷத்தில் சிலிர்த்துப் போகிற மனம், சோகத்தின் கனம் தாள முடியாமல் கண்ணீரில் கரைந்துவிடுகிறது.

இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதும் ஞானநிலை வாய்க்காத வரை, இதயத்தின் ரணங்களுக்கு மருந்து இல்லை.



மனம்தான், மனித மாளிகையின் மைய மண்டபம். ‘மனதில் ஒருவன் எதை இடைவிடாமல் எண்ணு கிறானோ, அவன் அதுவாகவே ஆகிறான்’ என்கிறது நம் உபநிடதம். 'ஒளியைப் பற்றிச் சிந்திப்பவன் ஒளிமயமாவான். காமம் பற்றிச் சிந்திப்பவன் காமுகனாவான். தர்மத்தையே எப்போதும் நினைவால் தழுவி நிற்பவன், அறத்தின் நாயகனாக உயர்ந்து நிற்பான்’ என்று அறிவுறுத்துகிறது நம் இந்து சமயம்.

'ஒரு மனம், ஒன்றே எண்ணம்' என்று வாழ்ந்தவர்களால்தான் சாதனையாளர்களாகச் சரித்திரத்தில் இடம் பிடிக்க முடிந்திருக்கிறது.

ஆனந்த பைரவியில் ஆலாபனை செய்துகொண்டு இருக்கும்போது, மனம் கல்யாணியில் கலந்துவிட்டால், கச்சேரி களை கட்டாது. எந்த ஒன்றில் நாம் ஈடுபடுகிறோமோ, அந்த ஒன்றில் நம் மனம் முழுதாக ஒன்றிவிட வேண்டும்.

விவேகானந்தர், இந்தியாவின் ஆன்மிகக் கொடியை அமெரிக்காவில் உயரப் பறக்கவிட்ட காலம்.

அங்கே ஒரு நாள் அவர் நடந்து சென்று கொண்டு இருந்தபோது, இளைஞர்கள் சிலர் கயிற்றில் முட்டை ஓடுகளைக் கட்டி தூரத்தில் தொங்கவிட்டு, அவற்றைக் குறி வைத்துச் சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததைக் கண்டார். அவர்களில் ஒருவராலும் சரியாகக் குறி பார்த்துச் சுட இயலவில்லை.

விவேகானந்தர் அவர்களை அணுகி, "எனக்கு ஒரு வாய்ப்பு வழங்குவீர்களா?'' என்று கேட்டார்.

அவர்கள் இவரது காவி உடையைப் பார்த்துவிட்டு, "உங்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி உண்டா?'' என்று வியப்புடன் கேட்டார்கள்.

"நண்பர்களே! இந்த நிமிடம் வரை, நான் துப்பாக்கியைத் தொட்டதில்லை. இப்போதுதான் முதன்முதலாக முயன்று பார்க்கப் போகிறேன். ஆனாலும், என்னால் குறி தவறாமல் சுட முடியும் என்று நம்புகிறேன்!'' என்றார் சுவாமி.

நம்பிக்கை இல்லாமல் ஒரு கேலிப் புன்னகையுடன் இளைஞர்கள் துப்பாக்கியை அவரிடம் தந்தனர். விவேகானந்தர் தம் மனதை ஒருநிலைப்படுத்தி, வரிசையாகத் தொங்கும் முட்டை ஓடுகளைக் கூர்மையாகப் பார்த்தார். பின்பு, துப்பாக்கியை இயக்கி, எல்லா முட்டை ஓடுகளையும் குறி தவறாமல் சுட்டு வீழ்த்தினார்.

"இது எப்படிச் சாத்தியம்?'' என்று அதிசயித்தார்கள் இளைஞர்கள்.

"ஒரு மனம், ஒன்றே எண்ணம் என்பது கைவரப் பெற்றால், இந்த உலகில் எதுவும் சாத்தியமே!'' என்று சொல்லி, விடைபெற்றார் சுவாமி.

ஃபிரெஞ்சு காலனி ஆதிக்கத்தின் பிடியிலிருந்து வியட்நாமை

விடுவிக்க, சின்னஞ்சிறு வயதிலேயே சபதம் பூண்டார் ஹோசிமின். அந்த லட்சியத்தை அடையும் நாள்வரை, அவர் நெஞ்சில் வேறு நினைவு இல்லை.

தேசிய விடுதலை இயக்கப் பணிகளில் ஈடுபட்டதால், கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்டார் அவர். விடுதலைப் போருக்கு வியூகங்கள் வகுக்க, ஐரோப்பிய நாடுகளில் சுற்றித் திரிந்தார்.



அடர்ந்த காட்டில், மூங்கில் புதர்களிலும் குகைகளிலும் தங்கி, விடுதலை வேட்கையுள்ள இளைஞர்களை ஒன்று திரட்டினார். கெரில்லாப் போருக்கு ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் திரட்டுவதில் ஈடுபட்டிருந்தபோது கைதானார். குவாங்சி மாநிலத்தில், முப்பது சிறைகளுக்கு மேல் மாறி மாறி இழுத்துச் செல்லப்பட்டார்.

கையில் விலங்குடனும், கழுத்தில் கட்டப்பட்ட பெரிய மரக்கட்டையுடனும் மலைப்பாதைகளிலும், சதுப்பு நிலங்களிலும், தகிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் அங்குமிங்கும் பந்தாடப்பட்ட ஹோசிமின், பதின்மூன்று மாதங்கள் அனுபவித்த சிறைக் கொடுமைக்குப் பின்பும் அவர் லட்சியம் சிதையவில்லை! அவரது தலை நரைத்தது. பற்கள் விழுந்தன. உடல் வலிமை தளர்ந்தது. அப்போதும் 'வியட்நாம் விடுதலை' என்கிற அவரது சிந்தனைத் தவம் மட்டும் சிறிதும் கலையவில்லை.

ஃபிரெஞ்சு ஆதிக்கம், ஜப்பான் படையெடுப்பு, சீன எதிர்ப்பு அனைத்தையும் முறியடித்து, இளமையில் அவர் ஏற்ற சபதத்தை செவ்வனே நிறைவேற்றி முடித்தார். உலக நாடுகளின் அங்கீகாரத்துடன், ஹோசிமின் தலைமையில் வியட்நாமில் சுதந்திர, சோஷலிச அரசு அமைந்தது.



'ஒரு மனம், ஒன்றே எண்ணம்' என்று வாழ்பவர்களைத்தான், உலகம் என்றும் வணங்கும். அதற்கு புத்தர்பிரானே சரியான சாட்சி.

மனித வாழ்வின் துயரங்களுக்குத் தீர்வு காணும் ஒரே எண்ணத்துடன் அரண்மனைச் சுகங்களை மறுதலித்து விட்டு, ஆரண்யத்தை அடைந்தவர் அவர். அங்கே ஆறு ஆண்டுகள் கடுந்தவம் செய்த அவரைப் போல உலகில் வேறு யாரும் தவம் செய்தது இல்லை.

வெயில், மழை, காற்று, பசி, தாகம் போன்ற எதையுமே லட்சியம் செய்யாமல் தவத்தில் அமர்ந்து, மனதை ஒருமுகப் படுத்த முயன்றார்.

உடல் மெலிந்து, எலும்போடு தோல் ஒட்டி உலர்ந்து, கண்கள் குழி விழுந்து, விலா எலும்புகள் வெளித்தெரிய தவத்தில் கடுமையாக ஈடுபட்ட போதும், மனம் முற்றாக வசப்பட மறுத்தது.

இறுதியாக வெள்ளரச மரத்தடியில், சமாதி நிலையில், புத்தியைத் தன்வயமாக்கி, மனதை ஒருமுகப்படுத்தி, புல்லாசனத்தில் அமர்ந்து, 'என் எலும்பும் தோலும் கருகி, ஊன் உருகி, குருதி வற்றினாலும், நான் தேடி நிற்கும் ஞானத்தை அடையும்வரை, இந்த ஆசனத்திலிருந்து எழமாட்டேன்' என்ற திட சித்தத்துடன் தியானத்தில் ஆழ்ந்தார்.

வைசாகப் பூர்ணிமைச் சந்திரன் வானவீதியில் நிலவொளி பரப்பிய ஓர் இரவில், சித்தார்த்தன் புத்தரானார்!

ஏழைச் சிறுவனாக வறுமையைச் சுமந்து, விடலையாக வீதியில் திரிந்த ஹென்றி ஃபோர்டுதான், பின்னாளில் கார் தயாரிப்பில் சாதனை நிகழ்த்தி, அமெரிக்காவின் பெரும் பணக்காரராகப் பரிணமித்தார்.

"உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?'' என்று உலகம் அவரிடம் கேட்டது.

"லட்சியத்துக்கான இலக்கைத் தெளிவாகத் தீர்மானித்து, அதை நோக்கி மனதை ஒருமுகப்படுத்தினால், வெற்றிக்கான மூலக்கூறுகள் தாமே நம்மைத் தேடி வரும். ஒரே எண்ணத்தில் மனம் ஒன்றிவிட்டால், யாருக்கும் எந்தச் சாதனையும் மிக எளிது!'' என்றார் ஹென்றி ஃபோர்டு.

'யோகம்' என்றால் 'பொருந்துதல்' என்று பொருள். எதைச் செய்கிறோமோ, அதில் மனம் பொருந்தி, சரியாகச் செய்வதுதான் யோகம். இதை விளக்க வந்த மகாகவி பாரதி, "தப்புத் தப்பாக வேதம் ஓதுபவனைவிட, ஒழுங்காகச் சிரைப்பவனே மேற்குலத்தான்!'' என்றார்.

ஒரு நேரத்தில், ஒரே இலக்கில்தான் நம் கவனம் முழுவதும் குவிந்து இருக்க வேண்டும். பத்துத் திசைகளில் பார்வையைத் திருப்பினால், எந்தத் திசையையும் ஆள முடியாது.

'நரகத்தைச் சொர்க்க மாகவும், சொர்க்கத்தை நரகமாகவும் மாற்றக்கூடியது, மனதில் எழும் எண்ணமே!' என்ற கவிஞன் மில்டனின் வார்த்தைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேடு, பள்ளம் இல்லாத வாழ்க்கைப் பயணம், ஏற்ற இறக்கம் இல்லாத சங்கீதம் மாதிரி! அதில் உணர்ச்சியும் இல்லை; நெகிழ்ச்சியும் இல்லை.

மார்கழிக் குளிரும் வைகாசி வெப்பமும் கலந்ததுதான் காலம். இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் வாழ்க்கை. இனம் தெரியாத விரக்தி, காரணம் இல்லாத வெறுப்பு, கண்ணீரை வரவழைக்கும் கசந்த நினைவுகள் இங்கே யாருக்குத்தான் இல்லை?

ஏதோ ஒரு சோகத்தில் இதயம் ரணமாகி, ஒப்புக்கு உதடுகளில் மட்டும் புன்னகையின் ஊர்வலத்தை நடத்திக் கொண்டு இருப்பவர்கள், தங்கள் அடிமனதில் படிந்து கிடக்கும் ஆயிரம் அவலக் கவலைகளையும் அடியோடு அகற்றிவிட்டு, 'ஒரு மனம், ஒன்றே எண்ணம்' என்று இனியாவது வாழ்ந்து பார்க்க வேண்டும்.

மன ஒருமை! அதுதான் நாம் பயில வேண்டிய வாழ்க்கை வேதம்.

# 29

# சும்மா

**உ**யரமான குன்றின் உச்சியில் ஒருவன் நின்றிருந்ததை மூன்று வழிப்போக்கர்கள் பார்த்தனர். அங்கே அவன் என்ன செய்கிறான் எனக் கேள்வி எழுந்தது. ‘காணாமல் போன வீட்டு விலங்கை அவன் தேடக்கூடும்’ என்றான் முதல் ஆள். ‘நண்பனைத் தேடுகிறானோ, என்னவோ?’ என்றான் அடுத்தவன். ‘காற்று வாங்கப் போயிருப்பான்’ என்றான் மூன்றாவது மனிதன்.

ஒருவன் கருத்தை இன்னொருவன் ஏற்கவில்லை. அவனிடமே கேட்டுவிடலாம் என்று மூவரும் முடிவெடுத்து, மிகுந்த சிரமத்துடன் உச்சியை அடைந்தனர். 'எதற்காக இங்கு நீ நிற்கிறாய்?’ என்று கேட்டபோது, அவன் சொன்னான்... 'சும்மாதான்!’

இந்த ஜென் கதையைப் போல்தான், இந்திய மண்ணில் சும்மா இருப்பதையே ஒரு சுகமான யோகம் போல் பலர் பயின்று வருகின்றனர்.



'இரவில் பசியின்றி உறங்குவதற்குத் தேவைப்படுவதை, பகலில் சம்பாதிக்க வேண்டும். மழைக் காலத்தில் செலவழிக்க, மற்ற மாதங்களில் சேமிக்க வேண்டும். முதுமையில் நிம்மதியாக வாழ்வதற்கு இளமையில் பொருள் தேடிக்கொள்ள வேண்டும். உயிருள்ள வரை மனிதர்கள் உழைத்துக்கொண்டு இருக்க வேண்டும். முயற்சி இல்லாதவனுக்கு

மகிழ்ச்சி கிடையாது' என்கிறது மகாபாரதம். 'வியர்வையின் விளைச்சலையே ஒருவன் உணவாகக் கொள்ள வேண்டும்' என்கிறது பரிசுத்த வேதாகமம். 'தன்னுடைய கரங்களால் உழைத்து உண்ணும் உணவைவிட, வேறு உயர்ந்த உணவை ஒருவன் எங்கும் பெற முடியாது' என்றார் நபிகள் பெருமானார். 'உழைக்காமல் உண்ணும் உணவு திருட்டுக்குச் சமம்' என்கிறது பகவத் கீதை.



சும்மா இருப்பதைவிட மனிதன் செத்துப் போவது மேலானது. ஓயாமல் ஓடிக்கொண்டு இருக்கும் மகாநதியைப் போல மனிதன் சோம்பலின்றி இயங்கிக்கொண்டே இருக்கவேண்டும். பயன்படுத்தப்படாத எந்தப் பொருளும் கால ஓட்டத்தில் பாழ்பட்டுப் போகும். வாசிக்காத வீணை உறைக்குள் உறங்கினால், விறகுக் கட்டைக்கும் அதற்கும் என்ன வித்தியாசம்? ஓடினால்தான் அது நதி. வீசினால்தான் காற்று. பாடினால்தான் குயில். பாடுபட்டால்தான் மனிதன்!

ஃபிரெஞ்சுப் புரட்சியின் பிதாமகன் வால்டேர். மனிதர்களின் மனங்களுக்குச் சுதந்திர சிறகுகளைத் தந்த சிந்தனையாளர். 'விழித்தெழுங்கள்! உங்கள் அடிமை விலங்குகளை உடைத்தெறியுங்கள்' என்று ஓயாமல் குரல் கொடுத்த அந்தப் போராளியின் பேனா முனை பிரசவித்த புரட்சிக் கருத்துக்கள், ஃபிரெஞ்சு அரியணையில் அமர்ந்திருந்த ஆதிக்கவாதிகளுக்கும், ஆலயங்களைச் சுரண்டல் ஸ்தாபனங்களாக மாற்றிய மதவாதிகளுக்கும் எதிராக மக்களைக் கிளர்ந்தெழச் செய்தன. ஒடுக்கப்பட்டவர்களின் உரிமை கீதமாக

அவருடைய பேச்சும் எழுத்தும் விளங்கியதால் அவர் நாடு கடத்தப்பட்டு, நாற்பது ஆண்டுகளுக்குப் பின்பே பாரீஸுக்குத் திரும்பினார். தன்னுடைய 83-வது வயதிலும் செயலூக்கச் சிந்தனைகளை எழுத்தில் செதுக்கினார்.

'மதவெறியர்களைப் போல் நாத்திகர்கள் பயங்கரமானவர்கள் அல்லர். மதவெறியர்களால் மனித குலத்துக்கு நேர்ந்த இன்னல்கள் எண்ணற்றவை. இறை நம்பிக்கை இல்லாத நாத்திகர்கள் மௌன வேதாந்திகள். அவர்களால் யாருக்கும் துன்பம் இல்லை' என்ற வால்டேர், அரசியலை மதத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு இறுதிவரை முயன்றார்.

மரணப் படுக்கையில் வால்டேர் இருப்பதை அறிந்து, பாதிரியார் ஒருவர் பாவமன்னிப்பு வழங்க வந்தார். 'உங்களை இங்கு அனுப்பி வைத்தவர் யார்?' என்று ஏளனம் ததும்ப வால்டேர் கேட்க, 'கடவுள்' என்றார் பாதிரியார். 'அவர் உங்களை அனுப்பியதற்குச் சான்று எங்கே?' என்று வால்டேர் மீண்டும் கேட்க, பாதிரியார் மௌனமாகத் திரும்பி நடந்தார்.

மதத்தின் மூடநம்பிக்கைகளையும், மதவாதிகளின் சுரண்டல் மனோ பாவத்தையும் வன்மையாக எதிர்த்த வால்டேர், கடவுளை மறுக்கவில்லை. மரண தேவதையின் அணைப்பில் அவர் விழி மூடும் முன், 'நான் கடவுளைப் போற்றியபடி, நண்பர்களை நேசித்தபடி, எதிரிகளிடம் பகைமையின்றி, மூடநம்பிக்கைகளை எதிர்த்தபடி சாவைத் தழுவுகிறேன்' என்றார்.

கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், வரலாறு, தத்துவம் என்று கடைசிவரை அவர் எழுதிய வண்ணம் இருந்தார். ஒருபோதும் சும்மா இராமல், வாழ்நாள் முழுவதும் அவர் நடத்திய எழுத்து வேள்வியின் விளைவாக, அவர் மறைந்து பதினொரு ஆண்டுகள் முடிவதற்கு முன்பே, ஃபிரெஞ்சுப் புரட்சி எரிமலையாக வெடித்தது. சுதந்திர உணர்ச்சி ஃபிரெஞ்சு மக்களின் உள்ளங்களில் வெள்ளமெனப் பெருகியது.

'சும்மா' என்ற வார்த்தைக்கே இடமில்லாத வாழ்க்கை, மாவீரர் லெனினின் வாழ்க்கை. ருஷ்யப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி, உலகில் முதன்முதலாக ஒரு சமத்துவ அரசை நிறுவிச் சரித்திரம் படைத்த அந்த மகத்தான மனிதரின் உடல் நலம் 1921-ம் ஆண்டு இறுதியில் சீர்குலைந்தது. கடுமையான தலைவலியும், தலைச் சுற்றலும் அவரை இடைவிடாமல் அலைக்கழித்தன. மிக அதிகமான உழைப்புச் சுமையே

அவரது உடல் நலிவுக்குக் காரணம் என்று உறுதிப்படுத்தினார்கள் மருத்துவர்கள். வேலைப் பளுவை அவர் இறக்கி வைப்பதுதான் நல்லது என்று அறிவுரை வழங்கினார்கள். ஆனால், உழைக்காமல் சும்மா இருக்க அவர் மனம் ஒப்பாததால், மருத்துவர்களின் அறிவுரையை அலட்சியம் செய்தார் லெனின். முதல் முறை மாரடைப்பு ஏற்பட்டது. பேச்சுத் திறனை இழந்தார்; எழுந்து நடக்க முடியாமல் படுக்கையில் விழுந்தார்.

மனைவி குரூப்ஸ்காயா மற்றும் சகோதரி மரியாவின் துணையோடு இடது கையால் எழுதப் பழகினார் லெனின். இடையறாமல் வாய்விட்டுப் பலமாகப் பேசுவதற்கு முயன்றார். தன் கால்களால் எழுந்து நிற்கவும், நடக்கவும் பயிற்சிகள் மேற்கொண்டார். மிகக் குறுகிய காலத்தில் அவர் பழைய லெனினாகப் பிறப்பெடுத்தார்.

1922 டிசம்பரில் அவருக்கு இரண்டாவது முறையாக மாரடைப்பு ஏற்பட்டது. முதல் முறையை விட அது கடுமையாக இருந்தது. அவர் மீது ஓய்வு திணிக்கப்பட்டது. ஆனாலும், அவரால் சும்மா படுத்திருக்க இயலவில்லை. சோவியத் பொருளாதார அமைப்பில் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பு குறித்துக் கட்டுரைகள் தீட்டத் தொடங்கினார். மூன்றாவது முறையாக, 1924 ஜனவரி 21 அன்று, மீண்டும் லெனினை மாரடைப்பு மிகக் கடுமையாகத் தாக்கியபோது, அவர் நினைவிழந்தார். ஒரு மணி நேரத்துக்குள் அந்த லட்சிய வீரரின் உயிர் பிரிந்தது.

லெனினைப் போல் ஏராளமாகப் படித்த, எண்ணற்ற நூல்களை எழுதிக் குவித்த தலைவர் வேறு எவரும் இல்லை. சோர்வறியாது, சோம்பலின்றி உழைத்த அந்த மாமனிதர், தன் 54-வது வயதில் கண்மூடும் வரை, கணப் பொழுதும் சும்மா இருந்ததில்லை.

சாதாரண குதிரைப் படை வீரனாகப் பொதுவாழ்வைத் தொடங்கி, உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவராக உயர்ந்தவர் சர்ச்சில். பேச்சிலும் எழுத்திலும் பேராற்றல் மிக்கவர். இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தன் 27-வது வயதில் நுழைந்து, நீண்ட நெடுங்காலம் அதன் உறுப்பினராக இருந்து தனி முத்திரை பதித்தவர்.

இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரிடமிருந்து இங்கிலாந்தைக் காப்பாற்ற, தனது 65-வது வயதில் பிரதமர் பொறுப்பேற்ற சர்ச்சில், தோல்வி மனப்பான்மையில் துவண்டு கிடந்த பிரிட்டிஷ் மக்களுக்கு வெற்றியைத் தேடித்தந்தார். ஆனால், அந்த வெற்றிக்குப் பின்பு அவருடைய கன்சர்வேடிவ் கட்சி தேர்தலில் தோல்வியைத் தழுவியதால் பதவி விலகியவர், மீண்டும் 76-வது வயதில் 1951-ல் பிரதமரானார்.

எண்பது வயது வரை அரசாண்ட சர்ச்சில், தன் 90-வது வயதில்தான் அரசியல் உலகிலிருந்து விடைபெற்றார்.

இரண்டாம் உலகப் போர் பற்றி அவர் எழுதிய நூல் ஆறு தொகுதிகளாக வெளி வந்தது. சர்ச்சிலின் அந்தப் படைப்பை வெளியிடுவதற்கு முன் பணமாக மட்டும் 5 லட்சத்து 50 ஆயிரம் பவுன் அளித்தது 'டெய்லி டெலிகிராஃப்' இதழ். 'லைஃப்' இதழ், சர்ச்சிலின் வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிடுவதற்கு 10 லட்சம் டாலர் தந்தது. அவருடைய எழுத்துக்கு நோபல் பரிசும் கிடைத்தது. தன் வாழ்வின் அந்திமத்திலும் எழுதுவதை நிறுத்த வில்லை சர்ச்சில். தளர்ந்த வயதில், தளராத மொழி நடையில் அவர் வடித்த 'ஆங்கிலம் பேசும் மக்களின் வரலாறு' பெரும் வரவேற்பைப் பெற்றது. எழுதியே பெரும் பணம் குவித்த சர்ச்சில், சாகும் வரை சும்மா இருந்ததே இல்லை.

லாகூர் சதிவழக்கில் சர்தார் பகத்சிங்குக்கு வெள்ளையர் அரசு தூக்கு தண்டனை விதித்து. 1931 மார்ச் 23... தூக்கில் தொங்கும் நாள். 'மெழுகுத்திரி ஒளி மங்குவதுபோல், நானும் நாளைக் காலை ஒளியில் கரைந்து போவேன். ஆனால், நம் நம்பிக்கைகள், குறிக்கோள்கள், லட்சியங்கள் என்றும் உலகுக்கு ஒளியூட்டும். இன்று போய் நாளை மீண்டும் பிறப்போம்... எண்ணற்ற இந்நாட்டு வீரர்கள் வடிவில்!' என்று தம்பி குல்வீருக்குக் கடைசியாக முன்னிரவில் ஒரு கடிதம் எழுதி வைத்த பகத்சிங், தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்ல ஆட்கள் வந்தபோது, சாவைப் பற்றிய சஞ்சலம் இன்றி, லெனின் எழுதிய 'அரசும் புரட்சியும்' என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அழைப்பொலி கேட்டதும், 'சற்றுப் பொறுங்கள்! ஒரு புரட்சியாளன் இன்னொரு புரட்சியாளனுடன் பேசிக் கொண்டிருக்கிறான்' என்ற பகத்சிங், சாகும் நிலையிலும் சும்மா இருக்க விரும்ப வில்லை.

இதோ... சும்மா இருப்பவர்களைச் சொல்லில் சுட்டெரிக்கிறான் பாரதி...

'சும்மா சும்மா சும்மா இருந்துதான் இந்தத் தேசம் குட்டிச் சுவராய்ப் போய்விட்டதே! இன்னும் என்ன சும்மா? எவனைப் பார்த்தாலும் இந்த நாட்டில் சும்மாதான் இருக்கிறான். லட்சம் லட்சமாகப் பரதேசி, பண்டாரம், சந்நியாசி, சாமியார் என்று கூட்டம் கூட்டமாகச் சோம்பேறிப் பயல்கள்!

கஞ்சா அடிக்கிறதும், பிச்சை வாங்கித் தின்கிறதும், சும்மா உலாவுகிறதும்தான் அந்தப் பயல்களுக்கு வேலை! இரண்டு வேளை

ஆகாரம் இருந்தால், அவன் தொழில் செய்யும் வழக்கம் இந்தத் தேசத்தில் கிடையாது. ஜமீன்தார், மிட்டாதார், பண்ணையார், மிராசுதார், இனாம்தார், ஜாகீர்தார், மடாதிபதிகள், ராஜாக்கள் எல்லாருக்கும் சும்மா இருப்பதுதான் வேலை. சோம்பேறிப் பயல்களுடைய தேசம்!'

# 30

# கற்பு

**‘கை**ப்பிடித்த கணவனைத் தவிர தெய்வம் வேறில்லை’ என்று எண்ணி, அவனை வழிபட்டு வாழ்வதுதான் கற்பு. நாள்தோறும் வீடு பெருக்கி, பசுவின் சாணத்தைக் கரைத்து மெழுகிக் கோலமிட்டு, வீட்டு வேலைகள் அனைத்தும் செய்து, கணவனுக்கு உணவு சமைத்து, அவன் உண்டபின் உண்டு, அவன் உறங்கிய பின் உறங்கி, அவன் எழுவதற்கு முன் எழுந்து, அவனிட்ட கட்டளைகளை இன்முகத்துடன் நிறைவேற்றி, அவனுக்காகவே வாழ்வதுதான் கற்புடைய பெண்ணுக்கு அழகு’ என்கிறது அபிதான சிந்தாமணி.

ஆதிமனிதர்கள் கூட்டமாகச் சென்று, விலங்குகளை வேட்டையாடினர். வேட்டை உணவை அங்கேயே அனைவரும் பகிர்ந்துகொண்டனர். ஒவ்வொரு கூட்டமும், ஒவ்வோர் இனக்குழுவாக உருவெடுத்தது. அந்த இனக்குழுவுக்கு ரத்த உறவே அடித்தளமானது. ‘ஒவ்வொருவரும் அனைவருக்குமாக, அனைவரும் ஒவ்வொருவருக்குமாக’ என்னும் வாழ்க்கை முறையே ஒழுக்கமானது. குழுமணங்களும், பொதுமைப் பாலுறவும் நியதியாயின. பெற்றவள் பெருமைப்படுத்தப்பட்டாள். தாய் வழிச் சமுதாயம் மலர்ந்தது. இப்போதைய கற்பு குறித்த பிரக்ஞை அப்போது இல்லை.



காலஓட்டத்தில் நாகரிக மாற்றம் நிகழ்ந்தது. வேட்டைச் சமுதாயம் வேளாண்மை சமுதாயமானது. கால்நடை வளர்ப்பில் ஆடவர் ஆதிக்கம் தலையெடுத்தது. ஆதிப் பொதுவுடைமைச் சமுதாயம் அழிந்து, தனிச் சொத்துரிமைச் சமுதாயம் தோன்றியது. தான் உழைத்துச் சேர்த்த சொத்து, தனக்கு மட்டுமே உடன்பட்டவளுக்குத் தன்னால் பிறக்கும் பிள்ளைகளுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற உடைமை விருப்பம், ஆணின் உள்ளத்தில் உருவெடுத்தபோதுதான் கற்பு என்ற கருத்தேற்றத்துக்குக் கால் முளைத்தது. பெண்ணை அடிமைப்படுத்திய நிலவுடைமைச் சமுதாயத்தின் சிந்தனையில் விளைந்ததுதான் கற்பென்னும் சித்தாந்தம்.

தனிச் சொத்துரிமை வேரூன்றிய சமுதாயத்தில் தலைவன், தலைவி, மகன், மகள் என்று சேர்ந்து வாழும் குடும்பம் பிறந்தது. திருமணம் என்ற வாழ்க்கை ஒப்பந்தம் தனி மனித வாழ்வில் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றது. ஒருத்தி ஒருவனோடு மட்டுமே காலம் முழுவதும் உடன்பட்டு வாழ்வதே பெண் கற்பு என்று வரையறுக்கப்பட்டதே தவிர, ஒருவன் ஒருத்தியோடு மட்டும் உயிராகக் கலந்து இறுதி வரை வாழ்வதே ஆண் கற்பு என்று எந்த வரையறையும் தொன்று தொட்டு இன்றுவரை கடைப் பிடிக்கப்படவில்லை!

ஓர் ஆடவன் பல பெண்களுடன் வாழ்ந்ததைப் போன்றே, ஒரு பெண் பல ஆண்களுடன் சேர்ந்து வாழ்ந்ததை மகாபாரதம் சொல்கிறது. துருபதனிடம் தர்மன், ‘உடன் பிறந்த நாங்கள் ஐவரும் உங்கள் மகள் திரௌபதியை மணந்து வாழ விரும்புகிறோம்’ என்று தெரிவித்ததும், அதிர்ச்சியுற்ற துருபதன், ‘ஒரு பெண் பல ஆண்களை மணந்து வாழ்ந்ததை இதுவரை நான் கண்டதும் இல்லை, கேட்டதுமில்லை. ஒருத்தி பலருக்கு மனைவியாவது அதர்மமான பாவ காரியம். இதை என்னால் ஏற்க முடியாது’ என்று கோபத்துடன் மறுக்கிறான்.

‘நீண்ட காலத்துக்கு முன் ஜடிலை என்பவள், ஏழு ஆண்களை மணந்து வாழ்ந்தாள். வார்ஷி என்பவள் ஒரே நேரத்தில், பத்து சகோதரர்களுடன் இல்லறத்தில் ஈடுபட்டாள். அதனால் நாங்கள் ஐவரும் திரௌபதியை மணப்பது தவறாகாது’ என்று தன் பக்க நியாயத்தை நிறுவ முயல்கிறான் தர்மன். அப்போது வியாசர் குறுக்கிட்டு, ‘மானிட மகளிர் ஒருவரை மணப்பதே நியதி. ஆனால், திரௌபதி இலக்குமியின் அம்சம். அவள் ஐவரை மணக்க வேண்டும் என்பது சிவன் விதித்த விதி. அதனால், தர்மன் சொல்வதை ஏற்கலாம். ஆனாலும், சாதாரண மனிதர்களுக்கு இது தர்மமாகாது’ என்கிறார். அதன்பின் பாண்டவர் திரௌபதி திருமணம் நடந்ததாக பாரதம் சொல்கிறது.

‘ஒருத்தி ஒருவனை மணந்து வாழ்வதே மானுட தர்மம்’ என்று விளக்கிய வியாசர், ஒருவன் ஒருத்தியோடு மட்டுமே வாழ வேண்டும் என்று வேதம் சொன்னதாக விதி எழுதவில்லை. பெண் கற்பு குறித்துப் பெருமையுடன் பேசும் தமிழர் சமுதாயமும், ஆண் கற்பைப்பற்றி அதிகம் சொல்லவில்லை. தொல்காப்பியர் காலத்திலேயே, ஒருவன் பல பெண்களுடன் தொடர்பு கொண்டு இருந்தது பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது.

சிலப்பதிகாரத்தில், தன் கணவன் குற்றம் அற்றவன் என்று நிரூபிப்பதற்குக் கையில் சிலம்புடன், கண்ணில் நீர் வழிய, அரசவைக்குள் நுழைந்து, பாண்டியனிடம் தன் வரலாற்றை விளக்கும் கண்ணகி, ஏழு கற்புடை மகளிரைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். கணவன் பிரிந்து சென்றதும், தன் முக அழகில் மாற்றான் ஈடுபாடு கொள்ளக் கூடாது என்பதற்காக தன் முகத்தைக் குரங்கு முகமாக மாற்றிக் கொண்டவளையும், கணவன் வரும் நாள்வரை கல்லுருவில் காத்துக் கிடந்தவளைப் பற்றியும் பெருமிதமாகப் பேசுகிறாள் கண்ணகி. ஆனால், மனைவியின் பிரிவில், அவளையே நினைந்து உருகி, அவளுக்காகவே கரைந்துபோன கற்பார்ந்த ஆண்களின் பட்டியலை இளங்கோ அடிகளால் வெளிப்படுத்த முடியவில்லை.

‘கற்புள்ள பெண் என்பதற்கு அடையாளம், அவளைப் பார்க்கும் எந்த ஆணின் நெஞ்சிலும் தவறான எண்ணம் தோன்றாமல் இருப்பதுதான்’ என்கிறது மணிமேகலை. மருதி என்ற பார்ப்பனப் பெண் நீராடிய நிலையில், இளவரசன் சுகந்தன் அவளைக் காமத்துடன் நோக்குகிறான். ‘மண்ணுக்கு மழை வளம் தரும் பெண்ணாக இருந்தால், அவள் பிறர் நெஞ்சு புகமாட்டாள். ஓர் ஆணின் இதயத்தில் காமம் கிளர்ந்து எழுவதற்கு நான் காரணம் ஆனதால், என் கற்பு களங்கம் உடையது’ என்று மருதி மனம் கலங்குவதாக மணிமேகலை கூறுகிறது. பெண்ணுக்கு கற்பின் பெயரால் இழைக்கப்பட்ட பெருங்கொடுமை அல்லவா இது!



பல பரத்தையருடன் ஓர் ஆண்மகன் உறவு கொண்டதை எதிர்த்து இலக்கியம் படைத்த முதல் மனிதர் வள்ளுவர். ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பைப் பொதுவாக்கிப் பார்த்த முதல் புரட்சியாளர் அவர். அன்றைய ஆணாதிக்க சமூகத்தின் செல்வாக்கில், கணவனை மட்டுமே கடவுளாக வணங்கிய 'தெய்வக்கற்பு' பற்றி அவர் பேசினாலும், அடுத்தவர் மனைவியை நாடும் மனிதர்களை நல்வழிப்படுத்த 'பிறனில் விழையாமை'யும், பரத்தையர் தொடர்பைக் கட்டறுக்க 'வரைவின் மகளிரை' யும் அழுத்தமாக எடுத்துரைத்தார்.

ஆணின் கற்பை அறத்துடன் நெறிப்படுத்த அவர்தான் முதலில் முயன்றார். அவருடைய வழியில் பின்பு வந்து சேர்ந்தான் கம்பன். மருத நிலத்தையும், மக்கள் வாழ்க்கை முறையையும் 14 பாடல்களில் விரிவாக விளக்கும் கம்பன், மறந்தும் மருதத் திணைக்குரிய பரத்தையர் பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஆணுக்கும், பெண்ணுக்கும் புலனடக்கம் போதிப்பதற்காகவே ராமாயணத்தைத் தமிழில் தந்தவன் அவன். அறுபதாயிரம் மனைவியரோடு வாழ்ந்த தசரதனுக்கு மகனாகப் பிறந்த ராமன், ஒருத்திக்கு ஒருவனாக வாழ்ந்த சிறப்பைச் சொல்ல எழுத்தாணியை கையில் எடுத்தான் கம்பன். அசோகவனத்தில் ஆற்ற முடியாத சோகத்தைச் சுமந்தபடி அமர்ந்திருந்த சீதையின் நெஞ்சில் நினைவலைகள் மோதுகின்றன. ராமனின் நற்பண்புகளை மனதில்

அசை போடுகிறாள். கைப்பிடித்த மணநாளில், 'இந்த இப்பிறவிக்கு இரு மாதரை சிந்தையாலும் தொடேன்' என்று அவன் அளித்த செவ்வரத்தை அவள் சிந்தித்துச் சிலிர்க்கிறாள். ஒருவனும், ஒருத்தியுமாக வாழும் வாழ்க்கையை வலியுறுத்தவே கம்பன் காப்பியம் படைத்தான். ஆண் கற்பை அழுத்தமாகப் பேசியவன் அவன்.

'கற்பு நிலை என்று சொல்ல வந்தால், இருபாலார்க்கும் அதைப் பொதுவில் வைப்போம்' என்ற பாரதி, பெண்ணுக்குக் கற்பு விலங்கு பூட்டி, ஆண் மக்கள் பிற மாதருடன் நெஞ்சழிந்து நிற்பதை காணச் சகியாமல், கடுமையாக விமர்சனம் செய்தான். 'அட பரம மூடர்களே! ஆண் பிள்ளைகள் தவறினால், ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லக்ஷம் ஜனங்கள். 50 ஆயிரம் பேர் ஆண்கள். 50 ஆயிரம் பேர் பெண்கள். அதில் 45 ஆயிரம் பேர் பரஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக்கொள்வோம். அதிலிருந்து குறைந்தபக்ஷம் 45 ஆயிரம் ஸ்திரீகள் பரபுருஷரின் இச்சைக்கிடமாக வேண்டும். இந்தக் கூட்டத்தில் 20 ஆயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே குறைந்த பக்ஷம் 20 ஆயிரம் ஸ்தீரிகள் விபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது.

அந்த 20 ஆயிரம் விபசாரிகளில் 100 பேர்தான் வீதியில் தள்ளப்படுகிறார்கள். மற்றவர்கள் புருஷனுடன் வாழ்கிறார்கள். ஆனால், அவளுடைய புருஷனுக்கு மாத்திரம் அவள் விபசாரி என்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லை என்று சும்மா இருப்பாருமுளர். சீச்சீ! மானங்கெட்ட தோல்வி ஆண்களுக்கு' என்கிறான் பாரதி.

ஆணாதிக்கம், சுய நலமாக பெண்ணுக்குக் கற்பெனும் விலங்கு பூட்டி அடிமைப்படுத்தியது. அந்த விலங்கை உடைத்தெறியும் வேகத்தில், ஒழுக்கச் சிதைவுக்கு வாசற்கதவைத் திறந்து வைக்கப் பெண்ணியம் பேசுவோர் முனைதல் தகாது. 'பெண்கள் திருமணமாகும்போது கன்னித்தன்மை கலையாமல் இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கக் கூடாது' என்பது பெண்ணியத்தின் போர்க்குரல் அன்று. அது பண்பாட்டுப் பேரழிவின் பிரகடனம். வரம்பற்ற காமத்துக்கு வரவேற்பு விழா நடத்தும் திட்டம். இந்த மலினமான சீரழிவுச் சதிவலையில் இளைஞர் கூட்டம் சரிந்து விழலாகாது.

பெண்ணுரிமைக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய பெருமகன் பெரியார் கூட, தாம் எழுதிய புரட்சிகரமான 'பெண் ஏன்

அடிமையானாள்?' என்ற நூலில், மணமாவதற்கு முன்பே பெண் கன்னித்தன்மையை இழக்கலாம் என்று பரிந்துரைக்கவில்லை.

திருத்தப்படாத நிலம் களை மண்டிக் கிடக்கும். தடுக்கப்படாத வெள்ளம் தாளாத துன்பம் தரும். இரண்டு கரைகளுக்குள் அடங்கி நடக்கும் ஆறுதான் நாட்டுக்கு நன்மை பயக்கும். இறுக்கமாகக் கட்டப்பட்ட வீணையின் நரம்புகளில் இருந்துதான் இனிமையான இசை பிறக்கும். சுயகட்டுப்பாடுதான் நாகரிகத்தின் நல் அடையாளம். புலனடக்கம் கொண்ட ஆணும், பெண்ணும் உருவாக்கும் குடும்பத்தில்தான் இன்பமும், அமைதியும் இறுதி வரை நிலைக்கும். கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையாக வாழ்வதற்குப் பெயர்தான் கற்பு.

கற்பு பெண்ணுக்கு மட்டும் என்பது, ஆணாதிக்கம் பூட்டிய அடிமை விலங்கு. அதையே ஆணுக்கும் சேர்த்து வரையறுத்து, ஒழுக்கப் பயிர் காக்கும் வேலியாக்குவோம்!

# 31

# சினிமா

“இன்றைய தமிழ் சினிமாவின் ரசனையையும் அதன் சிருஷ்டி முறைகளையும் இந்தப் படம் பூரணமாக மறுத்து ஒதுக்கி இருக்கிறது. காலத்தின் தேவையை உணர்ந்து, ஒரு கடமையை ஆற்ற வந்தவர்கள் நாங்கள். இந்தப் படம் அதற்கான ஓர் ஆரம்பமே! சினிமா சம்பந்தமாக நாம் உபயோகிக்கும் பிரதான கருவிகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்தவை. இதில் இந்தியாவின் ஆத்மா பிரதிபலிப்பதன் மூலமாகவே, இந்தப் படைப்பு இந்தியப் படைப்பாகிறது..!’’ என்று எழுத்தாளர் ஜெயகாந்தன், தன் படைப்பான ‘உன்னைப் போல் ஒருவன்’ சிறப்புக் காட்சியில், பத்திரிகையாளர்களிடம் அறிமுகம் செய்தார். இன்றளவும் தமிழில் வெளிவந்த ஒரே தீவிர சினிமா, ‘உன்னைப் போல் ஒருவன்’ மட்டும்தான்!



‘‘சினிமா ஓர் அற்புதமான சாதனம். அதன் மூலம் எந்தக் கருத்தையும், மற்ற கலைகள் மூலம் வெளியிடுவதைவிட அதிக அழகோடும், வேகத்தோடும், பயனோடும் வெளியிட முடியும். வருங்காலத்தில் இந்தப் புதிய சாதனம் மனித சாதியின் தன்மையையும், போக்கையுமே பிரமாதமாக மாற்றி அமைக்கப்போகிறது!’’ என்று நல்ல நம்பிக்கையோடு, தன் உள்ளத்தின் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார், தமிழ் சினிமாவின் தொடக்க நிலை இயக்குநர்களில் ஒருவரான

முருகதாஸா!



ஜெயகாந்தன் போட்டுக் கொடுத்த பாதையில் தமிழ் சினிமா, இன்று இந்திய மண்ணின் ஆன்மாவைப் பிரதிபலிக்கின்றதா? முருகதாஸாவின் நம்பிக்கை நலிவடையாதபடி, நம் திரைப் படங்கள் மனித சமூகத்தின் நோக்கத்தையும், போக்கையும் பராமரிக்கும் வழித்தடத்தில் வளர்த்தெடுக்கின்றனவா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் ‘இல்லை’ என்றுதான் சமூகப் பொறுப்பு உணர்வுமிக்க யாரும் பதில் சொல்லக் கூடும்.

ஓவியன் அழகான ஓவியத்தையும், சிற்பி தெய்வீகம் ததும்பும் சிற்பத்தையும், பேனா பிடிப்பவன் வாழ்க்கையின் அடியாழங்களை அர்த்த பூர்வமாக வெளிப்படுத்தும் இலக்கியத்தையும் படைத்தளிக்கும்போது, அங்கே உடன் நிகழ்வாக ஓர் உயர்ந்த கலையம்சம் கண் விழிக்கிறது. கலைத் தரிசனத்தில் பரவசமுறும் கலைஞனுக்கு அதுதான் சிருஷ்டிக்கும் தொழில். அவன் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றித் தரும் வியாபாரமும் அதுவே!

சினிமா ஒரு கலையாக, தொழிலாக, வியாபாரமாக முப்பரிமாணம் கொள்ளும் ஆற்றல் பெற்றது. ஆனால், நம் திரைப்படப் பிரம்மாக்கள் சிலர், ‘நாங்கள் யாரும் கலைச் சேவை செய்ய வரவில்லை’ என்று தெள்ளத் தெளிவாகப் பிரகடனம் செய்கின்றனர். ‘அப்படியானால்

சினிமா அவர்களுக்குத் தொழிலா?' என்று அடுத்த கேள்வி எழுகிறது. 'நமக்குத் தொழில் கவிதை' என்றான் பாரதி. சுயநலக் கலப்பு இல்லாமல் மனிதகுல நன்மைக்குச் செய்வதுதான் பாரதியின் பார்வையில் தொழில். சொந்த நலனன்றி, நம் பிதாமகர்களில் பலருக்கு வேறெந்த நலனும் இல்லை.

சினிமா வெறும் வியாபாரம்தான். இதை ஒப்புக்கொள்வதில் அவர்களுக்கு அணுவளவும் கூச்சம் இல்லை. வியாபாரம் பாவம் இல்லை; நோய் தீர்க்கும் மருந்து விற்பதும், உயிர் வளர்க்கும் உணவு தருவதும் வியாபாரமே! மனிதர்களை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்கள் வாழ்வைச் சீரழிக்கும் மது விற்பனையும் வியாபாரம்தான். நம் தமிழ் சினிமா, போதை தரும் லாகிரி வஸ்து வியாபாரமாக மாறி வருவதுதான் ஆழ்ந்த கவலைக்கும், பரிசீலனைக்கும் உரியதாகிறது. சமூகப் பயன்பாடுமிக்க ஒரு கலைப் படைப்பாக, அல்லது ரசிகர்களின் மன உணர்வுகளை மலினப்படுத்தாத பொழுதுபோக்குப் படைப்பாக ஒரு படத்தை உருவாக்க முதலில் தயாரிப்பாளர் திட்டமிட வேண்டும். கதை, இயக்குநர், தொழில் நுட்பக் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் தொழில்திறமை அவருக்கு வேண்டும்.

'ஜெமினி' எஸ்.எஸ்.வாசன், 'ஏவி.எம்'. மெய்யப்பன், 'வாகினி' நாகிரெட்டி, 'மாடர்ன் தியேட்டர்ஸ்' சுந்தரம் போன்ற தயாரிப்பாளர்களுக்கு இருந்த மரியாதை, இன்றுள்ள பல தயாரிப்பாளர்களுக்கு இல்லையே, ஏன்? பணம் இல்லாமல், படமெடுப்பவர்கள் இன்று பெருகி, வட்டிக்குப் பணம் வாங்கிப் படமெடுக்கும் பரிதாபம் ஏன் வந்தது? பெரிய நடிகர்களின் பின்னால், தயாரிப்பாளர் பூனைபோல் பதுங்கும் பரிதாபம் ஏன் ஏற்பட்டது?

திரையுலகின் முடிசூடா மன்னர்களில் ஒருவராக விளங்கிய பி.யூ.சின்னப்பா ஒருமுறை படப்பிடிப்புக்குத் தாமதமாக வந்ததால், அவரை மரத்தில் கட்டி வைத்தார் மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம். பாடலாசிரியர் உடுமலை நாராயணகவியைத் தாக்குவதற்கு சின்னப்பா முனைந்தபோது, அவரைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியவர் சுந்தரம். அந்த அளவுக்கு அச்சுறுத்த வேண்டாம்... ஆனால், இன்றுள்ள தயாரிப்பாளர்களைப் போல் கைகட்டி நிற்கவும் வேண்டாமே!

'தமிழ்ப் படங்களின் தந்தை' என்று போற்றப்பட்ட கே.சுப்பிரமணியம் தயாரிப்பாளராகவும், இயக்குநராகவும், இயங்கியவர். காதல் காட்சிகளே இல்லாமல் அந்த நாளில் 'பக்தகுசேலா' எடுத்து, அதை வெற்றிப் படமாக்கியவர். 20 வயது சுப்புலட்சுமி 27 குழந்தைகளுக்கு தாயாக

அதில் நடித்தார். இன்று 30 வயது நடிகை 3 வயது குழந்தைக்குத் தாயாக நடிக்கத் தயங்குகிறார். பிராமணராகப் பிறந்த சுப்பிரமணியம் பிராமண ஆசாரங்களுக்கு எதிராகவும், பூணூலைக் கதாநாயகன் அறுத்தெறிவதாகவும் 'சேவா சதனம்' படத்தில் காட்டிய புரட்சிக் கலைஞர்.

அவர் தயாரித்து இயக்கிய 'தியாக பூமி'யில், சம்பு சாஸ்திரி சேரி மக்களுடன் சேர்ந்து வாழ்வதாகவும், பாலியல் தவறிழைத்த கணவனிடம் விவாகரத்து வேண்டி நீதிமன்றம் ஏறிய சாவித்திரி, தன் கணவனுக்குத் தேவைப்பட்டால், ஜீவனாம்சம் தருவதற்குத் தான் தயார் என்று கூறுவதாகவும் படத்தில் காட்சிகளை அமைத்தார். அதனால், பிராமண சமூகம் அவரை சாதிப் பிரஷ்டம் செய்தது. படத்தின் நாயகி சாவித்திரி சுதந்திரப் போரில் ஈடுபட்டதால், பிரிட்டிஷ் அரசு தடை உத்தரவு பிறப்பித்தது. தடை ஆணை திரையரங்குகளுக்கு வருவதற்கு முன்பே சுப்பிரமணியம் ஒரு நாள் முழுவதும் மக்களுக்கு இலவசமாகப் படத்தைக் காட்டினார். அப்படி அன்று சாதி எதிர்ப்பையும், அரசின் தடையையும் மீறி மக்களுக்கு நல்ல படம் தந்தார் சுப்பிரமணியம். இன்று காமக் காட்சிகள் எல்லை மீறிவிட்டன என்று ஒரு படம் தடைசெய்யப்படுகிறது நீதிமன்றத்தால்! எங்கே போகிறது தமிழ் சினிமா?

'மனோன்மணி' படத்தில் சின்னப்பா புலித்தோல் ஜட்டியும், முண்டா பனியனும் அணிந்து சண்டை போடும் காட்சி, குடும்பப் பெண்களைக் கூச வைத்ததாக அன்று கல்கி விமர்சித்தார். 'தமிழ்நாடு டாக்கீஸ்' என்ற பட நிறுவனம் 1934-ல் தயாரித்த 'லவகுசா'வில் சீதையாக நடித்த லட்சுமி என்ற நடிகை, ராமன் பக்கத்தில் நெருங்கி அமர மறுத்து, படம் முழுவதும் விலகி நின்றே நடித்தார். அன்று நாயகன் நாயகியை அணைத்தபடி கட்டிலில் அமர்ந்ததே விரசமாகக் கருதப்பட்டது.

காதலர்கள் இருவரும் நெருக்கமாக இருப்பதும், அணைப்பதும், முத்தமிடுவதும் இயல்பானது என்று கூறி, ராஜ சாண்டோ என்ற இயக்குநர் 'மேனகா' என்ற முதல் சமூகப் படத்தில், நாயகி ருக்மணியை நாயகன் டி.கே.சண்முகம் விரல்களிலிருந்து தோள்பட்டை வரை முத்தமாரி பொழிவதாகப் படம் பிடித்தார். 'வன மோகினி'யில் சிங்கள நடிகை தவமணி தேவி ஏறக்குறைய அரை நிர்வாணமாக நடித்து, மதனோற்சவத்துக்கு 1940-களில் கால்கோள் விழா நடத்தினார். இன்று வாத்ஸ்யாயனனின் காமசூத்திரத்துக்கு காட்சி விளக்கம் தரும் கைங்கர்யத்தில் படத்துக்குப் படம் கடும் போட்டி நிலவுகிறது.

இன்று திரைக்கு வரும் பெரும்பாலான தமிழ் சினிமாக்களில் நல்ல

கதையம்சமே இல்லை என்பது வருத்தமளிக்கும் விஷயம். விரசம் ததும்பும் அங்க அசைவுகளுடன், காமம் கொப்பளிக்கும் பாடல் காட்சிகள், மிருக உணர்வைத் தூண்டும் பயங்கரமான வன்முறைக் காட்சிகள், கோமாளித் தனத்திலும் சேர்க்க முடியாத சில நகைச்சுவைக் காட்சிகள், இவற்றோடு கொஞ்சம் பாசம், கொஞ்சம் சோகம் என்று ஒரு குறிப்பிட்ட ஃபார்முலாவின் குணாம்சங்களுடன் ஒரே மாதிரியான சினிமா வெவ்வேறு நடிகர்கள், இயக்குநர்களின் கூட்டு முயற்சியில் ரசிகர்களை மாறி மாறி முற்றுகையிடுகின்றன.

பாகப்பிரிவினை, பாசமலர் போன்ற குடும்ப உறவுகளைப் பேசும் படங்களையோ, கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற நாட்டுப்பற்றை ஊட்டும் திரைச்சித்திரங்களையோ மக்களுக்குத் தரும் மனோநிலை வெகு சிலருக்கே இருக்கிறது. ஒரு ‘உதிரிப் பூக்கள்’, ஒரு ‘பதினாறு வயதினிலே’, ஒரு ‘அவள் அப்படித்தான்’ என்று 12 வருடங்களுக்கு ஒரு முறைதான் நம் கலையுலகத்தில் குறிஞ்சிப் பூவாக பூக்கிறது.

‘மட்டமான ரசனையை வளர்த்தெடுக்கும் படங்களை மட்டும்தான் நாங்கள் பார்ப்போம்’ என்று மக்கள் அடம்பிடிப்பது உண்மையானால், ‘அழகி’யும், ‘ஆட்டோகிராஃப்’பும், ‘பார்த்திபன் கனவு’ம், ‘அழகிய தீயே’வும் எப்படி வெற்றி பெற்றன? மண்வாசனை மணக்க, வாழ்க்கைப் போராட்டங்களைக் கலைத்தன்மை சிதையாமல் திரையில் வடித்துக் கொடுக்க நம்மிடம் இயக்குநர்கள் இருக்கிறார்கள். பாத்திரங்களாகவே வாழ்ந்து காட்டும் வல்லமை மிக்க நடிகர்கள் இருக்கிறார்கள். பி.ஆர்.பந்துலுவைப் போல, ஏ.பி.நாகராஜனைப் போல... குறைந்தபட்சம் அசிங்கமான படங்களை எடுக்கக் கூடாது என்று கூச்சம்கொள்ளும் படத்தயாரிப்பாளர்களும் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால், நல்ல படங்களுக்கு மட்டும் இப்போது பஞ்சம்.

‘ஒன்றுக்குப் பத்தாகச் சம்பாதிப்பதுதான் எங்கள் நோக்கம். திரை அரங்குகளை நோக்கி வெகு ஜனங்களை ஈர்ப்பதற்கு நாங்கள் எந்த அளவும் கீழே இறங்கிச் சகதியில் கால் வைத்துச் சதிராடுவோம்’ என்று சினிமா உலகம் இன்று சொல்லாமல் சொல்கிறது. அதனால்தான் காட்சிகளில், இரட்டை அர்த்த நகைச்சுவைகளில், காதலன்- காதலி பாடும் பாடல்களில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விரசம் தன் விளிம்பை மீறுகிறது.

சின்னப்பாவும் கண்ணாம்பாவும் நடித்த ‘கண்ணகி’யில், நெடுநாள் பிரிந்திருந்த கோவலன் திரும்ப வந்து கண்ணகியைக் காண்கிறான். ‘உன்

அழகும், இளமையும் எங்கே போயிற்று?' என்கிறான். அதற்கு அவள், 'காதலுக்கு அர்ப்பணிக்க முடியாததை, காலத்திடம் அர்ப்பணித்துவிட்டேன்' என்கிறாள். இளங்கோவன் வசனமே ஓர் அழகிய இலக்கியம். இன்று அப்படி எதிர்பார்க்க முடியுமா?

திரைக்கதை, வசனத்தில் திருப்புமுனையை உருவாக்கியவர் கலைஞர் என்பதை அவருடைய அரசியல் எதிரிகளாலும் மறுக்க முடியாது. 'சிங்கத் திருநாடே! நீ சிலந்திக் கூடாய் மாறியது எப்போது? வந்தோரை வரவேற்ற தமிழகமே! நீ சொந்த நாட்டுக்காரனையே சுரண்டுவது எத்தனை நாளாய்? உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள், வானத்தை முட்டும் மாளிகைகள், மானத்தை மறந்த மனிதர்கள்' என்று பராசக்தியில் அவர் எழுதியதை, இன்றும் யாரால் மறக்க முடியும்?

அடுக்கு மொழி வசனத்தில் யதார்த்தம் இல்லை என்ற புரிதலில் ஸ்ரீதர் இயல்பாக, எளிமையாக எழுதவில்லையா? பாலசந்தரிலிருந்து சேரன் வரை எழுதவில்லையா? கலைஞரே 'இருவர் உள்ளம்' படத்தில் சாதாரண பேச்சு வழக்கில் அற்புதமாக எழுதினாரே! ஆனால், இன்று வேண்டுமென்றே 'மச்சி, மாமு, கலரு, ஃபிகரு' என்று எழுதி தமிழைக் கொச்சைப்படுத்துவதால் சினிமாவின் தரத்தை உயர்த்திப் பிடிக்கிறார்களா? மொழியின் மீதும் இவர்களுக்கு மரியாதை இல்லை... இந்த மண்ணின் மரபார்ந்த பண்புகள் குறித்தும் இவர்களுக்கு அக்கறை இல்லையெனில், இவர்கள் தயாரிக்கும் படங்களினால் யாரோ சிலரின் பணப்பெட்டி நிரம்புவதைத் தவிர, சமூகத்துக்கு என்ன பயன்?

ஜனனம் முதல் மரணம் வரை இசையோடு கலந்த இனம் தமிழினம். தமிழர்க்கு இசை இரண்டாவது மொழி. ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையிலுள்ள இடைவெளியை இட்டு நிரப்புவதும், ஆன்மாவை ஆண்டவனிடம் இசைவிப்பதும் இசை என்பது சான்றோர் கருத்து. இன்று நம் காதுகளில் வந்து விழும் பாடல்கள், வாலிப-வயோதிகர்களுக்கு வழங்கப்படும் ரகசிய ராத்திரி லேகியங்களாக, காம விகாரக் கூச்சல்களாகச் சிறுமையுற்று, ஒட்டுமொத்த சமூகத்தின் கண்ணியத்தையும் காயப்படுத்துகின்றன. நம் பாடலாசிரியர்கள் மனங்களில் சுரக்கும் கற்பனைகள் தமிழர்தம் பண்பாட்டுக் கல்லறையின் மேல் மன்மத மலர் வளையங்கள் வைத்து மகிழ்கின்றன. காமத்தைக்கூட 'சுற்றி நான்கு சுவர்களுக்குள் தூக்கமின்றிக் கிடந்தோம்; சிறு துன்பம் போன்ற இன்பத்திலே இருவருமே நடந்தோம்' என்று கண்ணதாசனைப் போல் இலைமறை காயாக எழுத, வார்த்தைகள் இவர்களுக்கு வசப்படவில்லையா?.

*விரசமில்லாமல் படமெடுத்தால் வியாபாரமாகாது என்ற மனநோய்க்கு நம் சினிமா சகோதரர்கள் மருந்து கண்டாக வேண்டும். அரசியல்வாதிகள், காவல்துறையினரின் தவறுகளை அதீதமான கற்பனைக் காட்சிகளிலும், ஆவேசம் பொங்கும் வசனங்களிலும் எல்லை கடந்து விமர்சிக்கும் திரைப்பட நீதிதேவர்கள், தங்கள் முதுகையும் பார்க்க முயலட்டும். சமூகத் தீமைகளைச் சுட்டெரிப்பது போல் பாவனை காட்டும் படங்களில்கூட, விரசத்திலிருந்து இவர்களால் விலகி நிற்க முடியவில்லை.*

*எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் உறக்கம் என்று ஏழைத் தொழிலாளிகள் பெற்ற உரிமையில், ஓய்வுக்குக் கிடைக்கும் எட்டு மணி நேரம் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்கு உதவ வேண்டும். அடித்தள மக்களின் அந்த ஓய்வு நேரத்தை இன்று கனவுத் தொழிற்சாலைகள் களவாடுகின்றன. கோடம்பாக்கத்தில் குபேரர்கள் உருவாக, அடிப்படை வசதிகள்கூட இல்லாத இந்தக் குடிசைவாசிகளின் பணம்தான் உதவுகிறது. அவர்கள் 'லேகியம் வேண்டும்' என்று இவர்களிடம் வேண்டுகோள் வைக்கவில்லை.*

*" 'மக்கள் கேட்பதை நாங்கள் தருகிறோம்' என்று சொல்லும் இவர்களுக்கும், 'வாடிக்கையாளர் விருப்பத்துக்கேற்ப நாங்கள் நடக்கிறோம்' என்று சொல்லும் விலைமகளுக்கும் என்ன வேறுபாடு?" என்று கலையுலகில் தனி ராஜபாட்டை போட்ட அற்புதமான நடிகர் சிவகுமார் கேட்கிறார். அவருடைய கேள்வியாவது இவர்களுடைய காதுகளில் விழட்டும்!*

# 32

# பத்திரிகை



*நவீன உலகின் முக்கியமான அற்புதங்களுள் ஒன்று, பத்திரிகை! ‘பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் இருக்கவேண்டும். முதலாவது, பொதுமக்களின் அபிப்ராயத்தைத் தெளிவாக அறிந்து, அதை வெளிப்படுத்துவது. இரண்டாவது, மக்கள் மனங்களில் விரும்பத்தக்க நல் உணர்வுகளை வளர்த்தெடுப்பது. மூன்றாவது, மக்களின் குறைகளை எந்த அச்சமும் இன்றி பகிரங்கப்படுத்துவது’ என்றார் அண்ணல் காந்தியடிகள்.*



*அச்சு இயந்திரங்களின் வருகை, உலக மக்களின் அறிவு வளர்ச்சியிலும், பண்பாட்டு வளர்ச்சியிலும் மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கியது. அறியாமை இருட்டில் அழுந்திக் கிடந்த மக்களுக்குப் புதிய*

வெளிச்சத்தைக் காட்டிய பெருமை, அச்சு இயந்திரங்கள் பெற்றெடுத்த புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் மட்டுமே உண்டு. சமூகம், பண்பாடு, கலை, அறிவியல், பொருளாதாரம், அரசியல், வணிகம், மருத்துவம், விவசாயம் என மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் பல்வேறு துறைகளைப் பற்றிய அறிவையும், தெளிவையும் பத்திரிகைகள் சுமந்து வந்தன; வருகின்றன.



புத்தகங்களும் பத்திரிகைகளும்தான் ஃபிரெஞ்சுப் புரட்சிக்கும், அமெரிக்க விடுதலைப் போருக்கும் அடித்தளம் அமைத்தன. வால்டேர் ரூசோவின் படைப்புகள் அச்சு வாகனத்தில் அமர்ந்ததனால்தான், ஃபிரெஞ்சு மக்களுக்கு ஆட்சியாளரிடம் இருந்த அச்சம் அகன்றது. தாமஸ் ஜெயின், தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற பேரறிஞர்களின் சுதந்திரச் சிந்தனைகள் அச்சேறியதன் விளைவாகவே, அமெரிக்கர்கள் அடிமை விலங்கொடிக்க ஆர்வத்துடன் போர்க் குரல் கொடுத்தனர்.

‘தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம், குடிசைகளும்

*எரிக்கலாம்' என்பது பத்திரிகைகளுக்கும் பொருந்தும். ஓடுகின்ற நிலத்தின் சாரத்துக்கேற்ப நீர் நிறம் மாறுவதுபோல, பத்திரிகையும் அதை நடத்துபவரின் எண்ணப் போக்குக்கு ஏற்ப சமூகத்தில் விளைவுகளைப் பயிராக்கும். ஜெர்மனியில் நாசிசத்தைப் பரப்ப, முதலில் ஹிட்லர் பத்திரிகையைத்தான் பயன்படுத்தினான். அவன் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்திய 'வால்கிஷர்' என்ற பத்திரிகை, ஜெர்மானிய மக்களின் மனங்களில் நாள்தோறும் இனவெறி என்னும் நஞ்சைக் கலந்தது. பாசிசத்தின் தந்தையான முசோலினி ஆசிரியராக இருந்து, மிலான் நகரிலிருந்து வெளியிட்ட 'இல்-பாப்லோ- டீ-இடாவியா' என்ற பத்திரிகை, இத்தாலிய மக்களின் இதயங்களில் பாசிச வெறியை வளர்த்தது. மதவாத நெருப்பை வளர்த்தது, கோட்சே நடத்திய 'இந்து ராஷ்டிரா'.*

*சமத்துவ சமுதாயத்தைச் சமைக்க, வாழ்க்கையையே ஒரு மகா யக்ஞமாக மாற்றிக் கொண்ட மார்க்ஸ், தன் கொள்கைகளைப் பரப்புவதற்கு நடத்திய பத்திரிகைதான் 'ரைன்லாந்து கெஜட்'. மார்க்ஸின் சித்தாந்தத்தில் மனம் பறிகொடுத்து, ருஷ்ய மண்ணில் சோஷலிசக் கொடியைப் பறக்கவிட முடிவெடுத்த லெனின், போல்ஷ்விக்குகளுக்காக ஜெனிவாவில் இருந்து நடத்திய பத்திரிகையின் பெயர், 'பாட்டாளி' என்ற பொருள்கொண்ட 'பிரோலி டேரியட்'. ஐக்கிய இத்தாலியைக் கனவு கண்ட மாஜினி, இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்க 'யங் இத்தாலி' என்ற இதழை வெளியிட்டார். அதன் பாதிப்பில்தான் இந்திய விடுதலை வேள்வியை வளர்க்க, தான் நடத்திய பத்திரிகைக்கு 'யங் இந்தியா' என்று பெயரிட்டார் காந்திஜி.*

*பத்திரிகைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றம்,* 1790*-களின் தொடக்கத்தில் முதன் முதலாகப் பத்திரிகையாளர்களை அனுமதித்தது. எட்மண்ட் பார்க் என்ற ஆங்கிலப் பேரறிஞர் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, பத்திரிகைகளை 'அரசாங்கத்தின் நான்காவது தூண்' என்று வர்ணித்தார்.*

*சட்டம் இயற்றும் நாடாளுமன்றம், நாட்டின் நிர்வாகத்தை நடத்தும் அமைச்சரவையையும் அதிகாரத்தையும் கண்காணிக்கிறது. நாடாளுமன்றம், நிர்வாகம் என்னும் இரு துறைகளின் நடவடிக்கைகளையும் நீதித்துறை பரிசீலிக்கிறது. பத்திரிகை இந்த மூன்று முக்கியமான துறைகளையும் விழிப்புடன் மேற்பார்வை செய்கிறது. அதனால்தான் பத்திரிகையுலகம், 'சமூகத்தின் காவல் நாய்'* (வாட்ச் டாக்) *என்று பாராட்டப்படுகிறது.*

மஞ்சள் செய்திகள், பழிவாங்கும் விமர்சனங்கள், பரபரப்புக்காகச் செய்தி தயாரித்தல், பாரபட்சம் காட்டுதல், நாகரிகமற்ற நரகல் நடை, சமூகப் பொறுப்பற்ற தன்மை, அவதூறு, ஆபாசம், தனிநபர் தாக்குதல் போன்ற தீமைகளிலிருந்து பத்திரிகைகள் விலகி நிற்க வேண்டும் என்பதுதான், மன ஆரோக்கியம் உள்ள மக்களின் எதிர்பார்ப்பு. பத்திரிகைகளுக்குப் பொறுப்பு உணர்வும், பொதுச்சேவை நோக்கும் இருக்க வேண்டும். அவை உயர்ந்த தரத்தைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

தென் ஆஃப்பிரிக்காவில் 'இந்தியன் ஒபீனியன்', இந்தியாவில் 'யங் இந்தியா', 'ஹரிஜன்' போன்ற பத்திரிகைகளை நடத்திய மகாத்மா காந்தி, 'சேவை செய்வதே பத்திரிகைகளின் முதன்மை நோக்கமாகும். பத்திரிகைகள் மகத்தான வலிமை வாய்ந்தவை. கட்டுப்பாடற்ற காட்டாற்று வெள்ளம் ஊரில் புகுந்து பயிர்களை நாசம் செய்வது போல், கட்டுப்படுத்தப்படாத பத்திரிகைகள் சமூகத்தை நாசம் செய்யும். ஆனால், பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு வெளியிலிருந்து வருவது தீமையை விளைவிக்கும். எனவே, கட்டுப்பாடு அதன் உள்ளிருந்தே செயல்படுத்தப்பட வேண்டும் ' என்றார். இன்று எத்தனை இதழ்கள் சுயக்கட்டுப் பாடுடன் இயங்குகின்றன என்பதுதான் கேள்வி.


சாதி, மதங்களின் காரணமாக ஏற்படும் கலவரங்களைப் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகைகளுக்குப் பொறுப்பு உணர்வும், கட்டுப்பாடும் அவசியம்! 'கலவரங்கள் குறித்துச் செய்தி வெளியிடும்போது, வெறியைத் தூண்டும் விதத்தில் தலைப்புச் செய்திகளை வெளியிடக் கூடாது' என்று பத்திரிகை கவுன்சிலின் வழி காட்டும் விதிமுறை வலியுறுத்துகிறது.

மகாத்மா காந்தி கோட்சேவால் படுகொலை செய்யப்பட்ட செய்தி, கவர்னர் ஜெனரலாக அப்போதிருந்த மவுண்ட் பேட்டனிடம் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சியடைந்த மவுண்ட் பேட்டன், தன் செய்தித் தொடர்பாளர் ஆலன் கேம்பெல் ஜான்சனுடன் பிர்லா மாளிகைக்கு விரைந்தார். வெறி பிடித்த நிலையில் அங்கு கூடி நின்ற கூட்டத்தில் ஒருவன் மவுண்ட் பேட்டனைப் பார்த்து, 'மகாத்மாவை ஒரு முஸ்லிம் கொன்றுவிட்டான்' என்று ஆவேசம் பொங்கக் கூச்சலிட்டான். உடனே மவுண்ட் பேட்டன், 'முட்டாளே! கொன்றவன் முஸ்லிம் என்று உனக்கு யார் சொன்னது? மகாத்மாவை மரணத்தில் தள்ளியவன் ஓர் இந்து' என்று உரத்த குரலில் உரைத்தார்.

ஜான்சனுக்கு மிகுந்த ஆச்சர்யம். 'செய்தி கிடைத்ததும் நம்முடன்

வந்தார். இங்கு வந்து சேரும் வரை இடையில் யாரையும் அவர் சந்திக்கவில்லை. அப்படியிருக்க, மகாத்மாவைக் கொன்றவன் இந்து என்று இவருக்கு எப்படித் தெரிந்தது?' என்று சந்தேகப்பட்டார். கவர்னர் ஜெனரலிடம் இதுபற்றிக் கேட்டார். ஜான்சனிடம் மவுண்ட் பேட்டன் மெல்லிய குரலில், 'உண்மை என்னவென்று எனக்குத் தெரியாது. ஆனால், அவன் கூச்சலிட்டது போல் ஒரு முஸ்லிம் இதைச் செய்திருந்தால், உலகம் இதுவரை சந்தித்திராத கோரமான இனப் படுகொலைகளை இந்தியா சந்திக்க வேண்டியிருக்கும். அப்படி எந்த அசம்பாவிதமும் அரங்கேறிவிடக் கூடாது என்ற தவிப்பில்தான் தெரிந்தே ஒரு பொய் சொன்னேன். பொறுத்துப் பார்ப்போம்' என்றார். அதற்குப் பெயர்தான் சமுதாயப் பொறுப்பு உணர்ச்சி.

மகாத்மா படுகொலை செய்யப்பட்டு, மண்ணில் சாய்ந்து உயிர் நீத்தபோது, நேரம் மாலை 5.20. முன்னேற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு, நாடு முழுவதும் கலவரம் நிகழாமல் தடுக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நிறைவேற்றப்பட்டதும், மாலை 6.00 மணிக்குப் பின், அகில இந்திய வானொலி, 'நாதுராம் விநாயக் கோட்சே என்ற இந்துவால் மகாத்மா காந்திஜி இன்று மாலை 5.20 மணிக்குப் பிர்லா மாளிகையில் சுட்டுக் கொல்லப்பட்டார்' என்று திரும்பத் திரும்ப அறிவித்தபடி இருந்தது. அதனால்தான் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் உயிரும், உடைமையும் பாதுகாக்கப்பட்டன.



நாகரிகம் வளர வளர மனிதன் செய்யும் குற்றங்களும், பாவங்களும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும். வணிக கலாசாரத்தில் மூச்சுத் திணறும் இன்றைய சமூகச் சூழலில், பிரச்னைகள் பெருகிவிட்டன. அவை குறித்துச் சரியான செய்திகளும், அவற்றுக்கான முறையான தீர்வுகளும் பத்திரிகைகளால்தான் வழங்கப்பட முடியும். துல்லியமாகவும், முழுமையாகவும், விருப்பு வெறுப்புக்கு இடம் இல்லாமலும் செய்திகள் அமைய வேண்டும். அதற்குப் பத்திரிகைச் சுதந்திரம் பழுதுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

இந்திய மண்ணில் சுதந்திரம் கண் விழித்த நாள் முதல், பத்திரிகைகளின் உரிமைக்குப் பங்கம் எதுவும் நேர்ந்து விடவில்லை. உலகின் பல நாடுகளில் பத்திரிகை உரிமைகள் கட்டுப்படுத்தப் பட்டபோதிலும், நேரு பூரண சுதந்திரத்தை வழங்கினார். ‘சங்கர்ஸ் வீக்லி’ உலகப் புகழ்பெற்ற கார்ட்டூன் பத்திரிகையாகப் பரிணமித்தது. சங்கரின் கார்ட்டூன் ஓவியங்களில் கேலி செய்யப்படாத அரசியல் தலைவர்களே இல்லை. அந்தப் பத்திரிகை 1948-ல் நேருவால் வெளியிடப்பட்டது. வெளியீட்டு விழாவில், ‘சங்கர், என்னையும், என் அரசையும் தாராளமாக விமர்சனம் செய்யுங்கள். தாக்காமல் விட்டு விடாதீர்கள்’ என்றார் நேரு. சங்கர்ஸ் வீக்லி தொடர்ந்து அதைத்தான் செய்தது. நேரு கொஞ்சமும் கோபப்படவில்லை. நெருக்கடி நிலை

இந்திராகாந்தியால் அமல்படுத்தப்பட்ட ஒரு குறுகிய காலத்தில் மட்டும் பத்திரிகைச் சுதந்திரம் பாதிக்கப்பட்டது. மற்றபடி, இன்றுவரை இந்தியப் பத்திரிகையுலகம் சுயேச்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்பட்டு வருகிறது. நாட்டின் சுதந்திரம் எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியமானது பத்திரிகைச் சுதந்திரம்.

ஆனால், பத்திரிகைச் சுதந்திரம் என்ற போர்வையில், தனி மனிதனின் அந்தரங்க வாழ்க்கை உரிமைக்குள் மூக்கை நீட்டலாகாது. மிகப் பெரிய அளவில் பொதுமக்கள் நலன் சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே, தனி நபர்களின் அந்தரங்கத்தில் தலையிட பத்திரிகைகளுக்கு உரிமை உண்டு. அந்தரங்கம் எப்போதும் புனிதமானது. வன்முறை, வகுப்புவாதம், பயங்கரவாதம் போன்ற சமூக அமைதிக்கு எதிரான செயல்களை, எந்த நிலையிலும் பத்திரிகைகள் நியாயப்படுத்தக் கூடாது. காம இச்சையைத் தூண்டுவதும், குற்றங்களுக்கு வழி வகுப்பதும் பத்திரிகைகளின் பணி இல்லை.

சர்வாதிகாரிகளுக்குச் சாவுமணி அடித்த சரித்திரம் பத்திரிகைகளுக்கு உண்டு. ‘பத்திரிகையாளன் என்பவன் குறை காண்பவன், கண்டிப்பவன், அறிவுரை வழங்குபவன், ஆட்சியின் மீது தனியாணை செலுத்துபவன், நாட்டின் ஆசிரியனாகத் தன்னைக் கருதுபவன். ஆயிரம் துப்பாக்கிகளைவிட, நான்கு எதிரிப் பத்திரிகையாளர்கள் அதிகமாக அஞ்சத்தக்கவர்கள்’ என்றான் நெப்போலியன்.

‘ஆண்டவன் அகிலத்தை எப்படி ஆட்சி செய்கிறான் என்று அறிந்துகொள்ள, நான் பத்திரிகை படிக்கிறேன்’ என்றார் ஐசக் நியூட்டன்.

பத்திரிகை பாமர மக்களின் பள்ளி ஆசிரியன். அதனால், அது உண்மைச் செய்திகளையே சுமந்து வர வேண்டும். புனைவும், பொய்யும் இல்லாமல் செய்திகள் சொல்லப்பட வேண்டும். நாம் வாழும் உலகின் ஒரு நாள் வரலாற்றை அன்றாடம் நமக்குச் சொல்பவை நாளிதழ்கள். நல்ல பத்திரிகைகளால் செதுக்கப்படும் சமூகம், நாகரிக உலகின் உச்சத்தில் போய் உட்காரும். அதனால்தான், அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்தை உருவாக்கிய தாமஸ் ஜெபர்சன், “பத்திரிகைகள் இல்லாத அரசாங்கம் தேவையா, அரசாங்கம் இல்லாத பத்திரிகைகள் தேவையா என்று என்னை முடிவெடுக்கச் சொன்னால், நான் அரசாங்கம் இல்லாத பத்திரிகைகளே போதும் என்பேன்” என்றார்.

பத்திரிகைகளின் சக்தியையும், பொறுப்பையும் உணர்ந்து

ஆட்சியாளர்கள் வழிவிட்டு நிற்பதும், பத்திரிகையாளர்கள் தங்கள் பொறுப்பு அறிந்து நடப்பதும்தான் ஆரோக்கியமான சூழலாக இருக்கும்.

# 33

# அரசியல்

*'சுயராஜ்யம் கிடைத்ததும் அது சிறந்த அரசையும், நிறைந்த மகிழ்ச்சியையும் உடனே மக்களுக்குத் தந்துவிடாது. தேர்தல் ஒழுங்கீனம், ஊழல், அநீதி, பணபலத்தின் கொடுங்கோன்மை, நிர்வாகத் திறமையின்மை ஆகியவை மூலம் மக்கள் வாழ்க்கை நரகமாகும். முன்பிருந்த வெள்ளையர் ஆட்சியே மேலானது என்று மக்கள் நினைக்கும் நிலை வரும். அவமானத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை என்ற ஒன்றுதான் நம் மக்களுக்கு உடனடியாக கிடைக்கவிருக்கும் ஒரே நன்மை!'* என்று 1922-ல் வேலூர் சிறை வாசத்தில் ராஜாஜி எழுதி வைத்த சிறைக் குறிப்பு, வருமுன் கணிக்கும் அவரின் ஆற்றலுக்குச் சரியான சான்று!



ஊழல், அதிகார துஷ்பிரயோகம், பதவி மோகம், கட்சித் தாவல், விமர்சனங்களைத் தாங்கும் சகிப்புத் தன்மையின்மை, முகஸ்துதிக்கு மயங்கும் மனோபாவம் போன்ற மோசமான நோய்களின் பாதிப்பால் இந்திய ஜனநாயகம் இன்று அவசர சிகிச்சைப் பிரிவில் படுத்துக் கிடக்கிறது. இந்த உயிர்க்கொல்லி நோய்களிலிருந்து நம் ஜனநாயகம் விரைவில் மீண்டெழுந்தாலன்றி, இங்கே எல்லாரும் எல்லாமும் பெறும்நாள் வந்து சேர்வதற்கான வாய்ப்பு இல்லை.




நம் அரசியல் தரத்தின் வீழ்ச்சி, ஒரு நாள் நிகழ்ச்சி இல்லை. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தொடர்ந்து நிகழ்ந்த உள் அழிவின் விளைவு இது. இப்படியொரு வீழ்ச்சி விரைவில் நிகழும் என்ற அச்சம், மகாத்மாவின் அடிமனத்தை அலைக்கழித்தது. அதனால்தான், நாடு சுதந்திரம் பெற்றதும் மேற்குவங்கத்தில் புதிய அமைச்சரவையில் பொறுப்பேற்றவர்கள், கொல்கத்தாவில் மதக்கலவரத்தைத் தடுப்பதற்காகத் தங்கியிருந்த அண்ணலிடம் ஆசீர்வாதத்தை வேண்டியபோது, 'இன்று உங்கள் தலையில் முள் மகுடம் சூட்டி நிற்கிறீர்கள். அதிகாரத்தில் அமர்பவர்கள் அதிக எச்சரிக்கையுடன் இருங்கள். அதிகாரம் எப்போதும் ஊழலையே வளர்க்கும். பதவிப் பளபளப்பில் ஒரு நாளும் மயங்கிவிடக்கூடாது. கிராமங்களில் வாழும் கோடிக்கணக்கான மக்களே உங்கள் உண்மையான எஜமானர்கள். அவர்களின் ஏழ்மையை அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காகவே இந்தப் பதவிகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை மறவாமல் செயல்படுங்கள். கடவுள் உங்களுக்குத் துணை நிற்கட்டும்' என்று அறிவுரை வழங்கினார்.

தேசப்பிதாவின் அறிவுரை அவருடைய கண்ணெதிரிலேயே காற்றில்

பறந்தது. பழைய தேசபக்தர்கள் புதிய பதவிப்பித்தர்களாக மாறி, வாழ்க்கைச் சுகங்களுக்காக ஊழல் குழந்தையை வாரியணைத்து முத்தமிடத் தொடங்கினர். ஜனநாயக பீடத்தில் பொது வாழ்வின் எளிமையும் நேர்மையும் முதலில் பலியிடப்பட்டன. தேசநலன் கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு, அரசியல்வாதிகளின் சொந்த நலன் முன்நின்று முகம்காட்டியது. வேள்வியாக இருந்த அரசியல், முதலீடு இல்லாத தொழிலாக மாறி, வெறும் பிழைப்பாக இழிந்து போனது.

இதயம் முழுவதும் ரணமாகிப்போன அண்ணல், தன் வாழ்க்கை வரலாற்றை வரைந்த லூயி ஃபிஷரிடம் உரையாடும்போது, 'என்னுடைய இந்தியா இப்போது என்னுடன் இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன். மகாத்மா என்று அழைப்பவர்கள், ஒரு துப்புரவாளருக்குத் தரும் மரியாதையைக்கூட எனக்குத் தரத் தயாராக இல்லை' என்றார். பாவம், தேசப்பிதா!



நேரு, சாஸ்திரி, தேசாய், ராஜாஜி, காமராஜ் போன்ற எண்ணற்ற தலைவர்கள் ஊழல் கரையான் நெருங்க முடியாத நெருப்பாக வாழ்ந்தனர். அவர்களுள் ஒருவர்தான், இருமுறை இந்தியாவின் இடைக்காலப் பிரதமராக இருந்த குல்சாரிலால் நந்தா. சாமியார்களின் செல்வாக்குதான் அவரிடம் காணப்பட்ட ஒரே குறை. அதைத் தவிர, வேறெந்தக் கறையும், களங்கமும் இல்லாத காந்தியவாதி அவர்.

ஒரு நாள், நந்தாவின் பேரப்பிள்ளை அரசு அலுவலகத்தாள்களில் ஓவியம் தீட்டி, அவரிடம் ஆசையுடன் காட்டினான். அதிர்ந்து போனார் நந்தா. அதிகாரியை அழைத்தார். 'நானே கேட்டாலும், அரசுப்

பொருளைச் சொந்தப் பயன்பாட்டுக்கு நீங்கள் தரக்கூடாது’ என்று அறிவுறுத்தினார். ஒருமுறை, அரசுப் பணி நிமித்தம் ரயிலில் பயணம் செய்தார் நந்தா. உடன் வந்த பிள்ளைகளுக்குத் தனியாக டிக்கெட் எடுத்து, இரண்டாம் வகுப்பில் வரச் செய்தார். இன்றோ மனைவி, மக்கள், உற்றார், உறவினர் புடைசூழ ரயில்வே அமைச்சர்கள் சிறப்பு வசதிகளுடன் கூடிய கோச்சில், மக்கள் வரிப் பணத்தில் கொஞ்சமும் சமூகக் கூச்சமின்றி திருத்தல யாத்திரை செய்கின்றனர்.

தன் மகள் புஷ்பாவின் மணவிழாவில் நேரில் வந்து வாழ்த்தியவர்கள் விரும்பித் தந்த பரிசுப் பொருள்களை ஏற்க மறுத்து, ‘உங்கள் அன்பே போதும்’ என்றவர் நந்தா. மிக முதிர்ந்த வயதில் சொந்த வீடின்றி, அடிப்படைத் தேவைகளுக்கும் போராடிய அவரது வாழ்க்கை நிலை அறிந்து, பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி புதுடெல்லியில் அரசு வீட்டைத் தர முன்வந்தபோது, அதை மறுதலித்த மகாமனிதர் நந்தா.

அதேபோல், திரிபுராவின் முதலமைச்சராக இருந்து வெளிவந்த மார்க்சிஸ்ட் தலைவர் நிருபன் சக்ரபர்த்தியின் பெட்டியில் இரண்டு உடைகளும், சில புத்தகங்களும் மட்டுமே உடைமைகளாக இருந்தன. இந்த வரிசையில் இன்று தோழர் நல்லகண்ணுவை நம்மால் கண்டு நெஞ்சம் நெகிழ முடிகிறது. இதுபோன்ற மாமனிதர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகினால்தான் பொது வாழ்க்கை சிறப்புறும்.

நம் அரசியல்வாதிகளிடம் சில சிறந்த அணுகுமுறைகளை நாம் எதிர்பார்ப்பது நியாயமே! நம்மை ஆள்பவர்களும், ஆள விரும்புவர்களும் எப்படி இருக்க வேண்டும் என்று நாம்தான் தீர்மானிக்க வேண்டும். அரசின் மீதும், கட்சிகளின் மீதும் மக்கள் கட்டுப்பாட்டைச் செலுத்துவதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு. இன்றைய அரசியல்வாதிகளிடம் உள்ள தவறான இயல்புகள் களையப் பட வேண்டும். அவர்களிடம் நல்ல மாற்றங்கள் நேராமற் போனால், சமூகம் மௌனத்தவம் கலைத்துக் கிளர்ந்தெழ வேண்டும்.

அரசியல் உலகத்தை இப்போது பற்றியிருக்கும் பெருநோய் பதவிப்பித்து. ஒரு தலைவரின் பன்முக ஆளுமையையும், நிர்வாகத் திறமையையும், வெகுமக்கள் செல்வாக்கையும் முன்னிறுத்தியே ஒரு கட்சி உயிர் வாழ்கிறது. கொள்கைகளைவிட இன்று தனி மனிதத் தலைமையே கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் இந்தப்போக்கு இன்று வளர்ந்து இருக்கிறது. ஜனநாயகச் சூழலில் இதைத் தவிர்க்க முடியாது. ஆனால், எல்லாக் கட்சிகளிலும் குறிப்பிட்ட சில நபர்களே வாழ்நாள் முழுவதும், சுவரில் ஒட்டிய பல்லியாகப் பதவிகளைப் பற்றிக்

கொண்டு இருப்பது, எந்த வகையிலும் அரசியல் ஆரோக்கியத்துக்கு நல்லது அல்ல.

பழையன கழிதலும், புதியன புகுதலும்தான் வாழ்க்கை. பழைய நீர்கடந்து, புதியநீர் தொடர்ந்தால்தான்ஆறு. அதுதான் சமூகத்தின் ஆரோக்கியம். எவ்வளவுதான் தூய நீராக இருந்தாலும், ஒரே இடத்தில் நெடுநாள் தேங்கிக்கிடந்தால் அது சாக்கடையாக நாறும். அது சமூகத்தின் சாபம். இந்த ஞானம் நம் தலைவர்களுக்கு இனியாவது வந்தால் நல்லது.

நேர்மையும், நல்லொழுக்கமும், நிர்வாகத்திறனும், சமூகப் பிரச்னைகளில் தீர்க்கமான தெளிவும் உள்ளவர்களே பதவி நாற்காலிகளில் அமர வேண்டும். தகுதி மட்டும்தான் ஒரே அளவுகோலாக அமைய வேண்டும்.

உலகம் முழுவதையும் வென்று ஒரு குடையின் கீழ் ஆள விரும்பி, போர்க்களத்திலேயே தன் வாழ்க்கையைச் செலவழித்த அலெக்சாண்டர், பாபிலோனில் நோயுற்று மரணப் படுக்கையில் விழுந்தான்.

தன் வாழ்க்கைக் காலண்டரின் கடைசித் தாள் கிழிபடும் நேரம் நெருங்கியதை அவன் உணர்ந்தான். படைத் தளபதிகள் அனைவரையும் தன் படுக்கைக்கு அருகில் வந்து நிற்கும்படி பார்வையால் பணித்தான். தலைவன் முகத்தில் மரண நிழல் படிவதைத் தளபதிகள் பார்த்தனர்.

‘மாவீரரே! உங்களுக்குப் பின் இந்த உலகப் பேரரசை யார் ஆள வேண்டும் என்று குறிப்பிட்டால், அவரையே நாங்கள் அரசு நாற்காலியில் அமரச் செய்வோம்’ என்று தளபதிகள் சொன்னதும், ‘வலிமை மிக்கவன், சிறந்தவன்...’ என்று வாய் திறந்தவன் வார்த்தையை முடிக்காமலே வாழ்க்கையை முடித்துக்கொண்டான். தகுதிக்கும், திறமைக்கும்தான் தலைமை வாய்க்க வேண்டும்.

ஒரு ஹிரோஷிமா, நாகசாகி அழிவுக்குப் பின்பும் ஜப்பான், அமெரிக்காவுக்கு ஈடுகொடுத்து எழுந்து நிற்க முடிகிறது. இரண்டாவது உலகப் போரில் மரண அடி வாங்கிய பின்பும், ஜெர்மனி மகத்தான முன்னேற்றத்தைக் காண முடிகிறது. சின்னஞ்சிறிய கொரியாகூட, இன்று பொருளாதார வளர்ச்சியில் புதிய சரித்திரம் படைக்கிறது. அப்படியிருக்க, நம் இந்தியத் தேசம் மட்டும் ஏன் பெறவேண்டிய அளவுக்கு வளர்ச்சியைப் பெற முடியாமல் தத்தளிக்கிறது?

வல்லரசாக வளர்ந்துகொண்டு இருப்பதாக வார்த்தைப் பந்தல் போடப்படும் இந்த மண்ணில், இன்றும் 30 கோடி மக்களுக்கு இரவு உணவு இல்லை. உலக மக்கள் தொகையில் கல்வியறிவு அற்றோரில் 30 சதவிகிதம் இந்திய மக்களே! நாடு முழுவதிலும் 232 நகரங்களில் மட்டுமே கழிவு நீர்க் கால்வாய்கள் உள்ளன. மும்பையில் 40 சதவிகிதம் அடிப்படை வசதியற்ற சேரிகள், டெல்லியில் 35 சதவிகித மக்கள் திறந்தவெளியில் வாழ்கின்றனர். இன்னமும் 5 லட்சம் பேர் தலையில் மலம் சுமக்கின்றனர்.

ஒரு பக்கம் பசித்தவனுக்கு உணவில்லை. இன்னொரு பக்கம் 50 மில்லியன் டன் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கில் பயன்படுத்தப்படாமல் வீணாகிறது. விவசாயக் கூலிகளுக்கும் வேலையில்லை. தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைக் கதவுகள் திறக்கப்படவில்லை. படித்தவர்கள் வானம் பார்த்தபடி வீதியில் நிற்கின்றனர். வறுமை, வேலையின்மை, கல்வியின்மை, நோய், அடிப்படைச் சுகாதாரமின்மை, கிராமங்களில் நல்ல குடிநீர் இல்லாமை, மோசமான சுற்றுப்புறச் சூழல் என்று திரும்பும் திசையெங்கிலும் பிரச்னைகள். புதிய பொருளாதார நடவடிக்கைகளால் நகரங்கள் பளபளக்கின்றன. கிராமங்கள் கண்ணீரில் மிதக்கின்றன.

நெஞ்சுக்குள் நேர்ந்துகொண்ட லட்சியத்துக்காகவும், சமூக நலன் சார்ந்த கொள்கைகளுக்காகவும் சரியான களம் தேடி அரசியல்வாதிகள் கட்சி மாறிய காலம் பழங்கதையாகிவிட்டது. இன்று எந்த நேரத்தில், எங்கே சேர்ந்து, எவ்வளவு சுரண்டலாம் என்ற சிந்தனையில் நாளொரு மேடையும் பொழுதொரு நடிப்புமாக, விதம்விதமாக வேடமிடும் கட்சிமாறிகளின் களமாக அரசியல் அரங்கம் சிறுமைப்பட்டுக் கிடக்கிறது.

‘நல்லவர்களுக்கு அரசியலில் இடமில்லை’ என்று ஒதுங்கி நிற்கும் போக்குதான் இன்றைய அனைத்துத் தீமைகளுக்கும் அடித்தளம். சாக்கடை என்று மூக்கைப் பிடிப்பதால் நாற்றம் போகாது. அதைச்சுத்தம் செய்வதற்கு அறிவுலகப் பிரஜைகள் அனைவரும் இப்போதே இறங்கியாக வேண்டும். அரசியல் மட்டும் ஆரோக்கியமாக அமைந்துவிட்டால், சமூகத்தின் சகல நோய்களுக்கும் மருந்து தானாக வந்துசேரும்.

இதோ...

சுப்ரமண்யராஜுவின் புதுக்கவிதை...

*‘வாயிலே அழுக்கென்று நீர் எடுத்துக் கொப்புளித்தேன்*

*கொப்புளிக்க, கொப்புளிக்க வாயும் ஓயாமல்*

*அழுக்கும் போகாமல்...உற்றுப் பார்க்கிறேன்*

*நீரே அழுக்கு!’’*

*அழுக்கு நீரெடுத்து ஆயிரம் முறை கொப்புளித்தாலும் வாய் அழுக்கு போகாது. அழுக்கு மனம் கொண்ட அரசியல்வாதிகளை 500 ரூபா நோட்டுக்காகவும், 200 மில்லி சாராயத்துக்காகவும், ஒரு பிரியாணி பொட்டலத்துக்காகவும், தன் சாதிக்காரர் என்ற அபிமானத்துக்காகவும் வாக்களித்துத் தேர்ந்தெடுத்தால், மக்களின் எந்தப் பிரச்னையும் ஒருநாளும் தீராது.*


*இனியும், அரசியல் ஒரு சாக்கடை என்று நாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு இருக்கப் போகிறோமா? அல்லது சாக்கடையில் இறங்கி அழுக்கை அகற்ற முடிவெடுக்கப் போகிறோமா?*

# 34

# மயக்கம்


'**ம**னிதனுக்கு வெளி உதவி என்பது இல்லவே இல்லை. அன்றும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. இனியும் இருக்காது. ஏன் இருக்க வேண்டும்? நீங்கள் ஆண்களும், பெண்களும் அல்லவா! உலக நாயகர்களான உங்களுக்கு பிறர் உதவியா? வெட்கமாக இல்லை? நீங்கள் ஆன்மா. நீங்கள் சக்தி. நீங்களே முயன்று துன்பங்களிலிருந்து விடுபடுங்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்கு உதவ யாரும் எப்போதும் இருந்ததில்லை. இப்போதும் இல்லை. அப்படி ஒருவர் இருப்பதாக நினைப்பது ஓர் இனிய மயக்கம். அதனால் எந்தப் பயனுமில்லை!'

- இது அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டது.



'நாம் சோம்பேறிகள். நமது முன்னேற்றத்துக்காக எதுவும் செய்துகொள்ள நாம் முயல்வதே இல்லை. இஷ்ட தெய்வமோ, ஆச்சாரிய புருஷரோ, மகானோ வந்து நமக்காக எல்லாம் செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். விளக்கை அணைத்துவிட்டு, ஜன்னல்களையும் மூடிவிட்டு, 'இருட்டு இருட்டு' என்று கூச்சலிடுவது எவ்வளவு முட்டாள்தனம்! இருட்டில் இருந்தால் விளக்கை அல்லவோ

ஏற்றவேண்டும்' என்றும் அந்த ஆன்மிக ஞானி அறிவுறுத்தினார்.



'ஆயிரம் ஆண்டுகளாக இருந்த வழிகாட்டியும் தேவையில்லை. நேற்று தோன்றிய வழிகாட்டியும் தேவையில்லை. ஏனெனில் நாம் உயிர் உள்ளவர்கள். நம்மிடம் உயிர் எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கிறது. ஆற்று வெள்ளம்போல் எங்கும் தங்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறது. இறந்துபோன நேற்றைய வழி காட்டியின் உதவியைக்கொண்டு, உயிர் ததும்பும் இன்றைய வாழ்க்கையின் இயக்கத்தை உணர முடியாது' என்றார் ஜே.கிருஷ்ண மூர்த்தி.

‘நம்மை நாம் கற்று உணர்வோம். மற்றொருவர் காட்டும் நெறியைப் பின்பற்றி, நம்மை நாம் கற்று உணர்தல் இயலாது. அவ்வாறு கற்க முற்பட்டால், அது அவர்களைப் பற்றிக் கற்பதே ஆகுமன்றி, நம்மைப் பற்றி கற்பது ஆகாது’ என்று ஜே.கே. சொன்னதை ஒவ்வொரு மனிதனும் நூறு முறை சிந்தித்துத் தெளிதல் நலம்.

‘ஜென்’ என்றால் என்னவென்று அறிய விரும்பி ஜென் குருவை அடைந்தார் ஒருவர். ‘ஜென் வழியில் எப்படி நடப்பது?’ என்று மிகுந்த பணிவுடன் கேட்டார். அவர் சற்றும் எதிர்பாராதபடி குரு எழுந்து, ‘எனக்கு ஒன்றுக்கு வருகிறது’ என்று போய்விட்டார் குரு. ‘எவ்வளவு பெரிய ஞானத்தேடலை நாடி நாம் வந்தோம். இந்த குரு ஒன்றுக்கு வருவதாகச் சொல்லிப் போய்விட்டாரே’ என்று மனதில் நொந்தபடி அங்கேயே அவர் நிற்க, சற்று நேரம் கழித்துக் குரு திரும்பி வந்தார். நின்றிருந்தவரிடம், ‘நான் யாராக இருந்தாலும் ஒன்றுக்குப் போய்த்தான் ஆக வேண்டும். அதை நானேதான் செய்ய வேண்டும். எனக்காக நீ செய்ய முடியுமா?’ என்றார் குரு. வந்தவரின் இதய வாசலில் அப்போதுதான் ஞானவெளிச்சம் வீசியது.

இந்த ஜென் கதையை விளக்கும் கவிஞர் புவியரசு, ‘வாழ்க்கையைப் பற்றிய ஞானத்தை, விழிப்பு உணர்வை உபதேசங்களால் தெரிந்துகொள்ள முடியாது. ஒவ்வொருவரும், அவரவர் வாழ்க்கை அனுபவத்திலிருந்து அவரவரே தெரிந்து கொள்ள வேண்டும்; உணர்ந்து கொள்ளவேண்டும். இன்னொருவர் அனுபவம் மற்றவர்க்கு சரிவராது. புத்தகங்களைப் படித்துவிட்டு, வாழ்வைப்பற்றி பேசுவது பிதற்றுவது ஆகும்’ என்கிறார்.

ஒரு நாள் ஓஷோ ஒரு கதை சொன்னார். ‘‘ஒரு ஜென் துறவி தன்னுடைய குருவின் பிறந்தநாளைக் கொண்டாடினார். அதைப் பார்த்த மக்களுக்கு ஆச்சரியம். ‘உங்களுக்கு யாரும் குரு இல்லை என்றுதான் நாங்கள் இந்நாள் வரை நம்பியிருந்தோம். போகுஜு’ என்ற குருவிடம் சீடராக நீங்கள் முயன்றதாகவும், அவர் உங்களை ஏற்காமல், அடித்துத் துரத்தியதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இன்று நீங்கள் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்களே?’ என்று வியப்புடன் கேட்டனர்.

அவர்களிடம் அந்த ஜென் துறவி, ‘நீங்கள் சொல்வது உண்மைதான். அவரிடம் முதல்முறை நான் போனபோது, குடிசையிலிருந்து வெளியே விரட்டியடித்தார். மறுமுறை சென்றபோது, ஜன்னல் வழியாக என்னைத் தூக்கி வீசினார். இறுதிவரை எனக்கு அவர் தீட்சை தரவில்லை. அவர்

பிடிவாதமாக என்னை ஒரு சீடனாக ஏற்க மறுத்து, விரட்டியது ஏன் தெரியுமா? ‘உனக்கு நீயே ஒளியாய் இரு. யாரையும் நீ பின்பற்றத் தேவையில்லை’ என்பதுதான் அவர் மறைமுகமாக எனக்குத் தந்த செய்தி.

‘போகுஜு’ என்னை ஏற்க மறுத்ததால்தான், எனக்குள் ஞானம் சித்தித்தது. அவர் என்னை ஏற்றிருந்தால், நான் அவருடைய நிழலாகியிருப்பேன். அவரைப் போலவே சாப்பிட்டு, அவரைப் போலவே நடந்து அவருடைய நகலாக மாறியிருப்பேன். என்னை ஓர் அசல் மனிதனாக இருக்கச் செய்ததால்தான், அவருக்கு பிறந்தநாள் விழாவை நான் நன்றியுடன் நடத்துகிறேன்’ என்று விளக்கினார்’’. ஓஷோவின் இந்தக் கதையில் எவ்வளவு பெரிய உண்மை இருக்கிறது! யோசிக்கும் வேளையில்தான் ஒவ்வொன்றாய் புரியும்.

கௌதம புத்தர் மரணப் படுக்கையில் இருந்தார். 40 ஆண்டுகள் அவருடைய நிழலாகத் தொடர்ந்த தலைமைச் சீடர் ஆனந்தர் வாய்விட்டு அழுதார். ‘எங்கள் ஒளி எங்களை விட்டுப் போகிறது. எங்களைச் சுற்றி இருள் கொஞ்சம் கொஞ்சமாகக் கவிழ்கிறது. எனக்கு இன்னமும் ஞானம் சித்திக்கவில்லை. நீங்கள் வாழும்போதே வந்து வாய்க்காத ஞானம், நீங்கள் மறைந்த பின்பு எப்படி எனக்குக் கிடைக்கும்?’ என்று கண்ணீர் வழியக் கவலையுடன் கேட்டார் ஆனந்தர்.

‘நான் சொன்னதை நீங்கள் இதுவரை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. என்னை நம்பாதீர்கள் என்றேன். நீங்கள் அதிக நம்பிக்கை வைத்தீர்கள். இப்போது நான் சாவைச் சந்திக்கப் போகிறேன் என்பதை அறிந்ததும் உங்கள் நம்பிக்கையின் அடித்தளம் ஆட்டம் கண்டு விட்டது. அவரவர் அவரவருக்கு ஒளியாக இருந்தால், யாருக்காகவும் அழத் தோன்றாது. இறுதியாக உங்களுக்கு மீண்டும் சொல்கிறேன்.. அப்ப தீபோ பாவ! நீயே உனக்கு ஒளியாவாய்’ என்று சொல்லிய பின் கௌதமர் கடைசியாகக் கண் மூடினார்.

சிந்தனை, மனிதனுக்கு மட்டுமே ஆண்டவன் வழங்கியிருக்கும் அரிய வரம். தன் வழியைத் தானே சிந்திக்காதவனுக்கு, வாழ்வில் சிகரங்களைச் சந்திக்கும் வாய்ப்பில்லை. அடுத்தவன் சொல்வதைக் கேட்டு நடப்பது என்று முடிவெடுத்த யாரும், ஒருவனை மட்டும் வழிகாட்டியாய் வைத்துக்கொள்வது இல்லை. இப்படிப்பட்ட மனிதர்களுக்கு ஒரு சமயம் ஒருவன் சொல்வது சரியாகத் தோன்றும். அடுத்தநாள் இன்னொருவனின் ஆலோசனை அதைவிடச் சிறப்பானது என்ற நம்பிக்கை எழும். ஒருவாரம் கழிந்ததும், நாலு பேரைக் கேட்ட பின்பு

ஒரு முடிவெடுப்பது நல்லது என்று ஞானம் கனியும். இறுதிவரை நிலையான முடிவுக்கு வராதபடி, நெஞ்சுக்குள் குழப்பம் கூடு கட்டும்.

சொந்தமாக யோசித்து முடிவெடுக்க அஞ்சுகிறோம். சாமியார்கள், ஜோதிடர்கள், குறி சொல்பவர்கள், குருமார்கள், நம்பிக்கைப் போதகர்கள் என்று நான்கு திசைகளிலும் தேடி ஓடுகிறோம். நம் அறியாமையே அவர்கள் மூலதனம். விளைவு... அவர்கள் குடிசை கோபுரமாகிறது; நம்முடைய வாழ்க்கை மண் மேடாகிறது.

வேதங்களும், உபநிடதங்களும் வழங்கும் கருத்துக்களின் சாரம் 'உன்னை நீ அறிவாய்' (know thyself) என்ற ஒரு வரியில் இறக்கி வைக்கப்பட்டுள்ளது. நாம் பிறரை அறியவும், பிறர் மூலம் நம்மை அறியவும் முற்படுகிறோம். தன்னைத் தவிர அனைத்தையும் அறிபவன் அறிஞனாகிறான். தன்னை மிகச் சரியாக அறிபவன் மட்டுமே ஞானியாகிறான். நம் மூதாதையர் தங்களை அறிவதில்தான் அதிகம் கவனம் செலுத்தினர். 'நான் யார்? என் உள்ளம் யார்? என் ஞானங்கள் என்ன?' என்ற கேள்விகளால் அவர்கள் வேள்வி நடந்தது. அதனால்தான், வாழ்க்கை குறித்த தெளிவு அவர்களுக்கு இருந்தது.



ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்க் கவிஞன் கணியன் பூங்குன்றன், 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்றான். திருமூலர், 'தானே தனக்குப் பகைவனும் நண்பனும்' என்று உணர்த்தினார். 'தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை' என்று சொன்னவரும் அவரே. 'தன்னைத் தன்னாலே உயர்த்திக்கொள்க' என்கிறது பகவத் கீதை.



*அனுபவங்களைவிட மிகப் பெரிய ஞானாசிரியன் இந்த உலகில் வேறு யாருமில்லை. அனுபவம் ஆளுக்கு ஆள் மாறுபடும். நாளுக்கு நாள் வேறுபடும். 'ஒருவன் கண் மற்றவருக்குச் சிறகாக முடியாது. ஒருவன் கால் இன்னொருவனுக்கு வாகனமாக இயலாது. ஒருவன் குரல் வேறொருவனுக்குப் பாட்டாக மாறாது' என்கிறார் கலீல் ஜிப்ரான்.*

*சுயமாய் அனுபவித்து அறிவதுதான் உயர்வு. எந்த முயற்சியும் உடனே வெற்றிக்கு வாசற்கதவைத் திறந்துவிடாது. தொடர் தோல்விகளுக்குப் பின்புதான் சரித்திர வெற்றி சாத்தியம். வெற்றிபெற்ற வரலாற்று நாயகர்களின் முதுகுக்குப் பின்னால் ஆயிரம் தோல்விகள் மறைந்திருக்கின்றன.*

*தகரக் கதவுடன் கூடிய மரக்கூண்டு வீட்டில் வாழ்க்கையைத் தொடங்கிய ஆபிரகாம் லிங்கன், வெள்ளை மாளிகையின் உள்ளே நுழையும் வரை சந்தித்த தோல்விகள் ஏராளம். அவர் சுவைத்த தோல்விகளை வேறு யார் சந்தித்திருந்தாலும், வாழ்க்கை மீதிருக்கும் கவர்ச்சியே காணாமல் போயிருக்கும்.*

*லிங்கன் தன்னுடைய 19-ஆம் வயதில் சிறிய பெட்டிக்கடை வைத்தார். வியாபாரம் நொடித்தது. 20 வயதில் மதுபானக் கடையைத் திறந்தார். இருப்பது அனைத்தையும் இழந்து திவாலானார். 23 வயதில் இலினாய்ஸ்*

மாநில சட்டசபைத் தேர்தலில் நின்று தோற்றார். 26 வயதில் உயிருக்குயிராய் நேசித்த ரட்லெஜ் என்ற இளம் பெண்ணைக் கைப்பிடிப்பதற்கு முன், காலன் அவளை அழைத்துக் கொண்டான். 27 வயதில் கடுமையாக நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டார். 49 வயதில் அமெரிக்க செனட்டர் தேர்தலில் ஸ்டீபன் டக்ளஸிடம் வெற்றிவாய்ப்பை இழந்தார். தொடர் தோல்விகளால் துவண்டுவிடாத லிங்கன் 1861-இல் அமெரிக்காவின் 16-வது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுச் சரித்திரம் படைத்தார். லிங்கனின் முயற்சி மட்டுமே நமக்குப் பாடம். நம் சுய அனுபவங்களே நம்மை வழிநடத்தும்.

‘நெறியை மட்டுமே புத்தர்கள் காட்டுவார்கள். நடப்பது அவரவர் பொறுப்பு’ என்றார் கௌதமர்.

‘வார்த்தைகள் நிலவைக் காட்டும் விரல்கள். அவற்றைப் பிடித்துக் கொண்டு யாரும் தொங்க வேண்டாம்’ என்கிறது ஜென். கைகாட்டி மரம் ஊரின் திசையைத்தான் காட்டும். நாம் விரும்பும் இடத்துக்கு நம்மை அது கொண்டு போய்ச் சேர்க்காது.


விவேகானந்தர் சொல்கிறார்: ‘ஆயிரம் தெய்வங்களின் மீது நம்பிக்கை வைத்து, உன் மீது நம்பிக்கை வைக்காமற் போனால் உன்னைவிட நாத்திகன் உலகத்தில் வேறு யாருமில்லை!’

# 35

# புகழ்


திரும்பும் இடமெல்லாம் திரண்டு நிற்கும் கூட்டம், வார்த்தைக்கு வார்த்தை விண் பிளக்கும் கரவொலி, பார்க்குமிடமெல்லாம் பளபளா சுவரொட்டிகள், செல்லும் திசையெல்லாம் ‘வாழ்க வாழ்க’ கோஷங்கள், தொலைக்காட்சி அலைவரிசைகளில் அன்றாட தரிசனம், வார இதழ்களைப் பிரித்தால் வண்ண நிழற்படங்கள், நாளிதழை எடுத்தால் நாள்தோறும் செய்திகள்... 'இவைதான் இறவாப் புகழின் அடையாளம்’ எனப் பக்குவப்படாத மனிதர்கள் விளம்பர வெளிச்சத்தில் மயங்கிவிடுகிற காலம் இது!

புகழும், விளம்பரமும் ஒன்றன்று. பல்லவன் செதுக்கி வைத்த கற்கோயில் போல, காலத்துக்குச் சவால் விட்டு நிற்பது புகழ். வான விதானத்தில் சிறிது நேரம் வர்ணஜாலம் காட்டி மறையும் வானவில் போன்றது விளம்பரம்.



நாலு படங்கள் வரிசையாக அடிவாங்கினால் சினிமா நட்சத்திரங்களின் முகவரி காணாமல் போகும். இருமுறை தேர்தல் களத்தில் தோற்றுப் பத்தாண்டுகள் தொடர்ந்து பதவியில்லாமல் வீட்டில் இருந்தால், அந்த அரசியல்வாதியை எந்த ஊடகமும் திரும்பிப்

பார்க்காது. மார்க்கெட் உள்ளவரைதான் நட்சத்திரத்துக்கு மதிப்பென்றால், அந்த மதிப்பு அவருக்கல்ல; அவரால் நிரம்பிய பணப்பெட்டிக்கு. பதவி உள்ளவரைதான் பரிவாரம் புடைசூழுமெனில், ஜால்ராக்களும், கூஜாக்களும், ஏவல் கூவல்களும் பல்லக்கு தூக்கிப் பல்லாண்டு பாடியது சொந்த ஆதாயத்துக்காகவே அன்றி, அந்த அரசியல்வாதியின் தனி மனித ஆளுமைக்காக அன்று.



சீட்டுக்கட்டுகளால் கட்டப்படும் கோபுரம் காற்றில் நிற்காது. விளம்பரத்தால் மட்டும் உயர்ந்தவர் வாழ்க்கை நிரந்தரமாகாது. சிலர் மூச்சு விழும் முன்பே விளம்பர வெளிச்சத்திலிருந்து விழுந்து, புறக்கணிப்பு இருட்டில் புதைந்துவிடுகின்றனர். சிலர் இருக்கும் வரை அவர்கள் தலையைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் இருக்கும். இறந்த பின்போ, அப்படியொரு மனிதர் இருந்தார் என்பதையே உலகம் முற்றாக மறக்கும். தன்னலத்தில் கிடைத்த விளம்பரம் தன்னோடு அழியும். மண்ணலத்தில் பிறந்த புகழ் மண் உள்ளவரை வாழும்.

உலகத்தின் மிகச் சிறந்த முதல் பேச்சாளர், ஏதென்ஸில் வாழ்ந்த டெமஸ்தனீஸ். இளம் பருவத்தில் வார்த்தைகளை வெளியிடுவதில் அவர் வாய் திக்கியது. கொந்தளிக்கும் கடல் அலைகள் வேகமாக வீசும் கரையில் நின்று, வாயில் கூழாங்கல்லை வைத்துக் கொண்டு, அலை ஓசையை மிஞ்சும் உரத்த குரலில் பேசிப் பழகிய அசுர சாதனையாளர் டெமஸ்தனீஸ். தன் பாரம்பரிய சொத்தைப் பறிக்க முயன்றவர்களுக்கு

எதிராக வாதிட வழக்கு மன்றத்தில் நின்றவர், தன் வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைக் குரலாக முழங்கினார்.

தான் வளர்த்துக் கொண்ட பேச்சு ஆற்றலைத் தன் சுயநலத்துக்காக அவர் ஒருநாளும் பயன்படுத்தவில்லை. மாசிடோனியா மன்னன் பிலிப், ஏதென்ஸின் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றபோது, மண்ணின் உரிமையைக் காக்க டெமஸ்தனீஸ், பிலிப்புக்கு எதிராக மக்களிடம் முழங்கிய முழக்கம் 'ஃபிலிபிக்' என்று உலக வரலாற்றில் தனி இடம் பெற்றது. பிலிப் படுகொலைக்குப் பின்பு, அரியாசனத்தில் அமர்ந்த அலெக்சாண்டர், ஏதென்ஸில் தன் ஆளுகையை நிலைநிறுத்தியபோது, தன் வாக்கு வலிமையால் எத்தீனியர்களைக் கிளர்ந்தெழச் செய்து களம் கண்டார் டெமஸ்தனீஸ். இறுதியில் அவர் ஏதென்ஸிலிருந்து நாடு கடத்தப்பட்டார்.

அலெக்சாண்டரின் மறைவுக்குப் பின், டெமஸ்தனீஸ் மீண்டும் தாயகம் திரும்பினார். எத்தீனிய மக்கள் எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அவரை ஆரத் தழுவி வரவேற்றனர். மாசிடோனியாவின் ஆதிக்கத்திலிருந்து தாய்மண்ணை விடுவிக்க டெமஸ்தனீஸ் மறுபடியும் மக்கள் படைக்குத் தலைமையேற்றார். விடுதலைப் போரில் வெற்றி பெற முடியாத நிலையில் கலூரியா தீவுக்குத் தப்பிச் சென்றார். அங்கிருந்த கோயிலுக்குள் அவர் அடைக்கலம் புகுந்தபோது, கோயிலின் புனிதம் மாசுபடும் என்று சொல்லி, அவரை அங்கிருந்து வெளியேறச் சொல்லி வற்புறுத்தினான் ஆர்க்கியஸ் என்ற நடிகன்.

இனி தப்புவதற்கு வழியில்லை என்று தெளிந்த டெமஸ்தனீஸ், எழுதுகோலின் நுனியில் தேக்கி வைத்திருந்த விஷத்தை வாயில் உறிஞ்சினார். அடுத்த கணம் அவர் தலை சாய்ந்தது. எத்தீனியர்களின் சுதந்திரப்பூ, மாசிடோனியர்களின் கால்களில் கசங்கி விடக் கூடாது என்று வார்த்தைகளில் போர் தொடுத்த வரலாற்று நாயகர் அன்று வீழ்ந்தார். ஆனால், உரிமைகள் பறிக்கப்படும்போது எல்லாம் உலகம் அவருடைய 'ஃபிலிபிக்' உரைகளைக் கேட்டு உயிர்த்துடிப்புடன் இன்றும் போர்க்குரல் கொடுக்கிறது.

இயேசு பிறப்பதற்கு 322 ஆண்டுகளுக்கு முன்பு டெமஸ்தனீஸ் மறைந்தார். சுயநலம் சார்ந்த பேச்சாளராக அவர் இருந்திருந்தால் சாவோடு அவர் சரித்திரம் முடிந்து இருக்கும். ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும், உலகம் அவர் பெயரை உணர்வு பொங்க உச்சரிக்கிறது. அதற்குப் பெயர்தான் புகழ். அந்தப் புகழுக்கு அடித்தளம், தேசத்துக்காக அவர் வடித்தளித்த உரிமை கீதம்.

‘ஷாநாமா’ எழுதிய பிர்தௌஸி, பாரசீகம் கொண்டாடும் மகாகவிஞன். பாரசீக மன்னன் தன் அரச பரம்பரையை வாழ்த்திக் கவிதைகள் படைத்தளிக்க வேண்டும் என்று கவிஞரை வேண்டினான். தான் பிறந்த கிராமத்து மக்களின் வறுமையை முற்றாக அகற்ற, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பிர்தௌஸி தீர்மானித்தார். ‘தங்கள் விருப்பப்படி அரச பரம்பரையை வாழ்த்தி, அமரத்துவம் வாய்ந்த கவிதைகளைப் படைத்துத் தருகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. என்னுடைய ஒவ்வொரு கவிதைக்கும் ஒரு பொன் நாணயம் தாங்கள் தர வேண்டும்’ என்றார் பிர்தௌஸி. அவ்வாறே வழங்குவதாக அரசனும் வாக்களித்தான்.

கிராமத்து மக்களின் வாழ்க்கை நலத்தை நெஞ்சில் நிறுத்தி, அறுபதாயிரம் கவிதைகளைக் கவிஞர் எழுதி முடித்தார். கவிஞருக்கு வாக்கு அளித்தபடி 60 ஆயிரம் பொன்னை வழங்கினால், அரசுக் கருவூலம் காலியாகிவிடும் என்று அமைச்சர் அஞ்சினார். பொன்னுக்குப் பதில் 60 ஆயிரம் வெள்ளி நாணயங்களைத் தருவதே விவேகமானது என்று அவர் அரசருக்குப் பரிந்துரைத்தார். ஏமாற்றமுற்ற கவிஞர் அந்தப் பரிசை ஏற்க மறுத்து, வேதனையுடன் வெளியேறினார். தான் விரும்பியபடி தன் பாட்டுத் திறத்தால், மண்ணின் மக்களின் வறுமையை ஓட்ட முடியவில்லையே என்று இதயம் நொந்தார்.

பின்னாளில், பிர்தௌஸியின் கவிதைகளைப் படிக்க நேர்ந்த பாரசீக அரசன், அவற்றின் நயத்தில் நெஞ்சம் பறிகொடுத்தான். தன் தவற்றுக்குப் பிராயச்சித்தம் தேடத் துடித்தான். கவிஞரின் விருப்பப்படி 60 ஆயிரம் பொன்னை மூட்டை கட்டி, ஒரு ஒட்டகத்தின் மேல் ஏற்றி, அவர் வாழ்ந்த கிராமத்துக்கு அனுப்பி வைத்தான். கிராமத்தின் ஒரு வாசல் வழியாகப் பொன் மூட்டையுடன் ஒட்டகம் நுழைந்தது. தன் மக்களின் வறுமையைத் தீர்ப்பதற்குத் தன் கவிதை ஆற்றல் கைகொடுக்கவில்லையே என்ற கவலையில் விழுந்த பிர்தௌஸியின் சடலம், மறு வாசல் வழியாக மயானம் நோக்கிச் சென்றது.

மக்களுக்காக கவிதை படைப்பவன்தான் புகழ் பூத்த கவிஞனாகக் காலத்தால் கௌரவிக்கப்படுகிறான்.

சுதேச பக்தி என்கிற புது நெருப்பை வளர்த்தெடுத்த மகா கவிஞன் பாரதி, ‘மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன்; வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்’ என்று தன் கவிதா நோக்கத்தைப் பிரகடனம் செய்தான்.

‘நமது சிந்தனையில், செயலில், வாழ்வில், வாக்கில் வஞ்சமும், சூதும், சிறுமையும், கயமையும் காடாக மண்டும்போது, அவற்றைச் சுட்டுப் பொசுக்கும் அக்கினிக் குஞ்சு பாரதி. எப்போது அநீதியும், அவலமும் அலைவீசி ஓங்குகிறதோ, அப்போதெல்லாம் அவதாரம் எடுக்கும் அக்கினிக் குஞ்சு பாரதி!’ என்று பாரதியை மிகச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டுகிறார், பாரதியின் எழுத்தை அன்றாடம் சுவாசிக்கும் கவிஞர் சிற்பி. மக்களுக்காக இலக்கியம் படைக்கும் மகா கவிகள் இந்த மண்ணில் கடைசித் தமிழன் உள்ள வரை, காலப்பெருவெள்ளத்தில் கரைந்து போகாமல் நிலைத்து நிற்பார்கள் என்பதற்குப் பாரதி சரியான சான்று.

காந்திய வழியில் அகிம்சை ஆயுதத்தை ஏந்தி, அமெரிக்க மண்ணில் கறுப்பர்களின் உரிமைக்காக வெள்ளையரின் அடக்குமுறையை எதிர்த்துச் சாத்வீகப் போர் நடத்திச் சரித்திரம் படைத்தவர், பாதிரியாராக இருந்த மார்ட்டின் லூதர் கிங்.

அடிமை ஒழிப்புச் சட்டத்தில் கையொப்பம் இட்டு, கறுப்பின மக்களை அடிமைத் தளையில் இருந்து விடுவித்த ஆபிரகாம் லிங்கன், 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாடக அரங்கு ஒன்றில் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் இழந்தார்.

அடிமை ஒழிப்புச் சட்டம் நிறைவேறி நூறாண்டுகள் கடந்தும், அடிமைச் சங்கிலி அறுபடாமல் துயருற்றுத் துடித்த கறுப்பர்களின் உரிமைகளுக்காகப் போராடிய மார்ட்டின் லூதர் கிங், 1968 ஏப்ரலில், ஒரு வெறிபிடித்த வெள்ளையனின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார்.

மதபோதகர்கள் அனைவரும் மார்ட்டின் லூதர் கிங்காக மாறிவிடுவது இல்லை. மதத்தின் பேரால் மக்களைப் பிரிப்பவர்களுக்கு மலிவான விளம்பரம் கிடைக்கலாம். கறுப்பரையும், வெள்ளையரையும் மனிதம் என்ற புள்ளியில் இணைப்பதற்கு உயிர் துறந்த மார்ட்டின் லூதர்கிங், ஆபிரகாம் லிங்கன் போன்றவர்களுக்கு மட்டுமே சரித்திர சாம்ராஜ்யத்தில் புகழ் மகுடம் சூட்டப்படும்.

கூடிக் கலையும் மேகம்போல், பார்த்துக்கொண்டு இருக்கும்போதே விளம்பர வெளிச்சம் விலகிவிடும். மழை பொழிவதுபோல், மலர் மலர்வதுபோல், நதி நடப்பதுபோல், தென்றல் தவழ்வது போல் கைம்மாறு கருதாமல் மக்கள் சமூகத்துக்குக் காரியம் ஆற்றும் மனிதர்களுக்கு எந்த விளம்பரமும் அவசியம் இல்லை. மகிழம்பூ காய்ந்து சருகான பின்புதான் அதிகம் மணக்கிறது. பொதுநலனுக்காக

இடையறாமல் இயங்கியவர்களுக்கு வாழும்போதுள்ள வரவேற்பைவிட, சாவுக்குப் பின்புதான் சரித்திரப் புகழ் கிடைக்கும். பொதுநலச் சிந்தனைகளோடு உழைப்பவர்கள் பெறுவதுதான் புகழ். அதுதான் காலத்தின் பரிசு.

கவிஞர் அப்துல் ரகுமான் சொல்கிறார்...

‘உன் தலையைப் புகழால் அலங்கரி.

மகுடங்களால் அலங்கரிக்காதே!

ஏனென்றால்...

மகுடங்கள் தலை மாறக் கூடியவை!’

# 36

# கல்வி

*மாணவர்களுக்குத் தாங்கள் பிறந்த மண்ணிலிருந்து, அவர்களை வேரோடு பிடுங்கி எறியும் கல்வியைத்தான் நாம் இன்றைக்கு வழங்கி வருகிறோம். பள்ளிகளும், கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தங்களைச் சுற்றி மதில் சுவர்களை எழுப்பிக்கொண்டு இருக்கின்றன. அந்த மதில் சுவர்களுக்குள்ளாக நம்மை முடக்கிக்கொண்டு, நாம் கல்வியைக் கொடுக்கிறோம். அந்தக் கல்வி, சுற்றியுள்ள சமுதாயத்தைத் தாண்டி எங்கேயோ இருக்கும் அந்நியமான உலகத்திலிருந்து சில வளர்ச்சிகளை எடுத்துக்கொண்டு வந்து கொடுக்கலாம். ஆனால், சமுதாயத்தின் தொடர்பில்லாமல் கொடுக்கிற கல்வியானது மாணவனைக் குறை மனிதனாகவே ஆக்குகிறது. உண்மையான நிறைவை அவனுக்கு அது கொடுப்பதில்லை.*

*'இந்தக் கல்வி மிகவும் செயற்கையானது. இதனால் சமுதாயத்துக்கும் பயனில்லை. மாணவர்களுக்கும் பயனில்லை. அதனால்தான், இங்கே படித்துக்கொண்டு இருக்கிற எல்லோரும் நேரே ‘அமெரிக்கா போகணும்’ என்று நினைக்கிறார்களே ஒழிய, தங்களுக்கும் ஓர் இடம் இந்த சமுதாயத்தில் இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாமல் போகிறது. இது உயர் கல்வியில் இருக்கிற பெரிய குறை. இதை மாற்ற வேண்டும்’ என்கிறார் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வசந்திதேவி.*



'எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வலிமையை வளர்க்குமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன் சொந்தக் கால்களில் நிற்கச் செய்யுமோ, அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை. மனிதனுக்குள் புதைந்து இருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி. அறிவு வளர்ச்சிக்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதுதான் மனதை ஒருமுகப்படுத்துதல்! கல்வியின் லட்சியமே மனதை ஒருமுகப்படுத்துவதுதான்' என்றார், விவேகானந்தர்.

இயேசு பிறப்பதற்கு முன்பே கிரேக்கர்கள் கல்வியின் பெருமையைப் போற்றினர். 'கல்வி கற்காமல் இருப்பதைவிட, பிறக்காமல் இருப்பதே மேல்' என்றார் பிளேட்டோ. 'உயர் கல்வியின் ஒட்டு மொத்த நோக்கம் நல்ல எண்ணங்களை உருவாக்குவதுதான்' என்று அவர் அறிவுறுத்தினார் 'அகாடமி' என்ற கல்விக்கூடத்தை நடத்திய பிளேட்டோ, அந்தக் கூடத்தின் கதவுகளில், 'கணிதம் அறியாதவன் இதற்குள் நுழைய வேண்டாம்' என்று எழுதி வைத்தார். 'பிறப்பதற்கு முன்பே கல்வி ஆரம்பமாகிறது' என்று சொன்ன அவர்தான், 'காணப்படும் உலகம் வேறு; அறியப்படும் உலகம் வேறு' என்பதை விளக்கினார்.

ஏதென்ஸில், பிளேட்டோவிடம் 20 ஆண்டுகள் தத்துவம் பயின்றவர் அரிஸ்டாடில். அலெக்சாண்டரின் 13 வயதில், அவருக்கு ஆசிரியராக இருந்த அரிஸ்டாடில், புத்தகங்கள் சேகரிக்க ஏராளமாகப் பணத்தைச் செலவழித்தார். யூரிபிடிசும், அரிஸ்டாடிலும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகப் பெரிய நூலகங்களைத் தங்களுக்கென்று உருவாக்கினர். அரிஸ்டாடில் நடத்திய ஆய்வுகளுக்கு அலெக்சாண்டர் பணத்தை அள்ளிக்கொடுத்தார். அரசு நிதி பெற்ற முதல் அறிஞர் அரிஸ்டாடில்தான். 'நல்லறிவே நல்லொழுக்கம்' என்பதுதான் அன்றைய கல்விச் சிந்தனையாக இருந்தது.

நெறி சார்ந்த நல்ல பண்புகளை மனித மனங்களில் விதைப்பது தான்


*நீண்ட காலமாகக் கல்வியின் நோக்கமாக இருந்துவந்தது. எமர்சன், ரஸ்கின், மாஜினி, விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றவர்கள் 'கல்வியின் உயிர்த்தலம் ஒழுக்கம்' என்றே கருதினர். 'கல்வியின் முதல் நோக்கம் ஒழுக்கமே! அதற்கு அடுத்ததுதான் அறிவு. ஒழுக்கம் தராத கல்வி முழுமையற்றது. அதனால் அழிவுதான் உருவாகும்' என்றார் ரஸ்கின்.*

*மெக்காலே 1835-இல் இந்தியாவில் அறிமுகப்படுத்திய கல்வித் திட்டம் குமாஸ்தாக்களை உருவாக்குவதையே அடிப்படை நோக்கமாகக்கொண்டது. கல்வியின் சீரழிவு அப்போதுதான் ஆரம்பமானது. ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் தெரிந்தால் போதும் என்று அறிவின் எல்லை குறுகியது.*

*'முதன்முதலாகப் பேருந்து ஓடிய நகரம் பாரிஸ். மனித உடலில் உள்ள நரம்புகளின் நீளம் 45 மைல்கள். நாணயத்தில் தம் உருவத்தைப் பொறித்த முதல் அரசர் அலெக்சாண்டர். முதன்முதலில் டெலிபோன் டைரக்டரியை வெளியிட்ட நாடு இங்கிலாந்து' என்ற தகவல்களின் தொகுப்பே அறிவு என்ற நிலை உருவானது. தகவல் வேறு, அறிவு வேறு என்ற புரிதல் இல்லாமல் போனது. தாய் மொழிக் கல்வி அவமானமாகக் கருதப்பட்டது.*

*தான் காண விரும்பும் சர்வோதய சமுதாயத்தை அமைப்பதில் கல்விக்குரிய இடத்தை காந்திஜி சிந்தித்தார். தனி மனிதர்களைச் சமுதாயத்துக்குப் பயனுள்ளவர்களாக மாற்ற கல்வியே சிறந்த சாதனம் என்று அவர் அழுத்தமாக நம்பினார். நடைமுறைப் பயிற்சி அற்ற ஏட்டுக் கல்வியால் பயனில்லை என்று உணர்ந்தார். ரஸ்கினின் பாதையில் புதிய கல்வி முறையை உருவாக்கினார். தென்னாப்ரிக்காவில் டால்ஸ்டாய் பண்ணையில் அந்தக் கல்வி முறையை அறிமுகம் செய்தார். இந்தியா திரும்பியதும் கிராமக் கைத்தொழில்களை மையமாகக் கொண்டு தொடக்கக் கல்வியைத் திட்டமிட்டார் மகாத்மா காந்தி. 'உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் ஆற்றல்களை மலர்வித்து வெளிக்கொணர்வதுதான் கல்வியின் பணி' என்ற காந்தியடிகள், 'வாழ்க்கைக்காகக் கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி' என்று சர்வோதயக் கல்வி முறைக்கு வடிவம் கொடுத்தார். மகாத்மாவின் விருப்பத்துக்கு ஏற்ப 'வார்தா கல்வித் திட்டம்' உருவானது. தாய்மொழி மூலம்தான் எல்லா நிலைகளிலும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று வார்தா திட்டம் வலியுறுத்தியது. ஆனால், நல்லவைகளை எளிதாக ஏற்க மறுக்கும் நம் மக்களிடம் வார்தா திட்டம் வரவேற்பைப் பெறவில்லை.*

‘ஆங்கிலம்தான் அறிவின் அடையாளம். ஆங்கிலத்தில் பேசினால்தான் அறிஞன். ஆங்கிலத்தில் படித்தால்தான் வேலை கிடைக்கும்’ என்ற காலனி (அடிமை) மனோபாவம் ஆழமாக வேர் பரப்பிய மண்ணில் தாய்மொழிக் கல்வி புறக்கணிக்கப்பட்டதில் வியப்பில்லை.



உலகில் அதிகமான மக்கள் பேசும் மொழி ஆங்கிலம் என்ற தவறான கருத்து தமிழரிடம் உள்ளது. ஐரோப்பிய நாடுகளிலும் ருஷ்யாவிலும் சீனாவிலும் ஆங்கிலத்துக்கு இடமில்லை. ஆங்கிலத்துக்கு இணையாக ஜெர்மனும், பிரெஞ்சும் வளர்ந்துவிட்டன. உலகில் மிகச் சிறுபான்மை மக்கள் பேசும் மொழி ஆங்கிலம் என்பதுதான் உண்மை.

தமிழரிடையே நிலவிய ஆங்கில அடிமைத்தனத்தைப் பாரதி கடுமையாகச் சாடினான். ‘தமிழ்நாட்டில் உண்மையான கல்வி பரவ வேண்டுமானால் சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை நமக்குள்ளே அறிவுடையோர் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதை அனுசரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி நமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை’ என்று வருந்தினான் அந்தப் பைந்தமிழ்ச் சாரதி.

*தாய்மொழி பயிற்றுமொழியாக இருந்தால் மட்டுமே கல்வி அனைவருக்கும் போய்ச் சேருவதற்கு வாய்ப்பு கனியும். சர்வோதயக் கல்வி, பாடத்துடன் தொழிலையும் கற்றுத் தரும். ஆனால், இன்றைய ஏட்டுக்கல்வி, வேலை தேடி வெளிநாடு போகச் செய்கிறது. இன்று இந்தியாவில் படித்த 50 லட்சம் பேர் வேலையின்றி வீதிகளில் நிற்கின்றனர். இவர்களுள் 15 லட்சம் பேர் பட்டதாரிகள். ஒவ்வோராண்டும் படித்துவிட்டு வேலையின்றி இருப்பவர்களின் எண்ணிக்கை 7. 5 சதவிகிதம் உயர்கிறது. 35 சதவிகிதம் மாணவர்கள் வெளிநாடுகளில் தங்கள் திறமைக்கேற்ற வேலையைத் தேடிச் செல்கின்றனர். இதுதான் இன்றைய இந்தியாவின் கல்வி நிலைமை.*

*கல்வி குறித்த பார்வை நம் மக்களுக்கு மாற வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் டாக்டர்களாக, இன்ஜினீயர்களாக, கணிப்பொறி வல்லுநர்களாக மாறிவிட்டால், மற்ற தொழில்களைப் பார்ப்பவர் யார்? மருத்துவம், கட்டடம், கணிப்பொறியும் மட்டும் மனிதர்களுக்குப் போதுமா? சோறு படைப்பது யார்? பொருள்களை விநியோகிப்பது யார்? கற்றுக்கொடுப்பது யார்? கலைகளை வளர்ப்பது யார்?*

*பள்ளியிலும், கல்லூரியிலும் பெறுவதுதான் கல்வி என்ற மாயத்திரை கிழிபட வேண்டும். 'என் கல்வியறிவில் பள்ளிக்கூடம் மூக்கை நீட்ட, நான் அனுமதித்ததில்லை' என்றார் மார்க் ட்வைன். 'கலாசாலைகள் கூழாங்கற்களுக்கு மெருகேற்றி, வைரங்களை ஒளிமங்கச் செய்கின்றன' என்றார் அறிவை ஆராதித்த இங்கர்சால். 'சுதந்திரமான சிந்தனைக்கும், அறிவாற்றலுக்கும் தடையாக இருப்பது இன்றைய கல்விமுறை' என்றார் நோபல் பரிசு பெற்ற ரஸ்ஸல்.*

*நோபல் பரிசு பெற்ற பேரறிஞர் பெர்னாட்ஷாவும், வின்ஸ்டன் சர்ச்சிலும் பள்ளிக் கல்வியால் உயர்ந்தவர்கள் இல்லை. உலகம் இதுவரை சந்தித்த சிறந்த அறிஞர்களில் ஒருவர் பெஞ்சமின் பிராங்க்ளின். மெழுகுத்திரியும், சோப்புக் கட்டியும் தயாரிக்கும் ஒரு சாதாரண தந்தைக்கு மகனாகப் பிறந்த பிராங்க்ளின், பின்னாளில் பத்திரிகையாளராய், பதிப்பாளராய், எழுத்தாளராய், விஞ்ஞானியாய், ராஜதந்திரியாய், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்தவர்களில் ஒருவராய், அரசியலமைப்புச் சபை உறுப்பினராய் உயர்ந்தார். பள்ளியும், கல்லூரியும் பெஞ்சமின் பிராங்க்ளினை உருவாக்கவில்லை.*

*தான் படைத்தளித்த சிறுகதைகள் மூலம் தமிழிலக்கியத்துக்கு உலகத் தரத்தைத் தேடித் தந்த ஜெயகாந்தன், எட்டாம் வகுப்பு வரை கூடப்*

படிக்கவில்லை. உரைநடையிலும் கவிதையின் இனிமையைக் காட்டிய கண்ணதாசன், உயர்நிலைப்பள்ளியின் உள்ளே நுழையவில்லை. எழுத்திலும், பேச்சிலும் திராவிட இயக்கத்தில் சாதனை படைத்த கலைஞர், கல்லூரி வாசலில் கால் பதிக்கவில்லை. இந்தியாவின் இரண்டு பிரதமர்களை உருவாக்கிய காமராஜர் ஆறாம் வகுப்புக்கு மேல் தொடரவில்லை.

பள்ளியிலும், கல்லூரியிலும் பெறும் கல்வியை விட, வாழ்க்கை தரும் அனுபவக் கல்விதான் ஆயிரம் மடங்கு உயர்வானது. உண்மையானது. இன்றைய கலாசாலைக் கல்வி முறை ஒழுக்கத்தை வளர்க்கவில்லை; சமூக உணர்வைத் தூண்டவில்லை; சுயநலம் துறந்த பொதுநலனை ஊட்டவில்லை. வெறும் ஏட்டுப் படிப்பு மட்டுமே கல்வி இல்லை.

ஜப்பானில் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஆண்டுதோறும் ஹிரோஷிமாவுக்கு அழைத்து வரப்படுகின்றனர். அணுகுண்டு வீச்சால் ஏற்பட்ட அழிவையும், பாதிப்புகளையும் மாணவர்கள் நேரில் பார்க்கின்றனர். அந்த அழிவிலிருந்துதான் இந்த உயரத்துக்கு ஜப்பான் வளர்ந்திருக்கிறது என்று அவர்களை ஆசிரியர்கள் உணரச் செய்கின்றனர். ‘இனி நீங்கள்தான் ஜப்பானின் எதிர்காலத்தை படைக்க இருப்பவர்கள். நாளைய ஜப்பான் மேலும் உயர நீங்கள் திட்டமிடுங்கள். உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம்’ என்று ஊக்கப்படுத்து கின்றனர். நம் இந்தியக் கல்விமுறையில் இதுபோன்ற யதார்த்தமான அணுகுமுறை அறவே இல்லையே!

மகாகவி பாரதி சொல்கிறான்... ‘தேசத்தின் வாழ்வுக்கும், மேன்மைக்கும் தேசியக்கல்வி இன்றியமையாதது. தேசியக் கல்வி கற்றுக்கொடுக்காத தேசத்தைத் தேசமென்று சொல்லுதல் தகாது. அது மனிதப் பிசாசுகள் கூடி வாழும் விஸ்தாரமான சுடுகாடேயாம்!’

# 37

# புரட்சி

இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு இன்னமும் இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வரவில்லை. உண்மையான போராட்ட வீரர்கள் இருட்டடிப்புக்கு ஆளாக்கப் பெறுவதும், போலிகளின் புகழ் வெளிச்சம் பெறுவதும் இன்றைய நாளில் மிகுதியாகக் காணப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றில், தமிழகத்தில் நடந்த மானமும் வீரமும் மிக்க விடுதலைப் போராட்டங்களுக்குத் தக்க மரியாதை கிடைக்கவில்லை. அதை எடுத்துச் செல்லுகின்ற துணிவும் இங்குள்ள தமிழர்களுக்குக் கிடையாது. சாதிச் சண்டைகள் போடுவதற்கே நேரம் போதாது என்று தமிழர்கள் தவியாய்த் தவித்துக்கொண்டு இருக்கும்போது, வரலாறுதானா முக்கியம்?' என்று வருந்துகிறார் டாக்டர் ந.இராசையா.

'இறந்தவர்க்கும், இருப்பவர்க்கும், இனிமேல் பிறப்பவர்க்கும் இடையில் உருவான உடன்படிக்கையே வரலாறு!' என்றார் எட்மண்ட் பர்க்.



கடந்த கால வரலாற்றுக்கு முக்கியத்துவம் வழங்காத நாடு, அனுபவங்களிலிருந்து பெறக்கூடிய அறிவை அடைய முடியாமல்

போய்விடும். சென்ற காலத்தைச் சிந்திக்காதவர்கள் நிகழ்காலத்தில் வாழத் தகுதியற்றவர்கள். நம் மூதாதையர்களின் வாழ்க்கைப் பாதையைப் பின்னோக்கிப் பார்க்கும்போதுதான், அவர்கள் வருங்காலத் தலைமுறைக்குத் தந்து விட்டுப் போன பண்பாட்டுச் செல்வங்களைத் தரிசிக்க முடியும். நம் உரிமை சார்ந்த வாழ்வுக்காக அவர்கள் உயிர் தந்த தியாகத்தை உணர முடியும். பிள்ளையின் வளர்ச்சியில் பெற்றோரின் முயற்சி புதைந்திருப்பது போல், சமூகத்தின் மாற்றங்களில் நேற்றைய மனிதர்களின் பங்களிப்பு மறைந்திருக்கிறது. நம் வரலாறு பற்றிய பிரக்ஞை நமக்கு அவசியம்.



இந்திய மண்ணில் படிந்து கிடந்த அடிமை இருள் கிழித்துச் சுதந்திர வெளிச்சம் பரப்பிய முதல் சூரியன் யார்? அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க மாளிகையின் அடித்தளம் தகர்க்க முதலில் வெடித்த புரட்சியின் முகவிலாசம் எது? சாவர்க்கர் சொன்னது போல் மீரட்டில் தொடங்கி, பஞ்சாப்பிலிருந்து பீகார் வரை பரவிய சிப்பாய்களின் புரட்சிதான் முதல் சுதந்திரப் போரா? 1857-க்கு முன்பு மக்கள் தழுவிய விடுதலை வேள்வி வேறெந்த இடத்திலும் விதையாக விழுந்து, விருட்சமாக வளரவில்லையா? இன்று நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்காகத் தங்கள் மூச்சுக் காற்றையே விலையாகக் கொடுத்த முதல் புரட்சியாளர்கள் வலம் வந்தது நம் நாட்டின் வடக்கிலா... தெற்கிலா? தேச வரலாற்று நதியின் மூலத்தை ஆராய்ந்தால் தெளிவான பதில் கிடைக்கும்.

நெல்லை மாவட்டத்தில் சங்கரன்கோவிலுக்கு அருகில், நெற்கட்டான்செவ்வல் என்னும் ஊரில் இருந்து அதிகாரம் செலுத்திய பூலித்தேவன்தான் வீர சுதந்திர முழக்கமிட்ட முதல் பாளையக்காரர். நம் மண்ணில் வணிகம் நடத்த வந்த கிழக்கிந்தியக் கம்பெனியிடம் பெற்ற கடனைத் திருப்பித் தர முடியாத ஆர்க்காடு நவாப் முகம்மது அலி, தமிழகத்துக் குறுநில அரசர்களிடம் கப்பப் பணம் வசூலிக்கும் உரிமையை வெள்ளைக் கம்பெனிக்கு வழங்கினார். கப்பம் வசூலிக்க வந்த ஆங்கிலத் தளபதி அலெக்சாண்டர் ஹெரானுக்குப் பணிய மறுத்துப் படை நடத்தி வெற்றிபெற்றார் பூலித்தேவன். இந்திய விடுதலைப் போரில் இதுதான் வெள்ளையருக்கு எதிரான முதல் முழக்கம். 1755-ல் நடந்த இந்தப் போர் குறித்த ஆவணங்கள், எழும்பூர் ஆவணக் காப்பகத்தில் இன்றும் உள்ளன.

கொல்லங் கொண்டான், சேத்தூர், வடகரை, ஊத்துமலை, தலைவன் கோட்டை. திருவிதாங்கூர் ஆட்சியாளர்களுடன் கூட்டணி அமைத்து 15 ஆண்டுகளுக்கு மேல் வெள்ளையரை எதிர்த்து வீரப் போர் நடத்தினார் பூலித்தேவன். போரிட்டு வெல்ல முடியாத வெள்ளையர், கான்சாகிப் என்ற மருதநாயகத்தைப் பூலித்தேவனுக்கு எதிராகப் போரிடச் செய்தனர். மூன்றாண்டுகள் நடந்த போரின் முடிவில் மருதநாயகம் வென்றான். பூலித்தேவன் ராமநாதபுரத்திலுள்ள கடலாடிக்குத் தப்பிச் சென்றார்.

பூலித்தேவனின் தோல்விக்குப் பின்பு மருதநாயகம் கிழக் கிந்திய கம்பெனிக்கு எதிராகத் திரும்பினார். மதுரை நிர்வாகத்தைக் கைப்பற்றித் தானே சுயேச்சையாக ஆண்டார். நவாப்பின் படையும், கும்பினிப் படையும் அவரை எதிர்த்தன. நண்பன் சீனிவாசராவ் துரோகியானான். தொழுகையின்போது அவன் மருத நாயகத்தைக் கயிற்றால் கட்டினான். அந்தச் சதியில் பிரெஞ்சு அதிகாரி மர்ச்சந்த் துணை நின்றான். வெள்ளைக்கும்பினி, திண்டுக்கல் சாலையில் மாமரக் கிளையில் மருதநாயகத்தைத் தூக்கிலிட்டது.

மருதநாயகத்துக்கு நேர்ந்த மரணத்தை அறிந்து, தலைமறைவாக இருந்த பூலித்தேவன் மீண்டும் நெற்கட்டான் செவ்வலில் ஆட்சியைத் தொடர்ந்தார். ஆங்கிலத் தளபதி டொனால்ட் காம்பெல் தலைமையில் 1767-ல் வந்த கும்பினிப் படை, பூலித்தேவனின் வாசுதேவநல்லூர் கோட்டையைத் தாக்கியது. பெருமழையில் நடந்த போரில் தோல்வியுற்ற பூலித்தேவன் தலைமறைவானார். பின்பு அவர் பிடிக்கப்பட்டு, பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்துக் களம் கண்ட தாயகத்தின் முதல் ஆட்சியாளர்

பூலித்தேவன். அவர்தான் முதல் புரட்சிச் சூரியன்!

சிவகங்கைச் சீமையின் இரண்டாவது மன்னராகப் பொறுப்பேற்ற முத்து வடுகநாதன், கும்பினிக்குக் கப்பம் கட்ட மறுத்ததால், தளபதி பான்சோர் தலைமையில் வந்த ஆங்கிலப் படை காளையார்கோவிலில் பீரங்கித் தாக்குதல் நடத்தியது. முத்து வடுகநாதன் அந்தத் தாக்குதலில் பலியானார். அவருடைய மனைவி வேலு நாச்சியார், மகள் வெள்ளச்சி நாச்சியார், பிரதானி தாண்டவராய பிள்ளை மூவரும் மருது சகோதரர்கள் துணையுடன் திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள விருப்பாட்சிப் பாளையக்காரர் கோபால நாயக்கரிடம் வந்து சேர்ந்தனர். ஹைதர் அலி பாதுகாப்பில் எட்டாண்டுகள் இருந்த வேலு நாச்சியார், அவர் அளித்த படை உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி, மகள் வெள்ளச்சி நாச்சியாரை ஆட்சியில் அமர்த்தினார். பெரியமருது படைத் தளபதியாகவும், சின்ன மருது முதலமைச்சராகவும் பொறுப்பேற்றனர். வெள்ளச்சியின் பிரதிநிதியாக வேலு நாச்சியார் அதிகாரம் செலுத்தினார். ஒன்பதாண்டுகள் நிர்வாகம் செய்த வேலு நாச்சியார், தம் 66-ம் வயதில் 1796-ல் மறைந்தார்.


பாஞ்சாலங்குறிச்சியில் ஆட்சிபுரிந்த கட்டபொம்மன், வெள்ளையர் கும்பினிக்கு வரி செலுத்த மறுத்தார். மேஜர் பானர்மேன் தலைமையில் நடந்த முற்றுகையில் வீரபாண்டியன் கோட்டை வீழ்ந்தது. அங்கிருந்து தப்பிய கட்டபொம்மன், கோலார்ப் பட்டிப் பாளையக்காரர் இராஜ கோபால் மாளிகையில் தங்கினார். எட்டையபுரம் படை சூழ்ந்துகொண்டது. அந்த இடத்திலிருந்தும் தப்பிச்சென்று, புதுக்கோட்டைத் திருக்களம்பூர்க் காட்டில் புகலிடம் தேடிய கட்டபொம்மனைப் புதுக்கோட்டை அரசர் கைது செய்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். கயத்தாற்றில் 1799 அக்டோபர் 16-ம் நாள் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். அப்போது அவருக்கு வயது 40.

கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரை பிறவியிலேயே கேட்கும் திறனும், பேசும் திறனும் இழந்தவர். பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்ட இவரைப் புரட்சியாளர்கள் சிறையைத் தகர்த்து மீட்டனர். சிறையிலிருந்து தப்பிய ஆறே நாட்களில் பாஞ்சாலங்குறிச்சியில் மீண்டும் கோட்டையை எழுப்பிய ஊமைத்துரை, வெள்ளையருக்கு எதிராகப் படை திரட்டினார். கர்னல் அக்னியூ தலைமையில் வந்த ஆங்கிலப்படை கோட்டையை அழித்தது. அங்கிருந்து தப்பிய ஊமைத்துரை மருது சகோதரர்களிடம் அடைக்கலமானார். அக்னியூ அச்சுறுத்தியபோதும் மருது சகோதரர்கள்

ஊமைத் துரையை ஒப்படைக்க முன்வரவில்லை. சிவகங்கை போர்க்களமானது. மருதுபாண்டியரின் படைவீரர்கள் 20 ஆயிரம் பேர் ஆயுதங்களுடன் களத்தில் நின்றனர்.



ஊமைத்துரை, விருப்பாட்சியில் 4,000 பொதுமக்களைத் திரட்டி வெள்ளையர் படையுடன் மோதினார். அதன்பின் வத்தலக்குண்டில் நடைபெற்ற போரில் அவர் ஆங்கிலப் படையிடம் சிக்கினார். ஊமைத் துரையும், இளைய தம்பி செவத்தையாவும் பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர். கட்டபொம்மனும், அவருடைய தானாபதிப் பிள்ளையும், தம்பியர் இருவரும் தூக்கில் தொங்கிய பின்பும் மருதுபாண்டியர்கள் வெள்ளை யரை எதிர்க்க அஞ்சவில்லை. 18 அடி உயரமுள்ள கற்கோட்டையால் பாதுகாக்கப் பட்ட காளையார்கோவிலில் புரட்சி வீரர்கள் திரண்டனர். வெள்ளையர் தாக்குதலில், அந்நியப் படைக்கு அஞ்சிய புதுக்கோட்டை அரசர் மற்றும் பாளையக் காரர்கள் துரோகத்தில் காளையார்கோவில் கோட்டையும் தகர்ந்தது.



இறுதிவரை சரணடையாமல், கடைசிச் சொட்டு ரத்தம் உள்ளவரை போராடிய மருது சகோதரர்கள் இருவரும் 1801 அக்டோபர் 24-ம் நாள் திருப்பத்தூர்க் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். சின்ன மருதுவின் மகன் துரைசாமி உட்பட 73 புரட்சியாளர்கள் நாடு கடத்தப்பட்டனர். சிவகங்கைச் சீமை முழுவதும் மறவர் ரத்தத்தால் சிவந்தது. இந்திய வரலாற்றில் வெள்ளையரை எதிர்த்து, முதல் சிப்பாய்கள் புரட்சி வேலூர் கோட்டையில் 1806 ஜூலை 10-ம் நாள் வெடித்தது. இந்து, முஸ்லிம் வீரர்கள் இணைந்து நடத்திய இப்புரட்சியை முதல் விடுதலைப் போராகக் கருதாமல் இதற்குப் பின்பு 1857-ல் மீரட்டில் நடந்த சிப்பாய்கள் கலவரத்தையும், அதன்பின் விளைந்த நிகழ்வுகளையும் முதல் சுதந்திரப் போராகப் போற்றுவது என்ன நியாயம் என்று நமக்குப் புரியவில்லை.

‘தேசிய உணர்வோ, காலனி ஆதிக்கம் பற்றிய அடிப்படைத் தெளிவோ இல்லாமல், தங்கள் சுயநலன் பாதிக்கப்பட்டதால் பாளையக்காரர்கள் போராடியதை எப்படி விடுதலைப் போராகக் கொள்ள முடியும்?’ என்று கேட்பவர்கள் உண்டு. சுதேச மன்னர்கள் ஆட்சியைக் கவிழ்த்து, அவர்களுடைய பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்தில் வெள்ளையர்கள் கொண்டு வந்ததால் நானாசாகிப், ஜான்சிராணி, பகதூர் ஷா போன்றவர்கள் போர்க்களம் கண்டனர். அவர்களுக்கும் தேசிய உணர்வும், காலனி ஆதிக்க எதிர்ப்பும் இருந்ததாகச் சொல்ல முடியாது.

‘மருது சகோதரர்கள் வெள்ளையருடன் நட்பு பாராட்டியவர்கள்.

*தங்களைப் பகைத்ததால் அவர்கள் ஆங்கிலப் படைக்கு எதிராகப் போராட நேர்ந்தது. அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தாமல் வெள்ளையர் சலுகை வழங்கியிருந்தால், சிவகங்கைச் சீமையில் புரட்சி பூத்திருக்காது' என்று பழிதூற்றுபவர்களும் உண்டு. மீரட்டில் வெள்ளை அதிகாரிகளைக் கொன்று குவித்து, இந்தியச் சிப்பாய்கள் டெல்லி நோக்கி வந்து, புரட்சிக்குத் தலைமை ஏற்கும்படி, பெயருக்கு பேரரசராக இருந்த பகதூர்ஷாவிடம் வேண்டியபோது, அந்தச் செய்தியை ஆக்ராவில் இருந்த ஆங்கில லெப்டினென்ட் கவர்னருக்கு அவர் தெரிவித்தார். ஆங்கிலேயருடன் அனைத்து வகையிலும் நட்புகொள்ள முதலில் முயன்றவர்தான் பகதூர் ஷா.*

*கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌசி, ஜான்சிராணி லட்சுமிபாயின் வளர்ப்பு மகனை வாரிசாக அரச நாற்காலியில் அமர்த்தியதை எதிர்த்தார். தன் கணவரின் மறைவுக்குப் பின் தத்தெடுத்து வளர்த்த மகனை அரசராக அங்கீகரிக்க வேண்டுமென்று ஜான்சிராணி, ஆங்கிலேயரிடம் வேண்டினார். தன் விருப்பத்தை நிறைவேற்றினால் ஆங்கிலேயரின் பாதுகாப்புத் தலமாக ஜான்சி இருக்குமென்றும் பணிவுடன் அறிவித்தார். அவருடைய வேண்டுகோள் முற்றாக மறுக்கப்பட்ட நிலையில்தான் புரட்சியின் தளபதிகளில் ஒருவரானார். முதலில் வெள்ளையருடன் நட்பு கொள்ள முயன்றார் என்பதற்காக லட்சுமிபாயின் தீரத்தையும், உயிர்த் தியாகத்தையும் யாராவது குறைத்து மதிப்பிடக் கூடுமா?*

*'மீரட்டில் நடந்த சிப்பாய்களின் கலவரத்துக்குப் பின்பு, வட இந்தியா முழுவதும் புரட்சித் தீ பரவியது. அரசர்கள், ஜமீன்தார்கள், விவசாயிகள், கைவினைக் கலைஞர்கள், பாமர மக்கள் அனைவரும் வெள்ளையருக்கு எதிராக அணிவகுத்தனர். அந்த மக்கள் புரட்சியில் அவுத் பகுதியில் மட்டும் ஆங்கிலப் படையை எதிர்த்து ஒன்றரை லட்சம் பேர் மாண்டனர். அப்படி மாண்டவர்களில் ஒரு லட்சம் பேர் சிப்பாய்கள் அல்லாத குடிமக்கள். இதுபோன்று தென்தமிழகத்தின் பாளையக்காரர்கள் நடத்திய போர்களில் பொதுமக்கள் பங்கேற்றதுண்டா? மக்கள் சார்ந்த முதல் போர் 1857-ல் நடந்தது. அதனால்தான், அது முதல் இந்திய சுதந்திரப் போர் என்று போற்றப்படுகிறது' என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. இந்தக் கருத்திலும் பசையில்லை.*

*மருது சகோதரர்கள் 1801-ல் ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய போரில் சிவகங்கைச் சீமை முழுவதுமே ஈடுபட்டது. மருதுபாண்டியர் இருவரையும் உயிராகப் போற்றிய மக்கள் ஆயிரக்கணக்கில் களம்கண்டு*

குருதி சிந்தினர். முதன்முதலாக ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான மக்கள் போரை நடத்திப் புதிய சரித்திரம் படைத்த பெருமை மருது சகோதரர்களையே சேரும். இந்த வரலாற்று உண்மையை எந்தப் பொய் மேகம் மறைத்தாலும் அது விரைவில் விலகிப்போகும்.


ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக பூலித்தேவன், முத்து வடுகநாதன், வேலு நாச்சியார், முத்துராமலிங்க சேதுபதி, வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருதுபாண்டியர்கள் என இத்தனை பேரின் வீர வரலாற்று நிகழ்வுகளுக்குப் பின்புதான், 1857-ல் மீரட் கலவரம் புரட்சியாகப் பரிணமித்தது. அதுதான் 'முதல் இந்திய சுதந்திரப் போர்' என்று சொன்னால், 'கேழ்வரகில் நெய்யென்றால் கேட்பவர்க்கா புத்தி இல்லை' என்ற கண்ணதாசனின் கவிதை வரிதான் நினைவில் நிழலாடுகிறது.

வரலாறு என்பது காலத்தின் கருவூலம். அது பொய்யின் சுவடறியாத நிஜங்களின் தொகுப்பாய் நிலைபெற வேண்டும். நம் ஒவ்வொரு தேசிய இனத்தின் வரலாறும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதப் பட்டால்தான், அது இந்தியாவின் வரலாறாக இருக்கும்.


# 38

# காந்தியம்

'ஒரு விஷயம் நிச்சயம். காந்தியின் ஆன்மிக சக்தி உறுதியாக வெற்றி பெறும். மறுபடியும் மறுபடியும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றியதைப் போன்று, புதிதாக, இயேசுவாக அந்த சக்தி மீண்டும் தோன்றிக்கொண்டே இருக்கும். புதிய சமுதாயத்திற்கு, புதியதோர் பாதைக்கு அந்த அருட்சக்தி நம்மை அழைத்துச் செல்லும்' என்று நிஜமான நம்பிக்கையுடன் அழுத்தம் திருத்தமாக ஆரூடம் சொன்னவர் ஃபிரெஞ்சுப் பேரறிஞர் ரோமன் ரோலண்ட். அவர்தான் மகாத்மாவை 'சிலுவை இல்லாத கிறிஸ்து' என்று மனம் நெகிழ்ந்து வருணித்தவர்.



ரோமன் ரோலண்டுக்கு மகாத்மாவின் வாழ்க்கை முறையில் இருந்த ஆழமான நம்பிக்கை, இந்தியர்களாகிய நமக்கு இல்லாமற் போனதுதான் இந்த மண்ணின் மாபெரும் சாபம். காந்தியப் பாதையில் கால் பதித்து நடப்பது கடினமான காரியம் என்ற முடிவிற்கு நாம் எப்போதோ வந்தாயிற்று. வாழ்க்கையின் மேலான விழுமங்களின் மீதிருந்த பிடிப்பும் பற்றும் மேலைக் கலாசார பாதிப்பால் நம்மிடமிருந்து பறிபோய்விட்டன. பொருள் தேட்டமும், உடல் சார்ந்த இன்ப நாட்டமும்தான் உண்மையான வாழ்க்கை என்ற தவறான புரிதலுடன் இன்று நம் பயணம் நடந்து கொண்டிருக்கிறது.



திருக்குறள் போன்ற நீதிநூல்களைக்கூட நாம் மேடையில் அழகாகப் பேசுவதற்காகப் பயன்படுத்துகிறோம். பின்பற்றுவதற்காக அவற்றை நாம் படிப்பதில்லை. நம் வாழ்க்கைப் பாதையை நெறிப்படுத்தத் தூண்டும் எந்த நற்செய்தியையும் நாம் செவி கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. வாழும் வாழ்க்கையைப் பரிசோதனைக்குள்ளாக்கும் முயற்சிகளில் ஈடுபட இங்கே யாருக்கும் நேரமில்லை.

எளிமையும், நேர்மையும், தூய்மையும், துலங்க மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மகத்தான மனிதர்களுக்கு மகாத்மா பட்டமளித்து, அவர்களுடைய உருவப்படத்தைச் சட்டத்தில் சிறை வைத்துப் பூஜை அறையில் மாட்டித் தொங்கிவிட்டுக் கற்பூரம் காட்டுவதோடு கதையை முடித்துவிடுகிறோம். ‘நாமெல்லாம் தவறு செய்யும் சாதாரண ஆத்மாக்கள். நம்மால் எப்படி மகாத்மாக்களாக மாற முடியும்?’ என்று நமக்கு நாமே நியாயம் தேடுகிறோம். எந்த இழப்பும் இல்லாமல், எந்த வலியும் கொள்ளாமல், பெருக்கெடுத்துப் பாயும் நீராய், கட்டறுந்து வீசும் காற்றாய் மனம் போன போக்கில் வாழ்வதே சுகமென்று நம்பி,

*சோகப் பள்ளத்தில் காலிடறி விழுந்து கிடப்பவர்கள் நாம்.*

*'என்னுடைய வாழ்க்கையே என்னுடைய செய்தி' என்று சொன்ன நம் தேசப்பிதாவிடம், நாம் எளிதாகப் பின்பற்றுவதற்கான செய்திகளே இல்லையா? 'காமத்தோடும், கடவுளோடும் ஒரே நேரத்தில் பயணிக்க இயலாது. சகமனிதர்களுக்குத் தொண்டாற்ற வாழ்வை அர்ப்பணிப்பவர்கள் பிரம்மச்சரியம் மேற்கொள்வதே சிறந்தது' என்று சிந்தித்த மகாத்மா, தன் 37 வயதிலிருந்து மனைவி இருக்கும்போதே புலனடக்கம் காத்தது போல், நாமும் பெண் இன்பம் துறப்பது சிரமம்தான். ஆனால், அவரைப் போல் தூய்மையான அகவாழ்வும், நேர்மையான பொது வாழ்வும் நடத்த நம்மால் இயலாதா? ஒவ்வொரு தனி மனிதனும் மகாத்மாவின் வழியில் நடக்க முயன்றால் இந்த மண்ணுலகமே பொன்னுலகமாய் மாறிவிடாதா?*

*'காந்தியம் என்று ஒன்றில்லை. எனக்குப் பின்னால் எந்தவொரு தனிப் பிரிவையும் விட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. எந்தப் புதிய கொள்கையையோ, கோட்பாட்டையோ உருவாக்கியதாக நான் கூறவில்லை. நித்தியமான சத்தியங்களை நமது அன்றாட வாழ்க்கையிலும், சிக்கல்களிலும் இணைக்க என்னுடைய வழியில் முயன்றதுதான் நான் செய்தது' என்று அடக்கத்துடன் சொன்னவர் மகாத்மா.*

*வெறுப்புக்கு மாற்றாக அன்பு, போட்டிக்குப் பதில் ஒத்துழைப்பு, தன்னலத்திற்கு எதிராகத் தியாகம், புற ஆரவாரத்திற்கு இடமில்லாத அகநாகரிகம் என்பவைதான் காந்திய வாழ்க்கை முறைகள். மனித நேயம், ஒழுக்கம், சமூக அன்பு ஆகியவை காந்திய லட்சியங்கள். சத்தியம், அகிம்சை, பிரம்மச்சரியம், திருடாமை, உடைமையின்மை, உடலுழைப்பு, நாவடக்கம், அஞ்சாமை, சமய நல்லிணக்கம், சுதேசி, தீண்டாமை ஒழிப்பு ஆகியவை காந்திய விரதங்கள். இவற்றுள் பிரம்மச்சரியம் போற்றுவதும், உடைமையற்று வாழ்வதும் சாதாரண மனிதர்களுக்கு இயலாமற் போகலாம். ஆனால், ஒருத்தியோடு வாழ்வதும், அவசியத் தேவைகளுக்குகேற்ப அளவோடு சொத்து வைத்துக் கொள்வதும் காந்தியத்திற்கு முரணானவை அன்று.*

*பொதுவாழ்வில் நேர்மைதான் காந்தியின் முக்கிய இலக்கு. தலைமை ஏற்பவர்கள் உறவுகளின் பிடியிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்பதைத் தன் வாழ்வின் மூலம் உலகிற்கு அண்ணல் உணர்த்தினார். உடைமையற்றவனிடம்தான் உண்மையான அன்பு பிரவாகமாகப் பெருக்கெடுக்கும் என்பது அவருடைய அழுத்தமான நம்பிக்கை. தென்*

ஆப்பிரிக்காவில் இருந்தபோது, தன் உடைமை அனைத்தையும் தான் தொடங்கிய ஆசிரமத்திற்கு அளித்தார். இந்தியா திரும்பியதும் பூர்வீக சொத்துக்களைத் துறந்தார். அவருக்கு ஒரு சகோதரி இருந்தார். அவர் பெயர் கோகீபஹன். அவர் ஒரு விதவை. அவருடைய வாழ்க்கைச் செலவுக்காக மாதம் பத்து ரூபாய் அனுப்பி வைக்கும்படி, நண்பர் பிராண ஜீவன் மேத்தாவைக் கேட்டுக் கொண்டார் மகாத்மா. மேத்தாவும் மாதம் தவறாமல் பணம் அனுப்பினார்.

சில மாதங்களில் கோகீபஹனின் மகளும் விதவையாகித் தாயிடம் வந்து சேர்ந்தார். இருவருக்கும் பத்து ரூபாய் போதவில்லை. ‘செலவு அதிகரித்துவிட்டது. அண்டை அயலில் மாவரைத்து கொடுத்துச் செலவைச் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. கொஞ்சம் கூடுதலாகப் பணம் அனுப்பினால் நல்லது’ என்று கோகீபஹன் அண்ணலுக்குக் கடிதம் வரைந்தார். ‘மாவு அரைப்பது நல்லதுதான். அதனால் உடல் நலம் பெருகும். நாங்களும் ஆசிரமத்தில் மாவரைக்கிறோம். நீங்கள் விரும்பினால் இங்கு வந்து தொண்டு செய்யலாம். பணம் அனுப்பும் நிலையில் நானில்லை. நண்பர்களிடமும் அனுப்பச் சொல்ல இயலாது’ என்று பதிலெழுதினார் மகாத்மா. உறவுகளை அதிகார பீடத்திற்கு அருகில் வராமல் தடுத்தவர் அண்ணல். பொதுச் சொத்தைச் சொந்த நலனுக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது அவர் போதித்த பாடம். போதித்தவர் உயிரோடு இருக்கும்போதே, அவருடைய சீடர்கள் பலருக்குப் பாடம் மறந்து போனது. அதனால் மகாத்மாவின் மனம் ரணமானது.

ஒருமுறை மகாத்மா டெல்லியிலிருந்து கல்கத்தாவுக்கு ரயிலில் பயணித்தார். வழியில் பாட்னா ரயில் நிலையத்தில் அமைச்சர்கள் வந்து காந்தியைச் சந்தித்தனர். அவர்களுடன் காந்தி பேசிக் கொண்டிருந்தார். ரயில் புறப்படும் நேரம் கடந்துவிட்டது. நிலைய அதிகாரி தயங்கியபடி அண்ணலிடம் வந்து நின்றார். ‘ரயில் புறப்படும் நேரமாகிவிட்டது. தாங்கள் விரும்பும்போது தெரிவித்தால் அப்போது ரயில் புறப்பட அனுமதிக்கிறேன்’என்றார். மகாத்மா ஸ்டேஷன் மாஸ்டரை நிமிர்ந்து பார்த்தார்.

‘என் விருப்பத்தைக் கேட்கவா வந்தீர்கள்? இது என்ன நியாயம்? என்னைக் கேட்க வந்ததுபோல் நீங்கள் ஒவ்வொருவரிடமும் கேட்கப் போவீர்களா? நான் உங்கள் அதிகாரியல்ல. உங்கள் கடமை சட்டப்படி நடப்பதுதான். அமைச்சர்களைப் பார்த்து நீங்கள் அஞ்சக்கூடாது. அவர்கள் மக்களின் சேவகர்கள். அமைச்சர்களிடம் அஞ்சாத தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். அவர்களை உங்கள் சகோதரர்களாகப்

பாவித்தால் போதும். மக்களாட்சியின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளுங்கள். நேரப்படி வண்டியை விடுங்கள்' என்றார் அடிகள். அவர் எதிர்பார்த்த பொதுவாழ்வின் புனிதம் கெட்டு ஆண்டுகள் பல உருண்டோடிவிட்டன. கடமை தவறி நடப்பதுதான் இன்று சமூக விதியாகிவிட்டது.

'வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்நீச்சல் போட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கும் விளிம்புநிலை மக்களுக்கு இந்து மதம் பாதுகாப்பளிக்கவில்லை. மாறாக, சமூகத்தில் பழகுவதற்குக் கூடத் தகுதியற்றவர்களாக இவர்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளனர். பெரு நோயாளிகளைப் போல் இவர்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும், சாதி இந்துக்கள் தங்களுக்குள் எவ்வளவு பிளவுண்டிருப்பினும், தாழ்த்தப்பட்ட மக்களை ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்குவதில் மட்டும் ஒன்று சேர்ந்துவிடுகின்றனர்' என்று அம்பேத்கர் லண்டனில் நடந்த வட்ட மேஜை மாநாட்டில் விவரித்த சூழல் இன்றும் பெருமளவிற்கு மாறிவிடவில்லை என்பதுதான் உண்மை.

'உலகில் தீண்டத்தகாதவர் என்று எவருமே இல்லை. ஒரே நெருப்பின் சுடரொளிதான் ஒவ்வொருவரும். மனிதராய்ப் பிறந்த எவரையும் தீண்டாதவரென்று ஒதுக்கி வைப்பது தவறு. தீண்டாமை இந்து தர்மத்தின் பிரிவன்று. தீண்டாமை என்பது பிளேக் நோய். உண்மையான இந்து ஒவ்வொருவனும் இந்தக் கொடுமையை ஒழிக்கக் கடமைப்பட்டவன். அரிசனங்களுடன் சகோதரத்துவம் பூண்டு அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டும்' என்று வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியவர் மகாத்மா. தீண்டாமை ஒழிப்பை அந்நியர் ஆதிக்க எதிர்ப்பை விட வேகமாகச் செயற்படுத்த முனைந்தவர் நம் தேசப்பிதா. ஆனால் இரட்டைக் குவளைகள் வடிவில் சாதியும் இன்று பல கிராமங்களில் காந்தி சிலையைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கின்றது.

கள்ளுண்ணாமை குறித்து வள்ளுவன் வலியுறுத்தியதும், மதுவிலக்கிற்காக மகாத்மா கொடி பிடித்ததும் அர்த்தமற்றுப் போய்விட்டன. காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் மூலம் சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டபோதும், மதுக்கடைகளின் முன்பு மறியல் நடப்பது நிற்காது என்று அறிவித்தார் மகாத்மா. மதுவின் பிடியிலிருந்து விடுபட்டாலொழிய, மக்கள் ஏழ்மையிலிருந்து விடுபடமுடியாது என்ற உண்மையைச் செல்லுமிடமெல்லாம் கொண்டு சேர்த்தவர் அண்ணல். இன்று மதுவை ராஜதிரவம் என்றும், மகாகவிகளின் தாய்ப்பால் என்றும் வாழ்த்தும் கூட்டம் பெருகிவிட்டது.

வாழ்க்கை, சோகங்களின் சுமைதாங்கியாக மாறும்போது, மது மனிதனுக்கு ஓர் இடைக்கால நிவாரணத்தை வழங்குவதாக வாதிடுபவர்கள் உண்டு. விளக்கின் ஒளி, வீட்டில் பூச்சிகளை வீழ்த்துவது போல், மதுவின் மயக்கம் மனிதர்களை வீழ்த்துகிறது. சில நிமிட மாயச் சுகங்களுக்காக வாழ்வைப் பாழாக்கும் வக்கிரம் நம்மில் பலருக்குண்டு. அவர்களைத் திருத்தவும், நேர் வழியில் நெறிப்படுத்தவும் அரசு முயல வேண்டும். ஆனால், பாரத தேசத்தின் மாநில அரசுகள் தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றன. ஒழுக்கக் கேடுகளுக்கு ஒப்பனை செய்கின்றன. அரசுக்குச் சொந்தமான கருவூலத்தை நிரப்புவதற்காக, நம் மண்ணுக்குச் சொந்தமான மரபார்ந்த ஒழுக்கங்களை அவை இழக்கச் சம்மதிக்கின்றன. தெருவெங்கும் மதுக்கடைகள் திறந்து மகாத்மாவின் நினைவுக்கு நல்லஞ்சலி(!) செலுத்தும் மாநில அரசுகள், விலை மகளிர் விடுதிகளை நடத்தாமல் விட்டதே பெரிய புண்ணியம்.

‘உண்மை மீது நான் கொண்ட பக்தி என்னை அரசியல் களத்திற்கு அழைத்து வந்தது. அரசியலில் மதத்திற்கு எந்த வேலையும் இல்லை என்பவர்கள், மதம் என்றால் என்ன என்பதை அறியாதவர்கள்’ என்று ‘சத்திய சோதனை’யில் எழுதியவர்தான் காந்திஜி. மதவுணர்வு மிக்கவர்கள் அறவழிப்பட்ட அரசியல் நடத்துவார்கள் என்ற நம்பிக்கையில் பிறந்த கருத்து அது. ஆன்மிக உணர்வுள்ள அரசியல்வாதிகளிடம் அதிகாரம் வந்தால் ஊழலுக்கு இடமிருக்காது என்று அவர் எண்ணினார். அரசியலரங்கில் மதவாதிகளின் அருவருப்பான சுயமுகங்களை அருகிலிருந்து பார்த்த பின்பு, ‘நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் மதத்தையும், அரசியலையும் தனித்தனியாகப் பிரித்து வைப்பேன். என் மதத்தின் மேல் உறுதியாகக் கூறுகிறேன். அதற்காக என் உயிரையும் தருவேன். மதம் என் சொந்த விவகாரம். அதில் அரசுக்கு எந்த வேலையும் இல்லை’ என்றார் அண்ணல்.

‘இந்தியாவில் இந்துக்கள் மட்டுமே இருக்க வேண்டும் என்பவர்கள் கனவுலகத்தில் வாழ்பவர்கள். இந்தியாவைத் தங்கள் நாடாகக் கொண்டிருக்கும் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்சிகள், கிறித்துவர்கள் அனைவரும் இந்த மண்ணின் மக்களே. இவர்கள் அனைவரும் தங்கள் சொந்த நன்மையைக் கருதியாவது ஒன்றுபட்டு வாழ வேண்டும். உலகின் எந்தப் பகுதியிலும் ஒரே தேசியச் சமுதாயம் என்பது ஒரே மதம் என்ற நிலையில் இருந்ததில்லை. இந்தியாவிலும் அப்படியில்லை’ என்று ‘ இந்திய சுயராஜ்யம்’ நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார் காந்திஜி.

‘வெள்ளையருக்கு எதிராகவும், இந்துக்களுக்கு எதிராகவும் 18 முறை

உண்ணாவிரதம் இருந்த காந்திஜி, முஸ்லிம்களுக்கு எதிராக ஒருமுறை கூட உண்ணாவிரதம் இருந்ததில்லை. இந்துக்களின் பகைவராகவும், முஸ்லிம்களின் நண்பராகவும் மாறியதால்தான் காந்திஜியை நான் கொன்றேன்' என்றான் கோட்சே. மத ஒற்றுமைக்காக மண்ணில் ரத்தம் சிந்தியவர் மகாத்மா. ஆனால், இன்றும் அடிப்படைமதவாதம் ஆக்டோபஸ் மாதிரி ஆயிரம் கைகளில் ஆயுதம் தாங்கி, மனித ரத்தம் தேடி அலைந்து கொண்டுதான் இருக்கிறது.

காரல் மார்க்ஸ் காணவிரும்பிய சமத்துவமும், மகாத்மா காந்தி சமைக்கத் துடித்த சர்வோதயமும் வர்க்க பேதங்களற்ற வாழ்க்கை முறைதான். எந்த மாற்றமும் வன்முறையால் நிகழக்கூடாது என்று வலியுறுத்துவதுதான் காந்தியம். 'நான் ஒரு வன்முறையற்ற கம்யூனிஸ்ட்' என்று வாய் மலர்ந்தவர் மகாத்மா. பணக்காரன் மடியில் கைவைத்து எடுப்பது மார்க்சியம். அந்த நிலைக்கு ஆளாகாமல் தாமாகவே முன்வந்து, பாமரமக்களின் நலன் காக்கும் தர்மகர்த்தாக்களாக மாறப் பணமுடையோரைத் தூண்டுவது காந்தியம்.

'சபி பூமி கோபால்கி. எல்லா நிலங்களும் கடவுளுடையது. அதனால், ஆண்டவன் அளித்த அனைத்து உடமைகளும் மக்களுக்குப் பொதுவானது. தன் தேவைக்குமேல் ஒருவன் சேர்த்திருந்தால், அதை அவன் தேவையுள்ளவர்களுக்குத் தானாகவே முன்வந்து வழங்க வேண்டும். போதுமென்ற நல்லுணர்வு பெருக வேண்டும். சொத்துடைமை ஓரெல்லைக்குள் கட்டுப்பட்டால்தான் ஏழைகளுக்கு எளிதில் உணவு கிடைக்கும்' என்று உபதேசித்தார் அடிகள். மகாத்மாவின் தர்ம கர்த்தா கொள்கை மனிதர்களின் நல்லியல்பிலும் சமூகத்தின் உயர்ந்த நெறிகளிலும் நம்பிக்கை வைத்தது. ஆனால், அந்த நம்பிக்கை இன்று பொய்த்துப் போனது.

தேவைகளைக் குறைத்து எளிமையாக வாழ்வது ஒரு தவம். மகாத்மாவைப் போல நாம் மண்குடிசையில், அரை நிர்வாண ஆடையில் வாழ வேண்டாம். அவசியமற்ற ஆரம்பரங்களைத் தவிர்த்தால் போதும். தேவைக்கு மேல் எஞ்சியதை நலிவுற்ற சகமனிதர்களின் துயர் துடைக்க உதவும் உள்ளம் இருந்தால் போதும். ஆசை வலையில் சிக்கிச் சீரழியும் சிலந்திகள் நாம். நமக்கு எவ்வளவு கிடைத்தாலும் போதாது. அதனால், காந்தியம் கவைக்குதவாது என்று கை கழுவி விட்டோம்.

அதிகாரப் பரவல், கிராமப் பொருளாதாரம், சிறுதொழில் உற்பத்தி, சர்வோதய அரசு, தாய் மொழிக் கல்வி என்ற காந்தியக் கட்டுமானங்கள் அனைத்தும் காலநடையில் தகர்ந்துவிட்டன. 'எனக்குப் பின்னால் என்

மொழியில் நேரு பேசுவார்' என்று நம்பிக்கையோடு பிரகடனம் செய்தார் நம் தேசப் பிதா. மகாத்மா நினைத்தபடி நேரு பேசவில்லை. காந்தியின் அரசியல் வாரிசே கைகழுவிய பின்பு, அவர் மொழியில் இன்று யார் பேசுவார்கள்?

காந்தியம் என்பது ஒரு வறட்டுச் சித்தாந்தமில்லை. அது ஓர் உயர்ந்த வாழ்க்கை முறை. அது உடல்பலத்தைவிட ஆன்ம பலத்தில் அதிக நம்பிக்கை கொண்ட வாழ்வியல் நெறி. வாழ்க்கை முழுவதும் உண்மையாய் இருப்பதும், எல்லா உயிர்களிடத்தும் அன்பாய் இருப்பதும்தான் காந்தியத்தின் அடித்தளம். எவரிடத்தும் பகைமை பாராட்டாத இதயம் இருப்பவர்தான் காந்தியவாதியாக இருக்க முடியும். வசதிகள் குவிந்த வாழ்க்கைத் தரத்தைவிட, அடிப்படைத் தேவைகளில் மனநிறைவு கொள்ளும் வாழ்வியல் தரமே காந்தியத்தின் ஜீவநாடி. கடையனுக்கும் கடைத்தேற்றம் தரும் சர்வோதய சமத்துவ சமுதாயமே அதன் ஒரே லட்சியம்.

'பொன்னைவிட உண்மையின் மீது நாட்டமுள்ளவர்கள், ஆடம்பரத்தையும், அதிகாரத்தையும்விட அச்சமின்மையைப் போற்றுபவர்கள், தன்னலத்தைவிட சமுதாய அறத்தை நேசிப்பவர்கள் என்று நாம் நடப்பதன் மூலமே நம் நாடு ஆன்மிக நாடு என்பதை உலகிற்கு அறிவிக்க முடியும்' என்றார் மகாத்மா. என்றாவது அந்த நல்ல நாள் வருமா? வரும். வர வேண்டும். நம்பிக்கையே வாழ்க்கை. நம்பிக்கையின்மையே மரணம்.

# தமிழருவி மணியன்



'ஒரு தபோவனத்து முனிவனின் பர்ணசாலையைப் போல என் எண்ணங்கள் தூய்மையாகவும், இருட்டை அழித்து வெளிச்சம் பரப்பும் ஒளிச்சுடரைப்போல என் நோக்கங்கள் மேன்மையாகவும், கைப்பிடித்தக் கணவனுக்காகச் சகலத்தையும் சமர்ப்பித்துவிடும் கற்பார்ந்த பெண்மையைப்போல என் வாழ்க்கை உண்மையாகவும் இருக்க வேண்டும் என்ற தாகத்தில் நான் தவமிருக்கிறேன். வரங்கள் இதில் வாய்க்காமல் போனாலும் சாபங்களுக்குச் சாத்தியமில்லை' என்று வாக்குமூலம் வழங்குபவர் தமிழருவி மணியன்.

அரசியல் களத்திலும் இலக்கிய தளத்திலும் தனக்கென்று ஒரு தனிப்பாதை கொண்டவர். மாணவப் பருவம் முதல் தீவிரமான காமராஜர் பக்தர். சமரசங்களுக்குச் சற்றும் இடம் தராத காந்தியச் சிந்தனையாளர். 'பேச்சும் எழுத்தும் சமூக நலன் சார்ந்தவையாக எப்போதும் இருக்க வேண்டும்' என்பதில் பிடிவாதம் கொண்டவர்.

காமராஜரால் 'தமிழருவி' என்று பாராட்டப்பட்டவர். 'பேச்சில் நயாகரா நீர்வீழ்ச்சி' என்று ரூப்பனாரால் வருணிக்கப்பட்டவர். 'அரசியல்வாதிகளில் ஆழமான இலக்கிய அறிவுமிக்க ஒரு சிலரில் முக்கியமானவர்' என்று தமிழறிஞர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்களால் போற்றப்பட்டவர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மதநல்லிணக்க விருதை முதலில் இவருக்கே வழங்கியது.

'அடிமனத்தின் சுவடுகள்', 'அன்பிற்சிறந்த தவமில்லை', 'கம்பன் காட்டும் இந்திர சித்தன்', 'காமராஜரும் கவிராஜரும்' ஆகியவை இவருடைய பேனா பிரசவித்த பிற படைப்புகள்.

சென்ற தலைமுறைத் தியாகத் தலைவர்களைப் பற்றி இவர் 'சுதந்திர வெளிச்சம்' என்ற தலைப்பில் பேசிய உணர்ச்சி மிக்க உரை வீச்சு, இருபத்து நான்கு மணி நேரமும் தொடர்ந்து ஒலிக்கும் ஒலிப்பேழைகளாக உருப்பெற்றுள்ளன.

OORUKKU NALLATHU SOLVAEN

Rs. 135

விகடன்
பிரசுரம்

ISBN 81-89780-72-7

9788189780722